கிறிஸ்தவம் தேவையா?

சாது செல்லப்பா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்தவம் தேவையா?

சாது செல்லப்பா

பதிப்பு உரிமை ஆசிரியர்க்கு

முதல்	பதிப்பு	1974	5000	Copies
இரண்டாம்	பதிப்பு	1982	5000	Copies
மூன்றாம்	பதிப்பு	1994	2000	Copies
நான்காம்	பதிப்பு	2011	2000	Copies

கதிரவன் அச்சகம்
நெ.91, மருந்தீஸ்வரர் நகர்,
திருவான்மியூர், சென்னை–41.
☎ : 044 – 24523801

கடவுள் வணக்கம்

ஆதியும் அந்தமும் இல்லாய் சரணம்
அதுமுன் அதுமுன் அதுமுன் சரணம்
அல்பா ஒமே காவே சரணம்
அடியே நடுவே முடிவே சரணம்

சாதி சனங்கள் இல்லாய் சரணம்
தானா வானா ஞானா சரணம்
சருவவியாபி சருவ வல்லவனே
சரணம், சருவே சுரனே சரணம்

மாதர்கள் மைந்தர்கள் இல்லாய் சரணம்
மனுடவதாரகு மாரா சரணம்
மாசில்லாத மணியே சரணம்
மன்னா பொன்னா மின்னா சரணம்

ஏதம் ஏதும் இல்லாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்
எனை மீண்டவனே எனை ஆண்டவனே
இயேசு நாதா சரணம் சரணம்.

(வேதநாயகம் சாஸ்திரியார்)

வாழ்த்துப் பாடல்

உலகெலாம் உய்யவேண்டி உருக்கொடு மண்ணில் வந்தாய்
நலமிகு உவமையாலே ஞான சீலங்கள் சொற்றாய்
கலகமுங் கரவுங்கொண்ட கண்ணிலாய் பேயைச் சாய்த்தாய்
அலகிலா ஒளியே! இயேசு ஐயனே! போற்றி! போற்றி!

தரையினில் உதித்த கோலம் தையல் கை வளர்ந்த கோலம்
வரையினில் இவர்ந்த கோலம் வனத்தினில் நடந்த கோலம்
திரைகடல் கடந்தகோலம் சிலுவையில் பொதித்த கோலம்
உறைமனம் ஜெபத்தால் பெற்றேன் உத்தம! போற்றி! போற்றி!

அன்பினால் யாக்கை யேற்ற ஐயனே! போற்றி! போற்றி!
மன்பதைப் பாபந்தீர்த்தவா! போற்றி! போற்றி!
இன்புற உயிர்த் தொழுந்த ஈசனே! போற்றி! போற்றி!
என் பிழை பொறுக்கும் இயேசு எந்தையே! போற்றி! போற்றி!

பராபரக் கடவுள் வாழி! பரிசுத்த ஆவி வாழி!
நிராமரக் குமரன் வாழி! நிறையருள் அடியார் வாழி
புராதன மொழிகள் வாழி! புண்ணியச் சிலுவை வாழி!
விராவிய குருதி வாழி! வியன் சபை வாழி வாழி!

(திரு.வி. கலியாணசுந்தர முதலியார்)

தையல்	=	பெண்
வரை	=	மலை
இவர்ந்த	=	எழுந்த
விராவிய	=	கலந்த
குருதி	=	இரத்தம்

பொது

மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து. முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.

(பைபிள் - அப்போஸ்தலர் 17:26)

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
தென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலை பெற நீர் நினைந் துய்ம்மினே

(திருமூலர்)

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி முறையில் இட்டார்
பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி

(ஔவையார்)

ஐயமிடு இறை நெறியைக் கடைப்பிடிமின்
இவ்வளவேனும் அன்னமிட்டு உண்மின்... தெய்வம்
ஒருவநே யென உணர வல்லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்

(தாயுமானவர்)

ஒரு நாதனென்று தனியேக நின்று ஒரு மூவரென்று பெயராய்
குருவாகி வந்து தணவாதகன்று குறுகாது மெய்கு முளனாய்ப்
பொருளாதி பென்று பொருடோறு நின்று பொருடோ றழிந்து சிதையா
யருவாகி நின்று முருவோயியா ருனரு வீர வான்மை யறிவார்

(வீரமா முனிவர்)

ஒன்றிலே மூன்றாய் மூன்று மொன்றதா யுவப்பிலாதாய
நன்றுல கனைத்துந் தூய நினைவு மாத்திரையிற் றந்து
நன்றென யுயந்தி ரக்ஷை நல்கு மெஞ்ஞானானந்தக
குன்றினை யகத்துத் தாங்கிச் சிந்தனை கூடி வாழ்வோம்

(H.A. கிருஷ்ண பிள்ளை)

சஹஸ்ர ஸிர்ஸா புருஷ
சஹஸ்ரக்ஷா சஹஸ்ர பாத்
ஸபூமிம் விஷ்வதோ வ்ருத்வ
அத்ய திஷ்ட தஸாங்குலம் (புருஷ சூக்தம்)

அஸோத்தமா ஸத் கமய
தமோஸமா ஜ்யோதிர் கமய
மிருத்யோமா அம்ருதம் கமய (பிருகதாரண்யக உபநிஷத்து)

"நானே வழியும் சத்யமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"

(இயேசு.... பைபிள் யோவான்.14:6)

காயத்ரி மந்திரம்

ஓம் பூர் : புவஹ் : ஸ்வஹ் :
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி!
தியோ யோந ப்ரஸோதயாத்

(ரிக்வேத ஸம்ஹிதை 3.62.10)

பொருள் :

ஓம்=ஓம் ; பூர்=பூமி ; புவ=புவர்லோகம் ; ஸ்வ ; ஸ்வர்க்க லோகம் ; தத்; அந்த ஸவிதுர் ; கவுடளின்; வரேண்யம் ; போற்றுதற்குரிய ; பர்கோ. ஒளியை ; தேவஸ்ய ; சுடருடைய ; தீமஹி ; தியானிப்போமாக ; திய ; அறிவை ; ய ; யார் ; ந ; நம்முடைய ; ப்ரசோதயாத் ; தூண்டுகிறாரோ.

கருத்து : யார் நமது அறிவைத் தூண்டுகிறாரோ அந்த சுடர்க் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக.

(இது உபநிஷத் மந்திரம் 85 ஆகும். சூரிய காயத்ரி என்றும் பிரம்ம காயத்ரி என்றும் அழைப்பர். இறைவனின் சகல தத்துவங்களையும் இது உள்ளடக்கி நிற்பதால் இது பொது மந்திரம் எனலாம். இது எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தின் கடவுளையும் குறிக்காது. இம்மந்திரம் எழுதப்பட்ட காலத்தில் மதமும் கிடையாது.)

ஆசிய ஜோதிக்கு அர்ப்பணிப்பு

ஆசியாவில், மத்திய கிழக்கு ஆசியாவின் மையத்திலுதித்த உலகின் ஜோதி இயேசு கிறிஸ்து ஆசிய நாட்டு வேதங்களில் காணப்படுகின்றார் என்ற கருத்தின் அடிப்படையில் வேத ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் இப்புத்தகம் எழுதப்பட்டது.

ஒரு சிலர் கருத்தில் மாறுபடலாம். அவைகளைத் தெளிவாய் எழுதி மேற்கோள்களின் ஆதாரங்களுடன் அனுப்பினால் சேர்க்கவும் திருத்திக்கொள்ளவும் பயன்படும். அப்படிப்பட்ட கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற சான்றோர் வாக்குப்படி சமயச் சண்டைகளும், சாதிச் சண்டைகளும் அழிந்து, எல்லோரும் இன்புற்றிருப்பதே யன்றி வேறொன்றுமறியேன் பராபரமே என்று மன மகிழ்வுடன் எல்லா மதத்தினரும் நல்லிணக்கம் பொருந்தவும் நாம் அனைவரும் இந்தியர், நம்நாடு இந்தியா என்று ஒரு மன ஒன்றுமையுடன் வாழவும் இப்புத்தகத்தை எல்லாம் வல்ல என் பொருமான் இயேசுவின் ஆணிகளால் துளைக்கப்பட்ட பாதங்களில் படைத்து அபர்பணிக்கிறேன். நன்றி வணக்கம்.

சாது செல்லப்பா

முன்னுரை

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்த வரலாற்றினைக் கூறும் பைபிளின் முதல் நூல் ஆதியாகமம். இதின் முதலாம் அதிகாரம் முதலாம் வசனம் தொடங்கி இரண்டாம் அதிகாரம் நான்காம் வசனம் வரை துல்லியமாக உலகத் தோற்றத்தைப் பற்றி அறியப் பெறலாம்.

திருவள்ளுவரின் திருக்குறளும் அவ்வாறே சொல்லுகிறது. "எழுத்துக்கள் எல்லாம் "அ" கரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல, உலகம் கடவுளை அடிப்படை யாகக்கொண்டிருக்கிறது."

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

இயேசுக்கிறிஸ்து உலகனைத்திற்கும் அகரமுமாக, ஔகாரமுமாக, அஃதாவது, முதலுமாக நிறைவுமாக இருக்கின்றார் என்ற விவிலிய (பைபிள்) உண்டையுடன் முதற்குறள் இசைந்து கிடக்கிறது என்பத போதருகின்றது.

"ஸஹஸ்ர சிர்ஸா புருஷ
ஸஹஸ்ர அக்ஷா சஹஸ்ரபாத்
ஸபூமிம் விஷ்வதோ வ்ருத்வ
அத்ய திஷ்ட தாஸாங்குலம்"

"ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள் ஆயிரம் கால்களையுடைய சர்வ வல்லமையுள்ள தேவன், தான் உண்டாக்கின உலகத்தைச் சூழ்ந்து நின்று ஆளுகை செய்கின்றான். தன்னைப் பத்துவிரற்கடையளவு சுருக்கிக்கொண்டான்."

"உடலினைப் படைத்தானொருவன் மற்றவனே உயிரையும் படைத்தான் உலகையும் படைத்தன்" (திருஅருட்கொடை)

எனவே, பைபிளானாலும், திருக்குறளானாலும் ரிக்வேதமானாலும், தமிழ்வேதங்களானாலும் இறைவனே சர்வ சிருஷ்டிகளுக்கும் காரணமானவன் என்பதைத்தெளிவு படுத்துகின்றன.

இப்படியாக, இறைவனால் படைக்கபட்பட்டவைகளில், ஜடப்பொருட்கள்,

ஓரறிவுள்ள நுண்கிருமிகள்
ஈ·ரறிவுள்ள தாவரங்கள்
மூவறிவுள்ள ஜந்துக்கள், மச்சங்கள்,
நாலறிவுள்ள பறவை இனங்கள்
ஐந்தறிவுள்ள மிருகங்கள்
அறறிவுள்ள மனிதர்
ஆகிய யாவும் அடங்கும்

மனிதனுக்கு மட்டும் ஆறு அறிவு தரப்பட்டுள்ளது. எல்லாப் படைப்புகளையும் விட மனிதப்படைப்பு சிறந்ததெனக் கருதப்படுதலுக்கு இந்த ஆறாவது அறிவே காரணமாகும். இந்த ஆறாவது அறிவைப் பகுத்தறிவு என்றும் அழைக்கலாம்.

உடலும் உயிரும் இணைந்தபோது உண்டான ஆன்மாவைப் பகுத்து அறிந்து, தன்னைப்படைத்த இறைவனுக்கே இவைகளை அர்ப்பணித்து வாழும் அறிவையே பகுத்தறிவு என்று கொள்ளலாம்.

மூட நம்பிக்கைகளையும் சமுதாயச் சீர்குலைவுகளையும் அழித்து, சமுதாய விழிப்புணர்வுகளை தூண்டிவிட்டு, அதற்கெனத் தொண்டு செய்வதே பகுத்தறிவு எனலாம்.

அறிவைக்கொடுத்த ஆண்டவரைத் தன் அறிவால் இல்லை என்று சொல்லுவது பகுத்தறிவு ஆகாது.

இறைவன் படைத்த சகல சிருஷ்டிகளின் மேலும் அதிகாரம் செலுத்தி, அதை இறைனுக்காக ஆண்டு நடத்தும்

பகுத்தறிவை மனிதன் இறைவனிடமே பெற்றான்.

படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக என்ற ஆன்றோர் சொற்படி, மனிதனானவன் ஆண்டவரால் படைக்கப்பட்டவைகளை

ஆண்டு அநுபவித்து, அதே நேரத்தில் தன்னை ஆண்ட அவருக்கே தன்னையும் அர்ப்பணித்து, அவருடைய சாயலைப் பெற்று ஆவி பிரிந்து, சரீரம் மக்கி மறைந்து போயினும் ஆன்மா அந்த ஆண்டவருடன் என்று வாழ்கின்ற மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறுவதே பகுத்தறிவாளனுடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

உடல், உயிர், ஆன்மா என்ற மூன்று பந்தங்களினால் இணைக்கப்பட்டிருப்பவனே மனிதன், உடலைவிட்டு உயிர் பிரியும்போது, அவ்வுயிராகிய ஆவி தன்னைத் தந்த ஆண்வரிடத்திற்கே போகிறது. உடல் மக்கி மண்ணாகிறது, அல்லது எரித்தால் சாம்பலாகிறது. அழியாத ஆன்மா எங்கு செல்லும்? செல்லுமிடம் இரண்டுண்டு. இறைவனுடன் இணைந்து வாழ்ந்தால் இறைவனடி சேரலாம். இறைவனை நம்பாமலோ, அல்லது நம்பியும் பாப வாழ்வு வாழ்ந்தாலோ நரகம் செல்லலாம். எங்கு செல்வது என்பதை உயிர், உடல் ஆன்மாவுடன் வாழும் நிலையிலேயே மனிதன் தீர்மானிக்க வேண்டும்.

மனிதனுக்குள் இரண்டு அறிவு உண்டு. ஒன்று மூளை அறிவு. அது உயிரினங்கள் அனைத்திற்கும் உண்டு. இரண்டாவது ஆன்மீக அறிவு இது மனிதனுக்கு மட்டுமே உண்டு.

ஆன்மா செத்துக் கிடக்கும் நிலையில் அல்லது மயக்கமுற்றுக் கிடக்கும் நிலையில், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களைக் கண்டு வாழும் வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கையன்று.

ஆன்மீக உணர்வு என்பது மனிதனின் சிந்தனை ஆற்றலினாலோ, செயல்திறனினாலோ, தவம் செய்வதினாலோ, ஞானதீட்சை பெறுவதினாலோ, தியானம் செய்வதினாலோ புண்ணியதீர்த்தங்களில் முழ்கி எழுவதினாலோ, தானதர்மங்களினாலோ, கல்வியறிவினாலோ, வேத அறிவினாலோ கிடைக்காது.

'உணர்த்த உணர்தலின்' என்ற மெய் கண்டாரின் சூத்திரப்படி, இறைவன் உணர்த்தும்பொழுது உணர்வு பெற்று

விழித்தெழுபவனே ஆன்மீகன். இப்படிப்பட்ட ஆன்மாவைப் படைத்த கடவுள் ஒருவரே. அந்த ஆன்மா பாபத்தில் விழுந்தபோது அதை மீட்கும் பொருளாக தன்னையே அதற்கு ஈடாக கொடுத்த இரட்சகரும் ஒருவரே. ஆன்மாக்களை இரட்சித்து அவைகளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறவரும் ஒருவரே!

அப்படிஇருக்க, பல்வேறு மதங்களும் பல்வேறு கடவுள்களும் தோன்றக் காரணம் என்ன?

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் சுவாமிகள்:

ஆறு கோடியாம் சமயங்கள்
அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தாவே
தாந்தநா தாந்தம்
தேறும் மற்றைய அந்தத்தும்
சிவம் ஒன்றே அன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேல்
பெரியார்கள் விளம்பீர்

என்று உலகத்தின் மக்கள் யாவருக்கும் அறிவிக்கிறார். உலகத்தின் முக்கிய மதத்தினரும் அம்மதங்களின் இணைமதத்தினரும் ஒருமைப்பாட்டுடன் சாத்தான் அல்லது பிசாசு அல்லது பேய் என்ற ஒருவனை நம்புகிறார்கள், ஆனால் ஏனோ கடவுளை மட்டும் வேறுபடுத்தி யேகோவா என்றும் இயேசு என்றும் அல்லா என்றும் இருபத்து எட்டு அவதாரங்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் என்றும் நம்புகிறார்கள். ஒரு சாத்தானை நம்புகிறவர்கள் ஒரு கடவுளை நம்பக்கூடாதா? யூதர்கள் சாத்தானை நம்புகின்றார்கள். கிறிஸ்தவர்கள் சாத்தான், பிசாசு என்று பல பெயரிட்டு அவைகளை நம்புகிறார்கள். இஸ்லாமியர் சைத்தான் என்பவனை நம்புகின்றார்கள், இந்துக்கள் பேய், பிசாசுகளை நம்புகின்றார்கள், ஆக, இறைவனை அறியக் கூடாத நிலையில் இருந்த மனிதர்களுக்கு இறைவனே தம்மையறியும் அறிவினைத்தந்தார். அதிலிருந்து மனிதன் இறையறிவுடன் தன் சுய அறிவினைத்தந்தார். அதிலிருந்து மனிதன் இறையறிவுடன்

தன் சுய அறிவையும் சேர்ந்து இறைத்தத்துவங்களை ஏற்படுத்திப் பல தெய்வ வணக்கங்களையும், பலவிதமான மதங்களையும் கற்பித்துவிட்டான்.

ஒரே தெய்வத்தைப் பல தெய்வங்களாக்கி, ஒரே வழியைப் பல வழிகளாக்கி, எவ்வழியில் சென்றாலும் அந்த ஒரே இறைவனையே அடைகின்றோம் என்று தத்துவம் பேசிப் பல மதங்களைத் தோற்றுவித்து மக்களைக் குழப்பினவன் மனிதனே!

உலகிற் பிறந்த முன்னோர் ஓதிய கலைகளெல்லாம்
நிலைய தாம் சோதிதனை நிசமதாய்ச் சொல்ல வில்லை
பல பல பேதமாய்ப் பங்கமாய் கூறு செய்தே
அலகைப் போல் பொய்யைப் பேசி அறுநர கழித்து போனார்.
(ஔவையார் பாடல்)

என்பது சிந்தனைக்குரிய பாடல்

இந்நிலையில் இறைவனை அறியக்கூடிய வைராக்கிய மற்று, என் மதம், உன் மதம் என்று மத வைராக்கியம் மேலோங்க, காட்டுமிராண்டிகளைப்போல ஒருவரை ஒருவர் கொலை செய்யுமளவிற்கு மனிதனைப் போகவைத்தது மதமே!

சிந்து சமவெளிக்குள் புகுந்த ஆரியர்களுக்கு மதம் என்ற அமைப்பு அக்காலத்தில் இருந்ததில்லை. திராவிட சமயத்தினர்களில் அனேகர் அரசர்களாக, ஞானிகளாக, தத்துவ மேதைகளாக இருந்தனர், இவர்களிடமிருந்து ஆரியர் மிக எளிதாக அரசாட்சிகளையும், ஞானத்தையும், தத்துவங்களையும் அபகரித்துக் கொண்டனர். எப்படி என்று பார்ப்போம்.

வரலாற்றுப்படி திராவிடர்களே சிந்து சமவெளி நாகரிகத்தில் மிகப் பழமையானவர்கள் ஆவர். சிந்து சமவெளிக்குள் கி.மு 6ம் நூற்றாண்டிலும் கி.மு 4ம் நூற்றாண்டிலும், கி.மு.2ம் நூற்றாண்டிலும், கி.மு. 1ம் நூற்றாண்டிலும், கி.பி.4ம் நூற்றாண்டிலும் நுழைந்தவர்கள் முறையே பாரசீகர்கள் கிரேக்கர்கள். சாகர்கள், குஷானர்கள் மற்றும் ஹூனர்கள் ஆவர் இந்த ஐந்து வகைக் கூட்டத்தினருக்கும் திராவிடர்கள் வைத்த பெயரே ஆரியர் என்பதாகும்.

கி.பி. 7ம் நூற்றாண்டில் ஹர்ஷா என்ற அரசன் திராவிட பேரரசை நடத்தி வந்தார். அந்நாட்களில் சிந்து சமவெளிக்குள் நுழைந்து, பல இடங்களில் சிதறிக்கிடந்த ஆரியர் கூட்டத்தினர் அபு மலைகளில் ஒன்றுகூடி திராவிடர்களுக்கெதிராக ஒரு முக்கிய முன்னணியை ஏற்படுத்தினர், இதற்கு பாரசீகர் தலைமை வகித்தனர். பாரசீகர் அக்னியை வணங்கி வந்தனர். பிற்காலத்தில் இவர்கள் தங்களை பிராமணர் என்று அழைத்துக் கொண்டனர். இவர்களுடைய தலைமையிலான ஐக்கிய முன்னனி திராவிடர்களை மேற்கொண்டு. தங்களுக்கு ஆரிய வர்த்தா என்று பெயர் சூட்டிக்கொண்டனர். ஆரிய வர்த்தா என்றால் ஆரிய சாம்ராஜ்ஜியம் என்று பொருள்படும்.

ஆரிய சாம்ராஜ்ஜியத்தில், திராவிடர்கள்

1. அடிமைகளாக்கப்பட்டனர்.

2. இயற்கையாகவே வெள்ளை நிறத்தோல் படைத்த ஆரியர், கருப்பு நிறம் கொண்ட திராவிடர்களை கீழ்தரமாக்கித் தங்களுக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டனர்.

3. நிறத்தால் வேறுபடுத்தப்பட்ட இந்நிலை வர்ணாஷ்ரம தர்மா என்று ஆரியர்களால் நிலைநாட்டப்பட்ட. (வர்ணம் = நிறம்) நிற தர்மம் என்றும் அழைக்கலாம்.

4. தொழில் ரீதியான (Discrimination) வெள்ளை நிற ஆரியர் முதல் மூன்று முக்கிய தொழில்களைத் தங்களுக்கென்று தக்கவைத்துக்கொண்டனர். அவை முறையே

1. பூஜை செய்வோர் - பிராமணர்
2. அரசர் - சத்ரியர்
3. வியாபாரம் - வைசியர்

என்றும், திராவிடர்களை இரண்டாகப் பிரித்து அவர்களை
சூத்ரா - அடிமைகள்
பஞ்சமர் - எதிரிகள் அல்லது குழுக்கள் - தீண்டத்தகாதோர்
எனவும் பிரித்தனர்

(இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் 90% திராவிடர்கள் என்பதும் 10% மக்களே ஆரியர், சத்ரியர், வைசியர் என்பதும் கவனிக்கத்தக்கது)

ஆரியர்கள் திராவிட மக்களைத் தங்களுக்கு அடிமைகளாக மாற்றிக் கொண்டனர். ஆரிய சாம்ராஜ்யத்தில் திராவிடர் வசிக்க இடம் அளித்தனர். ஒரு சில திராவிட அடிமைகள் தங்கள் இனத்தை ஆரியரிடம் காட்டிக்கொடுத்து நற்பெயர் பெற்று அவர்களால் சத்சூத்ரர் (நல்ல சூத்ரர்) என்று பெயர் பெற்றனர்.

திராவிடர்களில் சில தலைவர்களும் கற்றறிந்த பெரியோர்களும் ஆரியரின் ஆட்சிமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே ஆரியர் இப்படிப்பட்டவர்களை குடிமக்கள் உரிமை பெற அருகதையற்றோர் என்று குற்றம் சாட்டி அவர்களுக்கு பஞ்சமர் என்ற ஐந்தாவது சாதி நிலைமையை அளித்தனர். இவர்களை தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு புறம்பாக்கினதுமன்றி, அவர்கள் கேவலமான பணிகளைச் செய்யும்படி வற்புறுத்தினர்.

காந்தி, இராசாராம் மோகன் ராய், பெரியார் போன்றவர்கள் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியதால் இந்த மறுமலர்ச்சி ஏற்பட்ட போதிலும் இந்தியர் சாதி வேற்றுமை என்னும் பேயிடமிருந்து இன்னும் பூரண விடுதலையடையவில்லை.

ஒரு சில பக்தி இயக்கங்கள், மதங்கள் சாதியை ஊக்கப்படுத்துகின்றன. ஒரு சில இயக்கங்கள், மதங்கள் சாதிப் பிரிவினைகளை எழுத்தளவில் எதிர்த்தாலும், செயலளவில் அதைக்கைக் கொண்டவர்கள் இல்லை.

தேச தந்தை மகாத்மா காந்தியடிகள், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினை சார்ந்த குடிமகன் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக வேண்டுமென்று விரும்பினார். அது நடக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்த சாதிக்காரன் அவரைச் சுட்டுக்கொன்றான்.

அனேக ஆண்டுகட்குப்பின் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து படித்துப் பண்டிதம் பெற்ற ஒரு பண்பாளர் குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டபோது, அவரின் கல்வியறிவையே, நற்பண்புகளையோ, திறமைகளையோ செய்தித்தாள்கள்

வெளியிடாமல், அவருடைய குலத்தையே கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. ஐம்பது ஆண்டுகள் கழித்து ஒரு தலித் இனத்தைச் சார்ந்தவரை நாட்டின் குடியரசுத் தலைவராக அமைத்து விட்டதாக நாடும், அரசியல் கட்சிகளும் பெருமைப்பட்டுக் கொண்டன.

இன்றும் இந்திய அரசுகளில் எத்துறையிலும் உயர் சாதிக்காரர்களே பெரிய பொறுப்புகளில் இருந்து வருவது கண்கூடு. தாழ்த்தப்பட்டோர் சிலர் பொருப்பு வகித்தாலும், அவரின் கீழ் வேலை செய்யும் உயர்சாதி வகுப்பினருடைய ஆதிக்கமே அங்கிருக்கும். தலித் என்ற வடமொழி வார்த்தையானது தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அழுத்தப்பட்ட என்ற பொருட்களையுடையது. அப்படியானால் அப்படித் தாழ்த்தினவர்கள் யார்? ஒடுக்கினவர்கள் யார்? அமிழ்த்தினவர்கள் யார்? என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே யார் இந்த ஒடுக்கப்பட்டவர்கள் (தலித்) என்று அறியப் பெறுவது நலம்.

இந்தியாவின் தலைசிறந்த ஞானிகள், தத்துவமேதைகள், இறையியல் விற்பன்னர்கள், வீரதீரச் செயல் புரிந்தோர்களில் அனேகர் ஒடுக்கப்பட்டவர்களே, உதாரணமாக.

1) திருக்குறள் என்னும் நூல் சுமார் 40க்கும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தெற்குக் கோடியில் உள்ள கன்னியாகுமரியில் 133 அடி உயரத்திற்கு அவருடைய உருவச் சிலை அமைக்கப்பட்டிருப்பது அவருடைய பெருமைக்குச் சான்றாகும்.

2) இராமாயணத்தை வடித்த வால்மீகி

3) சைவ சித்தாந்தத்தின் மிக முக்கியமான திருமந்திரம் என்னும் நூலை எழுதிய திருமூலர்

4) சைவ சித்தாத்தத்தின் முதல் நூலை எழுதிய திருவுந்தியார்

5) வைணவ ஆழ்வார்களில் பெரியவரான திருப்பாணாள்வார்.

6) தமிழ் சித்தர்கள்

ஆகிய இவர்கள் யாவரும் சமைய வரலாற்றுப் பெரியார்களாகக் கருதப்பட்டாலும் இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினைசத் சார்ந்த தலித் மக்களே. இவர்களில் சிலர் தீண்டத்தகாதவர்கள் என்று ஒடுக்கப்பட்ட பஞ்சமர் வகுப்பினைச் சார்ந்தவர்களுமாவர்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்தாழ்ச்சி சொல்லுவது பாபம் என்று மகா கவி பாரதியார் பாடிய போதும், இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் சாதி வித்தியாசங்களும், சாதிக் கொடுமைகளும், அக் கொடுமைகளினால் ஏற்படும் மானபங்கங்களும், படுகொலைகளும் நின்றபாடில்லை. கல்வியறிவு பெற்றவர்களும், சமுதாய முன்னேற்பாடுகளுக்கு உழைக்கும் பெரியோர்களும் சாதிப்பாகுபாடுகளை அகற்ற உழைக்கவில்லை. சாதிகளற்ற இந்திய வரலாற்றில் சாதிகளைப் புகுத்தி அச்சாதிகளினால் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டவைத்து, அதின் மத்தியில் பிழைக்கிற ஒரு சிறு கூட்டமே சாதிப் பிரிவினைகளுக்கு வித்திட்டது எனில் அதுமிகையில்லை.

சங்க காலங்களில் சாதி இருந்ததாக இலக்கியங்ளில் குறிப்புகள் இல்லை. தொழிலில் வேறுபட்ட மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். ஆயினும், அவர்களுக்குள் திருமணம் நடந்தன. புகுந்த வீட்டுக்குச் செல்லும் பெண் தன் கணவன் சார்ந்த தொழிலினைப் பழகி அக்குடும்பத்துடன் ஒட்டிக் கொள்வாள்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற முதுமொழிக்கிணங்க வாழ்ந்து வந்த மக்களிடம் சாதி என்ற நச்சு (விஷம்) பரவி, இன்று அச்சாதியினால் எத்தனையோ கொடுமைகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன் சிந்து சமவெளிக்குள் நுழைந்த நாடோடிகளான ஆரியர், தங்கள் நிறத்தாலும், உருவத்தாலும், தந்திர யுக்தியாலும் வடக்கே வாழ்ந்து வந்த திராவிட மக்களைக் கொன்றும், சிறைபிடித்தும், அடிமைகளாக்கின காலத்தில், எஞ்சி நின்ற திராவிடர்களில் பலர் தெற்கே கடந்த வந்து பெரு நில, குறுநில ஆட்சியமைத்து வாழ்ந்து வரலாயினர். வடகிழக்குப் பகுதிக்குக் கடந்து சென்ற திராவிடர்களில்

பலர் மலைகளுக்குச் சென்று அங்கு பாதுகாப்பாக வாழத்தலைப்பட்டு பழங்குடிகள் (ஆதிவாசிகள்) ஆயினர். சமநிலப் பரப்புகளில் வாழ்ந்தவர்கள் நாளடைவில் தங்கள் தாய்மொழியாகிய தமிழை மறந்து, ஆரிய மொழி பேசுவோராயினர்.

தெற்கே கடந்து வந்த மக்களிடம் கி.பி 6ம் நூற்றாண்டிற்குப் பின்பு நுழைந்த வட நாட்டு ஆரியர் பலத்தினால் மேற்கொள்ள இயலாமல் மதத்தினால் மேற்கொண்டு, அரசர்களைத் தங்கள் வசமாகத் திருப்பி, அவர்களின் பெயரால் அரசாட்சி செய்ய ஆரம்பித்தனர், மனுசாஸ்திரம் என்ற ஒன்றைப் புகுத்தி, ஆரியர் யாவருக்கும் மேற்பட்ட சாதி யென்றும், அரசர், போர் வீரர் போன்றோர் அதற்கடுத்த நிலையிலும், உணவு, உடை, வியாபாரம் போன்றவைகளைச் செய்வோர் அதற்கடுத்த நிலையிலும், ஆரியராகிய தங்களை எதிர்த்தோர் பஞ்சமர் என்ற தீண்டத் தகாதவர்களாகவும் ஆக்கினர்.

மேற்கண்ட சாதி நிலைகளை வேதம் சொல்லுவதாகக் கூறி, ஆரியர்கள் மக்களை முறையே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்று வேறுபடுத்தி, நாளடைவல் இப்பிரிவினரே ஒருவருக் கொருவர் சண்டையிட்டு அழியும் நிலைகளை உருவாக்கி வாழத்தலைப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வட இந்தியாவில் தலித் என்று அழைக்கப்படுகின்றனர். தென் இந்தியாவில் கிழ் சாதியினர் என்று அழைக்கப்படுகின்றனர். சாதிப் பிரிவினைகளை வைத்து அரசாங்கமும் அமைக்கப்படுகின்றன.

சாதி வேற்றுமைகள் படித்தவர்கள் மத்தியில் அவ்வளவு பெரிதாகக் காணப்படாவிட்டாலும், திருமணம் என்று வரும்போது, அங்கே சாதி தலை தூக்கவே செய்கிறது.

தங்களைப் பிராமணர் என்று அழைத்துக் கொண்டவர்கள் மனுதர்ம சாஸ்திரம் என்ற நூலை எழுதி, ஆரிய கூட்டணிக்குள் உட்பட்டவர்களை முறையே பிராமணர், சத்ரியர், வைசியர் என்றும் திராவிடர்களில் சூத்ரர்களையும் உள்ளடக்கி சதுர்வர்ணா அல்லது "சாதிமுறை" என்ற அமைப்பையே நியாயப்படுத்தினர்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஆர்ய வர்த்தா என்ற தங்களுடைய ஆரிய அமைப்பில் இடமளித்தனர்.

திராவிட சூத்ரர்கள் அடிமைகளாய் வாழவும் ஆர்ய பிராமணரது நெருப்பு வணக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் பணித்தனர். இவைகளுக்குக் கீழ்ப்படியாத திராவிட இன மக்களைத் தீண்டத்தகாதவர்கள் எனவும் புறம்பாக்கப்பட்ட சாதிகள் என்றும் பெயர் வைத்தனர்.

திராவிடர்களில் தீண்டத்தகாதவர்கள் என யாரைக் குறிப்பிட்டனர்களென்றால் (1) வெளியேயிருந்து சிந்து சமவெளியாகிய திராவிட நாட்டுக்குள் நுழைந்து திராவிடர்களை மேற்கொண்டு, ஆர்ய வர்த்தா என்ற ஆரிய அமைப்பை எதிர்த்த திராவிடர்கள். (2) பாரசீகர் அமைத்த நெருப்பு வணக்கத்தை எதிர்த்த திராவிடர் (3) சதுர் வேத சாதி முறைமைகளை எதிர்த்த திராவிட மக்கள்.

நிறத்தாலும், சாதியாலும், திராவிட மக்களை வேறுபிரித்தவர்கள் ஆரியர். இம்முறைமைகள் ஆதி திராவிடர்கள் மேல் தினிக்கப்பட்டனவே யன்றி, ஆதி திராவிடர்கள் சாதி வேற்றுமையுள்ளவர்கள் அல்ல. தொழில் வாரியாக வாழ்ந்தவர்கள். அவர்களின் தொழிலையே சாதியாக்கி அவர்களுக்குள் வேற்றுமையை செயற்படுத்தியவர்கள் ஆரியர்கள்.

இன்றைய நாட்களில் இந்தியர்களில் SC என்றழைக்கப்படுவோர் பஞ்சமர்கள் BC/MBC ஆகியோர் சூத்ரர்கள். FC என்று அழைக்கப்படுவோரில் சில பகுதியினர் சத்சூத்ரர். மற்ற FC என்றழைக்கப்படுவேர் வெளிநாடுகளிலிருந்து சிந்து சமவெளிக்குள் நுழைந்த வெளிநாட்டவர்கள் அதாவது ஆரியர் இன மக்கள்.

கிறிஸ்துவுக்கு முன்பு இந்தியாவில் இருந்த திராவிட மதங்களாகிய ஜைனம், பௌத்தம் ஆகியவைகளையும் கிறிஸ்துவுக்குப் பின் தென் இந்தியாவில், பக்தி எழுச்சியின் காரணமாக ஏற்பட்ட ஒருதெய்வக் கோட்பாடுடைய சைவம், அவதாரக் கோட்பாடுடைய வைணவம் ஆகியவைகளையும்

ஆரியர் தமக்குள் அடக்கி, இக்கொள்கைகளை ஆரியர் கொள்கைகள் என்று ஒருதெய்வக் கோட்பாடுடைய (Monotheistic concept) சைவக் கொள்கையை திரித்து "நானே கடவுள்" அகம் பிரம்மம் (Monism) என்ற கொள்கைகளை ஏற்படுத்தி, கடவுளில் இருந்து வந்தவன் பிராமணன் என்றும் பிராமணன் கடவுளின் பிரதிநிதி என்பன போன்ற சில கொள்கைகளை ஏற்படுத்தினர்.

கடவுளற்ற நாத்திக மதங்களாகிய ஜைனம், பௌத்தம் ஆகியவற்றில் காணப்படும் மீண்டும் மீண்டும் பிறத்தல் (கர்மச்சக்ரா, கர்ம சம்ஸாரா, Recycle of birth) போன்ற கொள்கைகளைப் பயன்படுத்தி, பிராமணனே பிறப்பினால் உயர்ந்தவன், பிராமணனுக்கு மறு பிறப்பு இல்லை போன்ற கொள்கைகளை ஏற்படுத்தி இந்தியத் திராவிடர்களுக்குள் சாதிப் பிரிவினைகளை ஏற்படுத்தி விட்டனர்.

இதன் மூலமாக மனுதர்ம சாஸ்திரமானது மதம் என்னும் நிறம் பூசப்பட்டது. இதுவே இன்று பிராமணீயம் என்றழைக்கப்படுகிறது.

கி.பி. 9ம் நூற்றாண்டில் பிராமணர்கள் சங்கர மடங்களை ஏற்படுத்தி சாதிப் பிரிவினைகளை இந்தியா முழுவதும் பரவும்படிச் செய்து, அதற்கு மனுதர்ம சாஸ்திரம் என்ற மத வர்ணம் பூசிவிட்டது.

சமஸ்கிருத மொழியில் இருந்து இந்த மனுதர்ம சாஸ்திரத்தை 1794ம் ஆண்டு Sir william Jones (சர் வில்லியம் ஜோன்ஸ்) என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இந்திய திராவிட மதங்களுக்குச் சமமந்தமே இல்லாத இக்கொள்கைகளுக்கு வெள்ளைக்கார ஐரோப்பியர்களால் யாருக்குமே சரியாக விளங்காத வர்ணாஸ்ரம் தர்மம், சாதிப் பிரிவினை ஆகிய கொள்கைகளுக்கு இந்து மதம் என்று பெயர் சூட்டி, வாழும் வழி (a way of life) என்றும் வழிவகுத்துவிட்டனர். இதுவே பிராமணர்களுக்கு வாழும் வழியாகவும் பெரிய ஆசீர்வாதமாகவும் ஆகிவிட்டது.

மதமாற்றம் என்னும் மயக்கம் என்ற புத்தகத்தில் அதின் ஆசிரியராகிய சுந்தர்ராஜ் என்பவர் சங்கரச்சாரியர் அவர்கள் தனது உபந்நியாசத்தில் சொன்ன "நல்லவேளை, வெள்ளைக்காரன் நமக்கு இந்து மதம் என்று பெயர் வைத்தான், நாம் தப்பித்தோம்" என்ற வாக்கியத்தைக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது (அதிகாரம் 24)

கி.பி. 1794 க்குப் பின்பே ஆரியானிஸம் என்ற சாதிப் பிரிவினைக் கொள்கையை உலகம் அறியலாயிற்று. இந்தியாவில் ஆரம்பித்த இக்கொள்கையைக் கொண்ட இந்திய ஆரியர்கள், தங்களை ஐரோப்பிய ஆரியர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களுடன் சேர்ந்து, தங்களைப்போல் அல்லாத மற்ற மக்களுக்கெதிராக International Aryan League என்ற ஒன்றை ஏற்படுத்தினார்.

கிறிஸ்தவம் என்பது கி.பி. 35க்குப்பின்பு சிதறடிக்கப்பட்ட யூத கிறிஸ்தவர்களால் கிழக்கு நாடுகளுக்குப் பரவ ஆரம்பித்தது. இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான தோமா என்பவர் தென் இந்திய நாட்டிற்குள் வந்து இயேசுக் கிறிஸ்துவின் சரீர பலி, அடக்கம், உயிர்தெழுதல் ஆகியவற்றைப் போதித்து அனேக தென் இந்தியர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார். வட இந்தியாவிற்குச் சென்று அங்கும் இயேசுக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். கோண்டப்போரஸ் என்ற ஒரு வட இந்திய மன்னன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளுண்டு. கி.பி 400ம் நூற்றான்டு காலத்தில் கான் ஸ்டான்டைன் என்ற அரசன் ரோம நாட்டை வெற்றி கொண்டு தானும் தன் தேசமும் கிறிஸ்தவத்தைத் தழுவியதாக அறிவித்தபோது அனேக வெள்ளை நிற ஐரோப்பியர்கள் ஆசிய நாட்டின் கிறிஸ்தவத்தை தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டனர் என்றும், அதினால் இந்தியக் கிறிஸ்தவம் ஐரோப்பியக் கிறிஸ்தவர்களின் பிடியில் இருப்பதையும் அறியப் பெறலாம்.

பாபுஜி ஜெகஜீவன்ராம் அவர்கள் மகவும் படித்த கல்விமான். அதிகமாக யாவராலும் அறியப்பட்ட ஒரு மேதை. இந்திய சுதந்திர நாட்டில் இராணுவ மந்திரியாக இருந்தவர். ஆயினும் சாதி

அடிப்படையில் தாழ்த்தப்பட்ட இனத்தவரான அவர் கீழ்த்தரமாகவே உயர் சாதியினரால் நடத்தப்பட்டார்.

வரனாசி என்ற ஊரில் ஒரு சிலை திறப்பு விழாவிற்கு அழைக்கப்பட்ட பாபுஜி ஜெகஜீவன் ராம் அவர்கள் சிலையைத் திறந்து வைத்துச் சென்றபின்பு, பிராமணர்கள் கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்து, தலித் இனமாகிய பாபுஜியினால் களங்கப்படுத்தப்பட்ட சிலையை சுத்திகரிப்புச் செய்தனர்.

பிராமணியம் என்பது இந்து மதத்திற்கு மதவர்ணம் பூசியிருப்பதினால், பிராமணீயத்திலிருந்து, தலித் மக்களை பணத்தினாலோ, கல்வியினாலோ, அரசியலினாலோ விடுதலையாக்குவது என்பது இயலாத காரியமாகும்.

மேற்சொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பின்பே பாபா சாகப் அம்பேத்கார் அவர்கள் ஒரு பெருங் கூட்டத்துடன் இந்து மதத்திலிருந்து பிரிந்து பௌத்த மதத்தைத் தழுவினார். இதைக் குறித்து இன்னும் தெளிவான ஆதாரங்களைப் பெற வேண்டும்.

Human Rights - OHCHR மூலமாக 01-09-2001 அன்று UNO வில் 3வது அறையில், காலை 10 மணி முதல் மதியம் 1 மணிவரை நடந்த ஒரு கூட்டத்தில் மேற்படி புத்தகம் அனேகருக்குக் கொடுக்கப்பட்டது. அக்கூட்டத்தில் இப்புத்தகத்தில் எழுதப்பட்ட அனேக காரியங்கள் விவாதிக்கப்பட்டன.

அதில் உயர் அதிகாரி அவர்கள், சங்கரமடங்களின் செயல்பாடுகள் பற்றி அறிய ஒர தனிக் குழுவை ஏற்படுத்துவதாக ஒப்புக் கொண்டிருந்தார்.

இனப்பாகுபாடும் சாதிப்பாகுபாடும் இந்து மதத்தால் காக்கப்பட்டு வருகிறது. அதினாலேயே பாபா சாகப் அம்பேத்கார் அவர்கள் சூத்ரர்கள், பஞ்சமர்கள் (தீண்டத்தகாதோர்) ஆகியோரை இந்து மத்திலிருந்து விடுவிக்கும்படியாக புத்தமதத்திற்கு மாறினார். அக்னியைக் கடவுளாக வணங்கும் பிராமணர்கள், பௌத்த மதமும் இந்து மதத்தின் ஒரு பிரிவு என்றும் புத்தர் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவர் என்றும் கூறினர். இதினால் மதமாற்றம் சாதியை மாற்றுவது இல்லை என்ற உண்மையை அறியப் பெறலாம்.

கி.பி. 15ம் நூற்றாண்டுக்குப் பின்பு இந்தியாவுக்குள் வந்த ஆங்கிலேயர் நாடு பிடிக்கும் நோக்கத்தில் நுழைந்தனரேயன்றி, இங்குள்ள இந்தியர்களை மதம்மாற்றும் நோக்கத்துடன் வரவில்லை. இந்த ஆங்கிலேயர்கள் அப்பொழுது இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆராதனை நடத்தவும், திருவிருந்தளிக்கவும், விவாகம், சவ அடக்கம் போன்றவைகளைச் செய்யவும் அனேக கிறிஸ்தவ பாதிரிகளை அனுப்பக்கேட்டனர். இப்பாதிரிகள் இந்தியாவில் ஒரு கூட்ட மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டு, அவர்களும் இறைவனின் பிள்ளைகளேயென்று அன்பு காட்டினர்.

வர்ணாசிரம தர்மத்தினால் ஓரங்கட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தினர், தங்களை மனிதாபிமானத்துடன் நடத்தின கிறிஸ்தவர்களிடம் தஞ்சம் புகுந்தனர்.

பிராமணீயத்தினால் அமைக்கப்பட்ட இந்து மதம் தலீத்துக்களைத் தள்ளி வைத்தது. கிறிஸ்தவம் அவர்களை அணைத்துக் கொண்டது. ஆயினும் நெருப்பை வணங்கிய ஆரியப் பிராமணர்களால் ஏற்படுத்தப்பட்ட சாதிப்பிரிவு கிறிஸ்தவர்களாலும் இன்றும் கடைப் பிடிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியது.

ஒன்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்திய திராவிட சமயங்கள் இந்து மதங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

வர்ணாஸ்ரம தர்மா என்ற சாதிப் பிரிவினையின் அடிப்படையில் அமைக்கப்பட்டதே இந்து மதமாகும். பிராமணர்களுக்கென்று ஒரு மதமோ, தத்துவமோ, இறையியலோ, ஆலய வழிபாடோ சொந்தமாகக் கிடையாது என்பதை வரலாற்றின் வழியாக அறிய இயலும்.

திராவிட சமயங்கள் என்னும் மரத்தில் ஏறிப்படர்ந்து அதை நாசப்படுத்தி வாழ்கின்ற தெள்ளுப் பூச்சிகளாகவே பிராமணியம் காணப்படுகிறது. எனவே, ஆரியம், வர்ணாஸ்ரம தர்மம், மனுதர்மம், இந்து மதம், இந்துத்வா, இனவேறுபாடு, சாதி ஆகிய யாவற்றிற்கும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஒரு பெயர் வைக்கலாம் - அதுவே பிராமணியம் என்பது. இந்திய சமயங்களாகிய பௌத்தம், சைனமதம் சைவம், வைணவம் ஆகியவை

படிப்படியாக ஆன்மீக வளர்ச்சி பெற்று வளர்ந்தவை. அவைகளில் நெருப்பு வணக்கம் கிடையாது. எனவே, மதம் மாறுவதினால் ஒருவனுடைய நெற்றியில் எழுதப்பட்ட சாதி என்ற அமைப்பு மாறாது.

இந்தியாவின் மக்கள் தொகையில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் திராவிடரே. ஒவ்வொரு திராவிடனும் ஆரியக் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதே அவனுக்குத் தன்மானச் சிறப்பாகும்.

கி.பி. முதல் நூற்றாண்டு காலங்களில் வாழ்ந்த வள்ளுவர், அதன்பின் ஏற்பட்ட பக்தி எழுச்சி, அவ்வெழுச்சியினால் அமைக்கப்பட்ட சைவ சமயம், அதினின்று பிரிந்த வைணவம். இவைகளின் உட்பிரிவுகளாகிய கௌமாரம். காணா பத்தியம், சாக்தம், சௌரம் ஆகிய நான்கும், ஆகமொத்தம் ஆறுசமையங்களும் திராவிட சமையங்களே! இவைகள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் கிறிஸ்தவமே!

முனைவர் தேவகலா, முனைவர் பாசுகரதாசு அவர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் முறையே திராவிட சமயங்கள் - ஒரு ஆய்வு, திராவிட சமய தத்துவங்கள் என்ற திராவிட பல்கலைக் கழகம் நடத்திய நேஷனல் செமினார்-ல் 2001-08-01 அன்று அளிக்கப்பட்டவையாகும்.

சாதியைப் பற்றிய இக்கட்டுரையில் வரும் அனேகக் குறிப்புகள் முனைவர் தேவகலா அவர் எழுதிய who are the Indian Dalits (இந்திய தலித் என்பவர்கள் யார்?) என்ற சிறு புத்தகத்திலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டவையாகும். அவர்களுக்கு என் நன்றி, இடையிடையே என் கருத்துக்களும் உண்டு. இவைகளைக் குறித்து இன்னும் கூடுதலாக நீங்கள் அறிய

1) Dravidian Spiritual Movement
278 Konnur High Road, Ayanavaram,
Chennai-600023.
Phone : 0091-44-26449032

2) Dr. Basu Karadawson
www.nittindia.org;idbaskar@hotmail.org

ஆகிய முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

பிறரைக்கொலை செய்வதையும், கெடுப்பதையும், கோயிலை இடிப்பதையும், வெடிமருந்துகளைத் திரட்டுவதையும், நோக்கமாகக் கொண்டு வாழ்பவன்,

"நீ" உன்னை நேசிப்பதைப் போல் பிறனையும் நேசி...." "... தீமையை நன்மையினால் வெல்லு....."

"உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு..." போன்ற அருளுரைகளை வழங்கிய தெய்வத்தின் வழியை, மெய் வழியை பிறருக்குக் கூறவியலுமோ? மெய் வழியை உணர்ந்தவர் மட்டுமே மெய் வழியை காட்ட இயலும்.

நான் மெய் வழியை உணராமல் உலக இன்பங்களை துய்ப்பதையே பெரு நோக்காகக் கொண்டு வாழ்ந்தேன். அதாவது என்னையே நான் அழித்துக்கொள்ளும் வழியில் வேகமாக ஓடினேன். 1967ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி இரவு இரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் ஓடும் இரயிலின் கதவு பக்கம் வந்தேன். மரணவாசலின் அருகில் சென்றேன். ஒரு அடி எடுத்து வைத்தேன். மரண வாசலில் பிரவேசிக்கலாம், என்ற சூழலில் இருந்த என்னை நோக்கி ஒரு சத்தம்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்." என்று கேட்டது.

அந்த சத்தம் வந்த திசையை நோக்கினேன். என்னை மாய்த்துக்கொள்ள (தற்கொலை செய்து கொள்ள) இருந்த எண்ணத்தைவிட்டு, சத்தம் வந்த திசையை நோக்கி பயணமானேன். மெய் தேவனை கண்டு கொண்டேன். ஆன்ம மீட்பு அடைந்தேன்.

நான் ஆன்ம மீட்பை (இரட்சிப்பை) அடைந்த விதத்தையும் ஆன்ம மீட்பை அடையும் முன் நான் இருந்த நிலையையும், மெய்த் தேவனை என் வாழ்வின் நாயகனாய் ஏற்றுக்கொண்ட

பின் பெற்ற பேரின்ப வாழ்வையும்,தேவ நாம மகிமைக்கு என்று சாட்சியாக அறிவிக்க்வும் இன்று இந்த கடைசி காலத்தில் நாம் ஜீவ வழியான, ஜீவாதிபதியான மெய்த் தேவனுக்கென்று, பிரகாசிக்கும் சுடர்களாய், ஒப்புரவாக்குதலின் பணியின் ஈடுபடவேண்டிய தேவையை சுட்டிக்காட்டவும், எழுதப்பட்டதே "கிறிஸ்தவம் தேவையா?" என்ற இந்நூல்.

இந்த தலைப்பை நான் எழுதும் போது மதயானை ஒன்று என் முன் நிற்பதைப் போன்ற உணர்வு என்னை ஆட்கொண்டது. மனோதத்துவ ரீதியாக என் உணர்வை நான் ஆராய்கையில், இன்றைக்கு உள்ள மதங்கள் பல மதயானைகளைப் போல் நாட்டை துவம்சம் செய்ய, மக்கள் சக்தியை ஒன்று திரட்ட வெறி கொண்டு திகழ்கின்றது என்பதே எனக்குக் கிடைத்த விளக்கம்.

இப்படிப்பட்டதான விளக்கங்களை பெற்றவர்கள் மதங்களை வெறுப்பது இயல்பே, இப்படிப்பட்டவர்கள், மதப் பிரச்சாரகர்களைக் கண்டால் மதயானையை, அல்லது சிங்கம், புலி, போன்ற கொடிய மிருகங்களோடு நினைப்பதும், அவர்களை அப்படிப்பட்ட மிருகங்களோடு ஒப்பிடுவதும், மதப்பிரச்சாரகர்களின் நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்து விடுவது. இன்றைக்கு அனேக பிரச்சாரகர்களை தங்கள் பிரசார முறைகளை குறித்து ஆராய வழி செய்துள்ளது.

ஒரு சில பிரச்சாரகர்களின் பிரச்சார வழிமுறைகள் ஒழுங்கற்றதாகக் காணப்படுவது. மக்களின் அன்றாட வாழ்வின் செயல்பாட்டின் சமநிலையை பாதிப்பதாய் அமைவதோடு மட்டுமல்லாமல், பல குடும்பங்களில் பேரழிவுகளை ஏற்படுத்தும் தூண்டு கோல்களாய் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட பிரச்சாரகர்கள் தங்கள் குரலை உயர்ந்த பயன்படுத்தும் அதிநவீன ஒலி அமைப்புகள் (Moden Sound Systems) வெளியிடும் அதிர்வோசை முன்பு, சிங்கத்தின் கர்ஜனை எம்மாத்திரம்?

இவர்களுக்கு திருக்குறளின் சொல்வன்மை, வினைத்திட்பம், வினைச் செயல்வகை, பினைத்தூய்மை, குறிப்பறிதல், அவை அறிதல், அவை அஞ்சாமை, சான்றாண்மை, பண்புடைமை, போன்ற அதிகாரங்களில் உள்ள குறள்களில் பொதிந்திருக்கும்

மறைபொருள்களை ஓதுவான் அதிகம் வேண்டும். இவர்கள் உலகிற்கு உப்பாக விளங்க மறுத்து, சாரமற்ற வாழ்வை, சுய ஆதாயத்திற்காக விரும்பி வரவேற்கையில், தங்களுக்கென புதுப்புதுக் கருத்துக்களை, கொள்கைகளை உள்ளடக்கி நடப்பதால் இவர்கள் சார்ந்துள்ள மதங்களும் இவர்களால் சிதைக்கப்பட்டு வளர்வதாய் உள்ளது. அப்படிப்பட்டதான மதங்களின் வளர்ச்சி, மதஸ்தர்களின் கருத்துக்களையும், கொள்கைகளையும் சார்ந்து மருளான மார்க்கங்களாய் மாறுவதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

மருளான மார்க்கங்களை கொண்டுள்ள மதங்கள் மறைந்தால், நலமாயிருக்கும் என்பதை,

கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டிய பல் சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம் உறும் அக்கலைகள் காட்டிய பல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளை விளையாட்டென நன்கறிவித்திங் கெனையே
பிள்ளையெனக் கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே
மருயான பற்பல மார்க்கங்களெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப்போக

என இராமலிங்க அடிகள் பாடிச் சென்றாலும் அபின் போன்ற மதம் மறையுமா?

மதங்கள் மனிதனோடு சேர்ந்து உள்ளதால், அதை மனிதன் அழிக்க நினைப்பது, மனிதர்களுக்கு அழிவை உண்டு பண்ணும், எனவே மதங்கள் மறையுமா? என நாம் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டிருப்பதை விட, நம்மைச் சுற்றி உள்ள போலிகளை, மெய்மைக்குள் நடத்த, சிறைபட்டவர்களை சிறையாக்க, உடல், மன ஊனமுற்றவர்களை விடுதலையாக்க நம்முடைய பகுத்தறிவின் வழி சுற்றி நடக்கும் இயற்கையோடு இணைந்த, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளை உணர, நம்மை நாமே நிதானித்து அறிய தலைப்பட்டால், நமக்கு மதங்கள் அதிகமாக இருக்காது. மதஸ்தன் என்ற பட்டமும் தேவையற்றதாய் காணப்படும்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற ஆன்றோர் வாக்கு உண்மையாயின் அந்த ஒரு குலத்தையும், ஒரு தெய்வத்தையும் அறிய வேண்டும்.

மதங்களின் வழியாக இறைவனையடையவது கூடு மெனில், அம்மதங்களைக் குறித்தும், அம்மதங்களுக்கிடையே காணக்கிடக்கும், தொடர்புகளைக் குறித்தும் அறிந்து கொள்வது நல்லது. சிறு சிறு மதங்கள் யாவும் பெறு மதங்களினின்றும் பிரிந்து வேறுபட்ட நிலையில் காணப்படுவதால், அச்சிறு சமையங்களை உலகளாவிய சமயங்களென்றும், இந்திய அளவில் உள்ள சமயங்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

தோன்றிய சமயங்கள் யாவும், ஆசியாக் கண்டத்தில் தோன்றியவை என்பதை எண்ணும் பொழுது, ஆசிய வாசிகளில் ஒருவரான நமக்கு பெருமிதம் ஏற்படுவது இயல்பு. ஐரோப்பிய, இங்கிலாந்திய, அமெரிக்க மக்கள், கி.பி. ஐந்நூறு ஆண்டுகள் வரையிலும் காட்டு மிராண்டிகள் போலவே வாழ்ந்தனர் என்பதும், அந்நாட்களில் ஆசியா மக்கள் நாகரீகம் மிகுந்த வாழ்ந்தனர் என்பதும் சரித்திர பூர்வமான உண்மையாகும். எகிப்திய, பாபிலோனிய, கிரேக்க, திராவிட நாகரீகங்களை வரலாற்று ஆசிரியர்கள் அறிவார்கள். இவை ஆசியாக் கண்டத்தின் பகுதிகளாகும். மதம் அல்லது சமயம் என்ற நிலையில் முதன் முதலாவது ஏற்பட்டது யூத சமயம் ஆகும். இதன் தொடர்புள்ள சமயமாகக் கிறிஸ்தவம் காணப்படுகிறது.

அபிரகாமின் வழித் தோன்றலான இஸ்மவேலின் பன்னிரெண்டு கோத்திரத்தார், அதே ஆபிரகாமின் வழித் தோன்றலான ஈசாக்கு, யாக்கோபு, என்பவர்களின் பன்னிரெண்டு கோத்திரங்களை ஏற்றுக் கொள்ளாமல் பகைமை பாராட்டினபடியினால், அந்த யூதர்களின் மதக் கொள்கைகளையும், அந்த யூத மதத்தின் நிறைவேறுதலாகிய கிறிஸ்தவக் கொள்கைகளையும் பெற்றுக் கொள்ளாமல், தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளே ஷியா, சுன்னி, அகமதியா இயக்கம் போன்ற இஸ்லாமியக் கொள்கைகளாகக் உருவாகி இஸ்லாம் என்ற மதம் தோன்றிற்று. எனவே உலகச் சமயங்களாக

யூதம் கி.மு. 2000 முதல் இன்று வரை
கிறிஸ்தவம் கி.பி 1 முதல் இன்று வரை
இஸ்லாம் கி.பி. 700 முதல் இன்று வரை
ஆகிய மூன்று சமயங்களும் நிற்கின்றன.

(ஆண்டுக்கணக்குகள் சில பலவாக வித்தியாசப்படலாம். ஆனால் அது 250 - 300 க்குள் மட்டுமே இருக்க இயலும்) யூதருடைய மார்க்கத்தில் யூதம், எபிரேயம் என இரு பிரிவுகள் உண்டு, கிறிஸ்தவத்தில், கத்தோலிக்கம், புரட்டஸ்டாண்ட், பெந்தேகொஸ்தே என் பிரிவுகள் உண்டு.

இஸ்லாமியத்தில் ஷியா, சுன்னி, அகமதிய இயக்கம் என்ற பிரிவிகள் உண்டு. ஆனால் இப்பிரிவுகள் யாவும் இறைவனால் உண்டாக்கப்பட்டவைகள் அல்ல. இறைவன் அருளிய வேதத்தினால் உண்டாக்கப்பட்டதும் அல்ல. இப்பிரிவுகள் யாவும், மனித அறிவினாலும், மனித தத்துவங்களாலும் ஏற்படுத்தப்பட்டவைகளே, இந்திய அளவிலான சயமங்களை ஆராய்ந்து பார்க்கும்போது முதலாவது வரும் ஆரிய சமயம். அதினால் ஏற்பட்ட விளைவில் ஜைன சமயமும், அதையடுத்து பௌத்த சமயமும் தோன்றின. இவை மூன்றும் வட நாட்டு சமயங்களாகும்.

ஆரிய சமயம் கி.மு 2000 தொடக்கம் இன்று வரை
ஜைன சமயம் கி.மு. 800 தொடக்கம் இன்று வரை
பௌத்த சமயம் கி.மு 600 தொடக்கம் இன்று வரை
உள்ளன.

ஆரிய சமயம் பிற்காலத்தில் பல சமயங்களுடன் கலந்து, இன்றைய இந்து சமயமாக நிற்கின்றது. ஜைன சமயம், இந்தியாவில் தனித்த நிலையில் காணப்பட்டாலும், இந்து சமயத்துடன் அது ஒத்துப் போகின்றது. பௌத்த சமயம் இந்தியாவிலிருந்து, ஆரியத் தந்திரத்தினால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் இந்தியாவில் கொஞ்சமாகவும் சீனா, திபேத், ஜப்பான், பர்மா, இங்கை ஆகிய இடங்களில் பரவலாகவும் உள்ளது.

தென் இந்தியாவில் ஆதியில் இயற்கை வணக்கம், ஆவி வணக்கம், முன்னோர் வணக்கம், வீரர் வணக்கம் ஆகிய

வணக்க முறைகள் இருந்தனவே தவிர, மதங்களோ, இன்றைய நாட்களில் வணங்கப்படுகின்ற கடவுள்களோ இருந்ததாக கி.மு வில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எதிலும் இல்லை.

உதாரணமாக

மண் திணிந்த நிலனும்
நில னேந்திய விசும்பும்
விசும்பு தை வரு வளியும்
வளி தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம் பெரும் பூதத்து இயற்கை போல
(முரஞ்சியூர் முடிநாக ராயர்)

என்றும்

நிலந் தீநீர் வளி விசும் பொடு
ஐந்துங் கலந்த உலக மாயக்க மாதலின் -
(தொல்காப்பியம்)

என்றும்

மாயோன் மேயக் காடுரை உலகும்
சேயோன் மேய மைவரை உலகும்
வேந்தன் மேய தீம்புனல் உலகும்
வருணன் மேய பெருமணல் உலகும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்த லெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே
(அகத்திணை)

என்றும் காணப்படுதலைக் காணலாம்.

இந்திய சமயம் என்று சொல்லும்போது, நம் கண்முன் நிற்பது இந்து மதமே. அப்படியொரு மாயை ஆரியர்களால் தோற்றுவிக்கப்பட்டு விட்டது. வரலாற்றுப் பார்வையோடு சமய ஆய்வினைச் செய்யும்போது இன்று நாம் காணும் இந்து மதம் இந்திய மதம் அன்று என்பதைக் காணலாம்.

ஆரியர்களின் வருகைக்கு முன் இந்திய சமய இறை வழிபாடு எப்படியிருந்தது என்பதை, மொகன்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கிடைக்கப் பெற்ற சிந்து வெளி நாகரிகம்,

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே சிறப்போடு திகழ்ந்ததை வெளிப்படுத்தும். ஆனால் சிந்து என்ற பெயரும், ஹிந்து என்ற பெயரும் ஆரியர்களின் வருகைக்குப் பின்பே ஏற்பட்டது.

இந்தியாவின் புனித நதியாகக் கருதப்படும் கங்கை நதிக்கு அந்த பெயரைச் சூட்டியவர்கள் கிரேக்கர்களே! சுமர் 4000 ஆண்டுகளுக்கு முன்பு இது பைசோன் (phison) என்று அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

(And phison, which denotes a multitude, turning into India makes its exit in to sea, and is by the Greeks called Ganges - Antiquities of the Jews - page 25)

"தோட்டத்திற்குத் தண்ணீர் பாயும் படி ஏதேனிலிருந்து ஒரு நடி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. முதலாம் ஆற்றுக்கு பைசோன் என்று பெயர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். அவ்விடத்திலே பொன் விளையும்" என்று கிறிஸ்தவ வேதாகமத்தில் (ஆதியாகமம் 2:10,11) எழுதப்பட்டு உள்ளது.

மேலும் அவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிராக அசிரியாவுக்குப் போகிற வழியிலிருக்கும் சூர் மட்டும் வாசம் பண்ணினார்கள் (ஆதியாகமம் 25:18) என்றும் கூறப்பட்டுள்ளது. ஆபிரகாமின் மகனான இஸ்மவேலின் சந்ததியார் வட இந்தியாவில் கங்கை நதி பகுதியில் குடியேறியிருந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

உலகப் படைப்பிலிருந்தே இன்றைய இந்தியப் பகுதிகளுக்குப் மத்திய ஆசிய மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை அறிய முடிகின்றது. இதன் காலத்தைக் கணக்கிடுவது கடினம். சிந்து வெளி நாகரீகம் ஆரியர்களின் காலத்திற்கு முற்பட்டது. என்றாலும், மத்திய ஆசியாவிற்கும், சிந்து வெளிப்பகுதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை மறுக்க முடியாது. மத்திய ஆசிய பகுதிகளில் நிலவிய சுமேரிய நாகரீகத்திற்கும், சிந்து வெளி நாகரீகத்திற்கும் தொடர்பு உண்டு என்பதை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

வழிபாட்டு முறைகளிலும் மத்திய ஆசிய மக்களின் தெய்வ வழிபாடே சிந்து வெளியில் இருந்திருக்க முடியும் என்பதை மறுக்க முடியாது. மத்திய ஆசிய மக்களின் வழிபாடு கி.மு 5000 ஆண்டுகளுக்கு முன்பு எப்படியிருந்தது என்பதை கிறிஸ்தவத் திருமறையின் மூலம் அறிய முடிகின்றது. இதுவே நமக்குக் கிடைத்துள்ள வரலாற்றில் மிகப் பழையதாகும். குறிப்பாக ஆபிரகாம் காலத்திற்கு முன் மத்திய ஆசியாவில் இருந்த தெய்வ வழிபாடே சிந்து வெளியில் பிரதி பலித்திருக்க வேண்டும்.

சிந்து வெளி நாகரீக காலத்தில் வழிபாட்டிற்குரியதாக இருந்த பலிபீடம், புராண காலத்திற்குப் பின்னர் சிவலிங்கம் என்ற பெரில் வணங்கப்பட்டுள்ளது. மத்திய ஆசிய மக்கள் தகன பலியிடப் பயன்படுத்திய மூன்று கூருள்ள ஆயுதம் சூலாயுதமாகவும், பலியிடப்பட்ட காளையின் உருவம், நந்தியாகவும் பின்னர் வழிபடப்பட்டன. (இந்து மதம் இந்திய மதமா... உறையூர் வளவன், பக்கம் 12,13,16)

ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு இந்து என்ற வார்த்தையை சேர்த்துப் பயன்படுத்துவது வெகு காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்ததாகும். ஆரிய தர்மம் என்பதே அதற்கு முற்காலத்தில் பெயராகும். பூர்வ கால வேதங்களில் இந்து என்ற வார்த்தை எதிலும் காணப்படவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தந்திரம் என்றும் வேத நூலில் இப்பதம் மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டதேயன்றி, மதத்தைத் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படவில்லை.

“சிந்து நதிக் கரைக்கு அப்புறத்திலுள்ள மக்களால் இச்சொல் வழங்கப்பட்டது. Indus என்ற சொல்லானது. சிந்து என்ற சொல்லில் இருந்து ஏற்பட்டதாகும். சிந்து என்ற சொல் பின்னர் ஹிந்து என்றும் ஹிந்துஸ்தான் என்றும் இந்தியா என்றுமாயிற்று” (Discovery of India by Jawaharlal Nehru p.62)

“இந்து மதம் என்ற சொல்லை விட ஆரிய மதம் என்ற சொல்லே நல்ல சொல்லாகும்” (Mahatma Gandhi - Hindu Dharma the Glory and abuses P.27)

"இந்து என்ற பெயரே வெளி நாட்டுப் பெயராகும். நாட்டின் மக்களிலிருந்து, தங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இப்பெயரை முகமதியர் கொடுத்தனர். எந்த சமஸ்கிருத வேதத்திலும் இப்பெயர் இல்லை." (Dr. Ambedkar, writings and speeches vol. I pub- Educational Dept. Govt. of Maharastra 1979 P.50)

"கிரேக்கர்களும், பாரசீகர்களும் இந்த நாட்டை சிந்து நாடு என்று அழைத்தனர். பாரசீகர்களுக்கு சி என்று எழுந்து உச்சரிக்க வராமையினால் ஹி என்று உச்சரித்தனர். சிந்து ஹிந்து ஆயிற்று" (B.N. Lunia - Life and cultures in Ancient India)

இந்து என்ற சொல்லானது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை அறிவிக்கும் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டது. (Dr. S. Radhakrishnan -The Hindu view of Lief P.12)

"வட மேற்குப் பகுதியிலிருந்து யுத்தத்திற்கு வந்தவர்கள் இங்குள்ள மக்களுக்கு சிந்துக்கள் என்று பெயர் வைத்தனர். இதுவே பின்னர் இந்துவாயிற்று." (சைவ சமயம் - அருணாச்சலாம்... பாரிநிலையம் 1969)

இந்து மத மார்க்கங்களைக் குறித்துச் சொல்லப்படும் எந்த வேதத்திலும் அல்லது இதிகாசங்களிலும் இந்து என்ற பெயர் காணப்பட வில்லை. எந்த மத அடிப்படையிலும் இப்பெயர் காணப்படவும் இல்லை. சமீப நாட்களில் தான் இந்த வார்த்தை பழக்கத்தில் வந்தது.

சிந்து என்ற இந்திய சொல் சமஸ்கிருதத்தில் இன்டஸ் என்று அழைக்கப்பட்ட ஒரு நதியின் பெயராகும். பெர்சியர்கள் இவ்வார்த்தையை ஹிந்து என்று அழைத்தார்கள். இன்டஸ் நதிக்கரையையொட்டி அமைக்கப்பட்ட பெர்சியரின் சாம்ராஜ்ஜியம் கி.மு. 6வது நூற்றாண்டுக் காலத்தில் ஏற்பட்டதாகும் (பைபிளில் பெர்சியாவின் 127 நாடுகளை ஆண்ட அகாஸ்வேரு சக்ரவர்த்தியைக் குறித்த சரித்திரத்தைத் கூறும் எஸ்தரின் புஸ்தகத்தில் இந்து தேசம் முதல் எத்தியோப்பியா வரைக்கும் என்றிருப்பதைக் கவனிக்கவும்)

ஆயினும் பெர்சியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய

போது இந்தப் பெயரும் மறைந்து விட்டது. மறுபடியும் இப்பெயர் வட மேற்குப் பாகங்களில் இருந்து வந்த முஸ்லீம்களின் படையெடுப்பினால் இந்தியாவுக்குள் நுழைந்தது.

"இந்து என்பது இந்தியனைக் குறிக்கும் சொல்லாக இருந்ததேயன்றி ஒரு மதத்தையோ, மார்க்கத்தையோ குறிக்கும் சொல்லாக் கருதப்படவில்லை. தொடர்ந்து வந்த இஸ்லாமியர், ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலங்களில் இந்து என்ற இப்பெயர் ஒரு மதத்தின் பெயராக ஆக்கப்பட்டது" (Manorama Year Book 75, page 270)

"ஈரான் தேச பாகங்களிலிருந்து இந்தியாவுக்குள் குடியேறின ஆரியர்கள் என்போர் இன்டஸ் நதியின் வளப்பத்தைக் கண்டு அதிசயித்து, அதை உச்சரிக்கத் தெரியாமல் சிந்துஸ் என்றனர். கி.மு. 522ம் ஆண்டு தரியு என்ற பெர்சிய மன்னன் இந்த இன்டஸ் நதியின் பாகங்களை ஒட்டிய பிரதேசங்களை தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான். அவர்கள் சிந்து என்பதை உச்சரிக்கத் தெரியாமல் இந்துஸ் என்றனர். கிரேக்கர்கள் இதையே பிற்காலத்தில் இன்டஸ், இண்டியா என்றனர். ஐரோப்பியர் இன்டிஸ் என்றனர். இஸ்லாமியரின் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா இருந்த போது பெர்சியர் வைத்த பெயரையொட்டி ஹிந்துஸ்தான் என்று வழங்கப்படலாயிற்று. ஹிந்துஸ்தானத்தில் வாழ்ந்தவர்கள் ஹிந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இன்றைக்கு கருதப்படுவதுபோல் பூர்வ காலங்களில் இந்து என்பது ஒரு மதத்தின் பெயராகக் கருதப்படவில்லை. ஹிந்து என்றால் இந்தியன் என்றே பொருள் படும்." (Manorama Year book 75 P.255)

"வெள்ளைக்காரன் நம்மை இந்து என்று அழைத்தான். அவன் கொடுத்த பெயர் நம்மைக் காப்பாற்றிற்று." (Acharya-Swamingal upanya sangal part I - kalaimagal - kariyalayam - 1957)

மேற்கண்ட கருத்துக்கள் யாவும் Confusion called conversion - Sunder Raj... P.128. 129) என்ற ஆங்கிலப் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டவைகளாகும்.

இந்தியா என்பது அந்நாட்களில் ஒரே நாடாக இருக்கவில்லை. வெள்ளையரின் ஆட்சியில் பலூஸ்சிஸ் தானம் முதல் பர்மா வரையில் இலங்கை உட்பட ஏக இந்தியா (All India) என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது. இந்தியாவுக்கு சுதந்திரம் தரும் முன்னர், மொழி இனவாரியாக பலூசிஸ்தான், பாகிஸ்தான், பர்மா, இலங்கை, மலேசியா, நேபாள், திபேத் ஆகிய நாடுகளும் சுய இராஜ்ஜிய நாடுகளாக அறிவிக்கப்பட்டன.

இந்தியா, இயற்கை வணக்கம், ஆரியம், ஜைனம், பௌத்தம், சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம், இஸ்லாம் போன்ற பல மதங்களைக் கொண்ட நாடாகும். குருநானக் அவர்களின் காலத்தில் ஏற்பட்டது சீக்கியம் ஆகும்.

இப்படிப்பல மதங்கள் நிறைந்த நாடாக இந்தியா இருந்தபடியினால் வெள்ளையர், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இரண்டைத் தவிர, மற்ற எல்லாச் சமயங்களுக்கும் சேர்த்து ஒரே பெயராக இந்து மதம் என்று பெயரிட்டனர். நாட்டுக்கு சுதந்திரம் தரும்போது மதசார்பற்ற நாடாக இருக்கும்படி விட்டுப் போயினர்.

எனவே இந்து மதம் என்ற தனியான ஒரு மதம் இந்தியாவில் இருந்ததில்லை. அது ஆதி மதமும் இல்லை

"இந்து மதம் என்ற பெயர் தமிழிலாவது, வட மொழியிலாவது உள்ள பண்டை நூல்களில் காணப்படவில்லை. இக்காலத்தில் வடமொழிப் பதத்தை பிரமாணமாகக் கொண்ட வைதீகர்கள் தங்கள் மதமே இந்து மதம் எனப் பேசுபவராய், அம்மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்று நிலை நாட்ட முன் வந்துள்ளனர். ஆங்கில மதம், ஜப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்து மதம் என்ற ஒரு மதமும் உண்டாகலாம். அவை இல்லாதல் போல இந்து மதம் என்று ஒரு மதமும் இல்லை. வேதத்தையும் சமஸ்கிருதத்தையும் பிரமாணமாகக் கொண்ட மதமே இந்து மதம் என்றால், அது இந்தியாவிலுள்ள பல மதங்களில் ஒரு மதமாகுமே தவிர, அது இந்தியர் எல்லார்க்கும் உரிய பொது மதமாகாது" என்று தமிழ்ப் பேராசிரியர்.க. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சொல்வார்கள். (தமிழர் சமயம்

க. சுப்பிரமணிய பிள்ளை, சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகம் சென்னை 1971 பக்கம் 89-95)

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி கி.பி. 32ம் ஆண்டிலேயே தென் இந்தியாவுக்குள் அவருடைய பன்னிரண்டு சீடர்களில் ஒருவராகிய தோமா என்பவரால் அறிவிக்கப்பட்டது. இன்றைய கேரள எல்லைக்குள் ஒன்பது கிறிஸ்தவ சபைகளும் கேளர-தமிழ் நாட்டின் எல்லையில் ஒரு சபையுமாக மொத்தம் பத்து சபைகளை அவர் நிறுவவினார். அந்நாட்களில் மேற்கத்திய நாடுகளில் உறவு இல்லாமையினால் தமிழ் திராவிடக் கலாச்சார நிலைமையிலேயே கிறிஸ்தவம் பின்பற்றப்பட்டு வந்தது.

எருசலேமில் கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டபோது, அவர்கள் பல நாடுகளுக்கும் திரிந்தோடி, அதே நேரத்தில் கிறிஸ்துவின் நற்செய்தியையும் அறிவித்த வரலாறு பைபிளில் காணக்கிடைக்கின்றது. (அப்போஸ்தலர் 8:1-4)

வடக்கில் ஒரு சில மக்களால் பின்பற்றப்பட்டு வந்த ஆரியம் வளர்ச்சியடையாத நிலையில் ஜைனம், பௌத்தம் பெருமளவில் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. சேர, சோழ, பாண்டிய நாடுகள் நீங்கலாக சிந்து சமவெளி தேசம் நாத்திக மார்க்கமாகிய பௌத்தத்தால் நிறைந்து காணப்பட்டது. தமிழ் தேசங்களில் சமணமார்க்கம் சிறிது காணப்பட்டாலும், பெரும்பான்மையோர் சிறு தெய்வ வணக்கங்களிலும், இயற்கை, குழுத்தலைவர், (வீரன்) முன்னோர், மரித்தோரின் ஆவிகள் போன்றவைகளைப் பின்பற்றி வணங்கி வந்தனர் என்பதை அனேக ஆராய்ச்சியாளர் ஒப்புக் கொள்கின்றனர்.

எருசலேமில் சிதறடிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் ஒரு கூட்டம் தாமஸ் (தோமா) உட்பட சீரிய தேசத்தில் அடைக்கலம் புகுந்து அங்கே உள்ள மக்களுக்கு கிறிஸ்து இயேசுவினால் உண்டாகும் ஆன்ம ஈடேற்றம் பற்றி அறிவித்தனர். பின்னர் இவர்கள் கி.பி.52ல் சேர நாட்டின் மேற்குக்கரைப் பகுதியில் வந்து கிறிஸ்துவின் கொள்கைகளை அறிவித்தனர். இதுவே சீரியக் கிறிஸ்தவம் என்று அழைக்கப்பட்டது.

கி.பி.2ம் நூற்றாண்டு தொடக்கம் தென் நாட்டில் கடவுளற்ற நாத்திகக் கொள்கைகள் மறைந்து பக்தி வளர்ச்சி ஏற்படலாயிற்று

முதல் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வள்ளுவம் அனேகத் திராவிடர்களால் பின்பற்றப்பட்டு வளர்ந்தது. முனைவர் மு.தெய்வநாயகம் அவர்களின் திருவள்ளுவர் கிறிஸ்தவரே, ஐந்தவித்தான் யார்? வான் எது? நீத்தார் பெருமை, திருக்குறள் - சைவ சித்தாந்தம் - விவிலியம் ஒப்பாய்வு நூல் போன்ற புத்தகங்கள் வள்ளுவர் சார்ந்த சமையம் கிறிஸ்தவ சமையமாகவே காட்டுகின்றன.

இதே காலத்தில் வடக்கே அனேக ரிஷிகள் (குழுக்களாகவும், தனியாகவும்) ஆய்வு செய்தவர்கள் வேதங்கள், ஆகமங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், இதிகாசப் பெருங்கதைகள், புராணக் கதைகள் என்று பற்பல கொள்கைகள், சமையங்கள் வளர்ச்சி பெற உதவினர்.

தென் நாட்டில் பக்தி நெறி வளர்ந்து, அன்புக் கடவுள் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட அறவாளி அந்தணனாகக் காட்சியளித்தார். அன்புச் சமையமே பின்பு சைவ சமயம் ஆயிற்று.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமென்று யாரும் அறிந்திலர்
அன்பே சிவமென்று யாரும் அறிந்தபின்
அன்பே சிவமென்று அமர்ந்திருப்பரே

என்ற 6ம் நூற்றாண்டு சித்தராகிய திருமூலர் அவர்களின் செய்யுள் சிந்திக்கத் தக்கது. சைவ சமயம் ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் சைவம் - வைணவம் என்ற இரு பிரிவுகளாகி, சைவத்தின் கிளைகளாக கௌமாரம், காணாபத்யம் என்றும், வைணவத்தின் கிளைகளாக சாக்தம், சௌரம் என்றும் ஆக மொத்தம் ஆறு சமயப் பிரிவுகளாக நின்றது.

இவ்வாறு பிரிவுகளுக்கும் அடித்தளமாக அமைவது கிறிஸ்தவ சிந்தனைகளே என்பதை முனைவர் பாசுகர தாசு அவர்கள், வேதாந்தமும் கிறிஸ்தவமும் என்ற தனது நூலில் விளக்கிக் காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஏழாம் நூற்றாண்டில் வடக்கிலிருந்து ஆரியர் தெற்கே வந்து, தமிழ் பயின்று வடமொழியைத் தமிழுடன் இணைத்து, இவ்வாறு சமையங்களின் இணையற்ற வளர்ச்சியைக் கண்டு வியந்து, பின்னர் இவ்வாறு சமையக் கருத்துக்களையும் வடநாட்டிற்கு எடுத்துச் சென்று, அவைகளை குறைத்தும், சிதைத்தும், சேர்த்தும் ஆரிய மார்க்கமாக உரைத்தும் அதுவே தெய்வ மார்க்கம் எனவும் பரப்பின காரியங்கள் குறித்து சுவாமி தர்மதீர்த்த மகராஜ் பி.ஏ., பி.எல் அவர்கள் தாம் எழுதிய Imperialism of Hinduism என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் எழுதப்பட்ட காலங்களில் தடை செய்யப்பட்டிருந்தன. தமிழில் தடைகல் என்ற பெயரில் திரு. வி.டி. சகாயம் என்பவரால் வெளியிடப்பட்டிருந்தது. தற்காலங்களில் இவை புழக்கத்தில் இல்லை.

இயேசு கிறிஸ்துவின் சீடராகிய தோமா என்பவரால் கிறிஸ்தவம் தென் நாட்டில் திராவிட கலாச்சார நெறி முறைகளுடன் போற்றப்பட்டு வந்தது.

கி.பி. 1542ம் ஆண்டு பாஸ்கி பிரான்சிஸ் சேவியர் என்ற கத்தோலிக்கப் போதகர் தென்நாட்டில் பரவர் வகுப்புக் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ நெறிமுறைகளை உபதேசிக்க அனுப்பப்பட்டார்.

கி.பி.1599ம் ஆண்டு ஜூன் மாதம் இப்படிப்பட்ட தோமா வழிக்கிறிஸ்தவர்களை ரோமன் கத்தோலிக்க சபையின் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார். தோமா வழிக்கிறிஸ்தவ சபை சுயாதீனத்திலிருந்து ரோமன் கத்தோலிக்க சபையின் கவனிப்பின் கீழ் அமைந்தது.

தமிழ் திராவிடக் கிறிஸ்தவம் ரோமன் கத்தோலிக்க சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இக்கிறிஸ்தவத்தின் கொள்கைகளையும் ஆராதனை முறைமைகளையும் கலாச்சாரங்களையும் தரைமட்டமாகத் தகர்த்து, பின்பு, தங்களுடைய கிறிஸ்தவக் கொள்கைகளின்மேல் சபைகளைக் கட்டினர் என்பது வரலாறாகும்.

கி.பி. 1605ம் ஆண்டு இராபர்ட்-டி-நோபிலி என்றவர் மதுரைக்கு வந்து அங்குள்ள பிராமண சமுதாயத்தினருக்கு கிறிஸ்துவைக் குறித்து அறிவித்தார்.

போர்த்துக்கீசிய ஜெசுவைட் பிரிவினைச் சார்ந்த தந்தை பெர்னான்டஸ் என்பவர், மதுரையில் இயங்கிக் கொண்டிருந்த பரவர் கிறிஸ்தவ சபை இனத்தவரை முற்றிலும் போர்த்துக்கீசிய வழியில் மாற்றி வைத்திருந்தார்.

எனவே, நோபிலி அவர்கள் மதுரைச் சபையை விட்டு விலகி, தடுப்புச் சுவராக நின்ற சாதிப் பிரிவினைகளை அழிக்கும்படியாக தம்மை வெறுத்து ஒரு இந்திய மத சந்நியாசிபோல மாற்றிக் கொண்டார். தமிழ் மொழிை நன்றாகக் கற்றுக் கொண்டார். நான்கு ஆண்டுகள் சேவையில் 63 பிராமணர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார். தென் தமிழ் கலாச்சாரங்களை மாற்றாமல் கிறிஸ்தவம் போதிக்கப்பட்டது. ரோமச் சபை அவருடைய வரி முறைகளைப் பாராட்டினாலும் அவருக்குப் பொருள் உதவி செய்ய முன்வரவில்லை. எனவே தந்தை நோபிலி அவர்கள் அச்சபையை விட்டு விலகி மைலாப்பூருக்கு வந்தார். பிற்காலங்களில் வருமையில் வாழ்ந்து கண்பார்வை இழந்து கி.பி.1656ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் தேதி மரித்தார்.

இவருக்குப் பின் ஜான் பிரிட்டோ என்பவரும் கான்ஸ்டான்டைன்ஜோஸப் பெஸ்கி என்பவரும் நோபிலி அவர்களின் போதனை நெறிகளையே பின்பற்றி வந்தபோதிலும் ஆரியர்களால் மக்களுக்குள் திணிக்கப்பட்ட ஜாதி முறைமைகளையே பின்பற்றி வந்தபடியினால், இவர்களுக்கும் பல இன்னல்கள் உண்டாயின. இவர்கள் அதிகமாக ஊழியம் செய்த பகுதி தஞ்சை, இராமனாதபுரம் மாட்டங்களாகும். ஜோஸப் பெஸ்கி என்பவர் தனது பெயரை வீரமா முனிவர் என மாற்றிக் கொண்டார். தோற்றத்தில் ஒரு பிராமணரைப் போல முடிவளர்த்து, குடுமி வைத்து, பஞ்சகச்ச வேஷ்டி உடுத்தித்திரிந்தார். நல்ல தமிழ் பற்றுடையவர். தேம்பாவணி இவருடைய படைப்பாகும்.

கி.பி.1706ம் ஆண்டு, டென்மார்க்கு தேசத்தைச் சார்ந்த நான்காம் பிரடெரிக் என்ற அரசன், பெர்த்தலேமேயு சீகன் பால்க்,

ஹென்ரிட்ச் ப்ரெச்செள என்ற இரண்டு கிறிஸ்தவ சமயப் பணியாளர்களை தென் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இவர்கள் தரங்கம் படி என்ற இடத்தில் வந்து சேர்ந்தனர். ஹென்ரிட்ச் ப்ளுச்செள சீக்கிரமாக இறந்து விட்டார். சீகன்பால்கு என்பவர் தமிழ் கற்று, மீண்டும் ஐரோப்பா சென்று, அச்சு இயந்திரம், தமிழ் எழுத்து அச்சுக்கள் ஆகியவைகளைச் செய்து, அவைகளைக் கொண்டு வந்து, தரங்ம்பாடியில் இந்தியாவில் முதல் அச்சு இயந்திரத்தை நிறுவினார். அதில் முதன்முதலில் அச்சில் ஏற்றப்பட்ட நூல் பைபிள் ஆகும்.

இவர் ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியும் தனக்கென்று ஒரு பைபிள் வைத்திருக்க வேண்டும் என்று விரும்பினார். எனவே கிறிஸ்துவின். நற்செய்திப் பணியும் கல்விப் பணியையும் மேற்கொண்டார். இவருக்குப் பின்பு பிரடரிக் ஸ்வார்ட்ஸ் என்ற இறைப்பணியாளர் தன் மரணம் வரை இறைப்பணி, கல்விப்பணி ஆகிய இரண்டையும் சேர்த்து உழைத்து கி.பி 1798ம் ஆண்டு மரித்தார்.

கி.பி. 1793ல் வில்லியம் கேரி என்பவர் கொல்கொத்தாவில் ஊழியம் செய்தார். வங்காள மொழியில் பைபிளை மொழி பெயர்த்தவர் இவரே. இராஜாராம் மோகன்ராய் இவருக்கு நெருங்கிய நண்பராவார். இவரைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது பிரம்ம சமாஜம் என்ற பிரிவாகும்.

ஆங்கிலேயர் இந்தியத் துணைக் கண்டங்களை எல்லாம் தங்களுக்குள் ஐக்கியப்படுத்தி (ஆல் இண்டியா) ஏக இந்தியா வாக்கினர். இவர்களுடைய ஆட்சி காலத்தில் கிறிஸ்தவம் வேகமாக வளர்ச்சி அடைந்தது. ரோமன் கத்தோலிக்க சபையைப் போலவே புரட்டஸ்டண்டு சபையினரும் ஜாதிப் பிரிவினைகளைக் கண்டு கொள்ளவில்லை.

கீழ்சாதிக்காரர்களை மேற்சாதிக்காரர்கள் அடிமைகளாக நடத்தினர். இந்நிலையில், ஆங்கிலேயர் அதிக அளவில் இந்திய நாடுகளில் அதிகாரம் செலுத்திய போது அதிக அளவில் மிஷனரி ஸ்தாபனங்களும் ஏற்படலாயின. ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவர் அல்லாதோரின் மார்க்கங்களை பேய்தனத்திற்கடுத்ததாக நினைத்தனர்.

கிறிஸ்தவ மிஷனரி சொசைட்டி (CMS) சொசைட்டி பார்திப்ராபகேஷன் ஆப்த காஸ்பல் (SPG) இலண்டன் மிஷனரி சொசைட்டி (LMS), பாப்திஸ்துமிஷன், லுத்தரன் மிஷன் போன்ற ஸ்தாபனங்கள் இந்திய நாடு முழுவதும் நிலங்களைக் கையகப்படுத்தி சுற்றுச் சவருடன் கூடிய மிஷனரி அமைப்புகளையும், கூடவே பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பெண்கள் கல்விக்கூடங்கள், மருத்துவ விடுதிகள் போன்றவைகளையும் ஏற்படுத்தி அவைகள் மூலம் கிறிஸ்தவத்தை இந்திய நாடுகளில் பரவச் செய்தனர்.

அலேக்சாண்டர் டஃப் என்பவர் ஆங்கிலக் கல்வி மூலமாக உயர்சாதி இந்துமக்களைக் கவர்ந்தார். கிறிஸ்தவ மிஷனரிகளோ உயர்சாதி இந்துக்களைச் சந்திக்க முன்வரவில்லை. மிஷனரிகளினன் மூலமாக அப்போதைய இந்திய நாடு பயன் பெறவே செய்தன. தாழ்த்தப்பட்ட மக்களின் மேலுள்ள அன்பினால் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அப்படிப்பட்டவர்களையே நாடிச்சென்றனர். ஏற்கவே சாதிக் கொடுமையினால் ஒதுக்கி வைக்கப்பட்ட தலித்துக்கள், தங்களையும் மனிதராக எண்ணி, சமமாகப் பாவித்து நடத்தினவர்கள் அறிவித்த கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டனர். என்றாலும், அனேகக் கிறிஸ்தவ மிஷனரிகள் ரத்த சாட்சியாகவும் மரித்திருக்கிறார்கள். பல மிஷனரிகள் வியாதியினால் குறுகிய காலங்களில் மரித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சேவைகளைச் செய்த மிஷனரிகளை மறந்து விடலாகாது. ஜி.யு போப். கால்டு வெல் போன்றவர்கள் தமிழ் இலக்கிய சேவை செய்திருக்காவிட்டால் தமிழ் அழிந்திருக்கும். உயர் சாதியினரால் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் இன்று கல்வியிலும், அரசு உததியோகங்களிலும் வாய்ப்புப் பெற்றிருக்க இயலாது.

ஆங்கிலேயரின் வருகையால் கல்வித் தரம் உயர்ந்தது. தேசத்தைந்தை காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, இராஜாஜி அம்பேத்கார் இன்னும் ஏராளமான ஆரிய பிராமணர், இன்றைய நாட்களில் கிறிஸ்தவத்தை எதிர்க்கும் பல அரசியல் முதியோர் ஆகிய யாவரும் ஆங்கிலேயரின் கல்வி பயின்று முன்னுக்கு வந்தவர்களே.

உலகத்தின் சிறந்த ஏழு மருத்துவ மனைகளில் ஒன்றாகிய கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரி (வேலூர்) ஒரு மிஷனரியின் மகளான ஐடா ஸ்கடர் ஆவார். இப்படி இயேசு கிறிஸ்துவின் அன்பினால் கடல் கடந்து, தங்கள் இனத்தவரைப் பிரிந்து, சுட்டெரிக்கும் சுடு வெயிலில் பல கிராமங்களுக்குப் பிரயாணம் பண்ணி, கிறிஸ்தவ சபைகள் மட்டுமல்லாமல், மருத்துப் பணிகள், கல்விச் சாலைகள், பொதுத் தொண்டு என கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமல்ல, ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் உதவினார்கள்.

ஏராளமான உயர் சாதியினர், சாதி வெறி காரணமாக, கிறிஸ்துவை அதிகமாக ஏற்றுக்கொண்ட தாழ்த்த சாதி மக்களுடன் ஒன்றுபட்டு வாழமறுத்தபடியினால், கிறிஸ்தவம் கீழ் சாதி மக்களுக்கென்று ஒதுக்கப்பட்து போல ஆகிவிட்டது. கிறிஸ்தவ மிஷனரிகள் செய்த அரும்பொருங்காரியங்களிலிருந்து, அவர்களிடம்நாம் கற்றுக் கொள்ளவேண்டிய அனேக காரியங்களுண்டு, அவர்களிடம் தவறே இல்லை என்று சொல்வதற்கில்லை. அதே தவறுகளை இன்றுள்ள கிறிஸ்தவம் தவிர்த்தல் நலம்.

1947 ஆகஸ்டில் அகில இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்ட பின்பு வெளிநாட்டுக் கிறிஸ்தவ மிஷனரிகள் அதிகமாக தவிர்க்கப்பட்டனர். மேற்கத்திய பாணியிலும் மேற்கத்திய கலாச்சாரங்களிலும் பழகிப்போன கிறிஸ்தவத்திற்கு இது தேவையாகவும் இருந்தது.

மேற்கத்திய கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தங்கள் நாடுகளில் இருந்து கொண்டே இந்தியக் கிறிஸ்தவத்திற்கு உதவினார்கள். ஒரு வழியில் இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாயினும், மற்றொரு பக்கம் இந்தியக் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அவ்வுதவிகளைத் தவறாகவும், சுயநலத்திற்கென்றும் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

இக்காலங்களில் இந்திய துணைக்கண்டத்தில் இந்திய மக்களால் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு கணக்கே இல்லை, நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் இந்திய கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு வெளி நாடுகளின் ஆதரவு இன்றும் உண்டு என்பதும் மறுக்க இயலாத உண்மை.

இப்படி உதவி செய்வோர், இங்கு வரும்போது அவர்களிடம் உதவி பெறும் இந்தியக் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தங்களுடைய வேலை சிறப்பாக நடைபெறுகிறது என்று காட்டும்படியாக, பிரம்மாண்டமான அளவில் விளம்பரம் செய்து, மக்களைக் கூட்டிப் பொதுவிடங்களில் மாபெரும் கூட்டங்கள் நடத்தி மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு புரட்சியே செய்து காண்பிக்கிறார்கள். வருகிற மிஷனரிகளும் இவர்கள் காட்டும் நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ஒரு பைபிள் பெயரையும் வைத்து விட்டுப் போய் விடுகிறார்கள்.

இங்கிருந்து பலர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு பைபிள் படித்துப் பட்டம் பெற்று, வரும்போது எதிர்கால ஊழியத்திற்கென்று உதவி செய்கிறவர்களையும் பெற்றுத் திரும்புகிறார்கள். அப்படித் திரும்புகிறவர்கள் ஏதோ ஒரு பெயரில் கிறிஸ்தவ ஸ்தாபனம் ஒன்றைப் பதிவு செய்து கிறிஸ்தவப்பணியை ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட பணித்தளங்களுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒரு சங்கம் உண்டு.

உதவி பெறுபவர் வெளிநாட்டிலிருக்கும் தனக்கு உதவி செய்பவரை ஓரிரு ஆண்டுகள் கழித்து அழைப்பார். அவரும் ஏதோ ஒரு காரணம் காட்டி குறுகிய கால 'விசாவில்' வருவார். இங்குள்ளவர் கிறிஸ்தவ சங்கங்கள் மூலம் அனேக சபை மக்களை வரவழைத்து பிரம்மாண்டமான கூட்டத்தைக் காட்டுவார். சுயாதின ஊழியர்கள், நற்செய்தியாளர்கள், சிறுசிறு சபைகள் போன்றோருக்கு பிரயாணச் செலவு, உணவு, தங்குமிடம் போன்று வசதிகள் செய்து தருவார்கள்.

கூட்டத்தைக் கண்ட வெளிநாட்டுப் பிரதிநிதி இவைகளை எல்லாம் அழகாக வீடியோவில் பதிவு செய்துதன் நாட்டில் கொண்டு சென்று டி.வி. மூலம் பரப்புவார். இரு சாராருக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இன்றைய இந்தியாவில் வெளிநாட்டு உதவிகள் பெறாமல் கஷ்டத்துடன் விசுவாச ஊழியம் செய்து வருகிற அனேக ஊழியர்கள், ஆவிக்குரியவர்கள் மட்டுமே இந்திய மக்களுக்குள் ஊடுருவிச் சென்று, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து வருகின்றனர். இப்படிப்பட்ட உண்மையான ஊழியர்களில் முக்கால் பங்கு சிறந்த

கல்வி அற்றோராவர், கால்பங்கு கல்வியே இல்லாதவர்களாவர்.

இப்படிப்பட்ட ஊழியர்களின் சபைகள், இயக்கங்கள் யாவும் இந்துக்களின் பிள்ளையார் கோயில் போல எங்கும் பரந்து கிடக்கின்றன. எதிர்ப்புகள், பசி, பட்டினி, வசிக்க சொந்த வீடு இன்மை, உடையின்மை, நிரந்தர வருமான மின்மை போன்ற குறைபாடுகள் இவர்களுக்கு இருந்தாலும் முழுபலத்துடன் உழைக்கிறவர்கள் இவர்களே!

ஆயினும் மேற்கத்திய முறையில் வழி பாட்டு ஸ்தலம், வழிபாடு போன்றவைகள் இன்றும் இருப்பதினால், மற்றையோரின் கண்களுக்குக் கிறிஸ்தவம் மேற்கத்திய மற்றும் வெள்ளைக் காரருடைய மதம் போலவே தோற்றமளிக்கிறது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு சீக்கிய மார்க்கத்திலிருந்து, இயேசு கிறிஸ்துவின் அன்பினால் அவருக்குச் சீடராகிய சாது சுந்தர் சிங் அவர்கள் மேற்கத்திய ஆங்கிலேய மிஷனர்களிடம், இந்த இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எங்களுக்கு இந்திய வழியில் தாருங்கள் என்று கேட்டது கவனிக்கத்தக்கது.

நூற்று ஐம்பது ஆண்டுகள். ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலும் இந்தியா சுவிஷேமயமாக்கப்படவில்லை. அதன்பின்பு அறுபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னமும் கிறிஸ்தவம் அனேக உள்ளங்களில் விதைக்கப்படவில்லை.

இன்னமும் கிறிஸ்தவ வெள்ளைக் காரர்களால் கொண்டுவரப்பட்டு, இந்தியர்களுக்குள் திணிக்கப்பட்ட மதம் என்றும், அது தாழ்த்தப்பட்டவர்களின் மதம் என்றுமே அனேகரால் எண்ணப்பட்டு வருகிறது.

இயேசு கிறிஸ்து வெள்ளைக்காரல்ல, அவர் வெள்ளைக்கார நாட்டில் பிறந்தவரும் அல்ல, அவர் ஆங்கிலமோ, ஜெர்மன் மொழியோ பேசினவரும் அல்ல. ஆசியாக் கண்டத்தின் ஒரு பகுதியாகிய பாலஸ்தீனத்தில் பிறந்து, ஆசிய மொழிகளில் ஒன்றாகிய அரைமைக் என்ற மொழி பேசியவர். பைபிள் என்று

அழைக்கப்படுகிற அறுபத்தாறு சிறு நூல்களில் மேற்கத்தியக் கலாச்சாரங்களைக் காண இயலாது. மேற்கத்திய மொழிகளில் ஒரு வார்த்தையும் கிடையாது. அது முழுக்க முழுக்க ஆசியக் கலாச்சாரத்திற்குள் அடங்கும்.

மிஷனரிகள் இந்தியாவுக்குள் வந்தபோது, எபிரெய மொழி, கிரேக்க மொழி எல்லாம் கற்றறிந்து பைபிள் படிப்பில் பாண்டித்தியம் பெற்று வந்தனர். ஆனால் இந்திய மொழிகளில் அக்காலங்களில் சிறந்து விளங்கிய தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைப் படிக்கவில்லை.

உயர்சாதி இந்துக்கள் தாழ்ந்த சாதி இந்துக்களை அடக்கி வைத்திருந்தது போலவே, வெள்ளை மிஷனரிகளும் தங்களுடைய மார்க்கத்திற்குள் வந்தவர்களை அடக்கியே வைத்திருந்தனர். இன்னும் சொல்லப்போனால் இந்தியர்கள் ஞானசூன்யங்கள் என்றே அவர்கள் நினைத்தனர் என்பது உண்மை.

இந்நூலைப் படிக்கும்போது மதக்கண்ணோட்டம் மேலோங்கக்கூடாது என்பதை மனதில் கொண்டு இந்நூலின் முதல் அதிகாரத்தை அமைத்துள்ளேன். மதஸ்தன் எனற போர்வையை விட்டு வெளியே நின்று ஒப்புரவாக்குதலின் பணியை செய்யும்போது, பாபம், ஆன்ம மீட்பு போன்றவற்றை மையமாக வைத்து, கேள்விகளை கேட்போருக்கு பதில் தர, நாம் நம்மை இன்றைய கலாச்சாரத்திற்கு உகந்த முறையில் ஆயத்தம் செய்தல் அவசியம் என்பதை மனதில் கொண்டு, முறையே பாபம், ஆன்ம மீட்பு எனும் இரு அதிகாரங்களை அமைத்துள்ளேன்.

குறிப்பாக ஆன்ம மீட்பு என்ற அதிகாரம், என் வாழ்வில் மெய்த்தேவன் செய்த, செய்து வரும் எண்ணிலடங்கா செயல்களை நினைவுறுத்தும்.

நான்காம், ஐந்தாம் அதிகாரங்கள், ஆன்ம மீட்பு அடைந்தவன் பரகதி அடைவது எதன்மூலம் - கர்ம வினையினாலா? கிருபையினாலா? என்பதை விளக்க எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் பக்கங்களை திறந்த மனதுடன், இன்றைய

சூழ்நிலைகளுக்கு தொடர்பில்லாத, ஒப்புரவாக்குதல், போலிஊழியப் பணியாளர்களின் உண்மை நிலை அறிய, ஆய்வு நோக்குடன் நடுநிலையில் நின்று வாசிக்கும்படி, இறையன்பினால் ஏவப்பட்டுக் கேட்டுக் கொள்கிறேன். நான் தவறாக எழுதியிருப்பின் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினால், திருத்திக் கொள்ளவும் முன் வருகிறேன்.

காய்தல், உவத்தலின்றி உங்கள் எண்ணங்களை எனக்கு எழுதுங்கள்.

நினைவுகூறல் :

இப்புத்தகத்தை எழுதி முடிக்கவும், நேர்த்தியாய் தொகுத்துத்தரவும், தங்கள் காலத்தை செலவு செய்து, அரும்பாடுபட்டு இரவு பகலாய் உழைத்த என் அருமை நண்பர் திரு. சந்திரசேகரன் B.Sc., CA (Inter) அவர்களுக்கும் என் நன்றியை அறியத்திருகின்றேன்.

குறித்த காலத்தில் இப்புத்தகம் வெளிவர அயராமல் செயல்பட்ட கதிரவன் அச்சகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றியை அறியத் தருகின்றேன்.

இப்புத்தகத்தை கணிணி வழியா அச்சிட்டுத் தந்த திருமதி கவிதா அவர்களுக்கு என் நன்றி.

இப்புத்தகம் வெளியிட நிதியுதவியளித்த யாவருக்கும் என் நன்றி.

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து பெருமானின் ஆசீர்வாதங்கள் உங்கள் யாவருடனும் இருப்பதாக.

- சாது செல்லப்பா

அதிகாரம் ஒன்று

சிறைப்படுத்துகிறவர்களுக்கு...

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீர்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். (2 கொரிந்தியர் 10:4,5) ஆனால் சிறைப்படுத்தலாமென்று போனால்

முஸ்லீம்கள் வசிக்கும் பகுதிகளில் சென்று ஊழியம் செய்தபோது அவர்களில் ஒருவர் இவர்கள் சரியான மதவெளியர்கள், பைபை தோளில் போட்டுக் கொண்டு பிச்சைக்காரர்கள் மாதிரி அலைகிறார்கள் “கேடுகெட்டு பயலுகள்” என்று திட்டினார்.

பழனி அடிவாரம், திருநகர், அண்ணாநகர் போன்ற பகுதிகளில் “இயேசு உங்களை நேசிக்கிறார்” என்று சொல்லிக்கொண்டே சென்றபோது ஒரு நபர் “ஏய்! பேசாமல் போய்விடுங்கள், இயேசு எங்களை நேசிப்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும்; வீணாகக் குத்துப்பட்டுப் போகப்போகிறீர்கள்” என்று சொன்னார்.

31-10-94 தொப்பம்பட்டி பழனி தாலுகாவில் ஊழியம் செய்தவர்கள் சகோ. ராம்தாஸ், கோ. நாகூர் சாலமோன், சகோ. இம்மானுவேல், சகோ.அந்தோணி ராஜ், சகோ. ஜெயராஜ், “இந்தப் பகுதியில் 9 கிராமங்களைச் சந்தித்து சுவிசேஷம் அறிவித்தோம். அவ்வளவாக சுவிசேஷத்திற்கு வரவேற்பில்லை. “எங்களுக்கு எதுவும் தேவையில்லை” என்று கூறினார்கள்.

தொப்பம்பட்டியை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்கிறபோது ஒரிருவர் மட்டும் இருந்தனர். அவர்களிம் இதெல்லாம் இக்காலத்திற்கு ஒத்துவராது என்றனர்.

தெய்வீக திருச்சபையை சார்ந்த விசுவாசிகள் எங்களை வரவேற்று உபசரித்தனர். மற்றவர்கள் இவர்களுக்கு தேவையில்லை. இப்படிப் பையைத்தூக்கிக் கொண்டு திரிகின்றார்கள் என்று ஏசினார்கள்.

கோடாரி வடவு என்று கிராமத்தில் ஒரு பெண். இதெல்லாம் எங்கள் குல தெய்வத்திற்கு ஒத்து வராது. போங்கள்! போங்கள்! என்று விரட்டினார்கள். அவர்களுடன் ஒர வயதான பெரியவரும் பேர்ந்து கொண்டு தகாத வார்த்தைகளால் பேசினார். தாழ்த்தப்பட்ட ஜாதியினர் கும்பிடுகிற சாமியை எங்களிடம் ஏன் சொல்லவேண்டும் என்று திட்டினார்.

ஊழியத்தின் போது சந்தித்த மக்கள் எல்லோரும் மிகவும் ஏழைகள். இவர்கள் தங்களுக்கு எங்கள் மூலமாக எதாவது கிடைக்குமா? என்று எதிர்பார்த்தனர். அவர்களிடம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு மணமகிழ்ச்சி தருவார் என்றோம். வேண்டாவெறுப்போடு கேட்டுவிட்டு இதெல்லாம் எங்களுக்கு ஒத்துவராது என்று கூறினார்கள்.

பார்பனர்கள் வசிக்கும் பகுதியில் சென்று சுவிசேஷம் அறிவித்துக் கொண்டே சென்றோம். வீட்டிலிருந்து கொண்டே பெண்கள் எட்டி எட்டிப் பார்த்தனர். அதில் ஒரு பெண் “எங்கள் தெய்வம் எங்களுக்குப் போதும்” என்றார்கள்.

“தமிழ் வில்லேஜ் காஸ்பம் மிஷன் - 100 கிராமம், ஊழியத்தில் ஊழியர்களுக்கு கிடைத்த வரவேற்புகளில் சில மேலே கொடுக்கப்பட்டுள்ளது.”

இப்படிப்பட்டதான ஊழியங்களுக்கு சென்று திரும்பும் சகோதரர்களை “பிரதர்ஸ் ஊழியம் எப்படி இருந்தது?” என்று கேட்டால், பொதுவாக வரும் பதில்:

“எங்களுக்கு கிராமங்கள், பட்டணங்கள் தோறும் துன்பங்களும், பாடுகளும் உள்ளன. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” என்பதே.

இவர்கள் உபயோகப்படுத்தும் துன்பங்கள், பாடுகள் என்று வார்த்தைகளுக்கும் பரிசுத்தம் பவுல் 2 தீமோத்தேயு 3:11-12 வசனங்களில் பயன்படுத்தும் துன்பங்கள், பாடுகள் என்ற வார்த்தைகளுக்கும், மூல அர்த்தங்களைக் கொண்டு பார்க்கும் போது அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும்

பட்டணங்களில் பவுல் அடைந்த துன்பங்களும் பாடுகளும் ஜஸ்டின் மார்ட்டயர் (Justin Martyr), ரீச்சர்ட் உம்ப்ராண்ட் போன்றோர் அடைந்தபாடுகள் தானே நினைவுக்கு வரும்! காரியங்களை நிதானித்தறிவோமாக!

நாம் சிறைப்படுத்த செல்லும் போது சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்படியாக ஒருசில நிகழ்ச்சிகள் மேற்குறிப்பட்டவாறு நடந்திருக்கலாம், நடக்கலாம். இதற்கு காரணம் நாமா! அல்லது இதற்கு முன் கிறித்தவம் ஏற்படுத்தய பாதிப்பா! என்பதை ஆராய்வதற்கும் இப்படிப்பட்டதான நிகழ்ச்சிகள் இனி நடைபெறாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? என உணருவதற்கும் ஒரு முயற்சியாக பின்வரும் பக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு, பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி அவருக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காய் இலக்கை நோக்கித் தொடரும் தேவ ஊழியர்களே!

ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவனானால் அவன் இறுமாப்புள்ளவனு ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்ளையும் வாக்கு வாதங்களையும் பற்றி நோய்க்கொண்டவனுமாயிருக்கிறான், என்று வேதத்தில் உள்ள வார்த்தைகளின்படி, வேற்றுமையான உபதேசங்களை போதித்து தர்க்கங்களை பிறப்பிக்கிற ஜனங்களாலேயே தேவனுடைய நாமம் புறஜாதிகளினால் தூஷிக்கப்படுவதையும் இகழப்படுவதையும் கண்ட நான் ஒரு உண்மையை தெரிந்து கொண்டேன். அந்த உண்மை என்னவெனில், கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்க இருக்கின்ற தடைகளில் பிரதான தடையாய் இருப்பது தேவபக்தியின் வேஷத்தை தரித்துக்கொண்டு அதன் பலனை மறுதலிக்கிற பெயர் கிறிஸ்தவர்களே.

உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய்

நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.

சத்திய மார்க்கம் தூஷிக்கப்பட காரணமான பெயர் கிறிஸ்தவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற தடைகளையும் மீட்பின் வழியை பின்பற்ற விரும்பும் மக்கள் எழுப்புகின்ற கேள்விகளையும், கிறித்தவத்திற்கும், நற்செய்தியாளனுக்க்கும், கோயிலுக்கும், தேவாலயத்துக்கும், கிறிஸ்துவுக்கும், மதவெறியனுக்கும் வேறுபாடு தெரியாமல் குறுகிய கண்ணோட்டத்தோடு மக்களில் பலர் எழுப்புகின்ற கேள்விகளுைம் சந்தித்து, I பேதுரு 3:15 இல் கூறப்பட்டுள்ள விதமாய், நம்மிலிருக்கிற நம்பிக்கையை குறித்து நம்மிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்துமாயிருக்க தன்னை தயார்படுத்தி, கிருபை பொருந்தின, உப்பால் சாரமேற்றப்பட்டதான வசனாங்களை கொண்டு சத்தியத்தின் சான்றோர்களாய் விளங்கும் போர்வீரர்களான இராஜரீக ஆசாரியர்களே!

நமது ஊழயம் எப்படியிருக்கவேண்டும்?

இருளில் இருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சத்தை அறிவிப்பது. வெளிச்சத்தை அறிவிக்கும் ஜனங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று பக்தன் Dr. ஜான் ஸ்காட் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்.

ஒரு நற்செய்தியாளன் கடவுளின் செய்தியை தாங்கிச் செல்ல வேண்டுமாயின் அவன் மூன்று கலாச்சாரங்களை நன்கு அறிந்தவனாய் காணப்படவேண்டும், மூன்று கலாச்சாரங்களாவன.

1. வேத வார்த்தைகள் எழுதப்பட்ட காலத்தில் வேத வார்த்தைகளைப் பெற்ற மக்கள் மத்தியல் காணப்பட்ட கலாச்சாரம்.

2. தன் சொந்த இனத்தாரின் கலாச்சாரம்.

3. நற்செய்தியை எடுத்துச் செல்லும் இடத்தின் கலாச்சாரம்

இன்றைய சூழ்நிலையில் எதைச் செய்தாலும் எதாவது பயன் உண்டா என்றே மனிதமனம் நினைக்கிறது. கலாச்சாரங்களை பற்றி தெரிந்துகொள்வதினால் என்ன பயன்? என்று இப்பொழுது நினைக்கலாம். வெளிச்சத்தை அறிவிக்க பாடுபடும் மக்களுக்கு என்ன நன்மைகள் இதனால் ஏற்படும் என்பதை கீழே தந்துள்ளேன்.

(1) வேத வார்த்தைகள் எழுதப்பட்ட காலத்தில் வேத எழுத்துக்களை பெற்ற மக்கள் மத்தியில் காணப்பட்ட கலாச்சாரம் வேத வார்த்தைகள் எந்த உட்கருத்து கொண்டனவாக எழுதப்பட்டன என்பதை தெரிந்து கொள்ள பயன்படுகிறது. இதனால் நீங்கள் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை பயன்படுத்தத் திராணியுள்ளவர்களாய் மாறுவது நிச்சயம்.

2. உங்களுடைய சொந்த கலாச்சாரம், உங்களுடைய வெளித்தோற்ற வாழ்க்கை முறைகளை குறித்து உணர்த்துவதாயுள்ளது.

3. நீங்கள் செய்தியை எடுத்துச் செல்லும் இடத்தின் கலாச்சாரம், உங்களுக்கு கீழ்க்கண்ட பயன்களை விளைவிக்கும்.

நீங்கள் அவ்விடத்தின் கலாச்சாரத்தை தழுவுவது உங்களை அப்பகுதிக்குரிய மனிதனைப் போல் காட்டுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் உங்களை தங்களில் ஒருவனாய் நினைக்கும்படி செய்கிறது. இதற்கு உதாரணமாய் இயேசுபிரானின் யூதர்கள் மத்தியிலான ஊழியத்தையும் கூறலாம்.

இவ்வாறு இவர்கள் ஊழியம் செய்யும்போது இவர்களை எதிர்த்தவர்கள் பொதுவாக வேதத்தை நன்கு கற்ற பண்டிதர்களே. சாதாரண மக்கள் இவ்வேத பண்டிதர்களால் தூண்டப்பட்டே இவர்களை எதிர்த்தார்கள். எனவேதான் பவுல் அடைந்த பாடுகள் பொதுவாக ரோம அதிகாரிகளாலும் யூதர்களாலும் இயற்கைச் சீற்றங்களினாலுமே ஏற்பட்டதாய் காணப்படுகிறது.

ஆனால் இன்று நற்செய்தியை அறிவிக்கும்போது எதிர்ப்பு

என்பது முதலில் உருவாகும்இடம் பொதுமக்கள் மத்தியிலேயே! ஒரு சில நேரங்களில் அரசாங்க காவலர்களே நமக்கு ஒத்துழைப்பு தருவதில்லை. ஏன் இந்த தலைகீழ் நிலைமை?

காரணம் இன்று யூதனுக்கு யூதனாகவும், கிரேக்கனுக்கு கிரேக்கனாகவும் வாழவேண்டிய நாம் யூதர்களுக்கு கிரேக்கனாகவும், கிரேக்கனுக்கு யூதனாகவும் வாழ்வதே.

இன்று அநேகர், கிறித்து வெளிநாட்டுக் கடவுள் என்றும் கிறித்தவமார்க்கம் வெளிநாட்டு மார்க்கம் என்றும் கிறித்தவர்கள் மதப்பிரசாரம் செய்து மதம் மாற்றுபவர்கள் என்றெல்லாம் கருத காணரமாய் இருக்கும் காரணங்களில் ஒரு காரணம்;

நாம் நம்மை எல்லாருக்கும் எல்லாமாக மாற்றத் தவறி, மேனாட்டு பண்பாட்டு முறையில், மேற்க்கத்திய கலாச்சாரத்தின் மூலம் கிறிஸ்துவை பிரசங்கிக்க விரும்பியதே.

யூதனுக்கு யூதனாய் மாறுவது கிரேக்கனுக்கு கிரேக்கனாய் மாறுவது என்பது நாம் யூதர்களைப் போலவோ கிரேக்கர்களைப் போலவோ நடிப்பது அன்று. அவ்வாறு மாறுவது உடையிலும் தோற்றத்திலும் மட்டுமே முழுமை அடையாது. நாம் அவர்களின் எண்ணங்களையும் பாதிப்புக்களையும் பிரதிப்பலிப்பதே அவர்களைப் போல மாறினதின் முழுமையாகும்.

இயேசுவானவர் தன்னுடைய ஊழியங்களில் தன்னை சுற்றியிருந்தவர்களின் உள்ளத்தில் ஆழத்திலிருந்தவைகளை ஊடுறுவி அவர்களின் நினைவுகளுக்கும் சந்தேகங்களுக்கும் வேண்டிய பதிலை ஆணித்தரமாய் பல இடங்களில் பிரசங்கித்ததை நாம் இந்நேரத்தில் நினைவு கூறுவோமாக.

இம்முறையிலே பவுல் அப்போஸ்தலன் பல இடங்களில் பிரசங்கித்தது நமக்கு தெரிந்த ஒன்றே. மேலும் புதிய ஏற்பாட்டின் பல நிருபங்கள் மக்களின் அல்லது ஒரு தனிப்பட்ட மனிதனின் எண்ணங்களுக்கும், சந்தேகங்களுக்கும் பதில் தரும் கடிதங்களாகவே எழுதப்பட்டுள்ளன என்பதையும் இவ்வேளையில் நினைவு கூறுவோமாக!

இப்படிப்பட்டதான பிரதிபலிப்பு நம்மிடத்தில் இல்லையென்றால் மீட்பின் செய்தியை இக்கலாச்சாரத்தில் பிரசங்கித்து ஒப்புரவாக்குதலின் பணியை செய்வது எங்ஙனம்?

தங்களுடைய கலாச்சாரம், தங்களுடைய இறைவழிபாட்டு முறைகள், தங்களுக்கு அருளப்பட்ட வேதம், உயர்வானது என்று அகந்தையிலும், கிரியையினால் நீதிமானாகிறோம் என்ற கோட்பாட்டிலும் திளைத்திருந்தவர்களுடன் இயேசுவானவர், பேதுரு, பவுல், ஸ்தேவான் போன்றோர் அவர்களின் நம்பிக்கையை மையமாக வைத்து பேசியதை இவ்வேளையில் நினைவு கூர்வீராக.

(பார்க்க: மத்தேயு 12:1-8, மத்தேயு 13:40-42, மத்தேயு 12:24-36, யோவான் 10:34, அப்போஸ்தலர் 2:18-31, அப்போஸ்தலர் 7:2-53, அப்போஸ்தலர் 23:6, அப்போஸ்தலர் 28:23)

அதிகாரம் - இரண்டு

பாவம்

பாபம் என்ற சொல் மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் தெரிந்த சொல்லாகும். அன்றாட வாழ்க்கையில் இச்சொல்லைத் தெரிந்தோ தெரியாமலோ உபயோகப்படுத்துகிறோம்.

தெருவிலே ஏதாவது மிருகங்கள் செத்துக் கிடந்தால் நம்மையறியாமல் "ஐயோ பாபம்" என்கிறோம். பல வருடங்களாக வேலையில்லாதிருக்கிறேன் என்பவரிடம் "ஐயோ பாபம்" ரெம்பக் கஷ்டப்படுகிறீர்கள் என்கிறோம். நோய்வாய்ப் பட்டுகிடக்கிறவர்களை எண்ணும்போதும் "ஐயோ பாபம்" என்கிறோம். விபத்து நேர்த்த இடத்தைப் பார்க்கும்போதோ அல்லது கேள்விப்படும்போதோ "ஐயோ பாபம்" என்னிறோம். யாராவது மரணம் அடைந்த செய்தியைக் கேட்டால் "ஐயோ பாபம்" என்கிறோம்.

இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் தோல்வி. வருத்தம். துக்கம். வியாதி. மரணம். கஷ்டம் எல்லாவற்றிற்கும் காரணம் பாபம் என்று அறிகிறோம்.

சமஸ்கிருத வேதத்தில் :

ரோக் சோக் துக் பரிதாப் பந்தன் வியஸ்நானிச

ஆத்ம அபராத விருக்ஷனாம் பஃலானி எதானி தேஹி நாம் என்று சொல்லுவார்கள்.

இதன் பொருள் என்னவென்றால் :

சரீரமாகிய மரத்தில் ஆத்மாவின் பாபத்தினால் வியாதி, துக்கம், கஷ்டம், சிக்கல் போன்ற தொல்லைகள் ஆகிய கனிகள் உண்டாகின்றன என்பதே.

பைபிள் சொல்லுவது என்னவெனில் :

பாபத்தின் சம்பளம் மரணம் - ரோமர் 6:23)

சமஸ்கிருதத்தில் : பாபஃபல் நரகாதி மாஸ்து (மண்டல பிரம்மோப நிஷத்து 2-4) இதன் பொருள் பாபத்தின் சம்பளம் நரகம் என்பதே.

பாபம் உலகளாவியது. எந்த பிரச்சினையானாலும் அதற்கு அடிப்படைக் காரணம் பாபம் என்பது யாவருக்கும் விளக்கும். பிறப்பிலேயே பாபம் உடனிருப்பதால் சந்நியாசிகள், முனிவர்ள், பாதிரிகள், மௌல்விகள், படிக்காதோர், ஏழைகள், பணக்காரர், ஆண்கள், பெண்கள். சிறுவர், சிறுமியர் என்று எல்லோரையும் இப்பாபம் தனக்குள் அடைத்துப் போடுகிறது.

பாபத்தைச் செய்வதற்குப் பள்ளிக்கூடம் செல்லவேண்டாம். படித்தவன் அறிவுடன் பாபம் செய்வான், படிக்காதவன் முட்டாள்தனமான பாபம் செய்வான். பணக்காரன் விலையுயர்ந்த பாபம் செய்வான், ஏழை தரித்திப் பாபம் செய்வான். நல்லவன் நல்ல பாபம் செய்வான், கெட்டவன் கெட்ட பாபம் செய்வான்.

மதுபானம் குடித்துவிட்டு ரோட்டில் சத்தம் போட்டுக் கொண்டு உருண்டு பிரண்டு, பின் வீட்டுக்கு வந்து மனைவி பிள்ளைகளை அடித்து சாமான்களை உடைத்துப்போடுகிவனை கெட்ட பாபி என்று அழைக்கலாம்.

குடித்துவிட்டு வீட்டுக்குப் போய் அமைதியாகப் படுத்துக் கொள்கிறவனை நல்ல பாபி என்று அழைக்கலாம்.

ஆக மொத்தத்தில் இரண்டு பேர்களும் குடிகாரர்களே! சிலர் சூழ்நிலைகளைக் காரணம் காட்டிப் பாபம் செய்வார்கள். சிலர் பயந்து பயந்து பாபம் செய்வார்கள். சிலர் ரசித்துப் பாபம் செய்வார்கள். சிலர் பாபத்தை செய்துவிட்டு அதில்லே பெருமையும் பாராட்டுவார்கள்.

பாபம் ஏற்பட்ட வரலாறு

பாபம் என்பது யாவருக்கும் பொதுவாக உள்ளதென்றாலும் பாபம் எப்படி உண்டாயிற்று என்பதை ஒருசில வேதங்களே வெளிப்படுத்துகின்றன.

எல்லா மதங்களும் பாபத்திலிருந்து ஆன்மா விடுதலையடையும் வழியை எதிர்பார்க்கின்றன. பாபம் உண்டு என்று நம்புகின்றன. அப்பாபத்தை இறைவனே தீர்த்து வைப்பான் என்று நம்பி அந்த இறைவனிடம் வேண்டுதல் செய்கின்றன.

கிறிஸ்தவன் தன் ஆலயத்திற்குப் போனால் தப்பிப்போன ஆடுகளைப் போல உமது வழிகளை விட்டு விலகிப் போனேன். என் இருதயத்தின் யோசனைகட்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தேன். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல் செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தேன். எனக்குச் சுகமேயில்லை, ஆயினும் ஆண்டவரே நிர்பாக்கியலுள்ள குற்றவாளியாகிய அடியேனுக்கு இரங்கும். பாபத்தினிமித்தம் துக்கப்படுகிற என்னைச் சீர்ப்படுத்தும் என்றெல்லாம் பாப சங்கீர்த்தன ஜெபம் செய்கிறான்.

இஸ்லாமியக் கவிஞன் ஒருவன்,

ஜிந்தஹி க்யா ஹை குணாஹ் இ ஆதம்
ஜிந்தஹி ஹைதோ குணஹ்கர் ஹீன்மைன்

என்று தன் கவியின் முதல் இரண்டு அடிகளை எழுதினான். இதன் பொருள் : வாழ்க்கை என்பது என்ன? ஆதாயின் பாபமே எனக்கொரு வாழ்க்கையுண்டானால் நான் ஒரு பாபியே என்று அறிக்கையிடுகிறான்.

இந்து பிராமணன் காலையில் எழுந்ததும், காலைக் கடன்களை யெல்லாம் முடித்து அதன்பின் காயத்ரி மந்திர ஜெபம் சொல்லுமுன் ப்ரார்த்த ஸ்நான மந்திரம் சொல்லுவான். அதில்,

பாபோகம் பாபக் கன்மோகம்

பாபாத்மா பாப ஸம்பவா தீராஹிமாம்

புண்டரீகாக்ஷ ஸர்வபாப ஹரி ஹரே-என்பான் இதன் பொருள் : நான் பாபத்தில் பிறந்தவன், பாபத்தில் நிலைத்திருக்கிறவன், பாவத்தை செய்கிறவன், நான் பாபி என் உள்ளத்தில் வாழும் இறைவனே! என்னால் இயலவில்லை. எல்லா பாபங்களிலிருந்தும் என்னை இரட்சியும், என்று ஜெபிக்கிறான்.

தெய்வ நம்பிக்கையுள்ள எல்லா மதஸ்தர்களும் தங்களை இரட்சிக்க வேண்டுமென்றே வேண்டுதல் செய்கிறார்கள்.

பாபம் இரத்த சம்பந்தமுடையது. சிறு குழந்தைக்கும் பாப சுபாவம் உண்டு.. கோபம், ரௌத்ரம், பொறாமை, ஆசை போன்ற சுபாவங்களை எந்தப் பெற்றோரும் குழந்தைக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை.

தாயைப் போலப் பிள்ளை
நூலைப் போலச் சேலை

என்றும்

அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறக்கிறான் என்றும் நாம் சொல்லுவதுண்டு.

ஏன் இக்குழந்தை இப்படிக் கத்தி அடங்காத் தனமாக அழுகிறது என்று கேட்டால் அதின் அம்மா குணம் அல்லது அப்பா குணம் அப்படியே இருக்கிறது என்பார்கள். சிறுபையன் குறும்பு செய்தால், போக்கிரிப்பயபுள்ள என்று தாய் சொல்லி மகிழுவாள். தாயின் இரத்தமும் தகப்பனின் இரத்தமும் கலந்து உருவாகிப் பிறக்கும் பிள்ளைக்கு பெற்றோரின் குணம் அமைவது வியப்பல்ல. கிறிஸ்தவப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பிசாசின் மகனே, மகளே என்று அழைப்பதும் அப்பிள்ளைகள் என்ன அம்மா! அப்பா! என்று கேட்பதும் உண்டு. இதில் யார் பிசாசு?

தெடர்புடைய இப்பாபத்தை சகச மலம் (சகசம் = தொடர்பு, மலம்=பாபம்) என்று சொல்லுவார்கள். பெற்றோரிடமிருந்து பிள்ளைக்குப் பாபம் வந்ததானால் அந்த பெற்றோருக்கு அவர்களுடைய பெற்றோர் மூலமாகப் பாபம் வந்திருக்க வேண்டும். இப்படியே கணக்குப் போட்டுப் கொண்டு போனால் ஒருவருக்கும் பிறக்காத பெற்றோர் இருந்திருக்க வேண்டும். அவர்கள் ஒருவருக்கும் பிறக்கவில்லையென்றால் இறைவன் அவர்களை உண்டாக்கியிருக்க வேண்டும். அப்படி இறைவனால் படைக்கப்பட்வர்கள் பாபத்துடன் படைக்கப்பட்டிருக்க இயலாது. ஏனெனில் இறைவன் பாபமற்றவன். பாபமற்ற இறைவன் பாமற்ற பெற்றோரைப் படைத்திருக்க வேண்டும் அப்படியானால் பாபம் யாரால் ஆதிப்பெற்றோருக்குள் புகுத்தப்பட்டது ஏன்? எப்பொழுது? எப்படி? என்று கேள்விகள் எழும்புகின்றன.

இந்தியாவில் எழுதப்பட்ட சமய நூல்கள் யாவும் இறைவனைத் துதிப்பதற்காகவும் இறை தத்துவங்களை விளக்கிக் கொள்வதற்காகவும் எழுதப்பட்டன. இவைகளில் ஒரு நூலாகிலும் சமய வரலாற்றைத் தொகுத்தோ அல்லது சமயம் தோன்றுவதற்கான காரணத்தையோ எழுதி வைக்கவில்லை. எனவே உலகப் படைப்புகளை பற்றிய தெளிவான கருத்துக்களும் பாபவரலாறும் இந்தியச் சமயங்களில் காணப்படவில்லை.

என்றாலும், அடிப்டைத் தத்துவங்களில் சில கருத்துக்கள் ஒத்துக்கொள்ளக்கூடியவகைகளில் எழுதப்பட்டுள்ளன.

உலகப் படைப்பு பற்றிய விளக்கம் ஆரம்பத்தில் விபரமாகக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரம், அதன் விவரிப்பான இரண்டாம் அதிகாரம் ஆகிய இரண்டு அதிகாரங்கள் இவற்றை விளக்கும்.

திருக்குறளில்,

அகர முதல எழுத்தெலாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

என்று ஈரடியில் மிகவும் இரத்தினச் சுருக்கமாக படைப்புகள் யாவும் இறைவனைக் கொண்டே உள்ளன என்கிறார் திருவள்ளுவர்.

ரிக்வேதம் புருஷ் சூக்தத்தின் முதல் பாடல்

சகஸ்ர ஸிர்ஷா புருஷ
சகஸ்ரக்ஷா சஹஸ்ரபாத்
ஸபூமிம் விஷ்வதோ வ்ருத்வ
அத்ய திஷ்ட தசாங் குலம் - என்று முடிகிறது.

இதன் பொருள் : ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள் ஆயிரம் கால்களையுடைய புருஷனாகிய தெய்வம் தானுண்டாக்கின அண்ட சராசரங்களிலும் வியாபகித்து நின்று, தன்னை பத்து விரற்கடையளவு சுருக்கிக் கொண்டான் என்பதே. இங்கேயும் உலகமும் அண்டசராசரங்களும் கடவுளால் படைக்கப்பட்டவை என்பதை அறியலாம்.

இப்படிக்கடவுளால் படைக்கப்பட்ட உலகத்தில் பாபம் எப்படிப் பிரவேசித்தது என்ற கேள்வி எழும்புகிறது. அது பிசாசினால் உண்டானது எனில் பிசாசு எங்கிருந்து வந்தான், பிசாசை உண்டாக்கியது யார்? என்று கேள்வியும் கூடவே எழும்புகிறது.

பிசாசு அல்லது சாத்தான்

பிசாசு என்பவன் யார்? எங்கிருந்து வந்தான்? இறைவன் பிசாசைப் படைத்தாரா? அல்லது இறைவனைப் போலவே பிசாசும் ஆதியும் அந்தமும் இல்லாதோனா? இப்படிப் பல கேள்விகள் எழுவது இயற்கை.

பிசாசு, சைத்தான், பேய், அரக்கன், அசுரன், காற்று, கருப்பு இருள், இருளின் மைந்தன், அந்தகாரத்தின் லோகாதிபதி, வலுசர்ப்பம், பெரிய பாம்பு, பழைய பாம்பு என்று பலவித பெயர்களில் பல மதங்களிலும் அழைக்கப்படுகிறான். தேவனுக்கு எதிரான ஒரு தீய சக்தியைப் பிசாசு என்கிறோம். ஆயினும் பிசாசானவனைக் குறித்து பைபிளில் காணப்படுவதைப் போல வேறு எந்த வேதங்களிலும் விளக்கம் தரப்படவில்லை.

தேவன் எல்லாவற்றையும் அதினதின் காலங்களில் நேர்த்தியாகவும் வடிவாகவும் செய்து, பின்பு தான் உண்டாக்கிய பூமியைக் காப்பாற்றுவதற்காக ஒரு தேவ தூதனை சிருஷ்டித்தார். அத் தூதனை சகலவித இரத்தினக் கற்களாலும் பொன்னினாலும் வடிவாக்கி, முத்திரை போட்டுத் தமது ஞானத்தினால் நிரப்பி, பூமியிலுள்ள ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தார். தேவன் அவனை அபிஷேகம் செய்து அவனுடைய கையில் நாகசுரத்தையும் மேளத்தையும் கொடுத்தார். ஆனால் அவன் ஒரு நாள் ஒரு அநியாயத்தைச் செய்தான். என்னவெனில் ஏதேனிலிருந்து பூமியைக் காப்பாற்ற வேண்டிய தூதன் வானத்திற்கு ஏறுவேன் என்றும் தேவனுக்கு ஒப்பாவேன் என்றும் தன் இருதயத்தில் சொன்னான்.

கீழ்ப்படியாமை, ஆணவம் ஆகிய இரண்டு தீய குணங்களுக்குத் தூதன் ஆளானபடியினால் தேவன் தமது கோபத்தில் அவனைச் சபித்துக் கீழே தள்ளிவிட்டார். விடிவெள்ளி

நட்சத்திரமாக வானுலகம் சென்ற தூதன் தேவ கோபத்திற்குள்ளாகி சபிக்கப்பட்ட நிலையில் அந்தகாரத்தின் லோகாதிபதியாகப் பூமியின்மேல் விழுந்து தன் இருளினால் பூமியை மூடிக்கொண்டான். "ஆழத்தின் மீது இருள் இருந்தது".

தேவன் இருளை உண்டாக்கவில்லை என்பதை கவனிக்கவும். தான் தள்ளப்பட்தினால் ஏற்பட்ட கோபத்தில் பூமியைக் காப்பாற்றவேண்டிய தூதன், பூமியைக் கெடுத்து நாசமாக்கினான். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையாயும் போயிற்று.

மேற்கண்ட காரியங்கள் யாவும் எசேக்கியம் 28:12-15; ஏசாயா 14:12-15; ஆதியாகமம் 1:1-3 ஆகிய வசனங்களில் காணலாம்.

தூதனாக இருந்து தள்ளப்பட்ட நிலையில் பிசாசாக மாறிப்போன அவன், எப்படியாவது தன்னையும் கடவுள் என்று நிரூபிக்கக் கூடிய தருணம் கிடைக்குமா என்று காத்திருந்தான்.

தான் உண்டு பண்ணின சிருஷ்டி கெட்டுப் போவதை விரும்பாத தேவன், பிசாசினால் அழிந்துபோன பூமியை தன் வார்த்தையைக் கொண்டு, மீண்டும் உருவாக்கினார். அவர் வாயின் வார்த்தைகள் பூமியைச் சீர்படுத்திற்று, மறுபடியும் பூமி வடிவாக, ஒழுங்காக ஆயிற்று. இப்பூமியைக் காப்பாற்ற மீண்டும் ஒரு தூதனைப் படைக்க விரும்பாத தேவன், மனிதனைப் படைத்தார்.

தேவனைப் போல ஆவேன் என்று சொன்ன தூதன், பிசாசாகப் போனபடியினால், தான் படைக்கும் மனிதன் அப்படி எண்ணிவிடக்கூடாது என்பதற்காக அவனைத் தேவ சாயலாகவே படைத்தார். தூதன் தனிமையில் இருந்தபடியினால், வானத்திற்கு ஏறுவேன் என்று சொன்னான். எனவே மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று நினைத்து, கர்த்தர் அவனுக்கு ஏற்ற துணையைக் கொடுத்தார்.

ஆக, தேவன், தள்ளப்பட்ட தூதனாகிய பிசாசு, மனிதன் ஆகிய மூன்று பேர்கள் இருக்கிறார்கள். இதில் யார் இருவர்

சேர்கிறார்களோ அவர்கள் பெரும்பான்மையாவர்கள். நிச்சயமாகத் தேவனும் பிசாசும் சேரமாட்டார்கள். இவ்விரண்டு பேர்களுக்கும் மனிதனின் துணை வேண்டும். தேவனானாலும் பிசாசானாலும் மனிதனின் உதவி இல்லாமல் கிரியை நடப்பிக்க இயலாது. தேவனுடன் ஐக்கியப் படுகிறவர்கள் தேவனுடைய கிரியைகளைச் செய்து தேவனை வெளிப்படுத்துவார்கள். பிசாசுடன் ஐக்கியப்படுகிறவர்கள் பிசாசின் கிரியைகளைச் செய்து பிசாசை வெளிப்படுத்துவார்கள். சிலர் அவ்வப்போது தேவனுக்கும் பிசாசுக்கும் தங்கள் ஐக்கியத்தைப் பகிர்ந்து கொடுப்பதினால் தேவனுடைய கிரியைகளையும் அதே நேரத்தில் பிசாசின் கிரியைகளையும் வெளிபடுத்துவார்கள். இதை,

முக்த திசை... இறைவனுடன் ஐக்கியப்பட்ட நிலை
கேவல திசை... பிசாசுடன் கைக்கியப்பட்ட நிலை
பெத்த திசை.... இறைவனுடனும் பிசாசுடனும் ஐக்கியப் பட்ட நிலை என்று சொல்லலாம்.

தேவனோ மனிதனைத் தன் அடிமையாகப் படைக்காமல் சுயாதீனனாகப் படைத்தார். இச்சுயாதீனம் மனிதனைப் பிசாசுக்கும் இடமளிக்கச் செய்தது. எனவே பிசாசானவன் மனிதனைத் தன் பக்கமாக இழுத்து அவனைக் கொண்டே தன்னையும் கடவுளாக மனிதர்கள் வணங்கும்படிச் செய்து வருகிறான்.

தேவன், தூதனைப் படைக்கும் பொழுது அவனை ஞானத்தால் நிறைத்து, இரத்தினக் கற்களாலும் பொன்னினாலும் வடிவாக அமைத்து, அபிஷேகித்து, அவன் கையில் நாகசுரத்தையும் மேளத்தையும் கொடுத்திருந்தார். அவனைத் தேவன் தள்ளிவிட்ட போது அப்பிசாசானவன் மனிதனைக் கொண்டு தன்னை இரத்தினக் கற்களாலும் பொன்னினாலும் அலங்கரிக்கச் செய்து, மனிதனின் கைகளினாலே அபிஷேகம் செய்ய வைத்து, மனிதனைக் கொண்டே தனக்கு நாகசுரத்தையும் மேளத்தையும் இசைக்கச் செய்து. வஞ்சித்து வருகிறான். பிசாசானவனும் ஞானமுள்ளவன், வல்லமையுள்ளவன். ஆனால், தேவனோ சர்வ ஞானியாயும், சர்வ வல்லவராகவும் இருக்கிறார்.

பாவம் நுழைந்த வரலாறு

இப்பிசாசானவன் ஆதிமனிதனை எப்படி வஞ்சித்தான் என்பதை பைபிளில் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் காணலாம்.

கீழ்ப்படியாமையினாலே தூதன் பிசாசாக மாறினான். அதே காரியத்தை மனிதனுக்குள்ளும் நுழைத்து விட்டால் மனிதனைத் தன் வசப்படுத்தி கொள்ளலாம் அல்லவா?

தேவன் ஆதிப் பெற்றோராகிய ஆதாம் - ஏவாளுக்கு ஒரேயொரு கட்டளையைக் கொடுத்தருந்தார். அவர்கள் தனக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்பதைக் காட்ட ஒரேயொரு மரத்தின் கனியை மட்டும் புசிக்கக்கூடாது என்பதுவே அக்கட்டளை. இதைக் குறித்த விபரமான விளக்கம் மரங்கள் என்ற DVD யில் உள்ளது. ஆதாம் அக்கனியைப் புசிப்பான் என்று முக்காலமும் அறிந்த கடவுளுக்குத் தெரியும் அல்லவா? அப்படியிருக்க அவர் அந்தக் கனிதரும் மரத்தை ஏன் அங்கு வைத்தார்? என்று சிலர் கேட்பார்கள், ஆண்டவன் ஏதோ தன் அறியாமையினால் செய்து விட்டது போலவும் நம்மைக் கேட்டுச் செய்திருந்தால் எல்லாம் நல்லபடியாக நடந்திருக்கும் என்பது போலவும் இக் கேள்வி தொனிக்கிறது.

மனிதனுக்குத் தமது சாயலைக் கொடுத்து, தமது சுவாசத்தைக் கொடுத்து, தாம் உண்டாக்கின சர்வ சிருஷ்டிகளையும் ஆண்டுக் கொள்ளும் அதிகாரத்தைக் கொடுத்து மனிதனைத் தனது பிரதிபலிப்பாக இவ்வுலகத்தில் வைத்த தேவன், தான் சிருஷ்டிகர், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவன் - எனவே அவன் தனக்குக் கீழ்ப்பட்டவன், அடங்கி நடக்க வேண்டியவன் என்பதை அவன் உணர்ந்து கொள்ளும் படியாக ஒரே ஒரு கட்டளையை அவனுக்குத் தந்தார். ஆனால் அந்த ஒரு கட்டளைக்குக்கூட அவனைக் கீழ்படிய விடாமல் கீழ்ப்படியாமையின் ஆவியைப் பிசாசு மனிதனுக்கு கொடுத்து வஞ்சித்தான்.

சாத்தானாகிய பிசாசு, பாம்பு ரூபத்தில் அவர்களை வஞ்சித்து தேவ கட்டளையை மீறும்படிச் செய்துவிட்டது. மனிதன் பாபியானான்.

இப்படிப்பட்ட கருத்தையே சைவ சித்தாந்தத்திலும் காண இயலும், சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் முதலாவது வருபவர் திருவுந்தியார் என்பவர் ஆவர். அவர்,

முத்தி முதற் கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்த தென் றுந்தீபற
அப் பழம் உண்ணாதே உந்தீபற - என்றார்
(திருவுந்தியார் - 40)

அதே போல சிவஞான போதமும் இக் கருத்தை வெளிப்படுத்துகிறது.

அவன் அவள் அது எனும் அவை
மூவினையையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்பனார் புலவர்
(சிவஞான போதகர் முதல் சூத்திரம்)

அவன் என்னும் மனிதனையும்அவள் என்னும் மனிஷியையும் அது என்னும் அவர்கள் வாழப் படைக்கப்பட்ட உலகத்தையும், இறைவன் மூன்று வெவ்வேறு செயல்களினால் படைத்த பொழுது, படைக்கப்பட்ட நிலையிலிருந்து அவர்கள் விலகி பாபத்திற்கு உட்பட்டனர். அதினால் பரிசுத்த நிலை கெட்டு பாப நிலைக்கு ஆளாயினர் என்று புலவர்கள் சொல்லுவதாக மெய்கண்டார் எழுதுகிறார் (மெய் கண்ட சாஸ்திரம் சிவஞான போதம் எழுதப்பட்டது சுமார் கி.பி 14ம் நூற்றாண்டு. என்பதையும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது)

மேலும் படைப்பின் வரலாறு குறித்துத் திருவள்ளுவரும் உலகியற்றியான், ஆதிபகவன் முதற்றேயுலகு, தனக்குவமையில்லா தான், வகுத்தான் வகுத்த வகை என்னும் சொற்கபை் பாவிப்பதால் இறைவன் உலகைப் படைத்தான் என்றும் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும்மேலாக இறைவன் விளங்குகிறான் என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

ஆரிய மதத்தில், மனிதன் பிறக்கும் பொழுதே அவனைத் தீமை தொடர்வது என்பதற்குத் தகுந்த விளக்கம்

கொடுக்கப்படவில்லை. பிறக்கும் பொழுதே தான் உயர்ந்தவனாகப் பிறந்துள்ளோம் என்ற எண்ணமும் அதே நேரத்தில் பிறவியே தீமையானது என்ற எண்ணம் நாத்தீக மதங்களாகிய பௌத்த, சமணத்தின் முற்பிறவிக் கொள்கைகளையும் கலந்து ஒரு கலப்பட்ட மதமாகவே ஆரியமதம் காணப்படுகிறது.

ஆரிய வேதாமாகிய ரிக், யஜீர், சாமம், உபநிடதங்கள் ஆகிய வேதங்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், இது தேவ மொழி, ஆகையால் ஆரியர் அல்லாதோர் இவைகளைக் கற்கக் கூடாதென்று மனு சாஸ்திரம் மூலமாக தடை விதிக்கப்பட்டபடியினாலும், அவ்வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் வழிபாடு முறைகள், தெய்வத்தன்மைகள் இன்னதென்று யாருக்கும் விளங்காதிருப்பதினாலும், அவைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அக்கறையோ, ஆர்வமோ அம்மார்க்கத்தை சேர்ந்த மக்களுக்கே இல்லாது போனபடியினாலும், எதோ ஒரு சில குறிப்பிட்ட மந்திர வசனங்களை மட்டும் படித்து அதுவே போதும் என்று நினைத்து மகிழ்வதினாலும், வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதைக் காட்டிலும் இதிகாச புராணங்களில் வரும் கற்பனைத் செய்வங்களையே உண்மையென்று நினைப்பதினாலும், எம்மதமும் சம்மதம் என்று தங்களையே திருப்திப் படுத்திக் கொண்டு, கடவுள் ஒருவரே என்பதை மறந்து, எல்லாக் கடவுள்களையும் நான் வணங்குகிறேன் என்று சனாதன தர்மம் பேசுகிற படியினாலும், மெய்ப் பொருள் இன்ன தென்று விளங்கிக் கொள்ள இயலாமல், ஒட்டு மொத்தக் கொள்கைகளான கூட்டுச் சமயத்தையே நம்பி, எல்லாம் ஒன்றுதான் என்றும் அந்த ஒன்றான மெய் தேவன் யார் என்று அறியும் ஆர்வம் இல்லாமல், மதத்தையே சார்ந்து நிற்கிற மக்கள் கூட்டம் மிகுதியாய்ப் போனபடியினாலும் மெய்ப் பொருளை அறியக் கூடாத நிலையில் மக்கள் வாழ்கிறார்கள்.

புராணம் கூறும் கற்பனைகளையே உண்மை என நம்புகின்ற மூட நம்பிக்கைகளை நினைத்து;

கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டாடும்

கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக என்று வள்ளலார் பாடினார். (மா.பொ.சி வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - பக்கம் - 275)

யூத மார்க்கத்தில், ஆதிப் பெற்றோராகிய ஆதாம்-ஏவாள் மூலமாகப் பிறந்த அத்தனை பேர்களும் கீழ்ப்படியாமையின் பாபத்திற்குள் இரத்த சம்பந்தத்தில் அகப்பட்டுக் கிடக்கிறதைக் காட்டுகிறார்கள். எனவே ஆதி மனிதன் பாபம் செய்ததினால் அவனுடைய சந்ததி பாபசந்ததியாயிற்றென்றும், ஆதி மனிதனின் மீறுதலினால் எல்லாருக்கும் ஆக்கினைக்கேதுவான தீர்ப்புண்டாயிற்றென்றும், ஆதி மனிதனின் கீழ்ப்படியாமையினாலே அவனிலிருந்து தோன்றியவர்களும் கீழ்ப்படியாமையின் பாபமாகிய ஆணவம், கன்மம், மலம், மாயை, ஆகிய சகச மலத் தொடர்புடையவர்களானார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

பைபிளில் :

ஒருவன் பாவஞ் செய்ததினால் உண்டான தீர்ப்பு.....
ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன்
மூலமாய் மரணம் ஆண்டு கொண்டிருக்க...
ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும்
ஆக்கினைக்கேதுவான தீர்ப்பு உண்டானது போல.....
ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே
அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல....

(ரோமர் 5:16,17,18,19)

என்ற வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பிசாசானவனின் வஞ்சகத்திற்கு ஆதி மனிதன் தன்னை ஒப்புகொடுத்த படியினால் அவனுடைய இரத்தப் பிறப்பாகிய வழித்தோன்றல்களும் அப்பாபத்திற்குட்பட்டனர். பாவம் இரத்த சம்பந்த முடையது.

பிறப்பிலேயே தொடர்ந்து வருகிற பாபம், பிறந்தவர் தம் வாழ் நாளில் செய்கிற பாவம் என்னும் இருவிதப் பாபங்களுக்குள் மனிதன் அகப் பட்டுக் கிடப்பதை இருள்சேர் இரு வினை என்பதாக வள்ளுவர் விளக்குகிறார்.

எனவே எப்பொழுது ஆதிப் பெற்றோராகிய பிறவாயாக்கைப் பெரியவர் பாபத்தில் விழுந்துவிட்டனரோ, அவர்களிலிருந்து பிறந்த மனித இரத்த சம்பந்தமுடைய எல்லோரும் ஜென்ம பாவத்திற்குள் அகப்பட்டு, அந்த ஜென்ம பாபம் எப்பொழுதெல்லாம் உணர்வு பெருகிறதோ அப்பொழுதெல்லாம் அதில் பிறந்த மனிதனும் பாபங்களைச் செய்து இப்படியாக உலகம் முழுவதும் பாபத்தில் முழ்கி தேவனுடைய மகிமையை இழந்து விட்டது.

பாபத்தினால் தாங்கள் கட்டப்பட்டுள்ள நிலையை உணர்ந்தவர்களாய் பூர்வகால பக்தர்கள் இறைவனை நோக்கி ;

"எங்களை எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சியும்" என்றும் "பாபத்திலிருந்து விடுதலை செய்யும்" என்றும் "எங்களை தண்டியாதிரும்" என்றும் "எங்களை மன்னித்து எங்கள்மேல் இரக்கமாயிரும்" என்றும் "எல்லா பாபங்களையும் எங்களை விட்டு விலக்கும்" என்றும் ஜெபித்தார்கள். (ரிக் வேதம் 10.133:இபிட்7.86.2-7:7:89.3:7, 89:5,85.7.8)

அதிகாரம் மூன்று

ஆன்ம மீட்பு

"ஒருவனாவது தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளைத் தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே! அவர்கள் ஆத்ம மீட்பு மிகவும் கஷ்டம், அது ஒருபோதும் முடியாது" (சங்கீதம் 49:7,8,9)

அவன் ஆன்மா பாதாளத்திற்கும் அவன் பிராணன் சாவுக்கும் சமீபிக்கிறது. ஆயிரத்தில் ஒருவராகிய சமாதானம் செய்கிற தூதனானவர் அவனுக்கு அநு சாரியாயிருந்து அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு, நீர் அவனை இரட்சியும், மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன், என்பார். (யோபு 33:22-24)

தேவன் ஒருவரே! தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்யஸ்தரும் ஒருவரே! எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே, இதற்குரிய சாட்சி எற்ற காலங்களில் விளங்கி வருகிறது (1தீமோத்தேயு 2:5,6)

மனிதன் உடல, உயிர், ஆன்மா என்ற முப்பொருளாலானவன். உடலையும் உயிரையும் அறிந்திருக்கிற அளவுக்கு ஆன்மாவைக் குறித்த அறிவு அனேகருக்கு இல்லையென்றே சொல்லலாம். ஆன்மா என்பது ஆவி இல்லை. ஆவி என்பது உயிர். மனிதனை இயக்குவது ஆவி. அது தேவனிடத்திலிருந்து மண்ணான சரீரத்திற்கு இரலவாகக் கொடுக்கப்பட்டது. ஆண்டவரின் ஆவியும் மண்ணான சரீரமும் இணைந்த பொழுது மனிதன் ஜீவ ஆத்மாவானான்.

இறைவனின் சாயலைப் பெற்ற மனிதன் ஜீவாத்மாவேயன்றி இறைவன் அல்ல. எனவே ஜீவாத்மாவாகிய மனிதன் தனக்குக் கீழ்ப்படிந்தவனாகவும் அதே நேரத்தில் அவன் அடிமையாக அல்லாமல் சுயாதீனமாக வாழும்படி ஆண்டவர் அவனுக்கு ஒரேயொரு கட்டளையை மட்டும் விதித்திருந்தார். அதாவது அவன்

வைக்கப்பட்டிருந்ததோட்டத்தின் கனிகளில் ஒரேயொன்றைத்தவிர மற்றெல்லாவற்றையும் அவன் சாப்பிடலாம் என்பதே அக்கட்டளை.

ஆனாலும் கீழ்ப்படியாமையின் பிசாசாக மாறிப்போன தூதன் அதே கீழ்ப்படியாமையின் ஆவியை மனிதனுக்குள் நுழைத்து அவனைத் தன் வசமாக்கிக்கொண்டான். மனிதன் மும்மல பாபத்தில் விழுந்து தேவத் தொடர்பை இழந்து சகச மலத்திற்குட்பட்டான். முத்தி முதற் கொடிக்கு மோகக் கொடி படர்ந்து தீமை பழுத்துவிட்டது.

புசிக்க வேண்டாம் என்று விலக்கிய கனியைப் புசிக்கும் நாளில் நீ சாகவேசாவாய் என்று ஆண்டவர் சொல்ல, ஜீவாத்மாவாகிய மனிதன் அதைப் புசித்தான். அனால் பைபிளில் அவன் 930 ஆண்டுகள் உயிரோடு இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது, அப்படியாயின் செத்தது யார் அல்லது எது என்ற கேள்வி எழும்புகிறது.

தேவனுடைய ஆவியும் மண்ணான சரீரமும் சேர்ந்த பொழுது அவன் ஜீவாத்மாவானான் என்று காண்கிறோம். இப்போது அவனுடைய ஜீவாத்மா செத்துப்போன படியினால் அவன் உயிருடனும் உடலுடனும் வாழ்கிறான். ஐம்புலன்களின் உதவியுடன் மனம், புத்தி, அகங்காரம், செயல் என்ற அந்தக்கரணத் துணைகளுடன் ஆன்மா அற்றவனாக வாழ்ந்து வருகின்றான்.

செத்துக்கிடக்கின்ற இந்த ஆன்மாவுக்கு ஜீவனைக் கொடுப்பதே ஆன்ம மீட்பு என்றழைக்கிறோம்.

பாபத்தில் விழுந்து தெய்வத் தொடர்பை இழந்த மனிதன் கடவுளை உணர முடியுமா? அப்படியானால் கற்காலத்திற்கும் முற்பட்ட மனிதர்கள் கடவுளை அறியாமற் போனது ஏன்? கடவுளுக்குக் கோயில் கட்டும் வழக்கம் கி.பி. யில் மட்டும் அதிகமாகக் காணப்படுகிறது. கி.மு. வில் எழுதப்பட்ட ரிக், யசுர். சாமம் போன்ற சமஸ்கிருத வேதங்களில் தமிழ் இலக்கியங்களிலும் மதங்கள், தெய்வங்கள் போன்ற எவ்விதச் செய்திகளும் இல்லாதது ஏன்?

பைபிள் சொல்லுவது என்னவெனில் :

தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே

வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால் காணப்படாதவை களாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம், என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. (ரோமர் 19,20)

சமஸ்கிருத வேதமாகிய ரிக் வேதத்தின் ஆரம்பத்தில் அக்னி (நெருப்பு) வருணன் (மழை) வாயு (காற்று) போன்ற இயற்கை சக்திகளையே தெய்வமாக வழிபட்ட வரலாற்றினைக் காணமுடிகிறது. இவைகளின் தலைவனாக இந்திரன் (இன்+திரன். என்பது போல) காட்சியளிக்கிறான்.

தமிழ் இலக்கியங்களாகிய தொல்காப்பியம், ஐந்திணை போன்ற செய்யுட்களில்

மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தை வரு வளியும்
வளி தலைஇய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல

என்றும்

நிலம் தீ நீர் வளி விசும் பொடு
ஐந்தும் கலந்த உலக மயக்க மாதலின்...

என்றும் இன்னும் இதுபோன்ற பல இயற்கை வணக்கக் காட்சிகளையே காண முடிகிறது.

முலைப்பாலும் கண்ணீரும் அன்பை விளக்கும். அன்பு பொருகினால் பாலும் சுரக்கும். கண்களும் கசியும். அதுபோல் தான் உண்டாக்கிய மனுக்குலம் பாபத்தில் அகப்பட்டு மடிந்து போவதைக் காணச் சகிக்காமல் இறைவனுக்கு அவன் மீது அன்புபெருக, அவன் தன் அன்பைப் பெருக்கி மனுக்குலத்தின் ஆருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்காம் இறைவனாக, நீரில்

காணும் நிழல் போலத் தன்னை வெளிப்படுத்தாவிட்டால், அருவாகி நிற்கின்ற இறைவன் தன்னை உருவாக்கிக் காட்டாவிட்டால் அவரையாரால் அறிந்து கொள்ள இயலும்? என்பது சிந்திக்கப்படத்தக்கது.

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமல் நீர் நிழல்போல் - இல்லா
அருவாகி நின்றானை ஆரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று
(சிவஞான சித்தியார் சுபக்கம்)

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற அப்பர் அடிகளின் சொல்லும், "நிலந்தன் மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி" என்ற மணிக்க வாசரின் சொல்லும், "தன்னைத்தந்து என்னைத் தடுத்தாட் கொண்ட நின் கருணை" என்ற தாயுமானவரின் சொல்லும் இவைகளை மெய்ப்பிக்கும்.

"பிரத்தானத் திரையம்" என்று அழைக்கப்படும் நூலில் ஒன்றாகிய பகவத் கீதையில்:

அதகேன ப்ரயுக்தோ அயம் பாபம் ச்சரதி புருஷ
அனிச்சன் அபி வர்ஸநேய பலாத் இவ நியோஜித
(கீதை 3:36)

நான் பாபம் செய்யக் கூடாது என்று நினைத்தாலும் எனக்குள் ஏதோ ஒரு சக்தி இருந்து கொண்டு என்னைப் பாபம் செய்யும்படித் தூண்டுகிறதே? என்று அர்ச்சுனன் வர்ஸ்னி கோத்திரத்து கிருஷ்ணனைக் கேட்க அவர்:

காம யேஷா க்ரோதயேஷா ரஜோ குணா சமுத்பவாஹ்
மஹா ஸனோமஹா பாப்மா விதியேனம் இஹ வைரினம்
(கீதை 3:37)

நீ ரஜோ குணம் என்ற பாபத்தில் பிறந்தபடியினால் காமம் குரோதம் என்ற இரண்டு தீய சக்திகள் உனக்குள் இருந்து கொண்டு உன்னைப் பாபம் செய்யும்படித் தூண்டுகின்றன. உன் ஆன்மீக மீட்புக்கு இதுவே எதிரி என்று பதில் கூறுகின்றார்.

எனவே பாபத்தின் பிடியில் அகப்பட்ட மனிதன் பாபம் செய்யக்கூடாது என்று நினைத்தாலும் அவனுக்குள் எதோ ஒரு சக்தியிருந்து கொண்டு அவனைப் பாபம் செய்யத்தூண்டுகிற நிலையைக் காண இயலும்.

ஆணவம், கன்மம், மலம் ஆகிய மூவகைச் செயல்கள் மனிதனை மாயைக்குள் நடத்துகின்றன. ஆன்மாவோ செயலற்று நிற்கிறது. உணர்வற்ற இந்நிலையை உணர்த்த இறைவன் வரவேண்டும். இறைவன் அரூபி, அவன் ரூபாகரப் படாவிட்டால் மனிதன் இறைவனைக் காண இயலாது.

"விண்ணின்று இழிந்து வினைக் கீடாய் மெய் கொண்டு" இறைவன் வரவேண்டிய அவசியத்தைத் திருமூலரும் "இறவா இன்பத்துள் எமையிருத்தல் வேண்டிப் பிறவா முதல்வன் பிறந்தான்" என்ற சிவாச்சாரியாரின் பாடலும் இறைவன் மனிதனைப் போல ரூபாகாரம் கொண்டு வந்தாலொழிய மும்மல பாபத்தையும் நீக்கிக் கொள்ள வழியில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.

தாங்கள் பாபிகள் என்று உணர்வதினாலேயோ, தங்களுடைய பாபங்களை நினைத்து அழுவதினாலேயோ, இனிப்பாபமே செய்யக்கூடாது என்று தீர்மானிப்பதினாலேயோ, பாபங்கள் நம்மை விட்டுப்போய்விடாது.

சித்தர்களுள் பெரியவரான திருமூலர் என்பார்:

"கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்
விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும்
அட்ட மாசித்திகளைக் காலறிவினால் அறியலாகும்
தட்டறப் பாசம் தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்"

என்று பாடினார்.

களவு செய்த கள்வனைப் பிடித்துக் கட்டிப் போட்ட பின்பு அவன் எவ்வளவு அழுதாலும் வாக்குக்கொடுத்தாலும் அவனுடைய கட்டுகள் தானாக அவிழ்ந்து விழாது. அவன் வேதனைகளைத் தீர்க்க அவன்பால் பச்சாதாபப் படும் வேறொருவர் வேண்டும்.

அவனுக்காக அவர் இரக்கப்பட்டால் மட்டும் போதாது. ஜாமீன் கொடுக்கவும் முன் வரவேண்டும். அதுபோலப் பாபத்திலிருந்து அல்லது பாபக்கட்டிலிருந்து விடுதலை பெற அஷ்டாங்க யோகா என்று எட்டு விதமான சித்து வேலைகளைப் படித்தால் போதாது. இருக்கிற அறிவில் கால்பாகத்தைப் பாவித்தால் இவைகளை அறிந்து கொள்ளலாம். ஆனால் பாபக் கட்டிலிருந்து விடுதலை பெற தற்பரனாகிய தெய்வம் குருவாக வந்து விடுவித்தல் வேண்டும், என்பதே இப்பாடலின் கருத்தாகும்.

ஏனெனில்

"குருவுருவங் கொண்டு இக் குவலயத்தில் தோன்றிப்
பர இருள் நீக்கும் பரன்"

என்றும்

"பந்தமெல்லாம் தீறப்பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே"

என்றும்,

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்றும் ஆதி சித்தர்கள் பாடியுள்ளனர்.

பாபக் கட்டிலிருந்து விடுதலை செய்யும் இப் பரம்பொருள் எப்படி வருவார்? என்ன செய்து பாபங்களை நீக்குவார்? என்று கேட்டால் திருமூலர் அதற்கும் பதில் சொல்கிறார்.

விண்ணின்று இழிந்து வினைக் கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக் காவல் மேல் வைத்து
உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பில்லா ஆநந்தக்
கண் கொண்டு காட்டிக் களிம் பறுத்தானே

என்கிறார்

பரம் பொருளாகிய இறைவன் தாம் வாழும் இடமான வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்து நாம் சரீரத்தில் செய்த பாப வினைகளுக்கு ஈடு செய்யும் படி உடலெடுத்துத் தன் ஒப்பற்ற பாதங்களை நமது வாழ்விற்குத் தலையாய மாதிரியாக வைத்து,

தான் உருகி, அதினால் நம்மையும் உருகச் செய்து, நாம் அவரை நோக்கிப் பார்க்கும் வேளையில் தமது கண்களினால் நமக்கு ஆலோசனை தந்து இவ்விதமாக நமது பாபங்களை நம்மை விட்டு அகற்றுவான் என்கிறார்.

மனிதன் பாபமாகிய களிம்புள்ள பாத்திரம். எத்தனை முறை கழுவிச் சுத்தப் படுத்தினாலும் மறுபடியும் மறுபடியும் களிம்பு ஏறிக்கொண்டேயிருக்கும். இப்பாத்திரத்தில் களிம்பு ஏறாமல் இருக்கச் செய்ய வேண்டுமானால் ஒரேயொரு வழிதான் உண்டு. பசும் பொன்னை உருக்கி, இக் களிம்புப் பாத்திரத்தையும் உருக்கி, இரண்டையும் ஒன்றாகக் கலந்து புதிய பாத்திரமாக்கி விட்டால், அப்பாத்திரத்தில் களிம்பு ஏறாது.

அதுபோலவே பசும் பொன்னாகிய கடவுள், பாபமற்ற பரிசுத்த தேவன், நமது பாபங்களிலிருந்து நம்மை விடுவிக்க சரீரம் பெற்று அச் சரீரத்தைச் சிலுவை மரத்தில் பலியாக்கி உருகி நின்றான். இக்காட்சியைக் கண்கொண்டு பார்க்கிற பாபியும் தனக்காக ஜீவனைக் கொடுத்த இறைவனின் அன்பு கண்டு உருகி நிற்கிறான். இப்போது இரண்டு அன்பும் ஒன்றாகக் கலந்து, பாபி புது சிருஷ்டியாக மாற்றப்படுகிறான். இனி அவனில் பாபம் சேர வழியில்லை.

வள்ளுவரும்

> இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள் சேர் புகர் புரிந்தார் மாட்டு.

என்கிறார்.

இருவினை என்பது நல்வினை, தீவினை அல்ல, ஏனெனில் இரு வினையிலும் இருள் சேர்கின்ற நிலையை வள்ளுவர் காட்டுகின்றார். தீவினையில் இருள் சேரும். நல்வினையில் இருள் சேருமா? சேரலாமா? அப்படிச் சேர்ந்தால் அது எப்படி நல்வினையாக இருக்க இயலும்? எனவே அது நல்வினை அல்ல. அப்படியாயின் இருவினை என்பது என்ன? ஒன்று பிறப்பினால் உண்டாகும் வினை. மற்றொன்று பிறந்த பின்பு செய்யும் செயலினால் உண்டாகும் வினையாகும்.

அருவமோ உருவாரூபம் ஆனதோ அன்றிநின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திக்
கென்னின்
அருவமும் உருவாரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ளவாமே

என்ற சிவஞான சித்தியாரின் - (சுபக்கம்-பிரமாணவியல்) செய்யுள் இதை இன்னும் மெய்ப்பிக்கின்றது.

"தேவனும் சித்தரும் தேடும் முதல்வர்
மூவரும் ஆவாரடி - குதம்பாய்
மூவரும் ஆவாரடி"

என்று குதம்பைச் சித்தரும் சொல்லியிருப்பது சிந்திக்கத்தக்கது மூவரும் என்ற சொல் சிவன் பிரம்மா விஷ்னு ஆகிய மூன்று தெய்வங்களைக் குறிக்கிறது என்று சொல்வர். சித்தர்கள் அவதாரங்களைப் பற்றிய கருத்துக்களுக்கு வேறுபட்டவர்கள். அவதாரங்களைப் பற்றி பாடியவர்களும் அல்ல. அப்படியாயின் எப்படி இந்த மூன்று தெய்வங்களின் பெயர்களைப் பயன்படுத்திருப்பார்?. அப்படிப் பயன்படுத்தாமையினால் சித்தர் கூறும் மூவொரு தெய்வம் யார் என்ற கேள்வியும் கூடவே எழும்புகிறது. எனவே....

அருவமாகிய இறைவன் உருவரூபமாக ஆனது மன்றி, அவ்வுருப ரூபத்தில் வந்த இறைவன், தானே கர்த்தா என்றுரைத்து உணர்த்தி அருவம் (பிதா) உருவம் (குமாரன்) அருவுருவம் (ஆவி) ஆகிய மூன்றும் ஒருவனுக்குள்ளேயே என்பதை இப்பாடல் விளக்கும்.

ஆன்மா, ஆவி சரீரமுமாகிய உடலுக்குள் இருக்கும் நிலையில் இறைவனும் ஆன்மா ஆவி சரீரத்துடன் வந்தால் மட்டுமே மனிதனின் ஆவி, ஆன்மா சரீரத்தை மீட்க இயலும், இறைவன் மனிதனாகப் பிறக்கக் கர்ப்பம் வேண்டும். மனிதச் சேர்க்கையால் இறைவன் பிறந்தால் இறைவனாக இருக்க இயலாது. மனிதச் சேர்க்கையில்லாமல் ஒரு கன்னியின் கருவில் அவர் தோன்ற வேண்டும்.

பிறவிப் பெருங்கடல், பிறவித்தழை, இருள்சேர் இருவினை என்ற வார்த்தைகள் யாவும் மனிதன் பாபத்தினால் பிறந்திருப்பதை வலியுறுத்தும்.

ப்ரார்த்தஸ்நான மந்திரத்தில்

பாபோகம் பாபக் கன்மோகம் பாபாத்மா
பாப ஸம்பவா; த்ராஹிமாம் புண்டரீகா க்ஷ
ஸர்வ பாப ஹரி ஹரே

என்பது ஒரு ஜெபமாகும். இதன் பொருள்: நான் பாபத்தில் பிறந்தேன். பாபத்தைச் செய்கிறேன். பாபத்தில் நிலைத்திருக்கிறேன். நான் ஒரு பாபி. என்னால் என்னை விடுவித்துக் கொள்ள இயலாது. தெய்வமே என்னைச் சகல பாபங்களிலிருந்தும் இரட்சியும் என்பதே.

மேலும் மனஸா, வாசா, ஹஸ்தப்யாம் தேஹினாம், பாபினாம் என்ற வார்த்தைகள் "நான் நினைவுகளினால் பாபம் செய்கிறேன், வார்த்தையினால் பாபம் செய்கிறேன். கண்களினால் பாபம் செய்கிறேன். உடம்பினால் பாபம் செய்கிறேன் என்று சொல்வதினால், மனிதன் பிறக்கும்பொழுதே மும்மல பாவத்திற்குள் இருக்கிறதை சிறு வயதிலேயே உணரஇயலும்.

இப்பாபப் பிடியில் இருந்து விடுதலை பெற பக்தியுள்ளவர்களையும் வேதம் ஓதுகிறவர்களையும் ஒருவன் அணுகினாலும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பக்திக்குரிய சில கடமைகளைச் செய்யச் சொல்வார்களேயன்றி அனுபவத்தைத் தர இயலாது.

தர்மம், ஸ்நானம், தானம், தியானம், யோகம் போன்ற எவ்வகைச் செயல்களும் மனிதனைப் பாபத்திலிருந்து விடுவிக்கக் கூடாதவைகள் என்பதை ஆதி கிரந் சாஹப் - பன்னா 178 மூலமாகவும், விவேக சூடாமணி 56:147 மூலமாகவும், பகவத்கீதை 17:5,6 மூலமாகவும் சில சித்தர்கள் பாடல் மூலமாகவும் அறியலாம்.

"தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்தி விரதம் கன்மயோகங்கள் சரித்தோர்

ஈனமிலா சுவர்க்கம் பெற்று இமைப் பளவில் மீள்வர்
ஈசனின் யோகக் கிரியா சரியையின் நின்றோர்
ஊனமிலா முக்திபதம் பெற்று உலக மெல்லாம்
ஒடுங்கும்போது அரன்முன் நில்லா தொழியின் உற்பவித்து
ஞான நெறி யடைந் தடைவர் சிவனையங்கு
நாதனே முன்நிற்கின்ற நணுகுவர் நற்றாளே"

(சிவஞான சித்தியார் சுபக்கம் - சாதனைவியல் பக்கம்-251) அதாவது, உலகம் எல்லாம் ஒடுங்கும்போது தானங்கள் கொடுத்தவர்களும், யாகங்கள் செய்தவர்களும், புண்ணிய தீர்த்தங்களில் ஆடியவர்களும், ஆச்சாரமாக வாழ்ந்தவர்களும், தபம் புரிந்தவர்களும், பிராயச் சித்தங்கள் செய்தவர்களும், விரதங்கள் கடைப்பிடித்து வாழ்ந்தவர்களும் கர்ம யோகங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்களும் அரனாகிய நீதி தேவனின் முன் நில்லாதொழிவர். மாறாக, உலகமெல்லாம் ஒடுங்கும்போது மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்று ஞான நெறியடைந்தவர்கள் ஈசனின் சரீரக் கிரியையாகிய பலியின் வழி நின்று, ஊனம் இல்லாத முத்தி பதம் பெற்று, நாதன் முன் நிற்க அன்பின் கடவுளை அணுகி அவரின் பாதம் பற்றிய ஈனமில்லா சுவர்க்கம் பெறுவர் என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

பைபிள் சொல்லுகிறபடி, நியாப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்குவதில்லை. இரட்சிப்பு அல்லது முக்தி என்பது கிரியைகளினால் கிடைப்பதில்லை. அது இறையருளால் மட்டுமே கிடைக்கும். ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டாகாமல் கிருபையினாலேயே உண்டாகும். ஏனெனில் இரக்கமுள்ள இறைவன் பாபியின்மேல் அன்பு கூர்ந்து அக்கிரமங்களில் மரித்துக் கிடந்த ஆத்துமாக்களைத் தன் உயிர் தந்து மறுபடியும் பிறக்கச் செய்தார். (பைபிள் - எபேசியர் 2:4-9)

வேதங்கள், ஆகமங்கள், ஆரண்யகங்கள், உபநிஷத்துக்கள் போன்றவைகளைக் கற்றுக் கொண்டாலும் அவைகளைப் படிக்கும்போது இன்னும் சில கேள்விகள் எழுகின்றன.

“அது என்னவெனில் : ரிக், யசுர் வேதங்களில் இன்றைக்கு வணாங்கப்படும் தெய்வங்களின் பெயர்கள் தெய்வங்களாக அங்கு இல்லையே, ஏன்? என்றும், யசுர் வேதத்தில் 32:3ல் கடவுளுக்கு உருவம் இல்லை (ந தஸ்ய ப்ரதிமா) யென்றும் 40:9ல் உருவங்களை வழிபாடுவோர் காரிருளில் வீழ்வார்கள் என்றும் ஸ்வேதாஸ் வதார உப நிஷத்து 4.20ல் நமது கண்களுக்கு கடவுளின் உருவம் புலப்படாது. கடவுளை யாரும் தங்கள் கண்களினால் காண இயலாது. அவரைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு தங்கள் சிந்தையில் வழிபடுபவர்களே முக்தியடைவார்கள் என்றும் காணப்படுகிறதே! அப்படியிருக்க ஏன் கோயில்களில் இத்தனை உருவங்களை வைத்து வணங்குகிறார்கள் என்றும், மரணத்திற்குப் பின்பு ஆன்மா எங்கே செல்லும் என்றும் பல கேள்விகள் எழக்கூடும்.

பல பிறவிக் கொள்கைகள் வேதங்களில் இல்லை. இறை நம்பிக்கையற்றவர்களின் இக் கொள்கை பிற்காலங்களில் இறை நம்பிக்கையுள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆன்ம மீட்பு என்பது அப்போது வெளிப்பட்டிருக்கவில்லை. எனவே ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே ஞானிகளாக நினைத்துக்கொண்டு பலபல கொள்கைகளைப் பரப்பி அவைகளை நம்புகிறவர்களைக் கூட்டம் சேர்த்துப்பின் இக்கூட்டங்களே மதங்களாக உருவெடுத்திருக்க வேண்டும். எனவே ஆன்ம மீட்பு என்பது அனேகருக்கு விளங்காத புதிராக இருந்து வந்தது.

ரிக் வேதத்தில் புருஷசூக்தம் என்ற ஒரு பகுதியுண்டு. அதில் கடவுள் புருஷனாக (மனிதனாக) வருவது குறித்து சொல்லப்படுகிறது. புருஷோ ஹிபிரஜாபதி என்பது வேதம். இறைவன் மனிதனாக வரவேண்டும். எதற்காக அப்படி வரவேண்டும் என்பதை ரிக் வேதத்துடன் சில பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நலம்.

தாண்டிய மகாபிராணம் சொல்லுகிறது:
ப்ரஜாபதி தேவப்யஹம் ஆத்மானம் யக்கஞும்
க்ருத்வா ப்ராயச் சித்

(பிரஜாபதியாகிய கடவுள் தன்னை முதலாவது பலி செலுத்தி பின்பு தேவர்களுக்காகப் (தேவனை ஏற்றுக் கொண்டவர்கள் தேவர்கள்) பலியாவார் என்பது பொருள்:

ஸ்த்பதா பிராமணம் சொல்லுகிறது:
ப்ரஜாபதி யக்ஞஹ (பிரஜாதிபதியே பலி)

ரிக் வேதம் 10வது மண்டலம் 90ம் அதிகாரத்திலும் 92,1லும் பிரஜாபதியாகிய புருஷன் பலியாக்கப்படுதலைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அக்காலங்களில் வேத சாஸ்திரிகள் பலி செலுத்தி அதின் இறைச்சியைப் புசித்து சோமபானம் என்னும் மதுவைக் குடித்த வரலாறு வேதங்களில் இருப்பதை யாரும் மறுக்கவும் மறைக்கவும் இயலாது.

இன்றும் உலகெங்கிலும் கடவுளுக்குப் பலி செலுத்தும் வழக்கம் இருப்பதைக் காணலாம். இறைவன் மனிதனாகி தன்னையே பலி செலுத்தப் போவதைக் குறித்து மிருக பலிகள் அதின் நிழலாய் ஏற்பட்டது. என்பதை உறுதிப்படுத்தும் படியாக ஐத்தரியப் பிராமணத்தில் "யக்ஞோத அவதி தஸ்யச்சாயா க்ரியதே" என்ற சுலோகம் விளக்கும்.

ரிக் வேதத்தில் புருஷன் பரலோகத்திலேயே பலி செலுத்தப்பட்டான் என்பதைக் காணலாம். அப்பலியானது சரீரப் பிரகாரமாக உலகில் நிறைவேற வேண்டும் என்பதாலேயே ஆரம்ப காலத்தில் மனிதன் மிருகங்களைப் பலி செலுத்தும் வழக்கமும ஏற்பட்டிருக்க வேண்டும்.

ரிக் வேதம் சொல்லும் இப்புருஷ பலியைக் குறித்து மற்ற ஆகமங்களும் ஆரண்யகங்களும் சொல்லும் கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது அங்கே சில முக்கிய குறிப்புகள்காணக் கிடைக்கின்றன.

1. சாண்டோக்ய உபநிஷத்து 1.6.6, 7ல் புருஷன் பாபங்களுக்கு மேற்பட்டவர். அவரை வழிபடுகிறவனும் பின்பற்றுகிறவனும் பாபங்களைக் கடக்க இயலும் என்று காணப்படுவதினால் பிரஜாதிபதியாகிய புருஷன் பாபம் இல்லாதவராக இருக்கவேண்டும்.

2. ஸத்பதா பிராமணம் 13.6.2.2ல் பலியாக்கப்பட வேண்டிய புருஷன் மற்றவர்களை விட்டு வேறு பிரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

3. ஐத்திரிய பிராமணம் 2.16ல் சொல்லப்பட்ட படி பலி செலுத்தப்பட வேண்டியதாகும். ஸத்பதா பிராமணம் 13ம் காண்டத்தில் அஸ்வத்தின் (குதிரை) தலையில் காட்டு முள் கொடி ஒன்றைச் சுற்றி வைத்து (மற்றக் குதிரைகளினின்றும் அது வேறுபிரிக்கப்பட்டதற்கு அடையாளம்) அதை அனுப்புவார்கள். வேத பண்டிதர்கள் இக் குதிரையின் தலையைப் பிரஜாபதி என்றும் உடல் மட்டுமே குதிரை எனறும் கூறுவர். இந்த யாகத்தினால் பாவமன்னிப்பு, புத்ரபாக்யம், ஆஸ்தி, வெற்றி போன்றவைகள் கிடைக்கும் என்பதை சொல்லுகிறது.

4. பலி செலுத்தப்படுகிறவர் மௌனமாகத் துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்று ரிக்வேதம் 5.44.1ல் காணப்படுகிறது. பலியின் வழியை அறிந்தவர் இவரே என்பதை "மார்க்க பிஜ்னோன்தர்யாமி தேவா" என்று சயனர் குறிப்பிடுகிறார்.

5. பலி மிருகத்தைப் பலிக் கொம்பில் கட்டாமல் அதைப் பலி செலுத்தக்கூடாது என்பது ஸத்பதா பிராமணம் 111.7.3.1ல் "தேவா யத் யக்ஞம் தன்வான அபத்னன் புருஷம் பாசும்" (பலி செலுத்துபவர்கள் புருஷனை பலிக் கொம்பில் கட்டினார்கள்) என்று காணப்படுகிறது.

6. பிருஹத் ஆரண்யக உபநிஷத்து 3.9.28.1ல் மரங்களுக்குத் தலைவனாக வனஸ்பதி என்பது போல பிரஜைக்குத் தலைவனாகப் பிரஜபதி இருக்கிறார் என்று காணப்படுகிறது. இந்த வனஸ்பதியாகிய மரம் வானத்தில் வேர் பற்றி பூமியை நோக்கிக் கிளை விடுகின்ற அஸ்வதா மரம் என்று வர்ணிக்கப்படுகிறது. அதுபோல, இறைவனாகிய பிரஜாதிபதி வானத்திலிருந்த பூமிக்கு வருவார் என்பது ஞானிகள் கண்ட உண்மை. இந்த அஸ்வதா மரமாகிய வனஸ்பதி வெட்டப்படும்போது அதின் உயிராகிய நீர் அதினின்று கசிவது போல பிரஜாதிபதி வெட்டப்படும்போது அவருடைய இரத்தம் உடலிலிருந்து கசிந்து ஒழுகும் என்பதை அறியப் பெறலாம். (இபிட்.3.9.28.2)

7. மரம் வெட்டப்பட்டால் அது மறுபடியும் கிளைவிட்டு வளர வழியுண்டு. பிரஜாபதி வெட்டப்பட்டால் அவர் எப்படித் திரும்பவும் உயிர் பெறுவார்? 4வது சுலோகத்தில் **மார்த்ய** என்ற சொல் காணப்படுகிறது. இந்த வார்த்தையானது பிரஜாபதியாகிய கடவுள் மனிதன் ஆகிறதைக் குறிக்கும் வார்த்தை. சிலர் இதைச் சாதாரண மனிதனுக்கு ஒப்பிடுகின்றனர். புருஷன் மரித்தபின்பு உயிருடன் வரவேண்டும். சாதாரண மனிதன் மரித்தால் உயிருடன் வர இயலாது. பிரஜாபதி மரித்தாலும் திரும்ப உயிருடன் எழும்புவதை இப்பாடல் விளக்குகிறது. இதைத் தவறாகப் பயன்படுத்தி மரித்த மனிதன் இன்னொரு பிறவி அல்லது பல பிறவிகள் எடுப்பான் என்ற தவறான கொள்கைகளும் கற்பிக்கப்பட்டன.

பலியாக்கப்பட்ட பிரஜாபதி மரித்த பின்பும் உயிரோடு இருப்பதை இங்கு காணலாம்.

8. ஐத்திரீய பிராமணம் 2.6ல் பலிமிருகத்தின் எலும்புகள் முறிக்கப்படக்கூடாது என்று காணப்படுகிறது.

9. சத்பதா பிராமணம் 5.1.1.1,2ல் பிரஜாபதி தன்னையே ஒப்புக் கொடுத்தார். பலி அவர்களுடையதாயிற்று. அப்பலியே அவர்களுடைய ஆகாரமாயிற்று என்று காணப்படுகிறது.

கீதை 3.13ல் பலி செலுத்தப்பட்ட பின்பு அதைப் புசிப்பவர்கள் பாவத்தளையிலிருந்து விடுதலையடைவார்கள் என்றும் பலியானதைச் சாப்பிடுபவர்கள் பிரம்மத்தையடைவார்கள் (4:31) என்றும் காணப்படுகிறது.

10. பலியாக்கப்பட்ட புருஷனை ஏற்றுக் கொண்டு அவருடைய சிந்தனையாக இருந்து அவரை அறிவித்துக் கொண்டு ஊழியம் செய்கிறவர்கள் பிராமணர் என்றும் மக்களைக் காத்துத் தொண்டு செய்கிறவர்கள் சத்ரியர் என்றும், பொருட்களை வியாபாரம் செய்து பணிபுரிவோர் வைசியர் என்றும் குற்றேவல் பணி செய்கிறவர்கள் சூத்ரர் என்றும் இவர்கள் முறையே பிரஜாபதியின் முகம், தோள், தொடை, பாதம் என்ற பகுதிகளாக இருக்கிறார்கள் என்றும் ரிக்வேதம் 10.90ல் கடைசி பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இறைவனுக்குள் யாவரும் ஒன்று என்பதை இது விளக்குகிறது. ரிக்வேதத்திலோ மற்ற வேதங்களிலோ மக்களிடையே ஜாதிப் பிரிவினைகளையுண்டாக்குகிற எவ்வித வார்த்தைகளோ, உபதேசங்களோ காணப்படவில்லை. மதத்தை வைத்துப் பிழைக்க நினைத்தவர்களின் பித்தலாட்டமே ஜாதிகளை ஏற்படுத்தியது என்பது ஸ்வாமி சின்மயாநந்தா அவர்களின் கருத்து. (The Universal Person - Swami Chin-mayananda p.43)

இவைகளின் கருத்தை மனதில் கொண்டு இந்த வேதங்கள் சொல்லும் இறைவன் யார் என்று தேடியலுத்து, முடிவில் தெய்வ நம்பிக்கையற்ற நாஸ்திகன் ஆனேன்.

நாஸ்திக நண்பர்களுடன் பழகியபோது அவர்கள் மூட நம்பிக்கைகளையும் அம்மூட நம்பிக்கைகளுக்குக் காரணமாயிருக்கிற மதங்களையும் அம்மதங்களை ஏற்படுத்திப் பிழைக்கிற மதாச்சார்யார்களையும் வெறுக்கின்றனரேயன்றி ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கை ஏற்றுக்கொள்ளவே செய்கின்றனர் எனவும் அறிந்தேன்.

இந்நிலையில் எனக்குத் திருமணமாயிற்று. திருமணத்திற்குப் பின்பு தேவைகள் அதிகமாயிற்று. குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு சூதாட்டம், குதிரைப்பந்தயம் போன்ற செயல்களில் இறங்கிப் பின்பு புகை, மது போன்ற தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி, இருந்தவைகளையும் இழந்து, பெருங்கடனுக்குள்ளாகி அதைத் திரும்பத் தரத் திராணியற்று பெருத்த அவமானத்திற்குள்ளாகி, இதினால் மனச் சோர்வுற்று முடிவில் வாழ்வதை விடச் சாவதே மேல் என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டேன்.

ஒரு நாள் என் அலுவலகத்திலிருந்து (R.M.S. 'M' Dn Chennai) சாயங்காலம் மின்சார இரயிலில் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது வெளியே குதித்து தற்கொலைசெய்து கொள்ளலாம் என்றெண்ணி கதவருகில் வந்தேன். அதே நேரம் ஏதோ ஒரு ஒலிபெருக்கியின் மூலம் "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்" என்ற சம்தம்

கேட்டு, தற்கொலை முயற்சியைக் கைவிட்டு, கடலில் முழுகுகிறவன் ஒரு துரும்பையும் பற்றிப் பிடித்துக் கறைசேர முயற்சிப்பதுபோல அவ்வாக்கை நம்பி, அடுத்த இரயில் நிலையத்தில் இறங்கி, ரயில்வே பாதைவழியாக நடந்து வந்து, அக்கூட்டம் நடக்கின்ற இடத்திற்குப் போனேன்.

அது ஒரு கிறிஸ்தவர்களின் கூட்டம். யோசுவா தானியேல் என்பவர் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். பாபத்தைக் கண்டித்து நீதியை உணர்த்தி நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரித்துப் பேசிய அவருடைய தேவ செய்தி என்னை வெகுவாகத் தொட்டது.

பாபத்தைக்குறித்தும், பாபம் நமது வாழ்க்கையில் செய்யக்கூடிய பலனைக் குறித்தும், பாபத்தில் வாழ்ந்து மரித்தால் நரகத்திறிகுப் போகவேண்டுமென்பதைக் குறித்தும் நான் நன்கு அறிந்திருந்தேன்.

அந்தப் பிரசங்கியார் பாபத்தைக் கண்டித்துணர்த்திப் பேசினாலும் அதின் பிடியிலிருந்து மோட்சகதி அல்லது இரட்சிப்புப்பெற, இறைவனே இவ்வுலகில் புருஷனாக (மனிதனாக) வந்து ஜனங்களின் பாபங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டுத் தலையில் முள்முடி சூடி, உடலெல்லாம் அடிபட்டு, இரத்தம் சொட்டச் சொட்டச் சிலுவை மரத்தில் கட்டப்பட்டு அதில் தன் ஜீவனையே பலியாக தந்தார் என்று சொன்னபோது, நான் எனக்குள், இவர் பிரசங்கிக்கும் இயேசு கிறிஸ்துவே பிரஜாபதி பலியாக இருப்பாரோ என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

அந்தக் கூட்டம் முடிந்த பின்பு அவர்களை அணுகினேன். பாபிகளை இரட்சிக்க இயேசுக் கிறிஸ்து உலகத்தில் வந்தார். என்ற வார்த்தை எவ்வளவு உண்மையானது! நான் என் பாபங்களையெல்லாம் அறிக்கை செய்து வெளியிட்டபோது தேவ வசனம் “உன் பாபங்கள் மன்னிக்கப்பட்டன, நீ போ, இனிப்பாபம் செய்யாதே” என்று பேசியது.

அதுமுதற் கொண்டு Lay Men Evangelical Fellowship என்ற அந்தக் கூட்டங்களுக்கு ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தேன். டாக்டர். ஜெயசிங், டாக்டர் சாம்ராஜ் சாமுவேல், டாக்டர்.ஏசுதாஸ்

ஆகியோர் எனக்கு ஆரம்ப வழிகாட்டிகளாக இருந்தனர். பாபத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதை என் ஆன்மா உணர்ந்தது. நான் மோட்சகதியடைந்து விட்டதை உணர்ந்து ஆனந்தப்பட்டேன். என் வாழ்க்கையில் முக்கிய திருப்பம் அதுவே. இயேசுவுக்குள் ஒருவன் இருந்தால் அவன் புதிய சிருஷ்டியாகிறான் - பழையவைகள் ஒழிந்து எல்லாம் புதியவைகள் ஆகிறதையறிந்தேன். என் சுபாவங்கள், குணங்கள், பழக்க வழக்கங்கள் யாவும் மாறின.

வறுமை, கடன், பசி, பட்டினி ஆகியவைகளின் மத்தியிலும் ஆன்ம இரட்சிப்பின் மகிழ்ச்சியுடன் புதிய வாழ்க்கை வாழ ஆரம்பித்தேன். தேவனுடைய வசனங்களைக் கவனமாய் படிக்கவும், சாட்சி சொல்லவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும், ஜெபம் செய்யவும் என்னை வழி நடத்தினவர்களில், பாஸ்டர்.விக்டர் சுவாமிதாஸ், காலஞ் சென்ற கிளாடி ஈசுவர ராஜ், சகோதரர் பிரிய தாஸ், பாஸ்டர் ராஜன் வின்செண்ட் ஆகியோர் முக்கியமானவர்கள்.

உபதேசத்தின் வழியாக நான் ஞானஸ்நானம் பெறவும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறவும் வழிகாட்டியவர் பாஸ்டர் பிரடிமாக்டன் அவர்கள்.

வேத வசனத்தில் ஊன்றக் கட்டி என்னைப் பலவிதங்களிலும் ஒப்புக் கொடுக்க வைத்து ஊழியக்காரன் ஆக்கினவர் பாஸ்டர் பஸ்கரதாசன் அவர்கள். என் ஆவிக்குரிய தகப்பனாராகவும் எனக்குப் பிச்சையிட்டு ஆதரித்த தேவ மனுஷனாகவும் அவரை நினைவு கூறுகிறேன்.

1968ம் ஆண்டு முதல் 70ம் ஆண்டு வரை பாஸ்டர். பாஸ்கர் தாசன் அவர்களின் சபையில் இருந்து அவரால் ஊழியப் பிரதிஷ்டை செய்யப்பட்டேன். 1972ம் ஆண்டு கோவைக்குச் சென்று பாஸ்டர் யோபு ஞானப்பிரகாசம் அவர்கள் சபையிலும் பின்பு டாடாபாத் 8ம் நம்பர் தெருவிள்ள அசம்ளி ஆப் காட் சபையிலும் போதகராக ஊழியம் செய்தேன். 1972ல் அக்னி என்ற மாதப் பத்திரிக்கையை ஆரம்பித்தேன். 1974ம் ஆண்டு Action Team என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி முழுநேர சுவிசேஷக ஊழியம் செய்து வந்தேன்.

கோவையருகில் பொள்ளாச்சி என்ற இடத்தில் ஸ்வீடனிலிருந்து வந்த ஒரு கிறிஸ்தவ வெள்ளைக்காரப்பெண் (இந்துவாக மாறவிருந்தவள்) என் மூலம் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவே மெய்யான இரட்சகர் என்பதையறிந்து ஆன்ம மீட்புப் பெற்றார்கள். அவர்களே முதன்முதலாக என்னைச் சாது என்றழைக்க அது சாது சொல்லப்பா என்று நிலைத்துவிட்டது.

வட ஆற்காடு வேலூரில் பாஸ்டர் நல்லையா ஆரோன் அவர்களின் சபையில் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஊழியத்திற்குள் தீவிரமாகப் பிரவேசித்தேன். அக்காலங்களில் என் பெயர் அவ்வளவு பிரபலமாகவில்லை. அப்பொது ஆண்டவரிடம் இரண்டு வேண்டுதல் செய்தேன். ஒன்று ஒரு பெரிய இடத்திலிருந்து அழைப்புவரவேண்டும். அம்முதல் கூட்டத்திலிலேயே அனேக ஆத்மாக்கள் இரட்சிப்படைய வேண்டும் என்பதே. தேவன் அந்த வேண்டுகோளைக் கேட்டார்.

மதுரை இராமனாதபுரம் அத்யட்சாதீனத்திலிருந்து ஆண்டு விழாவிற்குச் சிறப்புப் பேச்சாளராக வரும்படி அழைப்பு வந்தது. அனேக ஆத்மாக்கள் இரட்சிப்படைந்தனர். இதன் பின்பு என்னைப் பல இடங்களுக்கும் அழைத்தனர்.

1978ல் என் வேலையை ராஜினாமா செயதேன். Action Team of India என்ற சுவிசேஷக்குழு ஏற்படுத்தி தெருக்கள், கிராமங்கள், ஊர்கள் எல்லாம் கால்நடையாகவே சென்று ஊழியம் செய்தேன். சகோதரர்கள் மைக்கேல், பெர்னாட்ஷா, தனியேல், ராஜன் ஆகியோர் அப்போது என்னுடன் வருவார்கள். இப்போது அவர்கள் சபை நடத்தி வருகிறார்கள். இதில் பாஸ்டர் பெர்னாட்ஷா தானியேல் ஆகியோர் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டனர். பாஸ்டர் மைக்கேல் அவர்கள் த பெந்தேகோஸ்து சபையில் வட்டத்தலைமைப் போதகராகப் பணியாற்றுகிறார்.

மெய்ப்பொருள் விழா என்ற பொருளில் நானும் புலவர் தெய்வநாயகம், வேத நாயகம் சாஸ்திரியார், சாமுவேல் கணேஷ், மைதீன் ஆகியோரும் முதன்முதலாக டிரஸ்ட்புரம் என்னும் இடத்தில், சென்னையில் பெருங்கூட்டம் நடத்தினோம். கடலூரில் இக்கூட்டத்தை எடுத்து நடத்தியவர் காலஞ்சென்ற டாக்டர். ஜஸ்டின்

பிரபாகரன் அவர்கள். என்னுடைய பிரசங்கங்களிலும் ஊழியங்களிலும் ஆர்வம் காட்டி எனக்கு அமைப்பாளராக இருந்து, உண்மையாகவே இரட்சிக்கப்பட்டு முடிவில் ஊழியக்காரனாகி மரித்தவர் அந்த அன்புச் சகோதரர்.

இந்நாட்களில் முதன்முதலாவது, மதிகெட்டவன் யார்? என்ற புத்தகம் எழுதினேன். அதன் பின்பு குரு யார்? ஜோதி இராமலிங்க அடிகள், பரிசுத்தம், கிறிஸ்தவம் தேவையா? எபேசியர் விளக்கவுரை, கிறிஸ்தவக் குடும்பம், உபதேசங்கள் எச்சரிக்கை, விபரீதங்களைச் சகித்தவர், நரகம், இரட்சிப்பு மேட்சம் நரகம் போன்ற புத்தகங்களை வெளியிட்டேன். இவைகளில் அதிகமாக விற்பனையானவைகள் கிறிஸ்தவம் தேவையா? கிறிஸ்தவக் குடும்பம் ஆகியவைகளாகும்.

இதன்பின்பு கர்த்தர் இந்தியாவில் பல இடங்களுக்கும் அனுப்பி ஊழியம் செய்ய வைத்தார்.

1980 முதல் என் ஊழியங்கள் ஒரு சில இடங்கள் தவிர உலகமெங்கும் நடைபெற கர்த்தர் அருள் செய்தார்.

1985, 86 ஆகிய ஆண்டுகளில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் வல்லமையாகப் பயன்படுத்தினார்.

1992ம் ஆண்டு Agni Ministries Inc Trust என்ற ஊழியத்தை ஆரம்பித்தேன்.

திரு. நேரு தைரியம் அவர்கள் முதல் முதலில் TV யில் செய்தி தந்திட என்னைப் பயன்படுத்தினார்.

2008ல் திரு. ரகுநாதன் ஐயர், அவருடைய மனைவி சுசீலா, திரு. கணேசன் ஐயர், திரு. அகத்தியன் ஆகியோர் வீடுதேடி வந்து அளித்த உற்சாகத்தினால் கிறிஸ்தவ பிராமண சேவா சமிதி என்ற அமைப்பு உருவாகி, பிராமணர்கள் மத்தியில் நல்ல விழிப்புணர்வையும் எழுப்புதலையும் ஏற்படுத்திற்று, இவையெல்லாவற்றையும் செய்யக் கர்த்தர் ஞானத்தையும், கிருபையையும் அனேக தேவ பிள்ளைகள் வழியாக பண, ஜெப உதவிகளையும் செய்தார். கர்த்தருக்கே மகிமை!

அதிகாரம் - நான்கு

மதங்கள்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஆன்றோர் வாக்கு உண்மையாயின் அந்த ஒரு குலத்தையும் ஒரு தெய்வத்தையும் அறிய வேண்டும்.

மதங்கள் வழியாக இறைவனையடைவது கூடுமெனில் அம்மதங்களைக் குறித்தும் அம்மதங்களுக்கிடையே காணக்கிடக்கும் தொடர்புகளைக் குறித்தும் அறிந்து கொள்வது நல்லது.

சிறு சிறு மதங்கள் யாவும் பெரு மதங்களினின்றும் பிரிந்து வேறுபட்ட நிலையில் காணப்படுவதால் அச்சிறு சமயங்களைக் குறித்து இங்கு அதிகம் விவரிக்கவில்லை.

பெருஞ் சமயங்களை உலகளாவிய சமயங்கள் என்றும் இந்திய அளவில் உள்ள சமயங்கள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்.

தோன்றிய சமயங்கள் யாவும் ஆசியாக் கண்டத்தில் தோன்றியவை என்பதை எண்ணும் பொழுது ஆசிய வாசிகளில் ஒருவரான நமக்கு பெருமிதம் ஏற்படுவது இயல்பு. ஐரோப்பிய, இங்கிலாந்திய, அமெரிக்க மக்கள் கி.பி. ஐந்நூறு ஆண்டுகள் வரையிலும் காட்டுமிராண்டிகள் போலவே வாழ்ந்தனர் என்பதும் சரித்திர பூர்வமான உண்மையாகும். எகிப்திய, பாபிலோனிய, கிரேக்க, திராவிட நாகரிகங்களை வரலாற்று ஆசிரியர்கள் அறிவார்கள். இவை ஆசியக் கண்டத்தில் பகுதிகளாகும்.

மதம் அல்லது சமயம் என்ற நிலையில் முதல் முதலாவது ஏற்பட்டது யூத சமயம் ஆகும். அதன் தொடர்புள்ள சமயமாகக் கிறிஸ்தவம் காணப்படுகிறது.

ஆபிரகாமின் வழித் தோன்றலான இஸ்மவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார், அதே ஆபிரகாமின் வழித் தோன்றலான ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் வழித் தோன்றலான பன்னிரண்டு கோத்திரங்களை ஏற்றுக்கொள்ளாமல்

பகைமை பாராட்டினபடியால் அந்த எபிரெயர்களின் மதக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாமல், தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளே ஷியா, சுன்னி, அகமதியா இயக்கம் போன்ற இஸ்லாமியக் கொள்கைகளாக உருவாகி இஸ்லாம் என்ற மதம் தோன்றிற்று. எனவே உலகச் சமயங்களாக

யூதம் கி.மு. 2000 முதல் இன்று வரை
கிறிஸ்தவம் கி.பி 1 முதல் இன்று வரை
இஸ்லாம் கி.பி 700 முதல் இன்று வரை

ஆகிய மூன்று சமயங்களும் நிற்கின்றன.

(ஆண்டுக் கணக்குகள் சில பலவாக வித்தியாசப்படலாம். ஆனால் அது 250-300குள் மட்டுமே இருக்க இயலும்.)

யூதருடைய மார்க்கத்திலும் யூதம், எபிரேயம் என இரு பிரிவுகள் உண்டு.

கிறிஸ்தவத்தில் கத்தோலிக்கம், புரட்டஸ்டாண்ட், பெந்தேகோஸ்தே என்ற பிரிவுகள் உண்டு.

இஸ்லாமில் ஷியா, சுன்னி, அகமதிய இயக்கம் என்ற பிரிவுகள் உண்டு.

ஆனால் இப்பிரிவுகள் யாவும் இறைவனால் உண்டாக்கப்பட்டவைகள் அல்ல. இறைவன் அருளிய வேதத்தினால் உண்டாக்கப்பட்டதும் அல்ல. இப்பிரிவுகள் யாவும் மனித அறிவினாலும் மனித தத்துவங்களாலும் ஏற்படுத்தப்பட்டவைகளே.

இந்திய அளவிலான சமயங்களை ஆராய்ந்து பார்க்கும்போது முதலாவது வருவது ஆரிய சமயம். அதினால் ஏற்பட்ட விளைவாக ஜைன சமயமும் அதையடுத்து பௌத்த சமயமும் தோன்றின. இவை மூன்றும் வடநாட்டு சமயங்களாகும்.

ஆரிய சமயம் கி.மு...2000 தொடக்கம் இன்று வரை
ஜைன சமயம் கி.மு.....800 தொடக்கம் இன்று வரை
பௌத்த சமயம் கி.மு.....600 தொடக்கம் இன்று வரை உள்ளன.

ஆரிய சமயம் பிற்காலத்தில் பல சமயங்களுடன் கலந்து இன்றைய இந்து சமயமாக நிற்கிறது. ஜைன சமயம் இந்தியாவில் தனித்துக் காணப்பட்டாலும் இந்து சமயத்துடனும் ஒத்துப் போகிறது. பௌத்த சமயம் இந்தியாவிலிருந்து ஆரியத் தந்திரத்தினால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் இந்தியாவில் கொஞ்சமாகவும், சீனா, தீபெத்து, ஜப்பான், பர்மா, இலங்கை ஆகிய இடங்களில் பரவலாகவும் உள்ளது.

தென் இந்தியாவில் ஆதியில் இயற்கை வணக்கம், ஆவி வணக்கம், முன்னோர் வணக்கம், வீரர் வணக்கம் ஆகிய வணக்கமுறைகள் இருந்தனவே தவிர மதங்களோ, இன்றைய நாட்களில் வணங்கப்படுகின்ற கடவுள்களோ இருந்ததாக கி.மு.வில் எழுதப்பட்ட இலக்கியங்கள் எதிலும் இல்லை.

உதாரணமாக

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தை வரு வளியும்
வளி தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல
(முரஞ்சியூர் முடிநாக ராயர்)

என்றும்

நிலந் தீநீர் வளி விசும் பொடு
ஐந்துங் கலந்த உலக மயக்க மாதலின் -
என்றும்

(தொல்காப்பியம்)

மாயோன் மேயக் காடுறை உலகும்
சேயோன் மேய மைவரை உலகும்
வேந்தன் மேய தீம்புனல் உலகும்
வருணன் மேய பெருமணல் உலகும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே
(அகத்திணை)

என்றும் காணப்படுதலைக் காணலாம்.

இயற்கையை வழிபட்ட திராவிட மக்கள் ஜைனக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டனர். தமிழ் நாட்டில் அது சமணம் என்றழைக்கப்பட்டது. கி.பி. முதலாம் நூற்றாண்டின் 57ம் ஆண்டும் இயேசுக் கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான தோமா என்பவர் அன்றைய சேர நாட்டின் ஊராகிய கிராங்கனூர் என்ற இடத்திற்கு வந்தார். ஏனெனில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே தமிழர் எகிப்துடனும் மத்திய ஆசிய நாடுகளிடனும் வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர். மற்றும் யூதக் குடும்பங்கள் கொச்சிக்கு அருகேயுள்ள மட்டஞ்சேரி என்னுமிடத்தில் வந்து தங்கியிருந்தனர். அவர்களின் வாரிசுகள் இன்றும் அங்கு வாழ்வது கண்கூடு. யூதர்களின் கோவிலும் அங்கே உண்டு.

எங்கெல்லாம் இஸ்ரவேலரும் யூதரும் பரவிச் சென்றார்களோ அங்கெல்லாம் யூதக் கிறிஸ்தவர்களும் சென்று இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை முன்பு யூதருக்கும் பின்பு மற்றவர்களுக்கும் அறிவித்தனர். அனேக மத்திய கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்து இயேசுவின் தொண்டர்கள் மூலமாகவும் இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவராகிய தோமா என்பவராலும் தென் தமிழ் நாட்டில் கிறிஸ்தவம் பரவலாயிற்று. (தோமா தென் இந்தியாவிற்கு வந்து கடற்கரையோரங்கள் வழியாக நற்சய்தி அறிவித்து, மைல்புரி (மயிலாப்பூர்) என்ற இடத்தில் சில காலம் நின்று, பின்பு ஜப்பான், சீனா ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்கிருந்து வட இந்தியாவுக்கு மீண்டும் வந்து, அங்கே கோண்டப்போரஸ் என்ற அரசனைக் கிறிஸ்துவுக்குள்ளாக்கி, பின்பு சீரிய தேசம் சென்றார். மீண்டும் தற்போதைய கேரளாவிற்கு பல சீரிய கிறிஸ்தவர்களுடன் வந்து, மீண்டும் மைல்புரிக்கு வந்து ஒருசில எதிர்ப்பாளர்களினால் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்பது வரலாறு, தோமா இந்தியாவிற்கு வந்ததுண்டு. தோமா வழியாகத் தான் கிறிஸ்தவம் வந்தது என்பது ஆய்வுக்குரியது.)

ஐரோப்பியா நாடுகளுக்குக் கிறிஸ்தவம் சென்று பரவுவதற்கு முன்னரே தோமே இந்தியாவுக்கு வந்து கிறிஸ்தவத்தை அறிவித்தார் என்பதும், ஐரோப்பிய நாடுகளை விட இந்தியா

நீண்டகாலக் கிறிஸ்தவ வரலாற்றையும், உயர்ந்த கிறிஸ்தவப் பாரம்பரியத்தையும் கொண்டதாக அமைந்திருப்பது இந்தியர்களுக்குப் பெருமை தரத்தக்கது என்பதும் இராஜேந்திரப் பிரசாத் அவர்களின் கருத்து. (The Syria Christians of Kerala. S.G. Pothan. Asia Publishing House, Madras 1963.p.1)

பேதுருவும் பவுலும் மேற்கத்திய நாடுகளில் நிலை நாட்டிய கிறிஸ்தவத்தை விட இந்தியாவில் தோமாவால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்தவம் தனித்தன்மை வாய்ந்தது என்பதும், கிறிஸ்தவத்தின் தொடக்க கால முதலே இந்தியாவின் மேற்க்குக்கரையில் பரவிய கிறிஸ்தவம், இந்தியர்களால் சிறந்த முறையில் நடத்தப்பட்டு உள்ளது என்பதும், இந்திய அரசர்கள் கிறிஸ்தவக் கோயில்களைக் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதும் டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களின் கருத்து. (Dr. Radhakrishnan in "East and West in Religion" 1958 Quoted by S.G. Pothan. the Syrian Christian in kerala. Asian Publishing House, Madras.. p.3)

இங்கிலாந்திலும் ஐரோப்பியாவிலும், ஏன் உரோமிலுங் கூடக் கிறிஸ்தவம் வேரூன்றுவதற்கு முன்னர் இந்தியாவில் கிறிஸ்தவம் பரவியுள்ளது எனவும், இந்திய மக்கள் பெருமளவில் அதை ஏற்றனர் என்பதும் ஜவஹர்லால் நேரு அவர்களின் கருத்து. (Glimpses of World History 1934 Jawaharlal Nehru Quoted in syriam Christian in kerala. p.3)

மேற்கண்ட குறிப்புகள் டாக்டர் மு.தெய்வநாயகம் அவர்களின் விவிலியம் - திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு - என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டவை. பின்பு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கத்தில் போர்த்துக்கீசியராலும் கிறிஸ்தவம் பரவலாயிற்று.

சமண மார்க்கத்தைச் சேர்ந்த அனேகர் கிறிஸ்துவின் போதனைகளால் மனம் மாறி கிறிஸ்துவின் சாட்சிகளாயினர். அந்நாட்களில் கிறிஸ்து, இயேசு, சிலுவை என்ற பெயர்கள் இலக்கியங்களில் சேர்க்கப்படவில்லை. காரணம் இவை யாவும் கிரேக்கச் சொற்களாயிருந்தன. பிறமொழிச் சொற்களைத் தமிழ் சங்கம் ஏற்காது. எனவே அச் சொற்களுக்கு ஏற்ற வேறு தமிழ்ச்

சொற்கள் பாவிக்கப்பட்டன. உதாரணம் : சிலுவை (அரமைக் மொழி) இது பொறி என்ற கொலைக் கருவியாகச் சொல்லப்பட்டுள்ளது சாட்சி-சமஸ்கிருதச் சொல் - இது சான்று என்ற தமிழ் சொல்லாக வழங்கப்படுகிறது. இயேசுவை ஏற்றுக்கொண்டு சாட்சி கொடுத்தவர்கள் சான்றோர் என அழைக்கப்பட்டனர்.

இயேசு தன்னைப் பலியாக்கி, இரத்தம் சிந்தி, பாவத்திலிருந்து மீட்பை ஏற்படுத்தியதால் அது அன்புச் சமயமாக அறிவிக்கப்பட்டது. எவ்வுயிர்க்கும் சொந்தண்மை பூண்டொழுகிய அறவாளி அந்தணனாக இயேசு காணப்பட்டதால் அவர் சிவந்தோன் என்று அழைக்கப்பட்டார். அதுவே பின்னர் சைவம் என்னும் அன்புச் சமயமாகப் பரிமளித்தது.

எனவே கிறிஸ்துவின் சமயமாக அன்புச் சமயமும். 3ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பக்தி எழுச்சியின் காரணமாக கிறிஸ்துவின் சமயத்திலிருந்து எழுந்த சைவம், வைணவம், கௌமாரம் காணாபத்யம், சாக்தம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் தோன்றின. இவ்வாறு சமயங்களும் ஆரிய சூழ்ச்சியால் கிறிஸ்தவ போதனைகளிலிருந்தும் பிரிந்து நின்று ஆரிய போதனைகளால் கெடுக்கப்பட்டு, ஆரியத்திற்கு அடங்கிய நிலையில் ஆரிய சமயமாக மாறிற்று என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

இந்தியா என்பது அந்நாட்களில் ஒரே நாடாக இருக்கவில்லை. வெள்ளையரின் ஆட்சியில் பலுசிஸ்தானம் முதல் பர்மா வரையில் இலங்கை உட்பட ஏக இந்தியா (All India) என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது. இந்தியாவுக்குச் சுதந்தரம் தருமுன்னர் மொழி இன வாரியாக பலுசிஸ்தானம், பாகிஸ்தான், பர்மா, இலங்கை, மலேசியா, நேபாள், திபெத் ஆகிய நாடுகளும் சுய இராஜ்ஜிய நாடுகளாக அறிவிக்கப்பட்டன.

இயற்கை வணக்கம், ஆரியம், ஜைனம், பௌத்தம், சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம், இஸ்லாம், குருநானக் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட சீக்கியம் போன்ற பல மதங்களைக் கொண்டதே, இந்திய நாடாகும்.

இப்படிப் பல மதங்கள் நிறைந்த நாடாக இந்தியா இருந்தபடியினால் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இரண்டை தவிர மற்ற எல்லாச் சமயங்களுக்கும் சேர்த்து ஒரே பெயராக இந்துமதம் என்று ஆங்கிலேயர் பெயரிட்டனர். நாட்டுக்குச் சுதந்திரம் தரும்போது மதசார்பற்ற நாடாக இருக்கும்படி விட்டுப்போயினர்.

எனவே, இந்துமதம் என்று தனியாக ஒருமதம் இந்தியாவில் இருந்ததில்லை.

“இந்துமதம்” என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது உள்ள பண்டை நூல்களில் காணப்படவில்லை. இக்காலத்தில் வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட வைதீகர்கள் தங்கள் மதமே இந்து மதம் என்று பேசுபவராய், அம்மதமே இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்று நிலைநாட்ட முன் வந்துள்ளார்கள். ஆங்கில மதம், ஜப்பானிய மதம், அமெரிக்க மதம் என்று மதங்கள் இருக்குமாயின் இந்து மதம் என்று ஒரு மதமும் இருக்கலாம். அவை இல்லாதல் போல இந்து மதம் என்று ஒரு மதமும் இல்லை. வேதத்தையும் ஸ்மிருதியையும் பிரமாணமாகக் கொண்ட மதமே இந்து மதம் என்றால் அது இந்தியாவிலுள்ள பல மதங்களில் ஒரு மதமாகுமேன்றி அது இந்தியர் எல்லார்க்கும் உரிய பொது மதமாகாது” என்று தமிழ் பேராசிரியர்.கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 1971 பக்கம் 89-90ல்) எழுதியிருக்கிறார்.

ஆரிய நாகரிகம், திராவிட நாகரீகம் என்பது இன்றைக்கும் காணப்படும் இருபெரும் பிரிவுகளாக இந்தியாவில் காணப்படுகிறது. திராவிடர்கள் அதிகமாக வாழ்ந்து வந்த தமிழகத்தில் கி.பி.57ம் ஆண்டில் வந்து இயேசுவின் நற்செய்தியைப் பிரப்பிய தோமா, திராவிடப் பண்பாட்டின் அடிப்படையில் நின்று அறிவித்திருத்தல் கூடும்.

கி.பி. 16ம் நூற்றாண்டிற்குப் பின்னர் நாடு பிடிக்க வந்த ஐரோப்பியர், தங்கள் அதிகாரத்தினால் பரப்பிய கிறிஸ்தவம் ஐரோப்பிய முறையிலேயே வழங்கப்பட்டபடியினால் அது இன்று அந்நிய நாட்டுச் சமயமாகக் கருதப்பட்டு வருகிறது.

இராபர்ட் டி. நோபிலி, வீரமா முனிவர் என்ற கான்ஸ்டான்டைன் ஜோஸப் பெஸ்கி போன்றோர் திராவிடப் பண்பாட்டின் அடிப்படையில் கிறிஸ்தவத்தைப் பரப்ப முயற்சித்த போதிலும் அதிகார வர்க்கங் கொண்ட ஐரோப்பியர்களால் அவர்களின் முயற்சிகள் அழிக்கப்பட்டன.

பிற்காலத்தில் H.A. கிருஷ்ண பிள்ளை, வேதநாயகம் சாஸ்திரிகள், ஆபிரகாம் பண்டிதர், தாமஸ் இரத்தினம் போன்றோர், தமிழ் பண்பாட்டுக்கு இசைவாக கிறிஸ்தவத்தை அறிவிக்க முயற்சித்தும் ஐரோப்பிய நாகரீகத்தில் முழுகி அடிமைகளாகிவிட்ட தமிழ் கிறிஸ்தவர்கள் அக்கருத்துக்களை உதாசினம் செய்து நிராகரித்தனர் என்றே சொல்லலாம்.

H.A. கிருஷ்ண பிள்ளை அவர்கள் எழுதிய அனேகக் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்கள் அவருடைய குடும்பத்தினராலேயே காப்பாற்றி வைக்கப்படவில்லை என்பது வருந்துவதற்குரிய செய்தியாகும். திரு தாமஸ் இரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட நூல்களை மிகச்சில கிறிஸ்தவர்களே அறிந்திருக்கிறார்கள். ஆபிரகாம் பண்டிதர் அவர்களால் எழுதப்பட்டவைகள் பண்டிதர் தோட்டத்திற்குள்ளேயே அடங்கிவிட்டது. தேவநாயகம் சாஸ்திரியாரின் தொகுப்புகள் வம்சவளியாக அறிவிக்கப்பட்டு வருகிறது. அதுவும் குறிப்பிட்ட சில சபைகளில் மட்டுமே!

எனவே தோமாவினால் அறிவிக்கப்பட்டு ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் இருந்த கிறிஸ்தவம் வேறு. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் ஏற்பட்ட கிறிஸ்தவம் வேறு எனக் கொள்ளலாம்.

இன்று இந்திய மக்களால் நினைக்கப்படுகின்ற கிறிஸ்தவம் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் ஏற்பட்ட கிறிஸ்தவம் ஆகும்.

எனவே, இந்திய மதங்களின் வரிசையில் முதலாவது வடக்கே ஆரியம், ஜைனம், பௌத்தம் எனவும், தெற்கே இயற்கை வழிபாடு, சமணம் எனவும் தோமாவின் வருகைக்குப் பின்னர் கிறிஸ்தவம், அக்கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கருத்துக்களில் இருந்து ஏற்பட்ட பக்தியெழுச்சியின் காரணமாக எழுந்த சைவம், வைணவம், கௌமாரம் காணாபத்யம், சாக்தம், சௌரம் என்னும் ஆறு சமயங்களும் இருந்தன என்று சொல்லலாம்.

நசரேயர் என்று அழைக்கப்பட்ட யூதப் பிரிவினர் அகதிகளாக இந்தியாவுக்குள் நுழைந்து, காலப்போக்கில் சீக்கியர் என்று அழைக்கப்பட்டனர். குருநானக் என்பவரின் காலத்தில் (16ம் நூற்றாண்டு) அது சீக்கிய மதமாயிற்று. இவர்கள் விக்கிரக வழிபாடுடையவர் அல்லர். பிராமணர்களைத் தங்கள் மதக் குருக்களாகக் கொண்டவர்க்ள அல்லர், ஆரிய வேதத்தைப் பின்பற்றுகிவர்களும் அல்லர். எனவே இவர்கள் இந்துக்கள் அல்லர்.

சித்தார்த்தரால் பரப்பப்பட்ட பௌத்த மார்க்கமும் கடவுள் கொள்கையற்ற மார்க்கமாதலின் அதுவும் இந்து மதத்தில் சேராது.

பாரசீக நாட்டிலிருந்து பரப்பப்பட்ட ஜொராஷ்ட்ரம் என்ற மார்க்கம் அக்னி வாழிபாடுடைய மார்க்கமாதலின் அதுவும் இந்து மதத்தில் சேராது.

இவைகள் தவிர இன்னும் பல சிறு சிறு சமயங்களும் அடங்கும். ஆதிவாசிகள் எந்த மதத்தையும் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களுக்கு மதமே இல்லை. எனவே, ஆதிவாசிகள் இந்துக்கள் அல்ல.

அப்படியானால் இந்துமதம் என்பது என்ன? என்ற கேள்வி எழுகிறது.

அதிகாரம் - ஐந்து

இந்து என்பவன் யார்?

இந்தக் கேள்விக்குப் பதில் தரவேண்டுமானால் ஆரியரல்லாதோரை ஆரிய சமயத்திற்குள் அப்படுத்தும் வேலையைச் செய்த ஆரிய தர்மா என்ற இயக்கத்தை ஆதரித்து 1910ம் ஆண்டு வெளியிட்ட Census commission அறிக்கையைத் தெரிந்து கொள்வது நல்லது.

1. பிராமணருடைய ஆளும் தன்மையை ஏற்றுக்கொள்ளுகிறவன்.
2. பிராமணரிடமிருந்தோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட குருமார்களிடமிருந்தோ மந்திரங்களைப் பெறுகிறவன்.
3. பிராமண வேதங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்கிறவன்.
4. பிராமண தெய்வங்களை வணங்குகிறவன்
5. பிரமாணர்களைக் குல குருவாக ஏற்றுக் கொள்பவன்.
6. இந்துக் கோவில்களுக்குள் போக அனுமதி பெற்றவன்
7. தன் தொடுதலினால் தீட்டு ஏற்படுத்தாதவன்.
8. இறந்தவர்களை தீயில் எரிக்கிறவன்.
9. மாட்டிறைச்சி தின்னாதவன்.

(Quoted from Confussion called convertion - Sunder Raj Ch.24)

மேலே குறிப்பிடப்பட்ட கட்டளைகளின்படி இல்லாதவன் இந்து அல்லவெனில், இந்தியாவில் இந்துக்களாகக் காணப்படவர்கள் எத்தனை சதவிகிதம் இருப்பார்கள் என்று யோசிக்கத் தோன்றுகிறது.

வேத கலங்களில் வேத ஆரியர் தெய்வங்களுக்குப் பசு, மாடு, குதிரை போன்ற மிருகங்களைப் பலி செலுத்திப் பலியில் மிகுந்ததைப் புசித்துச் சோம பானம் என்னும் மதுவைக் குடித்ததாக ரிக், யஜீர் ஆகிய வேதங்களில் பல இடங்களில் காணப்படுவதால் வேத கால ஆரியர்களும் இந்துக்கள் அல்ல என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

அதிகாரம் - ஆறு

மதங்களும் மதங்களின் தெய்வங்களும்

உலகளவிலும், இந்திய அளவிலும் உள்ள பல மதங்கள் தங்கள் தங்களுக்கென்று பல தெய்வங்களை வைத்துக் கொண்டாலும் இவைகளின் மூலப்பொருள் ஒன்றே என்பதை விளக்குவது தான் இப்புத்தகத்தின் நோக்கம்.

இந்து மதத்தைத் தூஷிப்பதற்காகவோ இந்துக்களின் மனதைப் புண்படுத்துவதற்காகவோ இந்நூல் எழுதப்படவில்லை. உலகம் அனைத்திற்கும் ஒரே தெய்வம் மட்டுமே இருக்க இயலும், அந்த ஒரே தெய்வத்தை அறிய ஞானிகள் பல மொழிகளில் வேதங்களை எழுதி வைத்துள்ளனர் மொழிகள் பலவாயினும் மெய்ப்பொருள் ஒன்றே, அந்த ஒரே தெய்வத்தை அறிந்து கொள்ளும் வழியைப் பல வேதங்களின் வாயிலாக வெளியிடும் வேத ஆராய்ச்சிப் புத்தகமாக இது வெளியிடப்படுகிறது. வேதங்களின் ஒருமனப்பட்ட கிறித்துக்களை ஆராய்ந்து தெளிவு பெற்றால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நல்லெண்ணம் ஏற்படும். மத சண்டைகள் ஒழியும், சாதிப் பூசல்கள் அகலும், நாம் யாவரும் இந்தியரே என்ற எண்ணம் ஏற்படும், நாம் அனைவரும் உலக மக்களே என்று அது விரியும், சில காரியங்களைத் தெளிவுபடுத்த முயலும்போது சில பல உண்மைகள், எண்ணங்களையும் உணர்வுகளையும் பாதிக்கவே செய்யும்.

நோய்வாய்ப்பட்ட வயிற்றை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தும்போது அது சரீரத்திற்கு வேதனையைத் தந்தாலும் உயிரைக் காப்பாற்றவே செய்கிறது. அதுபோல மரபுவழியான எண்ணங்களைப் பாதிக்கக் கூடிய உண்மைகளை அறியும்போது அது மன உணர்வுகளையும், மதவுணர்வுகளையும் பாதிக்கவே செய்யும்.

எனினும்
எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கிணங்க யார் சொன்னாலும் எந்தத் தன்மையில் சொன்னாலும் அதிலுள்ள மெய்ப்பொருளைக் காணவே முயற்சிக்க வேண்டும். யூதர்,யேகோவா வை வணக்குகிறார்கள். கிறிஸ்தவர் யேகோவாவைப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று தன்மைகளில் ஆராதிக்கிறார்கள்.

இஸ்லாமியர் இறைவனை அல்லா என்று வழிபடுகிறார்கள். (அரபு மொழியில் அல்லா என்றால் கடவுள் என்று பொருள், இஸ்லாம் என்ற மதம் தோன்றுவதற்கு முன்பே அராபியர்கள் அல்லா என்ற கடவுளை அறிந்திருந்தனர். இஸ்லாமுக்கு முன்பு அராபியர்கள் பல தெய்வ வழிபாடு உடையவர்களாயிருந்தனர்.

பௌத்த மார்க்கத்திற்கும் ஜைன மார்க்கத்திற்கும், சமண மார்க்கத்திற்கும் கடவுள் நம்பிக்கை கிடையாது. சீக்கியருக்கு ஆதிகிரந்த் சாஹிப் என்ற புத்தகம் கடவுள் போல உள்ளது.

பார்சிகள் நெருப்பை இறைவனாக நினைக்கிறார்கள். ஆரிய வேதங்களாகிய ரிக், யஜுர், சாம வேதங்களில் பிரஜாபதி, விஷ்வ கர்மா, புருஷா என்பன போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இது தவிர வருணன், வாயு, அக்னி, இந்திரன் (தலைவன் என்பது இதன் பொருள், புராணக் கதைகளில் வருகின்ற இந்திரன் அல்ல) போன்ற தேவர்களும் காணப்படுகின்றனர். படைப்பின் கடவுளாக பிரம்மா காணப்படுகிறார். புராண கால கடவுள்களுக்கும், வேதகாலக் கடவுள்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. புராணங்களை எழுதியவர்கள் வேதங்களிலுள்ள பெயர்களையும் பாவித்து அதற்கும் இதற்கும் வேறுபாடு காணக்கூடாதவகையில் மிகவும் தந்திரமாகப் பிணைத்து இதுதான் அது என்று நம்பவைத்துவிட்டனர். மற்றும் வேதங்களை சூத்திரர் (பிராமணர் அல்லாதோர்) படிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றினர். படிப்பும், வேத அறிவும் அற்ற நிலையில் ஆரியர்களின் போதனைகளை நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. வேதங்களின்

மெய்ப்பொருள் மறைக்கப்பட்டுப் புராணங்களின் பொய்ப்பொருள் நம்பப்பட்டபடியினால் சத்தியம் இன்னதென்று அறியக் கூடாத நிலை ஏற்பட்டது. மதங்களையும் அம்மதங்களுக்காகப் படைக்கப்பட்ட கடவுள்களையும் மனிதன் நம்புகிறானே யன்றி மெய்ப்பொருள் இன்னதென்று ஆராய்ந்து பார்க்க, அறிந்து கொள்ள அவன் முயற்சிக்கவே இல்லை. மதம் என்ற வெறி அவனுக்குள் புகுத்தப்பட்டிருப்பதே அதற்குக் காரணம்.

தமிழகத்தில் காடன், மாடன், சுடலை போன்ற சிறு தெய்வ வழிபாடுகள் இருந்தன. கிறிஸ்துவுக்கு முன்பு எழுதப்பட்ட சங்க இலக்கிய நூல்களில் இக்காலத்துக் தெய்வங்களின் பெயர்கள் எதுவும் காணப்படவில்லை.

ஆனால் பக்தி எழுச்சி ஏற்பட்ட பின்பு (கி.பி. 700) பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற முப்பெரும் தெய்வங்கள் தோன்றுகின்றனர். இதையெடுத்து தெய்வங்களுக்கு மனைவிமார்களும் பிள்ளைகளும் ஏற்படுத்தப்பட்ட காலம் இதிகாச புராண காலங்களாகும்.

"வேத காலத்திற்குப் பிற்பட்ட இந்து சமய வளர்ச்சியில் வேதகாலக் கடவுள்கள் முக்கியமிழந்து விடுகின்றனர். இந்திரன், வருணன், மித்திரன், பிரஜாபதி, மத்தரிசுவரன் முதலிய கடவுள்கள் முதலிடம் இழந்து பின்வரிசையில் காணப்படுகின்றனர். சிவன், பிரம்மா, விஷ்ணு சக்தி முதலில் புதிய தெய்வங்கள் நமது மதிப்பையும் கவனத்தையும் கவருகின்றனர்" என்பார் பேராசிரியர் கைலாசபதியவர்கள்" (பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்.... மக்கள் வெளியீடு 197, பக்கம் 18)

மேல்கண்ட குறிப்புகள் கி.பி. முதல் நூற்றாண்டில் தோமாவின் வரவுக்குப் பின்னரும். கி.பி. 15ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னரும் உள்ள இடைக்காலத்தில், தமிழ்நாடு உள்ளிட்ட திராவிட நாட்டில் பெருகிய கருத்துக்களைக் கூறுகின்றன. வேதங்களில் பெயரே காணப்படாத சிவனும், விஷ்ணுவும் திடீரென்று எப்படி முப்பெரும் கடவுள்களில் இருவராகக் காட்சியளிக்கிறார்கள் என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

எனவே தமிழ் நாட்டில் பெருவாரியான சமண மார்க்கத்தில்

(தோமாவின் வரவுக்குப் பின்பு) தெய்வ நம்பிக்கை ஏற்பட்டதால் எழுப்புதல் ஏற்பட்டு அதின் பயனாக பக்தியெழுச்சி ஏற்பட, சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம் என்ற ஆறு சமயங்கள் தோன்றின எனலாம்.

வேதங்களில் காணப்படுகின்ற பெயர்களையே சில புராணங்களிலும் பாவித்ததால் இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்களைக் காண்பது அரிதாயிற்று.

வேதகாலத்தையடுத்து உபநிடத காலமும் அதையடுத்து இதிகாச காலமும் அதையடுத்துப் புராண காலமும் தோன்றியது.

அத்துவைதம் விசிட்டாத் வைதம், துவைதம், சைவ சித்தாந்தம் ஆகிய நான்கு தத்துவங்களையும் உருவாக்கிய சங்கரர், இராமானுசர், மாத்வர், மெய் கண்டார் ஆகிய நால்வரில் சங்கரரும் மெய் கண்டாரும் சைவ சமயத்தையும் இராமானுசரும் மாத்வரும் வைணவ சமயத்தையும் சார்ந்தவர்கள்.

சைவமும் வைணவமும் ஆரிய மதத்திற்கு மாறுபட்ட திராவிட மூலக் கருத்துக்களைக் கொண்டவைகள். (விவிலியம்-திருக்குறள்-சைவசித்தாந்தம் - ஒப்பாய்வு - டாக்கடர்.மு.தெய்வநாயகம் - பக்கம் 11)

கிறிஸ்துவுக்குப் பின்னர் உபநிடத காலங்களில் கடவுள் ஒருவரில் பலர் - பலரில் ஒருவர் (Henotheism) ஆண், பெண்ணாகிய அனேகக் கடவுகள் (polytheism) எல்லாமே கடவுள் (pantherism) உண்மையே கடவுள் - மற்றதெல்லாம் மாயை (Monism) இயற்கை உண்மையாதலால் இயற்கையும் கடவுள் (Qualified Monism) என்ற பல தத்துவக் கொள்கைகள் ஏற்பட்டன.

சங்கரரின் ஒருமைக் கொள்கை உபநிடதங்களிலிருந்து தோன்றியதாயிருக்கலாம். ஆனால் அவருடைய கடவுட் கொள்கை வேதத்தைச் சார்ந்தது அல்ல. அதேபோல இராமானுசர், மத்வர் ஆகியோரின் கடவுட் கொள்கைகள் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டாலும் இதற்கு அவர்கள் கூறும் விளக்கம் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கோயில் வழிபாட்டுச் சமயங்களையும், ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்.

என்றாலும் இவையாவும் வெறுமையிலிருந்து உருவாகாமல் இறைவனைப் பற்றிய அடிப்படைத் தத்துவத்தை விளக்குவதற்காக எழுதப்பட்டவை என்பதையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

"வேதங்களின் மகத்துவங்களை விளக்குவதற்காக எழுதப்பட்ட வீர காவியங்களாகிய பாரதமும், இராமாயணமும், கீதையும் வெறும் கதைகளே, பாமரரும் எளிதில் விளங்கிக் கொள்வதற்காக இவைகள் கதா ரூபங்களாக எழுதப்பட்டன" என்பார் தத்துவமேதை T.M.P. மகாதேவன் அவர்கள். (இந்து சமயத் தத்துவம் - பக்கம் 31)

மதங்கள் இறைவனையடைவதற்கான படிக்கட்டுகளேயன்றி மதத்தையே தெய்வமாக நினைத்தல் கூடாது.

"பொய்மதங்கள் போதனை செய் பொய்க்குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போகவிடுக்கும்
மெய்மதந்தான் இன்னதென்று மேவவிளம்பும்
மெய்க் குருவின் பாதம் போற்றி ஆடுபாம்பே!

வேதப் பொருள் இன்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம்மேவ விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரண சற்குரு தாள் கண்டு ஆடு பாம்பே!

என்ற பாம்பாட்டித் சித்தர் பாடலும்.

சாவிபோல் மற்ற சமயங்கள் புக்கு... நின்
ஆவி அறாதே உந்தீபற
அவ்வுறை கேளாதே உந்தீபற

என்ற திருவுந்தியார் பாடலும்

"எவ்வகை சார் மதங்களிலே பொய்வகைச் சாந்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென்று அறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்"

என்ற வள்ளலார் சுவாமிகள் பாடலும் சிந்திக்கத் தக்கவை.

மதப் பூசல்கள் உலகில் மலிந்து போனதால் மதங்கள் அனைத்துமே தொலையவேண்டுமென்று நினைப்பார் போல அடிகள் பாடல்களைப் பாடியுள்ளார்.

"கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டிய பல் சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம்உறும் அக்கலைகன் காட்டிய பல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளை விளையாட்டென நன்கறிவித்திங்கெனையே
பிள்ளை எனக் கொண்டு பிள்ளைப் பெயரிட்ட பதியே!
மருளான பற்பல மார்க்கங்களெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக"

பொருள் : மதங்கள் ஒன்றொடு ஒன்று சண்டையிட்டாலும், அவற்றினிடையே பொதுவான குறிக்கோள் ஒன்று உண்டாம். அது மக்களிடமிருந்து கொள்ளையடிப்பது. இதனை உணர்த்தவே கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டிய பல் சமயக் கூட்டம் என்று சாடுகின்றார். வள்ளலார் சாடுவது மதத்தையல்ல. மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப்படும் கொடுமையையே!
(வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு... மா.பொ.சி.பக்கம்.207)

மதம் அபின் போன்றது...கார்ல்மார்க்ஸ்.

மனிதன் மதங்களைப் படைத்தது போலவே கடவுள்களையும் படைத்து விட்டான். எனவே மதம் என்னும் உணர்வை விட்டு வெளியேறி வேதங்களின் வழியாய் மெய்ப் பொருளைத் தேடியடைய இறைவன் நமக்குத் துணைசெய்வாராக.

அதிகாரம் - ஏழு

மதக்கோட்பாடுகள்

உலக சமயங்களிலும் இந்திய சமயங்களிலும் உள்ள கோட்பாடுகளில் மூன்றுவிதமான அடிப்படைக் கொள்கைகள் உண்டு. அவை முறையே

1. பலிக் கோட்பாடு
2. பலி நிறைவேற்றக் கேட்பாடு
3. பலி எதிர்ப்புக் கேட்பாடு

என்பவைகளே.

இதில் யூத சமயமும் ஆரிய சமயமும் பலிக் கோட்பாட்டைக் கொண்டவை.

கிறிஸ்தவம், சைவம், வைணவம் இதின் பிரிவுகளைச் சார்ந்த மற்ற சிறு சமயங்கள் யாவும் பலி நிறைவேற்றக் கோட்பாடுகளைச் சார்ந்தவை.

ஜைனம் பௌத்தம் ஆகிய சமயங்கள் பலி எதிர்ப்புக் கோட்பாடுடையவைகள்.

இந்த அடிப்டைத் தத்துவங்களிலிருந்து இறைவன், பலிபீடம், பலி, பலிபீடத்துப் பணிவிடை, ஆசாரியர் அல்லது பூசாரிகள், ஆலய வழிபாடு, ஆலயப்பணிமுட்டுக்கள், கலாச்சாரங்கள் போன்ற காரியங்கள் எழுந்தன.

இறைவனைத் தேடக் காரணம் என்ன?

மதக் கோட்பாடுகளில் முதலாவது வருவது இறைக் கோட்பாடாகும். மனிதன் இறைவனைத் தேட வேண்டிய அவசியம் என்ன?

சிறந்த கல்வி, ஞானம் வேண்டுமென்பதற்காக இறைவனைத் தேடினான் என்றால் இறை நம்பிக்கையற்றவர்களும் கல்வி ஞானமுடையவர்களாக இருக்கிறார்கள்! எப்படி?

பொருளாதார வசதி வேண்டுமென்று இறைவனைத் தேடினால் இறை நம்பிக்கையற்றவர்களும் நல்ல வசதியுடன் இருக்கிறார்களே! எப்படி?

உயர் பதவி வேண்டுமென்பதற்காக இறைவனைத் தேடினால் நாத்திகர்களும் சிறந்த பதவியில் இருக்கிறார்களே எப்படி?

நற்குணங்கள் அமைய வேண்டும் என்பதற்காக இறைவனைத் தேடுவானாயின் இறை நம்பிக்கையற்றவர்களும் நற்குணசாலிகளாயிருக்கிறார்களே! எப்படி?

இதிலிருந்து, இறைவனைத் தேடுதல் என்பது உலகபிரகாரமான வசதிகளுக்காக அல்ல என்றும் தன் ஆன்மாவைப் பிடித்திருக்கிற பாவக் கட்டிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே தன்னால் முடியாத ஒன்றை இறைவன் செய்வான் என்று நம்பி மனுக்குலம் இறைவனைத் தேட ஆரம்பித்தது.

அதிகாரம் - எட்டு

கடவுளின் பெயர் என்ன?

உலகிலுள்ள மதங்களில் காணப்படும் கடவுள்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர்கள் யாவும் காரணப் பெயர்களே!

வினோபாஜி அவர்கள் பல மதங்களிலுள்ள கடவுள்களின் பெயர்களைத் திரட்டி ஒரு பாடல் எழுதினார். அது:

ஓம் தத் ஸத் ஸ்ரீ நாராயண நீ
புருஷோத்தம குரு நீ
ஸித்த புத்தி நீ, ஸ்கந்த விநாயக
ஸவிதா பாலக நீ
பிரம்ம மஜ்த நீ, யஹ்வ சக்தி நீ
ஈசு-பிதா பிரபு நீ
ருத்ர-விஷ்ணு நீ, ராம கிருஷ்ண நீ
ரஹீம் தாவோ நீ
அத்விதீய நீ, அகால நிர்பய
ஆத்ம லிங்க சிவ நீ - என்பதே!

நாம மலையில் கடவுளுக்கு 36 பெயர்கள் உண்டு. சந்தியா வந்தனத்தில் 24 பெயர்கள் சொல்லப்படுகின்றன.

சகஸ்ர நாமத்தில் ஆயிரம் நாமங்கள் உண்டு.

இஸ்லாமிய மார்க்கத்தில் கடவுளுக்கு 99 பெயர்கள் உண்டு. அவர்களின் ஜெப மாலையில் 99 மணிகள் உண்டு. பார்சிகள் 24 பெயர்களின் கடவுளை வணங்குவர். பைபிளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாமங்கள் உண்டு. ஒவ்வொரு நாமத்திலும் ஆண்டவனுடைய குணங்களைக் காணஇயலும்.

ஓம் என்றால் ஒத்திருப்பவன், அனுகூலமாயிருப்பவன்
தத் என்றால் தூரத்தில் இருப்பவன்
ஸத் என்றால் தூய்மையானவன்
ஸ்ரீ என்றால் அழகு
நாராயணன் என்றால் நடத்திச் செல்பவன்
புருஷோத்தமன் என்றால் மாந்தருள் உத்தமன்

குரு என்றால் பாபங்களை அழிப்பவன். இருளை நீக்குபவன், அஞ்ஞானத்தை அழிப்பவன்.
சித்த என்றால் முற்றுப் பெற்றவன்
புத்த என்றால் தெளிவு பெற்றவன்
ஸ்கந்த என்றால் பேராற்றல் உள்ளவன்
விநாயாக என்றால் ஞானத்தை அருளும் ஆற்றலுள்ளவன்
ஸவிதா என்றால் சூரிய ஒளி பிரகாசமுள்ளவன்
பாவக என்றால் அக்னிமயமானவன்
பிரம்ம என்றால் எங்கும் நிறைந்திருப்பவன்
மஜ்த என்றால் மகாதேவன் (இது ஒரு பார்சி பெயர்)
யஹ்வ என்றால் யேகோவா அல்லது இளைஞன் (ரிக் வேதத்திலும் யஹ்வ சக்தி என்று உள்ளது)
சக்தி என்றால் வல்லமையுள்ளவன்
பிதா என்றால் கனத்திற்குரியவன்
ருத்ரன் என்றால் அழிப்பவன்
ராம் என்றால் உண்மையுள்ளவன்
கிருஷ்ணன் என்றால் அபிஷேகிக்கப்பட்டவன்
ரஹீம் என்றால் இரக்கம் நிறைந்தவன்
தாவோ என்றால் சர்வ வியாபகன்
வாசுதேவ என்றால் ரூபா கரணன்
விஸ்வரூப என்றால் பெரிய உருக் கொண்டவன்
சித் என்றால் அறிவுடையவன்
ஆனந்த் என்றால் மகிழ்ச்சியளிப்பவன்
ஹரி என்றால் கடவுள்
அத்வி தீய என்றால் ஈடு இணையற்றவன்
அகால என்றால் காலங்களுக்குக் கட்டுப்படாதவன்
நிர்பய என்றால் அஞ்சா நெஞ்சமுடையவன்
ஆத்ம லிங்க என்றால் உள்ளுணர்வு தருகின்றவன்
சிவ என்றால் அன்புள்ளவன் என்று பொருள்படும்.

இப்படிப் பல காரணப் பெயருள்ள கடவுளைக் "கேட்டாரும் அறியாதான்" என்றார் மாணிக்கவாசகர், இன்ன உருவத்தினர்,

இன்ன நிறத்தினர், இன்ன மொழியுடையோன், இன்ன ருசியுடையோன், இன்ன உணர்வுடையோன் என்று யாராலும் கேட்டு அறியப்படாதவன் இறைவன். மனிதனுடைய எல்லா உணர்வுகளையும் அவன் கடந்து நிற்பதாலும் அந்த இறைவன் நம் உள்ளில் இருப்பதாலும் அவனைக் கடவுள் என்று அழைக்கிறோம். மொழிகளில் வித்தியாசமான பெயர்கள் காணப்பட்டாலும் கடவுள் ஒருவரே! ஆங்கிலத்தில் God என்கிறார்கள். எல்லாவற்றையும் கடந்து நிற்பதால் கடவுள் என்று தமிழன் அழைத்தான். கன்னடத்தில் தேவரு என்றும் தெலுங்கில் தேவுடு என்றும் மலையாளத்தில் கர்த்தன் என்றும் வடமொழியில் தேவ் என்றும் அழைக்கின்றனர்.

பரமேஸ்வரன் என்றால் இந்துக் கடவுள் அல்ல. பரலோகத்தில் இருக்கிற கடவுள் என்று பொருள். அதேபோல, பிரம்மா என்ற சமஸ்கிருதப் பெயர் இந்துக் கடவுளைக் குறிப்பதில்லை. சகலத்தையும் உண்டாக்கினவர் என்று பொருள். அல்லாஹ் ஹீ அக்பர் என்றால் கடவுள் பெரியவர் என்று பொருள்.

பொருளை விளங்கிக் கொள்ளாமல் மொழியை வைத்துக்கொண்டு போராடுவது சரியல்ல.

இயேசு என்ற பெயர் இறைவனால் அருளப்பட்டது. அதை மொழி பெயர்க்கவோ, மாற்றிச்சொல்லவோ கூடாது.

நாம் இறைஞ்சி நிற்பதால் அவர் இறைவனாகிறார். பெரிய கடவுளாதலால் மகாதேவன் என்கிறோம். சகலமும் உண்டாகக் காரணமாதலால் கர்த்தர் என்கிறோம். அன்புள்ள அவரைச் சிவ என்கிறோம். எல்லா மனிதர்களுக்கும் தலைவரானதால் பிரஜாபதி என்கிறோம். ஒளியாய் இருப்பதால் தேவன் என்கிறோம். பரத்திலிருக்கிற பரம்பொருளைப் பராபரன் என்கிறோம். சர்வத்திற்கும் அதிகாரியானவரை சர்வேஸ்வரன் என்கிறோம்.

எல் எலா எலோ ஹீம் என்பது எபிரேய மொழி. கடவுளைப் பன்மையில் காட்டும் சொல். எல் எலா என்பது எல்லல்லா என்றாகி அதுவே அல்லாஹ் என்ற அரபு மொழிக் கடவுளானார். ரஹீம் என்றால் இரக்கம் ரஹ்மான் என்றால் கருணை.

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மா னிர் ரஹீம் என்றால் அல்லாவின் கருணை நிறைந்த, இரக்கம் நிறைந்த பெயரினால் தொடங்குகிறேன் என்று பொருள்.

பைபிளில் காணப்படும் ஆபிரகாம் கடவுளை நம்பினார். ஆனால் அக்கடவுள் யார் என்று அவருக்கு தெரியாது. அவருடைய மகன் ஈசாக்கு அக்கடவுளை ஆபிரகாமின் தேவன் என்றே அழைத்தார். இவருடைய மகனான யாக்கோபு அக்கடவுளை ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் என்றழைத்தார். யாக்கோபின் சந்ததியார் அக்கடவுளை ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர் என்று அழைத்தனர்.

சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினாலே நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன். ஆனாலும் யேகோவா என்னும் நாமத்தினால் அவர்களுக்குத் தரிசனமாகவில்லை (யாத்திரையாகமம் 6:3) என்று கர்த்தர் மோசேயுக்குக் சொன்னார்.

யேகோவா (yhwh) என்றால் (I am) இருக்கிறேன் என்பது பொருள். என்னவாயிருக்கிறார் என்பது அப்பொழுது வெளிப்படுத்தப்படவில்லை. இதை வெளிப்படுத்துவதற்கு இறைவன் மனுவுரு எடுத்து வர வேண்டியதாயிருந்து. அப்படி மனு உருவெடுத்து வந்த கடவுளுக்கு இயேசு என்று பெயர் வைக்கும்படி கடவுளே தமது தூதன் மூலமாகக் கட்டளையிட்டார்.

“அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்றான். (மத்தேயு 1:21)

கற்பனைத் தெய்வங்களுக்கும் தத்துவ தெய்வங்களுக்கும் மனிதன் பெயரிட்டு மகிழ்ந்தான். ஆனால் மெய் தெய்வம் உலகில் மனு அவதார மெடுத்தபொழுது, அவரே அப்பெயரை சொன்னார். அதை மாற்றி சொல்லக் கூடாது.

இதினாலேயே ஆதிகாலத்து இயேசுவின் சீடர்களாகிய அப்போஸ்தலர்கள் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு

இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழேங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப்போஸ்தலர் 4:12) என்று ஆணித்தரமாகச் சொன்னார்கள்.

இயேசு என்ற நாமத்தைத் தவிர வேறு நாமத்தை எத்தனை ஆயிரம் தடவை எழுதினாலும் உச்சரித்தாலும் இரட்சிப்பு இல்லை.

கடவுளுக்குப் பைபிளில் அனேகக் காரணப்பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. யேகோவா யீரே, யோகோவா நிசி, யேகோவா ரப்பா, யேகோவா செதுக்குனு ஆகிய பெயர்களும், அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், பராபரன், சர்வேஸ்வரன், மகாதேவன், வார்த்தை என்றும் பல பெயர்களினாலும் அறியப்படுகிறார். தேவன் ஒருவரே! அவர் பல நாமங்களினால் அழைக்கப்பட்டாலும் பல ரூபங்கள் கிடையாது.

பிற்காலப் பக்தர்கள் கடவுளின் ஒவ்வொரு தன்மையைக் குறிக்கும் பெயரை ஒவ்வொரு கடவுளாக்கி அக்கடவுள்களுக்குக் குடும்பங்களையும் கற்பனை செய்து ஒரு தேவனைப் பல கூறுகளாக்கிவிட்டான்.

கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது
காம குண லீலை முதலான தேது
கடவுளுக்குப் பகடி சீட்டுத் தாயமேது
காடுகளில் வேட்டைக்குத் திரிவதேது
கடவுளுக்குக் காமிகளின் தொழிலில்லை
காருண்யத் தொழிலொன்றே கடவுள் பாரம்

என்ற ஞானவெட்டியான் சித்தர் பாடல் எண்ணிப்பார்க்கத்தக்கது.

விண்டவர் கண்டதில்ல கண்டவர் விண்டதில்லை என்ற முதுமொழிப்படி, கடவுளுக்கு பெயர் என்ன? அவர் எப்படி இருப்பார் என்று எவரும் கண்டதும் இல்லை. அப்படிக் கண்டேன் என்று சொன்னவர்கள் அதை விவரித்துச் சொன்னதுமில்லை.

கடவுளாகவே தம்மை இப்பூவுலகிற்கு அருள் அவதாரமாக வெளிப்படுத்தித் தான் யார் என்று காட்டாவிட்டால், அவராகவே

தமது பெயர் என்ன வென்று அறிவிக்காவிட்டால், முழுவதும் பாபத்தில் பிறந்த மனிதன் அவருடைய நாமத்தை அறியவும் அவரைத் காணவும் முடியாது.

யேகோவா (இருக்கிறேன்) என்று சொன்ன அந்த தேவன் தாமே பூமியில் மனுவுருவான போது ஜீவ அப்பமாயிருக்கிறேன். உயிர்த்தெழுதலாயிருக்கிறேன். வழி, சத்தியம், ஜீவனாயிருக்கிறேன் என்று தம்மை வெளிப்படுத்தி எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் என் நாமத்தினாலே கூடுகிறார்களோ அவர்கள் மத்தியில் இருக்கிறேன் என்றார். அவருடைய நாமம் இயேசு என்பதே!

அதிகாரம் - ஒன்பது

இறைவனின் அருள்

பாபத்தில் விழுந்து தெய்வத்தொடர்பு அற்றுப் போன மனுக்குலத்திற்குத் தெய்வமே தம்மை வெளிப்படுத்தி அருள் பாலித்தாலொழிய பாப மனிதன் தன் தபோ பெலத்தினாலும் ஞானத்தினாலும், நற் செயல்களினாலும் நோன்புகளினாலும் இறைவனையடைய இயலாது. இறைவன் ஒரு மனிதனைப் படைத்து அவனுக்கென்று ஒருத்தியைப் படைத்த நோக்கமே தெய்வ பக்தியுள்ள சந்ததியைப் பெறவேண்டும் என்பதுவே. ஆனால் ஆதிப் பெற்றோரின் பாவச்செயல் சகல மலத்தொடர்பாகி பாப சந்ததி உண்டாகிவிட்டது.

இப்பாப சந்ததியிலிருந்து இறைவன் மீண்டும் ஒரு தேவ சந்ததியைப் பெற சித்தங் கொண்டார். ஏனெனில் இறைவன் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்கிறவர். அவர் உலகத்தை ஆக்கி, மனிதனையும் ஆக்கினார். அவனைக் காக்க உடன்படிக்கை செய்தார். அவனோ பாபத்தில் விழுந்து விட்டான். இப்போது இறைவன் தன்னையழித்தாவது மன்னுயிரைக் காக்கவேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார். அழித்தல் என்பது நம்மையோ இவ்வுலகத்தையோ அல்லாமல் தன்னையே அழித்து, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய அறவாழி அந்தணனாக, புருஷனாக, தன்னைத் தந்து நம்மைத் தடுத்தாட்கொண்டோனாகக் காணப்படுகிறார்.

இறைவனின் அருள் திடீரென்று ஒரே நாளில் மனுக்குலத்திற்கு அருளப்படவில்லை. பைபிளில், ஆதிப் பெற்றோர் பாபம் செய்து, பூமியானது பாபத்தால் நிறைந்து காணப்பட்டபோது, நோவா என்பவரின் குடும்பத்தை மட்டும் தெரிந்து கொண்டு, இப்பூமியைத் தண்ணீரினால் சுத்திகரித்து, (ஜலப்பிரளயம்), அந்த நோவாவின் சந்ததியிலிருந்து ஆபிராம் என்பவரைத் தெரிந்து கொண்டார்.

நோவா, பலிபீடம் கட்டப் பலி செலுத்தினார். இது அவருக்குள் ஆண்டவர் ஏற்படுத்திய உள் உணர்வாக இருக்கலாம். நோவாவுக்கு ஆண்டவர் யார் என்று தெரியாது. ஆனால் ஒரு தேவன் உண்டு என்று நம்பினார்.

நோவாவின் சந்ததியில் வந்த ஆபிராமும் பலிபீடம் கட்டிப் பலி செலுத்தினார். இவருக்கும் அந்த ஆண்டவர் யார் என்று தெரியாது. ஆனால் ஆண்டவர் தன்னுடன் பேசியதை நம்பிக் கீழ்ப்படிந்தார். அவர் சொன்ன வாக்குத்தத்தங்களை நம்பினார். இந்தக் கடவுளைக் குறித்துத் தன் மகனாகிய ஈசாக்குடன் ஆபிரகாம் பேசியிருப்பார். மகன், யாரப்பா அந்தக் கடவுள் என்று கேட்டிருந்தால், தெரியாது என்றே சொல்லியிருப்பார். எனவே மகன் அக்கடவுளிடம் வேண்டுதல் செய்த பொழுது என் தனப்பனாகிய ஆபிரகாமின் தெய்வமே என்று வேண்டுதல் செய்தார். ஈசாக்கு தன் மகனாகிய யாக்கோபிடம் இது குறித்துப் பேசியிருப்பார். யாக்கோபு, அது யாரப்பா அந்தக் "கடவுள்?" என்று கேட்டிருந்தால், எனக்குத் தெரியாது. என் அப்பா சொன்னக் கடவுள் என்று தந்தை மகனிடம் சொல்லியிருப்பார்.

எனவே யாக்கோபு வேண்டுதல் செய்தபொழுது, ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தாவே என்றிருப்பார். இந்த யாக்கோபின் பிள்ளைகள் யாவரும் அவர்களுடைய சந்ததியாரும் எங்கள் முற்பிதாக்களாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தாவே என்று வேண்டுதல் செய்ய ஆரம்பித்தனர். பாபச் சிறையில் அகப்பட்ட மனிதன் தன் சொந்த முயற்சியினாலும், நற்கிரியைகளினாலும் தபங்களாலும், தர்மங்களாலும், சாஸ்திரங்களைப் படிப்பதினாலும், ஓதுவதினாலும், இறைவனை அறிய இயலாது என்பதையும், இறைவனே மனிதனைத் தெரிந்து கொண்டு அவனுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதையும் அறியப் பெறுதல் நலம்.

மனிதனுக்குக் கடவுளே தம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகிற வரலாறும், அவர் தன்னை எப்படி வணங்க வேண்டும் என்பதை விளக்கிச் சொன்ன வரலாறும், கடவுளே மனிதனுக்கு வேதங்களையும், ஆகமங்களையும், கட்டளைகளையும் சொன்ன வரலாறும் வேறு எந்த மத வேதத்திலும் காட்டப்படவில்லை. மற்ற மத வேத நூல்கள் யாவும் பைபிள் அடிப்படையில் எழுதப்பட்டவை என்பதை இனிவரும் அதிகாரங்களில் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அதிகாரம் - பத்து

மத வேற்றுமைகளில் சில ஒற்றுமைகள்

தேவனும் தேவ ஆலயமும்

கடவுளுக்குக் கோயில் கட்டும் வழக்கம் பைபிளில் ஆதியில் இருந்ததாகக் காண இயலாது. யாக்கோபு என்பவர் முதன் முதலாகக் கோயில் கட்டுவதை ஆதியாகமம் 28ம் அதிகாரத்தில் வாசித்து அறியலாம்.

தன் தாயின் சொல் கேட்டுத் தமயனுடைய ஆசீர்வாதங்களை ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட யாக்கோபு, பின்பு பயந்து வேறு ஊருக்குப் புறப்படுகிறான். பிரயாணமாய் போகும் பொழுது சாயங்கால நேரத்தில் அவனுக்கு நித்திரை வருகிறது. அவன் ஒரு கல்லை எடுத்துத் தன் தலைக்குக் கீழே வைத்துப் படுத்துக்கொள்கிறான்.

அந்த இரவிலே அவன் ஒரு சொப்பனம் காண்கிறான். வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் கண்டு விழித்து எழுந்தபோது, அந்த இடத்தில் தேவன் இருப்பதாக நினைக்கிறான். உடனே தன் தலைக்குக் கீழ், வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணை வார்த்து. தான் தூணாக நிறுத்திய அந்தக் கல் தேவனுடைய வீடாகும் என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்குப் பெத்எல் என்று பெயர் வைத்தான். (ஆதியாகமம். 28:18,23)

பெத் என்றால் வீடு, எல் என்றால் தேவன், இதையே தமிழில் சொல்ல வேண்டுமானால் கோ என்றால் கடவுள் இல் என்றால் வீடு எனவே கோயில் கட்டினான் எனலாம்.

இந்திய நாட்டில் கிறிஸ்துவுக்கு முன்பு கோயில் கட்டியதாக சரித்திரம் கிடையாது. அப்பொழுதிருந்தவைகள் பௌத்த மடாலயங்கள் ஆகும். ஆனால் கல்லை குறிக்கல்லாக நடுவது திராவிடரின் வழக்கமாக இருந்தது.

சிந்து சமவெளியென்பது இப்போதுள்ள ஆப்கானிஸ்தான். பாலூச்சிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப் ஆகிய தேசங்களின் மொத்தப் பரப்பையும் அதைச் சேர்ந்த கீழ் நிலப்பரப்பையும் குறிக்கும். அங்கு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் எனவும் அவர்களின் மொழி தமிழ் எனவும் தொல்பொருள் ஆராய்ச்சியாளா் கண்டுபிடித்துள்ளனா். இவைகளை ஹரப்பா, மொகென்சதரோ ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டவைகள் நிரூபிக்கின்றன. சிந்து சமவெளி அக்காலத்தில் சுமேரியாக் கண்டம் என்று அழைக்கப்பட்டது. இந்தச் சுமேரியாக் கண்டத்தில் மொசொப்பத்தோமியா என்ற பகுதி இருந்தது. அதில் ஊர் என்ற ஊர் இருந்தது. அங்கிருந்தவர்களின் ஒருவனாகிய ஆபிராம் தெற்கு நோக்கிப் பிரயாணம் சென்றார். திராவிடரின் கல் நடும் வழக்கம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பரவியது.

திராவிடர்கள் குறிக்கல்லை நடும் பழக்கம் உள்ளவர் களானபடியால் அவர்கள் சிவலிங்கத்தை வணங்கினார்கள் என்று சொல்ல இயலாது. ஏனென்றால் சிவன் என்ற தத்துவக் கடவுள் கி.பி.800 ஆண்டுகளுக்குப் பின்னால் உண்டானவர். சிவபுராணம், இலிங்க புராணம் போன்ற கதைகள் யாவும் கி.பி. 800 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்டதாகும். கி.பி. 800 ஆண்டுகளுக்குப் பின்னா் மனித கற்பனையினால் ஏற்படுத்தப்பட்ட இக்கடவுள்களை கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திராவிடன் வணங்கினான் என்று சாதிக்க நினைப்பது அறிவுக்குகந்த ஆராய்ச்சியாகாது.

கி.மு. வில் எழுதப்பட்ட சங்க இலக்கியங்களும் கோயில் பற்றி எதுவும் சொல்லவில்லை. அப்படியானால் கல்லை நட்டு அதில் எண்ணெய் வார்த்து வணங்கும் பழக்கம் எங்கிருந்து இந்நாட்டிற்கு வந்தது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கல்தூண் நாட்டு, கோயில் கட்டுவதும், கல்லை நட்டு அதின்மீது எண்ணெய் வார்த்து ஆராதிப்பதும் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது.

"புனித முகம்மது காலத்து அரபியர்கள் ஆவிகளையும், பெண் தேவதைகளையும், 360 புனித கற்களையும் வணங்கி

வந்தார்கள் என்று காண்கிறோம். புனித கற்களை வணங்கும் இடமாக காபா விளங்கியது. அரபுகள் பெண் தேவதைகள் மற்றும் புனித கற்களை வணங்கியதைக் குரானில் காண்கிறோம்.

புனித முகம்மது அவர்கள் காபாவில் முத்தமிட்டு வணங்கி வந்த 360 புனித கற்களில் 359 கற்களை அகற்றி விட்டு ஒரு கருப்புக் கல்லை மட்டும் வைத்துள்ளார்கள். மெக்கா நகருக்குச் செல்லும் மக்கள் காபா விலுள்ளதான கருப்புக்கல்லை முத்தமிட்டு வணங்கி வருவதை இன்றும் காண்கிறோம். "(இந்து மதம் இந்திய மதமா-உறையூர் வளவன் - பக் 92-93)

ஆனால் அதே நிலையில் தேவன் தமது மக்களை வைத்து விடவில்லை. தெரிந்து கொள்ளப்பட்ட ஆபிரகாமின் பேரனுக்கு இஸ்ரவேல் என்று பெயரும் உண்டு. அவனுடைய மக்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் யாவரும் பேய்களைத் தெய்வமென வணங்கிய எகிப்து மக்களிடத்தில் அடிமைப்பட்டிருந்தனர். அவர்களை மீட்க ஆண்டவர் மோசே என்ற மனுஷனுக்கு மலைமீது ஜோதி தரிசனமானார். இந்த ஜோதி தரிசனம் பார்க்க மோசே மலைமீது ஏறிபோனார்.

நம் நாட்டிலும் மலைமீது ஜோதி தரிசனம் பார்க்கப் போகிற மக்கள் கூட்டம் ஏராளம் உண்டு. (தென் நாட்டுச் சமயங்களில் அனேகர் கடவுளை ஜோதி ரூபமாகக் கண்டவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் கடவுளை ஜோதியாகவே கண்டு

அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங் கருணை - என்றும் பாடல் பாடினார்.

ஜோதியே, சுடரே, சூழ்ஒளி விளக்கே

என்றும்

துயர்இல் தன்னுடை ஜோதி நின்றவண்ணம் நிற்கவே

என்றும்

வணங்குவாய் செகஜோதி ஒருவனாகி மாநிலத்தை
ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்

குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில்
தானுத்திதுக் குருவாய் நின்று
சனமான சமுசாரம் ஒள்றில்லாமல் சந்நியாசிபோல்
இருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை அமைத்துப் போட்டு
அகண்ட தலம் சென்ற வரை அண்டுவாயே

(அகத்தியர் ஞானம் 30இல் 21வது பாடல்) என்றும்

ஜோதி மயமான பரிசுத்த வஸ்துவைத் தொழுது அழுது
அலற்றித் தொந்தோம் என்வே
நீதி தவறா வழியில் நின்று - நிலையாய்
நினைந்து நினைந்து உருகி ஆடு பாம்பே (பாம்பாட்டி சித்தர்)
என்றும்
முச்சுடரும் ஒன்றாகும் மும்மூர்த் தியல்ல
மூவருமே ஆள் உருவம் ஒன்றே யாகும் (அகத்தியர்
ஞானம் 30ல் 20) என்றும்
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக

(கச்சியப்ப சிவாச்சாரியார்) என்றும்

வல்லிருளை நீக்கும் ஞான விளக்கு (தாயுமானவர்)
என்றும் பலவகையால் பாடியுள்ளனர்.

உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவான் 1:9) என்று பைபிள் சொல்லுகிறது.

இந்த மோசே என்ற மனிதன் தேவனால் வழி நடத்தப்பட்டான். தேவன் அவனைக் கொண்டு பல அற்புதங்களை எகிப்து நாட்டில் செய்தார். பார்வோன் என்ற எகிப்திய அரசனின் மந்திரவாதிகளும் அதே அற்புதங்களைச் செய்து காட்டினார்கள். பிசாசுக்கும் சிறிது வல்லமையுண்டு என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஆனால் சர்வ வல்லவராகிய தேவன் முடிவில் பெரிய ஒரு அற்புதம் செய்தார். அது என்னவெனில் தமது ஜனங்களாகிய இஸ்ரவேலர் அனைவரும் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பழுதற்ற ஆட்டுக் குட்டியைத் தெரிந்து கொண்டு அதைக் சாயங்காலத்திலே

பலிசெலுத்தி அதின் இரத்தத்தை எடுத்து அவரவர்கள் வீட்டு நிலைக் கால்களிலும் மேற் சட்டத்திலும் பூசி வைக்க வேண்டும். அப்பொழுது சங்காரக்காரன் இரத்தம் பூசப்படாத வீடுகளிலுள்ள முதல் பிள்ளையை மரணமடையும்படிச் செய்வான். இரத்தம் பூசப்பட்ட வீடுகளுக்குள் சங்காரக்காரன் வராதபடி ஆண்டவர் வாசற்படியை விலகிக் கடந்து போவார்.

இந்தக் காரியத்தினால் எகிப்து அரசன் இஸ்ரவேலர்களை விடுதலை செய்து போக விட்டான். இந்த இராத்திரி இஸ்ரவேலுக்கு மிகவும் முக்கியமான இராத்திரி, சிவந்த இரத்தத்தினால் விடுதலையாக்கப்பட்ட சிவந்த இராத்திரி, இக்காரியங்களைக் குறித்து பைபிளில் யாத்திரை - யாகமம் 12ம் அதிகாரத்தில் காணலாம்.

பின்பு இதையே ஆண்டவர் அந்த ஜனங்களுக்குக் கட்டளையாக வைத்தார். அக்கட்டளை என்னவெனில்,

அவைகளை உண்கையில் மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக் கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும் உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபாகமம் 6:8,9) என்பதே!

நம் நாட்டிலுள்ள அனேகர் தங்கள் வீட்டின் முன் வாசல் நிலைகளில் சிவப்பு நிற குங்குமம் பூசுகிறார்கள். கதவிலும் பூசுகிறார்கள். கையில் சிவப்பு நூல் கட்டுகிறார்கள். இராட்ஷாபந்தன் (இரட்சிக்கும் தொடர்பு) என்று அதற்குப் பெயர். கண்களுக்கு நடுவே வட்டமாக அல்லது நீளமாகச் செந்தூரக் குங்குமம் இடுகிறார்கள். இப்படிச் செய்யக் காரணம் என்ன? சிவப்பு நிறமுடைய இரத்தத்தின் அடையாளமாக இருக்குமா? ஆரியமத வேதங்களோ, தமிழ: வேதங்களோ இப்படிச் செய்ய வேண்டும் என்று எங்கும் சொல்லவில்லையே! அப்படியானால் இப்பழக்கம் எப்படி ஏற்பட்டது? யாரால் ஏற்படுத்தப்பட்டது? ஆராய்ச்சி தேவை!

சுமங்கலிப் பெண்களுக்கு அடையாளம், சிவபெரு மானின் நெற்றிக்கண், மற்றவர்களின் காமப் பார்வைக்குத் திருஷ்டி, சரீரத்தின் மூலாதாரம் என்றெல்லாம் சொல்லுவது சமாளி பதற்கே

அன்றி பயனுடைய கருத்துக்கள் அல்லவே! இப்பழக்க வழக்கங்கள் சலாச்சாரமும் அல்ல. அப்படியானால் இதற்குக் காரணம் யூத மார்க்கக் கருத்துக்கள் இந்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதால் இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

மலைமீது ஏறின மோசேக்கு ஆண்டவர் பல கட்டளைகளைக் கொடுத்தார். அதன் பின்பு தன் ஜனங்கள் தன்னை ஆராதிக்கும் வழியில் ஒரு மாறுதலைச் செய்தார் இப்பொழுது ஆசரிப்புக் கூடாரம் என்று கூடாரத்தை ஏற்படுத்தி அங்கே தன்னைத் தொழுது கொள்ளும்படித் தேவன் சொன்னார்.

யூதர்கள் சிதறடிக்கப்பட்ட காலத்தில், பலர் தென் இந்தியாவில் மேற்குக் கரைப் பகுதியில் அகதிகளாக வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். கேரளம் என்ற அழைக்கப்படும் அப்பகுதியிலுள்ள அனேக அம்பலங்கள் (கோயில்கள்) கூடார அமைப்பில் இருப்பதை இன்றும் காணலாம்.

ஆசரிப்புக்கூடார அமைப்பு, அதின் தட்டுமுட்டுச் சாமான்கள், திரைச்சீலை, குத்து விளக்கு, பெட்டி, பீடம் ஆகிய யாவும் எப்படிச் செய்ய வேண்டுமென்பதைத் தேவனே அறிவித்தார்.

இதன்பின்பு இஸ்ரவேலர்கள் சமாதானமாக யுதத்மின்றி இருந்த காலத்தில் சாலமோன் என்ற அரசன் இஸ்ரவேலை ஆண்டு வந்தான். இவனுடைய காலத்தில் தேவன் தனக்குப் பெரிய கோயில் கட்டிடம் கட்டும்படி அவனுக்குக் கட்டளை கொடுத்தார்.

உலகிலேயே முதன் முதலாகக் கட்டப்பட்ட பெரிய தேவாலயமாக அது இருந்தது. அறுபது முழ நீளம், இருபது முழ அகலம், முப்பது முழ உயரம் இருந்தது. முகப்பு மண்டபம், சுற்றுக்கட்டுகள், அவைகளில் அறைகள், ஒட்டுச் சுவர்கள், சுழற்படிகள், மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமாகிய சித்திர வேலைகள், கொத்து வேலைகள், சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு இரட்டைக் கதவுகள், அக்கதவுகளில் மலர்ந்த பூக்களாகிய சித்தரவேலைகள், அவைகளைப் பொன் தகட்டினால் பதிய வைத்தல், கல் தூண்களால் கட்டப்பட்ட மண்டபங்கள், கும்பங்கள், ரிஷபங்கள், சிங்கங்கள், காளைகள் போன்ற

உருவங்கள், ஜலதாரைகள் ஆகிய இவை போன்ற விதவிதமான வேலைப்பாடுகள் குறித்தும், தூண்கள் பாதங்கள் மேல் நிறுத்தப்படுதலைக் குறித்தும், மற்றும் செப்புச்சட்டி, சாம்பல் கரண்டி, முள் துறடு போன்ற பணி முட்டுக்களைக் குறித்தும் 1 இராஜாக்களின் புத்தகம் 6ம் அதிகாரம் முதல் 7ம் அதிகாரம் வரை சொல்லப்பட்டிருப்பதைப் போல வேறு எந்தமத வேதங்களிலும் சொல்லப்படவில்லை.

இந்த ஆலயம் கட்டப்படுகையில் அதற்குச் சுற்றுப்புறம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், என்ற மூன்று அமைப்புகள் இருக்கவேண்டும் என்பது தேவ கட்டளை. பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவே திரைச் சீலை தொங்கவிடப்படவேண்டும் என்பதும், மகாபரிசுத்த ஸ்தலத்தின் வாசலில் குத்து விளக்கு வைக்கப்பட வேண்டும் என்றும், சமூகத்து அப்பம் (பிரசாதம்) வைக்கப்பட மேசை இருக்கவேண்டும் என்பதும் ஆசாரியன் ஒருவன் மட்டுமே மகாபரிசுத்த ஸ்தலத்தில் நுழைய வேண்டுமென்பதும் அவன் உள்ளே தேவ சமூகத்தில் நிற்கும்போது அங்கே மணிச்சத்தம் கேட்கப்படவேண்டும் என்பதும், நெற்றிப்பட்டம், பரிவட்டம் பேன்ற வினோத அலங்கரிப்புகள் பற்றியும், ஆசாரிய முறைமைகள் மாறி மாறி லேவியருக்குள் வருவது குறித்தும் யாத்திரையாகமம், லேவியராகமம், உபாகமம் ஆகிய பைபிளில் புத்தகங்களைப் படித்தால் தேவன் எவ்வாறெல்லாம் தமது ஜனங்களுக்கு அருள் பாவித்தார் என்று விளங்கிக் கொள்ளலாம்.

நம் நாட்டில் கி.பி. யில் கட்டப்பட்ட கோயில்கள் எல்லாவற்றிலும் சுற்றுப்புரம், பிரகாரம் (பரிசுத்த ஸ்தலம்) மூலஸ்தானம் (மகா பரிசுத்த ஸ்தலம்) என்பவை காணப்படுகின்றன. கோயில்களின் முன்பு அனேகக் கல் தூண்களால் நிறுவப்பட்ட மண்டபங்கள் காணப்படுகின்றன. கல் தூண்களும், அவைகளின் மேல் கும்பங்களும் காணப்படுகின்றன. சந்நிதி ஸ்தானக் கதவுகள் இரட்டைக் கதவுகளாகலே உள்ளன. கல் தூண்கள் பாதங்கள் மேல் நிற்கின்றன. அவைகளில் சித்தி வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. பூ வேலைகளும் சங்கிலப் பின்னல்களும் கூட உண்டு.

மூலஸ்தானதத்தினுள் ஆசாரியர் (பூசாரி) மட்டுமே செல்கிறார். மற்றவர்கள் பிரகாரத்லே நிற்கவேண்டும். பூசாரி நெற்றிப்பட்டம் கட்டுகிறார். மூலஸ்தானம் திரைச் சீலையினால் மறைக்கப்படுகிறது. குத்துவிளக்குகள் காணப்படுகின்றன உள்ளே பூசாரி மணி சத்தம் எழுப்புகிறார்.

இப்படி எல்லாம் செய்யவேண்டும் அல்லது இப்படித் தான் தேவாலயம் கட்டவேண்டும் என்று எந்த ஆரிய வேதமாவது, தமிழ் வேதமாகவது விளக்கம் கொடுக்கிறதா?

அப்படியில்லை எனில் இவைகளில் ஒருமித்த கருத்து காணப்படுவதற்குக் காரணம் என்ன? இந்தியாவுக்கும் மத்திய ஆசியாவிலிருந்து கடந்து வந்த ஆரியர், அங்கே கண்ட மாதிரியின்படி இங்கே செய்ய ஆரம்பித்து அதுவே பழக்கமாகப் போய்விட்டதா? அப்படியெனில் யூதமத அடிப்படைக் கருத்துக்கள் இங்கே மருவி வேறு நிலை எய்தியதா என்ற கேள்விகளுக்குப் பதில் கண்டாகவேண்டும்.

கோயில் கட்டி ஆராதித்த காலத்தையடுத்து, ஆண்டவர் தனது மக்களிடம் தீர்க்கதரிசிகளைக் கொண்டு இப்படியொரு கேள்வி கேட்டார்.

"வானம் எனக்குச் சிங்காசனம் பூமி எனக்குப் பாதபடி நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?" என்பதே அக்கேள்வியாகும். (ஏசாயா 66:1) வானத்தில் அமர்ந்து பூமியில் கால் வைத்திருக்கிற தேவன் எவ்வளவு உயரமானவர். அவருக்கு மனிதன் எப்படிப்பட்ட கோயிலைக் கட்ட இயலும்?

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும், ஆண்டவராய் இருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோயில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை (அப்போஸ்தலர் 17:24) என்றும் சாலமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் (அப்போஸ்தலர் 7:47,48) என்றும் பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு சற்று யோசனை செய்யவேண்டும். ஆரம்ப காலத்தில் மனிதன் பாபம் செய்து தேவ மகிமையை இழந்து நிற்கையில் நோவாவின் உள்ளத்தில் தனக்குப் பலிபீடம் கட்டும் எண்ணத்தைக் கொடுத்த தேவன். ஆபிரகாம் காலத்திலும் ஈசாக்கின் காலத்திலும் பலிபீட ஆராதனை செய்யும் எண்ணத்தைக் கொடுத்தவர், யாக்கோபுவுக்குக் கல்லை நட்டு அதில் எண்ணெய் வார்த்துக் கோயிலாக்கி ஆராதிக்கும் ஞானத்தைக் கொடுத்தவர், சாலோமோனுடைய காலத்தில் எருசலேமில் கோயில் கட்டச் சொன்னவர், அந்த ஸ்தலத்தில் இருக்கிறேன் என்று சொன்னவர், திடீரென்று நான் மனுஷன் கைகளினால் கட்டப்பட்ட கோயிலில் வாசம் செய்யமாட்டேன் என்று சொல்லக் காரணம் என்ன? அப்படியானால் அவர் எங்கே இருப்பார்? தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்று சிலர் சொல்லுவதுண்டு இறைவன் எங்கும் இருக்கிறார் என்ற பொருளில் அப்படிச் சொல்லுவார்கள். (பிற்காலத்தில் இவைகளை நிரூபிக்கும் வகையில் புராணகதைகள் எழுதப்பட்டன)

ஆனால் இறைவனோ தான் வசிக்கும் கோயிலைத் தானே கட்டிக் கொண்டார் என்பதை மனிதன் உணரவில்லை. "நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1 கொரிந்தியர் 3:16,17) என்ற தேவன் இயேசுவாக வெளிப்பட்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்று, பரிசுத்த ஆவியானவரை அனுப்பி, சகல சத்தியத்திற்குள்ளும் மனுஷரை நடத்த சித்தப்பட்ட போது இதை வெளிப்படுத்தினார்.

பைபிளின் ஆரம்பத்தில், எல்லாவற்றையும் உண்டாகக் கடவது, என்ற வார்த்தையினால் உண்டாக்கின தேவன் மனிதர்கள் உண்டாகக் கடவது என்று சொல்லி இருக்கலாம். அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும். ஆனால் அவரோ மனிதனைத் தன் கைகளினால் உருவாக்கித் தமது சுவாசத்தை

அவனுக்குத் தந்து அவனை ஜீவாத்துமாவாகச் சிருஷ்டித்தார். (ஆதிகாமம். 1:26,27 ; 2:7) மனிதனுடைய சரீரமே தேவன் தங்கும் ஆலயம். தாம் இருக்கவேண்டிய இடத்தைத் தாமே கட்டிமுடித்தார்.

யோபு சொல்லும்போது : தோலையும் சதையையும் எனக்குத்தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர், எனக்கு ஜீவனைத் தந்ததுமல்லாமல் தயவையும் எனக்கு பாராட்டினீர் உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது (யோபு 10:11,12)

மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார் என்பதாக ஒரு சத்தம் வானததிலிருந்து உண்டானதாக வெளிப்படுத்தல் 21:3ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் தேவனுக்குக் கோயில் கட்டி ஆராதிக்கும் வழக்கத்தைக் கல் வணக்கத்திலிருந்து கூடார வணக்கமாக்கி, பின்பு அதைக் கோயில் வணக்கமாக்கி, கூடார சரீரமே கோயில். ஆன்மாவே அவருடைய மூலஸ்தானம், ஆவியே பிரகாரம் என்ற உயர்ந்த தத்துவத்திற்குள் பாப மனிதனை வழி நடத்தத் தேவன் படிப்படியாக வெளிப்படுத்தின காரியமாகும்.

"ஆரிய வேதங்களில், விக்கிரகங்களை வைத்து வணங்குகிறவர்கள் காரிருளில் வீழ்வார்கள்" என்ற குறிப்பு காணப்படுகிறது. (யஜீர் வேதம் 40.9)

"நதஸ்யப்ரதிமா அஸித் யஸ்ய நாம் மஹத்ஸ (கடவுளுக்கு உருவம் இல்லை. அவருடைய நாமமே பரிசுத்தம்) என்று ஈசா உபநிடதம் 12, யஜீர் வேதம் 32.2 சொல்லுகிறது.

"ந ஸதூஷே ரூப்மஸ்ய
நஷசூஷா பர்யதி கர்ச்சனைனம்
ஹீதா ஹதிஸ்தம் மனஸா யயேன
மேவம் விதுர்மூதாஸ்தே பவந்த்தி"
(ஸ்வேதாஸ்வதார உபநிஷத்து 4.20)

(கடவுளின் உருவம் நமது கண்களுக்குப் புலப்படாது. அவரைக் கண்டவர் எவருமில்லை. தங்கள் மனதிலும் சிந்தையிலும் எவர்கள் அவரை ஏற்றுக் கொள்கிறார்களோ, எவர்கள் தங்கள் இருதயத்தில் அவரை வைத்திருக்கிறார்களோ அவர்கள் மோக்ஷகதி அடைவார்கள்.)

பாஷாணலோஹமணி மூன்மய விக்ரஹேஷீ
பூஜா புனர் ஜனன போக கரி முமுஷோ
தஸ்மதாதி: ஸ்வஹதயார்ஜ நமேவ
குயார்த்தா ஹயாச்சர்னம் பரி ஹரேதபுனர்பவாய
(மைத்ரேயி உபநிஷத்து 2:26)

(இரட்சிப்பை விரும்பும் பக்தர்கள் கல்லினால் செய்யப்பட்ட உருவங்களையோ அல்லது வேறு உருவங்களையோ வணங்கினால், தங்கள் கர்ம வினைப்படியே மீண்டும் மீண்டும் பல பிறவி எடுக்க வேண்டும். இப்படிப் பிறவா வரம் பெற வேண்டுமானால் சிலை வணக்கத்தை முதலாவது நிறுத்தி விட்டு தங்கள் இருதயத்தில் ஆண்டவரைத் தொழவேண்டும்)

பைபிள் சொல்வது என்னவெனில்:

தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்பதே.

எனவே, உருவங்களை வைத்து வணங்குதல் தகாது என்பதையே சமஸ்கிருத ஸ்லோகங்களும் சுட்டிக்காட்டுகின்றன என்பது விளங்கும். ஒருசிலர், நம் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்கு நமக்கு முன் எதாகிலும் ஒன்று இருந்தால் மட்டுமே நாம் இறைவனைச் சந்திக்க இயலும் என்றும் சொல்வதுண்டு. சிலர். ஆரம்ப காலத்திற்கு அது தேவை, பின்னால் படிப்படியாக அதை விட்டுவிடலாம் என்று சொல்லுவதும் உண்டு. கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்ற தத்துவம் பேசுபவர்கள் உண்டு. இவைகள் யாவுமே வேதத்திற்கு முன்பு அடிபட்டுப் போகும்.

நம் தமிழ் நாட்டுச் சித்தர்களில் அனேகர் நமது சரீரமே கோயில் என்ற பைபிள் கருத்தை நன்றாக விளங்கிக் கொண்டவர்கள். அவர்கள் பாடிய பாடல்களே அதற்குச் சாட்சி.

எங்கும் ஜெயப்பிரகாசர் அன்பர்
இன்பர் இதயத்தில் இருந்திடும் வாசர்
துங்க அடியவர் தாசர் - தன்னைத்
துதிக்கப் பதவி அருளுவான் ஈசன் (கடுவழிசித்தர் 34)

அண்டங் கொளாது அனைத்திடமும் தாங்காது
மண்டலங்கள் கொளாது வானமும் கொளாது உன்னைத்தான்
கண்ட வுருவில் கலந்திருப்பாய் என்று சொன்னால்
துண்டரிக்கமான தோஷம் பராபரனே (பராபரன் மாலை 1ல் 13ம் பாட்டு)

ஏட்டுச் சுரக்காய் கறிக்கிங் கெய்திடாது போல
எண்திசை திரிந்தும் கதி எய்தல் இல்லையே
நாட்டுக் கொரு கோயில் கட்டி நாளும் பூசித்தே
நாதன் பாதம் காணார்கள் என்று ஆடு பாம்பே
(பாம்பாட்டி சித்தர்-94)

கோயிலாவது ஏதடா குளமாவது ஏதடா
கோயிலும் குளமும் தேடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளமும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே

கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறைவனை

புண்டரீகம் மத்தியில் உதித் தெழுந்து சோதியை
மண்டலங்கள் மூன்றினொடு மண்ணுகின்ற மாயனை
அண்டரண்டம் ஊடறுத்து அறிந்துரை வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வ மென்று கை யெடுப்பதில்லையே
(சிவ வாக்கியர் பாடல்கள் 33,180,250)

இதுபோன்ற அனேகப் பாடல்களைச் சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். விக்கிரக வழிபாடுகள் ஆரியரால் தமிழ் மக்களுக்குள்

புகுத்தப்பட்டபோது, அதைக் குறித்து சித்தர்கள் எளிய நடையில் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் பாடி வைத்தனர்.

செங்கல்லும் கருங்கல்லும் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலும் தராவிலும் சிவமிருப்பர் என்கிறீர்
உம்பதம் அறிந்து நீர் உம்மை அறிந்த பின்
அம்பலம் நிறைந்த நாதர் ஆடல் பாடல் ஆகுமே.

ஓசையுள்ள கல்லை உடைத்து இரண்டாய்ச் செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாற்றுறீர்
ஈசனுக்குகந்த கல் எந்தக் கல் சொல்லுமே

கட்டையால் செய் தேவரும் கல்லினால் செய் தேவரும்
மட்டையால் செய் வேரும் மஞ்சளால் செய் தேவரும்
சட்டையால் செய் தேவரும் சானியால் செய் தேவரும்
வெட்ட வெளி தன்னி மற்று வேறு தெய்வம் இல்லையே
(சிவ வாக்கியர்....34, 421, 510 பாடல்கள்)

சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசற்ற ஆகாயந் தன்னிலும் ஆய்ந்து விட்டோர்
இல்லிலும் அன்பரிடத்திலும் ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்நுதலே!

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பம் சாற்றியே
சுற்றிவந்து முணமுணன்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை யறியுமோ.
(பட்டிணத்தார் பாடல்கள்)

இதைப் போன்று இன்னும் அனேகப் பாடல்களும் உண்டு. காலப்போக்கில் மனிதர் தங்களை ஞானிகள் என்று சொல்லியும் பைத்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், மனிதர்கள் ஆகியவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். பைபிள்-ரோமர் 1:21-25) என்பதுவே மெய்.

ஆரம்ப காலத்திலேயே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிற வைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்ரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் என்பதே, தேவன் மனிதனுக்குக் கொடுத்த கற்பனை. (யாத்திரையாகமம். 20:3-5)

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுர வாசல்

என்ற திருமூலரின் பாடலும் கவனிக்கத் தக்கது.

சித்தர்கள் யாவருமே ஆரிய மார்க்கத்தை எதிர்த்தவர்கள். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கி.பி. 12ம் நூற்றாண்டில் சுமார் 4000 ஞானசித்தர்கள் கழுவேற்றப்பட்ட செய்தி "குகையிடிக்கலகம்" என்னும் பெயரில் தமிழ் வரலாற்றில் குறிக்கப்பட்டடுள்ளது. (தெய்வநாயகம்-திராவிட சமயம் - மெய்ப்பொருள் வெளியீடு 1983 3.1985 பக்.13). இச்சித்தர்கள் கொலை செய்தார்களா? அல்லது மொழிதுரோகம் செய்தார்களா? ஆரியர் புகுத்திய விக்கிரக வழிபாடுகளையும் அஞ்ஞானப் பழக்க வழங்கங்களையும் எதிர்த்த காரணத்திற்காக ஆரியரின் சூழ்ச்சியால் பலியாக்கப்பட்டனர்.

இறைவனை அறியும் அறிவுக்கு சித் என்று பொருள். சத் என்றால் மெய்ப்பொருள் அல்லது இறைவன். சித்தர்கள் மெய்ப்பொருளாகிய இறைவனை தோமா மூலமாக அறிந்தவர்கள். ஆங்கிலேயர் கிறிஸ்தவர்களாக மாறுமுன்பே தமிழ் நாட்டில் முதல் நூற்றாண்டில் சுமார் 30 இலட்சம் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பது சுவாமி விவேகானந்தர் அவர்களின் ஞான தீபம் என்னும் நூலில் காணக் கிடைக்கின்றது. (விவேகானந்தர் நூற்றாண்டு முதற்பதிப்பு நூல் சுடர் 1 பக்கம் 409)

கலாச்சாரங்கள்

பைபிளின் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் கருத்தும் ஆரிய வேதங்களாகிய ரிக், யஜுர்வேதக் கருத்தும், சைவ சித்தாந்த

நூல்களின் கருத்தும் அனேக இடங்களில் ஒத்துப் போவதற்குக் காரணம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே யூதர்கள் இந்தியாவில் வாழ்ந்தார்கள் என்பதும். கிறிஸ்துவின் நற்செய்தி கடல் கடந்து முதலாவது இந்தியாவிற்கு வந்ததென்பதும் ஆகும். தமிழகம் நீண்ட நெடுங்காலமாகவே அயல் நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டுள்ளது. வாணிகத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த கிரேக்கர், ரோமர், யூதர், சீரியர் போன்றோர் தமிழகப் பெரு நகரங்களில் தங்கி வாழ்ந்து வந்தனர். தமிழ் இலக்கியங்களில் அவர்கள் யவனர் என்னும் பெயரால் குறிக்கப்படுகின்றனர். (டாக்டர் மு. தெய்வநாயகம். வி.தி.சை. ஒ பக்கம்5)

இந்தியாவின் மேற்குக் கரையோரமுள்ள இந்திய மக்களில் பெரும்பான்மையானோர் பாரசீக, யூத எகிப்திய, சீரிய நாடுகளின் மக்களுடன் கலந்தவர்கள் என்பது நடை உடை பாவனைகளில் இருந்தும், ஆசாரப் பழக்க வழக்கங்களிலிருந்தும் ஆகாரப் பழக்கங்களிலிருந்தும் விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணமாக யூதஸ்திரிகளின் ஆபரணங்களாகிய சிலம்புகள், சுட்டிகள், பிறைச் சிந்தாக்குகள், ஹாரங்கள், ஹஸ்த கடகங்கள் சிரபூஷணங்கள், பாத சரங்கள் (கொலுசு) தாயித்துக்கள், மோதிரங்கள், மூக்குத்திகள், ஆகியவற்றைச் சொல்லலாம். மேலும் யூத ஸ்திரிகள் உபயோகித்த தலைமுக்காடு, மார்க்கச்சைகள், விநோத வஸ்திரங்கள், சால்வைகள். போர்வைகள், சல்லடை போன்ற துணிகள், குல்லாக்கள்,. துப்பட்டாக்கள் ஆகிய ஆடைகளைச் சொல்லலாம், மேலும் யூத ஸ்திரிகள் உபயோகித்த சுகந்த பரணிகள் (சென்ட் பாட்டில்கள்) குப்பிகள், கண்ணாடிகள் போன்ற அலங்காரத்திற்குப் பிரயோசனமான பொருட்களையும் சொல்லலாம் (ஏசாய 3:18-23)

மேலே சொல்லப்பட்ட எவைகளையும் திராவிடப் பெண்கள் உபயோகித்ததில்லை என்பது சங்க கால இலக்கிய வாயிலாக அறியலாம். பிற்காலத்தில் இவர்களால் தமிழர் கலாச்சாரங்கள் சீர் குலைய ஆரம்பித்தபோது ஏற்பட்ட விளைவின் காரணமாக அவர்களின் பல உடைகளையும் ஆபரணங்களையும் நாமும் பற்றிக் கொண்டோம்.

இந்தியாவின் மேற்குப் கரையில் வாழும் அனேகர் திராவிடத் தொடர்புடையவர்களல்ல. அவர்கள் மத்திய கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பல நாட்டவர்களின் தொடர்பினால் உண்டானவர்கள் என்பது தெளிவு. எனினும், இந்தியாவில் வாழும் யாவரும் இந்தியரே என்ற நாட்டுப் பற்றுடன், பலமொழிகள், பலகலாச்சாரங்கள், பல உணவுகள், பல நம்பிக்கைகள், பல மதங்கள் இருப்பினும் நாம் இந்தியரே என்ற மேலான நோக்கத்துடன் வாழ்வது போற்றத்தக்கது.

எந்த போஜன பலியும் உப்பினால் சாரமாக்கப்பட வேண்டும் என்பது தேவ கட்டளை (லேவியராகமம். 2:12) இதினால் பந்தியிலையில் முதலாவது உப்பு வைக்கிற சாஸ்திரம் ஏற்பட்டு இன்றும் கோயில்களில் ஏதாவது ஒரு பக்கத்தில், வருகிறவர்கள் படைக்கும் உப்புக் குவியலைக் காணலாம். பலிபீடத்தின் அக்னி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும், அது ஒரு பொழுதும் அவிந்து போகக் கூடாது என்பது தேவ கட்டளை, (லேவியராகமம். 6:13. 24:1,4) விடியா விளக்கு ஏற்றி வைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

ஸ்தோத்திர பலி (நன்றி காணிக்கை) செலுத்தும்போது எண்ணையில் பிசைந்த அதிரசம், அடை மெல்லிய மாவினால் செய்த அதிரசம், அப்பம் ஆகிய உணவுப் பொருள்களில் வகைக்கு ஒவ்வொன்று எடுத்து ஆண்டவனுக்குப் படைக்கவேண்டும் என்பது தேவ கட்டளை (வேவியராகமம் 7:12-14) பண்டிகை நாட்களிலும் விசேஷ நாட்களிலும் சமைக்கப்பட்ட எல்லாவற்றிலும் கொஞ்சம் எடுத்து ஸ்வாமிக்குப் படைத்த பின் புசிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

தேவனுடைய ஆலயத்திற்குள் போகிறவன் திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கக் கூடாது என்பது தேவகட்டளை. (லேவியராகமம். 10:9) குடித்துவிட்டுக் கோவிலுக்குப் போவது அநாகரீகமாகவும் பாபமாகவும் கருதப்படுகிறது.

ஆண்பிள்ளை பெற்றால் ஏழு நாள் தீட்டாக இருக்கவேண்டும். முப்பத்து மூன்று நாட்கள் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கவேண்டும். பெண் பிள்ளை பெற்றால் இரண்டு வாரம் தீட்டு நாட்களாகவும், ஆறுபத்தாறு நாட்கள் சுத்திகரிப்பு நாட்களாகவும் கடைப்பிடிக்கப்பட

வேண்டும் (லேவியராகமம். 12:1-5) வீட்டுக்கு மாத விலக்காகிறவள் ஏழு நாட்கள் தீட்டாயிருப்பாள். அவளைத் தொடுகிறவன் தீட்டாவான். அவள் படுக்கிற இடம், உட்காரும் இடம் அவளால் தொடப்பட்ட சாமான்கள் எல்லாம் தீட்டாயிருக்கும். ஏழு நாட்கள் கழித்து அவள் ஸ்நானம் பண்ணி, அவள் இருந்த இடமும் சுத்திகரிக்கப்பட்ட பின்பு அவள் வீட்டுக்குள் வரலாம். (லேவியராகமம். 15:19-28) இன்றும் சில இந்திய குலங்களில் இவைகள் கொஞ்சமாகிலும் கடைப்பிடிக்கப் படுகின்றன.

அடையாளமான எழுத்துக்களை உடம்பில் குத்திக் கொள்ளக்கூடாது (பச்சை குத்திக் கொள்ளுதல்) என்பது தேவ கட்டளை (லேவியராகமம். 19:28) இது மீறப்பட்டது. வேசியையாகிலும், கற்புக் குலைந்தவளையாகிலும், தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையாகிலும் ஒருவன் விவாகம் செய்யக் கூடாது. கன்னிகையாய் இருக்கிற பெண்ணையே அவன் விவாகம் பண்ணவேண்டும் என்பது தேவ கட்டளை (லேவியராகமம். 21:7, 13,14) இக்கலாச்சாரம் அதிகமாகக் கிழக்கு ஆசிய மக்களாலேயே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

விசேஷ நாட்களில் அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும், பேரீச்சின் ஓலைகளையும் தளைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும், கொண்டுவந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியிலே ஏழு நாளும் மகிழ்ச்சியாயிருங்கள் (லேவியராகமம் 23:40)

இதன் அடிப்படையிலே இந்தியர்கள் மத்தியில் விழாக்கள், திருமணங்கள், வரவேற்புகள் போன்ற காலங்களில் வீட்டுக்குமுன் அரங்கார வளைவுகளை வைப்பதும், தென்னங்கீற்று, தென்ம் பாளை, இளநீர் குலைகள், ஈச்சங் குலைகள், ஈச்சம் ஓலைகள், வாழை மரங்கள், குலைகள், மாவிலைகள் போன்ற தோரணங்கள் கட்டும் கலாச்சாரங்கள் ஏற்பட்டன. இக் கட்டளைகள் யாவும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் கோயிலைக் குறித்தும் திருப்பணிகளைக் குறித்தும் பைபிளின் பழைய ஏற்பாடு சொல்வதைக் கவனித்தால் இன்றைய இந்து மதக் கோயில்களில் இப்படிப்பட்ட அநேகக் காரியங்களைக் காணலாம்.

பரிசுத்த ஸ்தலத்திற்கும் (பிரகாரத்திற்கும்) மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் (மூலஸ்தானம்) திரைச் சீலை பிரிவையுண்டாக்கும் (யாத்திரையாகமம் 26:33) சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகளையும் கரண்டிகளையும் கிண்ணிகளையும், முள்துறடுகயையும், நெருப்புச் சட்டிகளையும் வெண்கலத்தால் உண்டு பண்ணுவாயாக. (யாத்திரையாகமம் 27:3) சந்நிதியில் காட்ட வேண்டிய நித்திய தூபம் இதுவே (யாத்திரையாகமம்30:8)

பாபநிவர்த்திப் பணம் ஆலயத் திருப்பணிக்குப் போகவேண்டும். (யாத் 30:8) (இன்றைக்கும் சிறு ஊர்களில் அபராதம் விதித்தால் அது கோயில் திருப்பணிக்குப் போய்ச் சேருகிறதைக் காணலம்.)

பரிசுத்த அபிஷேக தைலத்தைக் குறித்து யாத்திரையாகமம் 20: 23-25 வரை எழுதப்பட்டுள்ளது. வெள்ளைப் போளம். குங்கிலியம், கந்தவர்க்கம், சாம்பிராணி ஆகியவைகளைப் பொடியாக்கி தேவாலயத்தில் தூபங்க காட்டுவது குறித்து மேற்படி 30ம் அதிகாரத்தில் 34 முதல் 37 வரை எழுதப்பட்டுள்ளது.

தேவாலயத்தில் திருப்பணி செய்கிற ஆசாரியன் அல்லது பூசாரியானவன் அங்கிதரித்து, ஜல்லடத்தை (கோமணம் அல்லது ஜட்டி போன்ற உள்ளாடை) அரையில் போட்டுக் கொள்வது குறித்து லேவியராகமம் 6:10ல் காணலாம். பூசாரிகள் தங்கள் ஆடைகளுக்கு மேல் ஒரு துண்டு அல்லது பீதாம்பரம் கட்டிக் கொள்வது வழக்கத்தில் உண்டு. பூசாரி தன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் நெற்றிப்பட்டத்தைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்பது தேவ கட்டளை (லேவியராமம் 8:9) நம் நாட்டில் பரிவட்டம் கட்டும் பழக்கமாக மாறிற்று.

ஆசாரியன் தேவாலயத்திற்குள் செல்லுமுன்பு தன்னைச் சுத்திகரிப்புச் செய்து கொள்ள வேண்டும் என்பது தேவ கட்டளை இன்றைக்கும் பூசாரிகள் குளித்துவிட்டுப் பூசை செய்வது வழக்கம்.

ஒன்றின் தொடர்பு இல்லாமல் மற்றொன்று இல்லையென்பது உண்மையானால், எது முந்தி எது பிந்தி என்பதை ஆராய்ந்து

பார்க்க வேண்டும். ஆரியர்கள் கைபர் போலன் கணவாய் வழியாக வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் இந்திய திராவிடர்களிடம் இல்லை அப்படியாயின் மத்திய கிழக்கு ஆசிரியாவிலிருந்து புறப்பட்டு வந்த ஆரியர்கள் அங்கே நிலவி வந்த யூத கலாச்சாரங்களையும் யூத முறைமைகளையும் கொண்டு வந்தனர் என்றும், காலா காலங்களில் அது திரிபு பெற்று ஆரியமயமாகி முடிவில் இந்து மதமாயிற்றென்றும் கொள்ள ஏதுவுண்டு.

அதிகாரம் - பதினொன்று

வேதத் தொடர்புகள்

உபநிஷத்துக்களிலும் பிளேட்டோவின் இலக்கியங்களிலும் மதங்களின் உண்மை நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அதின் பூரணத்துவம் இயேசுவின் வாழ்க்கையில் காணப்படுகிறது. (டாக்டர்.எஸ். இராதாகிருஷ்ணன் The Idealist vies of Life)

"ஸபூமிம் விஷ்வதோ வ்ருத்வ"

என்னும் வாக்கியம் புருஷ சூக்தத்தின் முதல் பாடலில் காணப்படும் மூன்றாவது வரியாகும். அதாவது இறைவன் அண்ட சராசரங்களையும் படைத்தான் என்பது பொருள். அப்படியானால் இங்கிலாந்துக்கு ஒரு தெய்வம், இந்தியாவுக்கொரு தெய்வம், இஸ்ரவேலுக்கொரு தெய்வம், இலங்கைக்கொரு தெய்வம் என்று இருந்தல் இயலாது. தெய்வம், தான் உண்டாக்கிய பூமியில் அந்நிய நாட்டுத் தெய்வமாகக் காணப்படமாட்டார்.

கிறிஸ்து இயேசுவை இவ்வளவு நாட்களும் வெள்ளைக்காரன் தெய்வம், அன்னிய நாட்டுத் தெய்வம், அமெரிக்காவில் தெய்வம், என்று சொல்லி வந்த காலம் போய்விட்டது. கிறிஸ்து இயேசு, மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றாகிய யூதேயாவில் மனிதனாகப் பிறந்தவர். பைபிளில் வருகிற சம்பவங்களும், இதில் வருகின்ற நபர்களுக்கும் மத்திய கிழக்கு ஆசிய வாசிகளே! ஒருவராகிலும் ஆங்கிலேயரோ, அமெரிக்கரோ அல்லது ஐரோப்பியரோ அல்ல.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நீர், காற்று ஆகியவையாவும் இறைவனால் படைக்கப்பட்டவகைள். ஒரு சிலர் இவைகளைத் தங்கள் அறியாமையினாலே தெய்வங்களாக நினைத்து வணங்குகிறார்களள. ஒரு சிலர் இவைகளை இயற்கை என்கிறார்கள்! அல்லது நெபுலோஸ் என்றும் அனுவிலிருந்து எல்லாம் உண்டாயின என்கின்றனர். அப்படியானால் அந்த நெபுலோஸ் எப்படி உண்டாயிற்று, யார் அதை உண்டாக்கினது என்றால் அதற்குப் பதில் இல்லை. ஒரு சிலர் இவைகள் யாவும்

மனிதனுக்காகப் படைக்கப்பட்ட இறைவனின் அருள் என்று நினைத்து ஆண்டவனை வணங்குகிறார்கள்.

> படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக
> மனுவைப் படைத்தான் தன்னை வணங்க

என்று ஒரு பக்தன் பாடியது எவ்வளவு உண்மை?

இயேசு கிறிஸ்து எதோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார். அவரைத் தெய்வமாக வழிபடுகிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்து பிறக்கப் போவதைக் குறித்து எந்தெந்த நாட்டில் யார் யார் எப்படியெல்லம் எதிர்பார்த்தார்கள் என்பது குறித்து ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

யூதர்கள் அவர் மேசியாவாக (கிறிஸ்துவாக) வருவார் என்று எதிர் பார்த்தனர். மேசியா என்பது எபிரேய மொழி, கிறிஸ்டோஸ் என்பது கிரேக்க மொழி, இதுவே கிறிஸ்து என்றாயிற்று கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு வாழ்ந்த புத்தர் கடவுளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அதே நேரத்தில், தான் கடவுள் அல்ல, அவதாரம் அல்ல என்று திட்டவட்டமாகச் சொன்னார். போதி மரத்தடியில் தான் கண்ட ஞானத்தைப் பற்றி விளக்குகையில், தனக்குப் பின் வரும் ஆண்டுகளில் மைத்ரேயி (மேட்டியா) என்பவர் தோன்றி உலகிற்கு சமாதானம் அருளுவார் என்பதாகச் சொன்னார். மைத்ரேயி என்னும் பாலி மொழியானது சமஸ்கிருதத்தில் மெசியா என்று ஆகும். (ஆதாரம் : திக்க நிக்ஹாயா: புத்தர்.)

ஃபிரான்ஸ் நாட்டுப் புரட்சி நடந்த சமயத்தில், ரிவைல்லர் (Reveille) என்பவர் கிறிஸ்தவ சமயத்தை ஒழித்துக் கட்டி அதற்குப் பதிலாக வேறொரு புதிய சமயத்தை உண்டாக்கப் பாடுபட்டார். தனக்கு மிகவும் நெருங்கிய நண்பரான பர்ரா (Barras) என்ற புரட்சி வீரனிடம் இது குறித்து அவர் பேசியபோது, புதிய சமயம் ஏற்படுத்துவது மிகவும் எளிது என்றானாம். எப்படியென்று அவர் கேட்கப் பர்ரா என்பவர் "ஐயா நண்பரே! யாராவது உங்களைப்

பிடித்துச் சிலுவையில் அறையட்டும் அதுவும் வெள்ளிக்கிழமையாக இருப்பது நல்லது. சனிக்கிழமை முழுவதும் கல்லறைக்குள் இருங்கள் ஞாயிறன்று உயிருடன் எழுந்து வெளியே வந்து விடுங்கள் அப்போது, கிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொண்டது போல உங்களையும் ஏற்றுக்கொள்வார்கள்" என்றானாம்.

"இயேசு கிறிஸ்துவின் அருளுரைகளைக் காட்டிலும் மேலான அருளுரைகளை இதுவரையில் யாராவது ஆற்றியதுண்டா? இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களைவிடப் பெரிய அற்புதங்களை இதுவரை வேறு யாராவது செய்ததுண்டா? இயேசு கிறிஸ்துவைப் போல வாழ்ந்து, ஜானங்களின் பாவங்களுக்காகப் பலியாகி மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிருடன் வேறு யாராவது எழுந்ததுண்டா?

இயேசு கிறிஸ்துவைப் பேல ஐநூறுக்கும் அதிகமான சீஷர்கள் கண்காண வேறு யாராகிலும் மேலுலகம் ஏறிச் சென்றதுண்டா? இயேசு கிறிஸ்துவைப் போல உலகத்தில் முக்கால் பங்கு மக்களை வேறு யாராகிலும் தன் வசப்படுத்திக் கொண்டதுண்டா? அப்படி இல்லையாயின் இயேசுவே இரட்சகர். கர்த்தர் என்று ஏற்றுக்கொள்ளட்டும் என்கிறார்." ஜர்லாந்துக் காரரான வில்லியம் இ.எச்.லீக்கி என்பவர்.

உயர்ந்த குறிக்கோளை உடைய தனிச் சிறப்பான ஒருவரை உலகுக் அளித்தது கிறிஸ்தவம் ஒன்றே. நற்குணச் செயல்கள் இவைகள் தான் எனச் சொல்லியதோடு நிற்காமல் தாமும் வாழ்ந்து காட்டிய இயேசுவுக்கொப்பாய் வேறு யாரையும் ஒப்பிட்டுச் சொல்ல இயலாது.

"மூன்று ஆண்டுகளில் அவர் செய்த முயற்சிகளையும் அவரது வாழ்க்கையையும், சாதாரணமாக எளிய நடையில் பாமரனும் விளக்கிக் கொண்ளும் வகையில் எழுதப்பட்டுள்ள அப்புனித நூலாகிய பைபிள், சித்தாந்திகளின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வேதாந்திகளின் அறிவு கொளுத்தும் பேருரைகளும் செய்ய இயலாதவைகளை உலக மக்களுக்கு அளித்துப் புதிய ஜீவனையும் இரக்கத்தையும்கொடுத்துள்ளது" (Histrory of Europeon Morals Part II P.89)

ஆங்கிலேயச் சித்தாந்தியரான ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர்: "கிறிஸ்து ஈடு இணையற்றவராக விளங்குகிறார். இவருக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் இவருக்கு ஒப்பாக மாட்டார்கள். இவருக்குப் பின் வந்த பெரியோர்களும் இவரைப் பின்பற்றுகிறவர்களும் இவருக்கு இணையாக மாட்டார்கள். சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட கிறிஸ்து என்னப்பட்டவர் உண்மையில் வாழ்ந்தவர் அல்ல என்றும், அவரைப் பற்றிப் போற்றுதற்குரிய செயல்கள் அவருடைய தொண்டர்களால் இடையே நுழைக்கப்பட்டவைகள் என்று தூற்றித் திரிவதில் பயன் இல்லை. இவரைப் போன்ற சமயச் சீர்திருத்தவாதி இதுவரை எவரும் இருந்ததில்லை. நாம் எடுத்த இயக்கத்திற்காகத் தமது உயிரையே கொடுத்தார். இவரல்லவா மக்களுக்கு வழிகாட்டி! ஒருவன் கிறிஸ்துவை நம்பாதவனாயிருந்தாலும், வாழ்க்கையை வாழவேண்டிய முறைப்படி வாழ விரும்புவானாயின் தனது வாழ்க்கையைக் கிறிஸ்து ஒப்பும்படி வாழ்வதே பொருத்தமானது ஆகும். வேறு வழியே இல்லை" (Nature and unilty of Religion and Theism P. 253-255)

சார்லஸ் டார்வின் என்பவர் :

"கிறிஸ்துவின் உபதேசங்களாலும் அவர் ஏற்படுத்திய மார்க்கத்தினாலும் நரபலி ஒழிந்தது. சிலை வணக்கப்பூசாரிகளின் ஆற்றல் ஒடுங்கிற்று. பொய்யும் குடி வெறியும் குறைந்தன. கடல் கடந்து வரும் என்னைப் போன்ற ஒருவன் இவைகளையெல்லாம் மறைப்பது அல்லது மறுப்பது நன்றி கெட்டத்தனமாகும். ஒருவன் ஏறிவந்த கப்பல் உடைந்து அவன் தான் அறியாத ஒரு கடற்கரையில் கரைசேர நேருமானால் அந்தக் கடற்கரைக்கும் கிறிஸ்துவின் போதனைகள் எட்டவேண்டும் என்று பக்தியுடன் வேண்டுக்கொள்வேன்." (Journal of Reseaches).

விஞ்ஞான மேதை தாமஸ் ஹாக்ஸ்:

"கடவுள் போதனையற்ற கல்வியையே நான் ஆதரித்து வந்திருக்கிறேன். எனினும், நல்நடத்தைக்குத் தேவையானது சமய உணர்வேயாகும். தாறுமாறான கருத்துக்கள் உலவி வரும் இந்நாட்களில் கிறிஸ்தவ வேதத்தைப் பயன்படுத்தாமல் சமய

உணர்வைப் பேணி வருவது எப்படியென்று தடுமாறிக் கொண்டிருக்கிறேன். கிறிஸ்துவை அறியாத அறநெறியாளர்களிடம் உயிரும் இல்லை. கவர்ச்சியும் இல்லை. பைபிள் முழுவதையும் படித்த பின்பு நன்கு சீர்தூக்கிப் பார்த்து தள்ளவேண்டியவைகளை எல்லாம் தள்ள விட்டாலும், அறநெறி அழகும் மாண்புறு சிறப்பும் பெருந்தியவை பின்னும் எவ்வளவோ நிற்கும்" (Contemporary review Dec. 1870)

சீன நாட்டுக்காரனான சியுங்சே என்பவர் :

"ஒரு காலம் வரும். அப்போது இறைவன் யாவற்றையும் புதுப்பிப்பார். அதிபர் அல்லது மேய்ப்பர் என்ற பொருள் கொண்ட பெயரையுடைய அவர் பரிசுத்தராகவும் உலகின் குருவாகவும் விளங்குவார்." (Discourses on Mythology-Ramsay P.150)

சீன நாட்டு ஞானியாகிய கன் ஃபூசியஸ் என்பவர் :

"மேற்கு திசையில் பரிசுத்தர் ஒருவர் தோன்றுவார். அவர் அரசு நடத்தாமலேயே சமாதானத்தை நிலை நாட்டுவார். வாயினால் சொல்லாமலேயே விசுவாசத்தை ஏற்படுத்துவார். அவருடைய நாமத்தை அறியார்கள். அவரே மெய்யான பரிசுத்தர் என்றார்." (Teachings of Confucious).

"வாடிய பயிர் மழையைத் தேடுவதுபோல மக்கள் இரட்சகரை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். (Ang Nich Etudes Phil.11:219-132)."

அல் சிபியோடெஸ் என்வபர் : ஒரு நாள் சாக்ரடீசிடம், "யாகத்திலே நாம் தெய்வத்திடம் கேட்க வேண்டியது எது? என்று கேட்க, அதற்குச் சாக்ரடீஸ், "யாதொன்றையும் கேட்காமல் பொருத்திருப்பதே நலம். தெய்வத்தினிடத்தும் மானிடரிடத்தும் நாம் எப்படி நடந்து கொள்வது என்பதை அவர் வந்து நமக்குப் போதிக்கும் வரை நாம் தாமதிப்பது நல்லது" என்கிறார். (Alcibiades....II Dial) இது நடந்தது கி.மு. 5ம் நூற்றாண்டு.

இவர்கள் யாவரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல. ஞானிகள், சரீத்திரப்பேராசிரியர்கள். ஆயினும் கிறிஸ்து இயேசு இல்லாமல் வாழ்வு இல்லை என்பதைச் சூசகமாக அறிவித்திருக்கிறார்கள். இனி இந்திய நிலையில் கிறிஸ்துவுக்கு

முன்பு எழுதப்பட்ட வேதங்களாகிய ரிக், யாஜீர், சாமம் ஆகிய வேதங்களும், உபநிஷத்துக்களும், பிராமணங்களும், ஆரண்யகங்களும், ஆகமங்களும் என்ன சொல்லுகின்றன என்று ஆராய்வது நல்லது.

வார்த்தை

வேதாந்தமும், வேதாகமுமாகிய பைபிளும் இறைவனை வார்த்தை என்று ஏற்றுக்கொள்கின்றன. அந்த பிரணவமே சகலமும் உண்டாவதற்குக் காரணமாயிருந்தது என்பதில் எவ்வித வித்தியாசமும் காணப்படவில்லை.

வாக்யோ வைப்ரம்மா - வார்த்தையே கர்த்தர்

(பிருஹதாரண்யக உபரிஷத்து 1,2,21,41,2) ஷப்தோ ப்ரஹ்மா - வார்த்தையே கர்த்தர் (பிரம்மவிந்து உபநிஷத்து 17)

ஷப்தாக்ஷர பரப் ப்ரம்மா
வார்த்தையே அழியாத நித்ய தேவன் (பிரம்மவிந்து உபநிஷத்து 16)

சகலமும் உண்டாவதற்குக் காரண கர்த்தர் வார்த்தையே (ரிக் வேதம் 10.125)

பிரணவம் என்பது, அ, உ, ம், அர்த்தம், நாதம், பிந்து, கலை, கலாதீதை, ஷாந்தி, ஷாந்திய தீதை, உண்மணி, மனோன்மணி, மத்யமை, புரி, பச்யந்த்தி, பறை என்ற பதினாறு தத்துவங்களால் அடங்கியதெனினும் அ, உ, ம் என்ற முதல் மூன்றெழுத்துக்களே பிரணவத்தைக் குறிக்கும் அக்ஷரங்களாகக் கொள்ளப்படுக்கின்றன.

அ, என்றால் சிருஷ்டி கர்த்தர் என்றும், உ என்றால் இரட்சிக்கிறவர் என்றும், ம் என்றால் சேர்க்கிறவர் என்றும் பொருள்படும். சிருஷ்டி கர்த்தர் இரட்சகராக வந்து மனித ஆத்மாக்களைத் தம்முடன் பேர்த்துக் கொள்வார் என்பது இதன் விளக்கமாகும்.

அர்த்தம் என்றால் பொருளை விளங்க வைப்பவன் என்றும் நாதம் என்றால் சப்தவடிவானவன் என்றும் பிந்து என்றால் ஜீவனைத் தரும் வித்து என்றும் கலை என்றால் செயலாற்றுபவன் என்றும் கலா தீதை என்றால் செயலாற்றும் தன்மையை அளிப்பவன்

என்றும் ஷாந்தி என்றால் சமாதானம் என்றும் ஷாந்தியா தீதை என்றால் சமானாத்தை அருளுபவன் என்றும் உண்மணி என்றால் உள்ளத்தில் உறைபவன் என்றும் மனோன்மணி என்றால் மனதின் நாயகன் என்றும் மத்யமை என்றால் மத்யஸ்தன் என்றும் புரி என்றால் மேலிருந்து கீழே இறங்குபவன். கீழிருந்து மேலே ஏறுபவன் என்றும் பச்யந்தி என்றால் பட்சபாதமற்றவன் என்றும் பறை என்றால் அறிவிப்பவன் என்றும் பொருள் படும்.

ஆயினும் இப்பதினாறு தத்துவங்களில் அ, உ, ம் என்ற மூன்றெழுத்துக்களை நாபியின் மூலம் உள்ளே இழுத்து முச்சையடக்கி வெளியேற்றும்போது அ உ ம் என்ற ஓசை வெளியேறும்.

ஆதியிலே வார்த்தை வடிவாயிருந்த ப்ரணவ மூர்த்தி அல்லது பரப்பிரம்மம், சகுண பிரம்மமாக மாம்சத்தில் வெளிப்படும் போது இரட்சகனாகக் காணப்படுவார். தமது ஜனங்களை இரட்சித்துத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும் ஆபத் பாந்தவனாக இருப்பார்.

பரபிரஹ்மா வாகிய இறைவன் தானே இவ்வுலகின் கண்வந்து தம்மை வெளிப்படுத்தாவிடில் பாபமனிதன் அவரைக் காண்பதென்பது இயலாத காரியம். இதைக் குறித்து சிவஞான போதம் இரண்டாம் அதிகரணத்தில்:

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் எந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர் நிழல் போல்-இல்லா
அருவாகி நின்றானை ஆரறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று

என்று விளக்குகிறார்.

சேயின் பால் அன்பு சுரக்கும்போது அவ்வன்பினால் தனக்குள் இருப்பதை அறியாத நிலையில் அத்தாய் அன்பின் காரணமாக முலைப் பாலையும் கண்ணீரையும் வெளிப்படுத்தி தன் அன்பைப் காட்டுகிறாள். அதுபோல, உருவமே இல்லாத இறைவன் நம்மீது வைத்த அன்பினால் தன்னை வெளிப்படுத்தி

காட்டாவிட்டால் அருவாகிய அவனை நாம் எப்படி காண இயலும்? என்பதே இச்செய்யுளின் பொருளாகும்.

மேலும், சிவஞான சித்தியர் - சுபக்கம், பிரமாணவியல் என்ற பகுதியில்

அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக்
குணர்த்திங் கென்னின்
அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்குள்ளவாமே

என்று விளக்கம் தருகிறார்.

அருவமாகிய இறைவன் உருவரூபமாக ஆனதுமின்றி அப்வுருவ ரூபத்தில் வந்த இறைவன் தானே கர்த்தா என்று உரைத்து உண்ர்த்தி அரு(பிதா) உரு (சுதன்) அருவுரு (ஆவி) ஆகிய மூன்றும் ஒருவனுக்குள்ளே என்பதாகும்.

இறைவனுக்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை என்று சித்தாந்திகள் சொல்லுவார்கள். ஆனால் சித்தாந்திகளுள் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் அவர்கள்.

அருவுரு என்று பொருளை ஆயின்
மாயா வுருவினன் மாயா வுருவினை ஏயான்
ஏய்ந்த தவர் எம்மனோரே

என்றும்

இறவா இன்பத்துள் எமை இருத்தல் வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்தான்

என்றும், இறைவன் உலகில் மனிதனாகப் பிறந்த வரலாற்றினையும் சொல்லியிருக்கிறார்கள்.

ப்ரணவ மூர்த்தியாகிய ப்ரஜாபதி, புருஷனாக (மனிதனாக) உலகில் வரவேண்டிய அவசியத்தை ரிக் வேதமும் சொல்லுகிறது.

புருஷோஹி ப்ரஜாபதி (மத்யாந்தினிய ஸத்பா பிராமணம் VII 4:1,15) என்பதின் மூலம் ப்ரஜாபதியாகிய மக்களின் தலைவன்

(இறைவன்) புருஷ ரூபம் கொண்டு இவ்வுலகில் பிறக்க வேண்டும். அப்படியாயின் அவர் தாய் இல்லாமல் எப்படிப் பிறப்பார்? என்ற கேள்வி எழுந்தமையினால் இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் வைத்து மாதொருபாகனாகச் சித்தரித்து அம்மையப்பனாக்கி அவர்களுக்கு மகன் பிறந்தார் என்று பிற்காலத்தில் புராணக் கதைகளை எழுதி வைத்தனர்.

தான் உருவமாகி வரப்போவதைச் சொன்ன அவருக்குள்ளேயே தந்தை தாய், பிள்ளை என்ற மூன்றும் இருப்பதை உணராதவர்கள் கடவுளுக்கு மனைவி, பிள்ளைகளைக் கற்பனை செய்து விட்டனர்.

தனக்குத் தானே மகனாகிய தத்துவம்
தனக்குத் தான் ஒரு தாவருங் குருவுமாய்
தனக்குத் தான் அருள் தத்துவம் கேட்டதும்
தனக்குத்தான் நிகரினான் தழங்கி நின்றாடினான்
(கந்தர் அனுபூதிப் பாடல்)

என்றபடி இறைவனே தந்தை, தாய் பிள்ளை என்ற மூவொரு தெய்வமாகிறார்.

பைபிளில் தேவன் தந்தையாகவும், தாயாகவும், குமாரணாகவும் சித்தரிக்கப்படுகிறார். பரிசுத்த ஆவி என்பது ஆண் பாலுமல்ல, பெண் பாலுமல்லாதலால் அதைச் சக்தியாக வைத்துப் பெண்பாலாக்கினார் போலும், ஏனெனில் பைபிள் சொல்லுகிறபடி, பரிசுத்த ஆவியானவர் தேவனுயை சித்தத்தின்படி கருவாகி உருவாகிறார். இக்காரியத்தை ஏற்றுக்கொண்ட கன்னிகையாகிய மரியாள், உம்முடைய வார்த்தையின் படியே எனக்கு ஆகக் கடவது என்று சொல்லி ஆண்டவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டாள். அந்த வார்தை ஆதியில் தேவனாயிருந்தார். தேவனோடிருந்தார். அந்த வார்த்தை மாமிசமானார்.

இயேசுக் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பதாகவே சுமார் 850 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா என்ற முனிவரின் மூலமாக, "ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்

பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசாயா 7:14) என்று வெளிப்படுத்தினார். மேலும் நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்க கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்ய பிதா, சமாதானப் பிரவு எனப்படும் (எசாயா 9:6) என்பதாக அந்த முனிவரே சொல்லியிருக்கிறார்.

திருக்குரானிலும் மரியம் (மரியாள்) என்ற கன்னிகையின் வழியாக ஈசா (இயேசு) பிறந்தார் என்று காணப்படுகிறது.

சுமார் கி.பி. 7ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பவிஷ்ய புராணம் என்னும் நூலில் ப்ரதிஸர்க்கபர்வம் பரத் காண்டத்தில் சாலிவா கனன் என்ற மன்னன் தன் நாட்டை விட்டு ஹீன்தேஷ் (பாலஸ்தீனம்) என்ற நாட்டிலுள்ள மிலேச்சர்களாகிய பொல்லாதவர்களை ஒழிக்கும் பொருட்டுச் சென்றபோது, அங்கே ஒரு பரிசுத்தவான் மூலம் இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து: "அவர் வெண்ணுடை தரித்தவர், வல்லமையுள்ள ராஜா, பாவமில்லாதவர், தேவகுமாரன், கன்னியின் கருவில் பிறந்தவர் (குமாரி கர்ப்பஸம்பவமு)" என்று கேள்விப்பட்டதாகவும் காணப்படுகிறது.

பாவமில்லாதவர்

எனவே, வார்த்தையாயிருந்த தேவன் மனித ரூபங் கொண்ட வரலாறு சமஸ்கிருத வேதங்களிலும் காணப்படுகிறது. அப்படிப் பிறந்த தேவன் மனிதனுக்குரிய நிலையில் பாவங்களற்ற பரிசுத்தனாகக் காணப்படவேண்டும்.

தேவன் பரிசுத்த மனிதனாகப் பூமியில் வந்த செயலைத் திருமூலர் என்ற தமிழ் சித்தர்:

நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓர் இலை
நீரிலே நின்ற வாறும் நீரில்லாதவாறு போல்
பாரிலே முளைத் தெழுந்தப் பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே

என்று விளக்கம் கொடுத்தார்.

தண்ணீரிலே முளைத்துத் தண்ணீரிலே வளர்ந்து தண்ணீரிலே நிற்கும் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போல, பாபபூமியில் பிறந்தாலும் இறை மனிதனாகிய கடவுளிடம் பாபம் இல்லை என்கிறார்.

பாபமற்ற தெய்வமாகக் காட்சியளிக்கிறவர் யார்? புராணக் கதைகளிலும் இதிகாசக் கதைகயிலும் கூறப்படுகின்ற கடவுள்கள் யாவரும் மனிதர்களைப் போலவே காமம், குரோதம், வஞ்சகம், களவு, பொய் ஏமாற்றுதல், கடத்தல், கற்பழித்தல், பலதாரமணம் போன்ற காரியங்களில் ஈடுபாடுடையவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட கடவுளர் பெயர்கள் ஆதி வேதங்களாகிய ரிக், யஜீர் ஆகியவைகளில் காணப்படவில்லை.

ஞான வெட்டியான் என்ற தமிழ் சித்தர் :

கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது
காம குணலீலை முதலான தேது
கடவுளுக்கு பகடி சீட்டுத் தாயமேது
காடுகளில் வேட்டைக்குத் திரிவதேது
கடவுளுக்குக் காமிகளின் தொழில் இல்லை
காருண்யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம்

என்று பாடிவைத்தார்.

கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டிய அவசியத்தைச் சொல்லும் அதே வேதங்கள் அவர் பரிசுத்தராகப் பாபமில்லாதவராக, பாபம் அறியாதவராக, பாபம் செய்யாதவராக இருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறது.

“என்னில் குற்றம் உண்டு என்று உங்களில் யார் சொல்லக் கூடும்” என்று இயேசு கேட்ட கேள்விக்கு இது வரைக் குற்றம் சுமத்தினவர்கள் ஒருவரும் இல்லை. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்த பிலாத்து அரசனும் (இந்த நீதிமான்மேல் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை) என்றே சொன்னார்.

பிலாத்துவின் மனைவியும் தன் கணவரிடம் அந்த நீதிமானை ஒன்றும் செய்து விடாதிருக்கும்படி விண்ணப்பித்தாள்.

சிலுவையில் தொங்கிய இயேசுவின் மரணத்தைக் கண்ணுற்ற ரோமப் போர்த்தலைவன், "இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன்" என்று அறிக்கையிட்டான்.

யூதமதத் தலைவர்கள் இயேசுவின் மேல் குற்றம் கண்டுபிடிக்கும்படி முயற்சித்தும் தோல்வியடைந்தார்கள்.

கிறிஸ்துவும் கிருஷ்ணனும்

சிலர் கிறிஸ்துவையும் கிருஷ்ணனையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இரண்டு வார்த்தைகளிலும் "கிறிஸ்" என்று வருவதால் அப்படிச் சொல்லுகிறார்களோ என்னவோ?

கிறிஸ்து பிறந்தபொழுது அனேகக் குழந்தைகள் கொல்லப்பட்டனர். அதேபோலக் கிருஷ்ணன் பிறந்தபொழுதும் அனேகக் குழந்தைகள் கொல்லப்பட்டனர். கிறிஸ்துவை எரோது என்ற அரசன் கொல்ல நினைத்தான். கிருஷ்ணனை கம்சன் என்ற அரசன் கொல்ல நினைத்தான். கிறிஸ்து எரோதின் சதித் திட்டத்திற்கு தப்பி வேறு நாட்டுக்குக் கொண்டுபோகப் பட்டார். கிருஷ்ணனும் கம்சனின் சதிக்கு தப்பும்படி வேறு இடத்திற்கு கொண்டுபோகப்பட்டார், கிறிஸ்து சாத்தானாகிய வலுசர்ப்பத்தின் தலையை மிதித்தார். கிருஷ்ணனும் ஐந்து தலை சர்பத்தின் தலையில் நடனமாடினார். இப்படி ஒரு சில காரியங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கிறவர்கள் வேறு சில காரியங்களையும் யோசிக்க வேண்டும்.

- கிறிஸ்து சரித்திர நாயகன்
  கிருஷ்ணன் இதிகாசக் கதையில் வரும் கதா நாயகன்
- கிறிஸ்துவைக் குறித்துப் பழைய வேதங்களில் முன் குறிப்பு உண்டு
  கிருஷ்ணனைக் குறித்துப் பழைய வேதங்களில் எவ்விதக் குறிப்பும் கிடையாது
- கிறிஸ்து முதற்பேறானவர்
  கிருஷ்ணன் எட்டாவது பிறந்தவர்
- கிறிஸ்து கன்னியின் கருவில் பிறந்தவர்
  கிருஷ்ணன் தேவகிக்கும் வசுதேவனுக்கும் பிறந்தவர்.

❖ கிறிஸ்து பாபமற்றவர்

கிருஷ்ணன் சகல லீலைகளையும் செய்தவர்

❖ கிறிஸ்து தமது மரணத்தைக் குறித்து முன் அறிந்து அதன்படியே மரித்து உயிர்த்தெழுந்தார்.

❖ கிருஷ்ணன் தன் மரணத்தைக் குறித்து அறியாமல், ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் போது ஒரு வேடனால் அம்பெய்தப்பட்டு மரித்தார். கிருஷ்ணன் மரித்து உயிர்த்தெழுந்ததாக சொல்லப்படவில்லை...

❖ கிறிஸ்து பாபிகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுத்தார்.

கிருஷ்ணன் பாபிகளை அழித்துத் தேவர்களுக்கு உதவி செய்ய வந்தார்.

எனவே கிறிஸ்துவும் கிருஷ்ணனும் ஒன்றாக இயலாது.

பிரஜாபதி

பிரஜாபதியாகிய தெய்வம் மனிதனாகக் கன்னியின் கருவில் உதித்து உலகிற்கு வரவேண்டிய அவசியம் என்ன?

ஆதிமுதல், இறைவனை அறியமுயன்ற யாவருமே தங்களைப் பாபிகள் என்றே அறிக்கை செய்தார்கள். ஆபிரகாம் தன்னைச் சாம்பல் என்றார். தாவீது தன்னை ஒரு புழு என்றார். ஏசாயா தன்னை அசுத்த உதடுள்ள மனுஷன் என்றார்.

அதேபோல ரிக்வேதகால முனிவர்களும் தங்களைப் பாபிகள் என்றும் கடவுள் தங்களை மன்னிக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்தனர். (ரிக்வேதம் 7.89.2, 2.27.5, 7.86, 27)

ஏனெனில் ஆதி சமஸ்கிருத வேதங்களில் பாபங்களை மன்னிக்கும், அல்லது அழிக்கும் கடவுளாக பிரஜாபதி காட்டப்படுகிறார். அவர் **பாப்நுதம்** என்றே அழைக்கப்படுகிறார். (பாபத்தை அழிக்கிறவர்-ஸ்வேதாஸ்வ தார உபநிஷத்து 6.55)

புருஷனே பலியாவர் (புருஷோவாவயக்ஞம் : சாண்டோக்ய உபநிஷத்து 3.16.1)

பிரஜாபதியே பலி (பிரஜாபதி யக்ஞும் : சத்ப தா பிராமணம் 1.13,4:15)

ரிக் வேதம் 10.121ல் சொல்லப்பட்டவரும் உலகம் உண்டாவதற்கு மூலகாரணருமான பிரஜாபதியும் பிரஹத் ஆரண்யக உபநிடதம் 1.4.1ல் சொல்லப்பட்ட இருக்கிறவராய் இருக்கிற அஹ்மஸிம் என்பவருமான கடவுள் பிருகதாரண்யக உபநிஷத்து 1.2.7ல் பிரஜாபதி புருஷன் உலகத்தையும் அண்ட சராசரங்களைய் உருவாக்கினார் (ரிக்வேதம் 10:121)

அஹ்மஸிம் என்ற புருஷன் இருக்கிறவராய் இருக்கிறார் (ப்ருகதாரண்யக உபநிஷத்து 1.2.7) பிரஜாபதி புருஷன் தன்னையே யாகத்தில் பலியிட ஒரு சரீரம் வேண்டும் என்று விரும்பினார். (ரிக் வேதம் 10:121:10) அச்சரீரத்தைப் பலியாக்கும்படித் தேவர்களிடம் ஒப்படைத்தார்.

அண்ட சராசரங்களைப் படைத் விஷ்வகர்மாவாகிய பிதா தன்னையே "ஹவன" என்னும் சர்வாங்க தகன பலியாக உலகம் தோன்றுகையில் ஒப்புக்கொடுத்தார்.

புருஷனாகிய கடவுள் (மனித தெய்வம்) ஒரு சரீரம் எடுத்து அதை பலி செலுத்துவதற்கு ஒப்புக்கொடுத்தார் (ரிக் வேதம். 10.90.6, ஸ்வேதாஸ்வதார உபநிஷத்து 38:9. கதா உபநிஷத்து 4.13)

(பிரஜாபதி, விஷ்வகர்மா, புருஷன் போன்ற பெயர்கள் யாவும் கடவுளைக் குறிக்கும் பொதுப் பெயர்களாகும்.)

ரிக் வேதம் 10.133.6ல் எங்களிலுள்ள பாபங்களை எடுத்துப்போடும் என்று ரிஷிகள் தெய்வத்திடம் வேண்டுதல் செய்வதைக் காணலாம்.

பாபங்களிலிருந்து மனுமக்களை விடுவிக்க இறைவன் பலியாக வேண்டுமென்கிற கருத்து பைபிளின் பழைய ஏற்பாட்டிலும், ரிக், யஜுர் வேதங்களிலும், ஆகமங்களிலும், உபநிஷத்துக்களிலும், ஆரண்யகங்களிலும் ஏராளமாய் காணக் கிடக்கின்றன. அப்படிப் பாபிகளுக்காகத் தன்னையே பலியாக்கின தெய்வம் யார்? என்று அறிந்து அவருக்கே தன் வாழ்வை அர்ப்பணித்து வாழ்வதே சரியான மனிதவாழ்வாகும்.

அதிகாரம் - பன்னிரெண்டு

பலியும் பாவ நிவாரணமும்

இறைவன் பலி மூலமாகப் பாவ நிவாரணம் அருளுகிறவரானால் அவர் இரத்தப் பிரியரா என்ற கேள்வி எழுகின்றது. பைபிள் சொல்லுகிறவடி,

விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப் போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் பாபத்திற்கு அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டு இருந்தோம். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்கள் அல்லவே? (கலாத்தியர் 3:23-25)

நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக, லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அது மனுஷர்ககளின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதே அல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினது அல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் (இயேசுவுக்குள்) வாசமாயிருக்கிறது. அவைகள், வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது. (கொலோசெயர் 2:7, 8,9,17)

எனவே, பழைய ஏற்பாட்டுக் காலத்தில், பாபத்தினால் மனுக்குலம் தேவனை அறிய இயலாதபடி தேவனை விட்டு பிரிந்து நிற்கையில், பூர்வ காலங்களில், பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் (இயேசு கிறிஸ்து) நமக்குத் திருவுளம் பற்றினார்.

அப்படியானால், பாபத்தினால் இறைவனை விட்டுப் பிரிந்து நின்ற மனிதன் எப்படி வாழ்ந்தான்? என்று கேட்டால், பாபம் மனிதனை வீழ்த்தியபோது அவன் ஆன்மா செத்ததேயொழிய அவன் சாகவில்லை.

பைபிளில் ஆதாம் என்ற முத்தி முதற் கொடியாகிய மனிதனுக்கு இறைவன் ஒரு கட்டளையைக் கொடுத்தார். தான் சிருஷ்டி கர்த்தா, மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவன், தனக்கு மனிதன் கீழ்ப்படிந்திருக்கிறான் என்று விளக்குவதற்காக இறைவன் மனிதனுக்கு ஒரேயொரு கட்டளையைக் கொடுத்திருந்தார். ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை மட்டும் அவன் புசிக்கக் கூடாது என்பதே அக்கட்டளை. அப்படி அவன் புசித்தால் சாகவே சாவான் என்று ஆண்டவர் சொல்லியிருந்தார். ஆனால் ஆதி மனிதன் அதைப் புசித்த பின்பும் வாழ்ந்தான். செத்தது ஆன்மா, வாழ்ந்தது புலன்களுடன் கூடிய உடல்.

மனிதனுடைய வீழ்ச்சியிலும் இறைவனே அவனை ஆட்சி செய்கிறார். இதைக் குறித்த சிவஞான போத சூத்திரம் நன்றாக விளக்குகிறது.

அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைந்தே
(4ம் சூத்திரம்)

பொருள் :

ஆன்மாவானது பாபத்தினால் உணர்வற்று செத்த நிலையில் இருந்த போதிலும் அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கும் மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐந்து புலன்களினூடாக மனித வாழ்க்கையை நடத்தி வருகிறது. பற்றுவது மனம். சிந்திப்பது புத்தி, துணிவது அகங்காரம், செயல்படுவது சித்தம். இது எப்படியெனில் செயலிழந்து கிடக்கும் அரசனுடைய நாட்டை அமைச்சர்கள் நிர்வகித்து நடத்துவதற் கொப்பானது போல் என்கிறார்.

ஐம்புல வேடரின் அயந்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த் தவிட்டு
அன்னியம் இன்மையில் அரன் கழல் செலுமே
(8ம் சூத்திரம்)

ஆன்மா அயர்ந்து கிடக்கும் நிலையில் அதை உணர்த்த இறைவன் தன்னுயிர் தானறப் பெறுதலாகிய தவக்கோலத்தில் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகி நின்ற சிவந்தோனாய், இறைவனுடன் மனித ஆன்மாவைச் சேர விடாமல் தடுத்து நின்ற மும்மல பாபங்களையும் தானே வலியத் தழுவிக் கொள்ளத் தவக் கோலத்தில் நோன்பு நோற்று, சிவந்த மலர் போலச் சிவந்து நின்ற பாதத்தையுடையவனாகிய அன்புள்ளம் கொண்டோனாய், இறைவன் நமக்காகச் சரீரம் எடுத்துப் பலியாதலை விளக்கும் சூத்திரம்:

செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே
(12ம் சூத்திரம்)

இப்படி பலியான இறைவனின் அன்பையுணர்ந்து அன்பு மேலிட அவ்விறைவனுடன் ஒன்றறக் கலந்து விட்டால் உலக மயக்கம் நீங்கி அவ்விறைவனின் சாயலைத் தரித்து, நம் உடலை ஆலயமாகவும் அதில் அவரை இறைவனாகவும் கொள்ளலாம் என்று முடிக்கிறார் மெய் கண்டார்.

திருநாவுக்கரசருடைய பாடல் ஒன்று பலியை உறுதிப்படுத்துகிறது.

....அவியாய் அவியுமாகி
அருக்கமாய் பெருக்கமாகி
பாவியர் பாபம் தீர்க்கும்
பரமனாய் ப்ரம்மமாகி.....என்பதே! (அவி=பலி)

எனவே, இறைவனின் பலயின்றி ஆன்மாவின் பாவங்கள் போக வழி இல்லை என்றாகிறது. இப்பலியைக் குறித்துப் பைபிளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களையும் இந்திய வேதமாகிய ரிக் வேதத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களையும் ஒப்பு நோக்கினால், இது எவ்வளவு பெரிய உண்மை என்பது விளங்கும்.

ஆதிப் பெற்றோர் ஆணவம் கன்மம் மலம் மாயை என்ற கீழ்ப்படியாமையின் பாவத்தில் வீழ்ந்த போதே ஆண்டவர்

பலியாவதைக் குறித்து சூசகமாகக் காட்டுவதைக் காணலாம்.

> தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன்
> மனைவி ஏவாளுக்கும் தோல் உடைகளை
> உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.
> (ஆதியாகமம்.3:21)

இதிலிருந்து, ஆரம்பத்திலேயே ஒரு மிருகம் பலியாக்கப்பட்டதைக் காணலம்.

உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளிப்படுத்தல் 13:8) என்று, இயேசுக் கிறிஸ்து உலகம் தோன்றும் பொழுதே பலியாக்கப்பட்டதை உணரலாம். ஆனால் அப்பலி மாம்சப் பிரகாரமாக நிகழ வேண்டும். அதற்கு ஆண்டவர் எடுத்துக் கொண்ட காலங்கள் அனேகம். காலம் நிறைவேறின போது அவர் வந்து, உலகின் பாபங்களுக்காய் உருக்குலைந்து பலியாகி, அவரை ஏற்றுக் கொள்கிறவர்களின் உயிரில் உயிராய்க் கலந்து நிற்கிறார் என்பதே வேதங்கள் கூறும் விளக்கங்களாகும்.

ஆதிப்பெற்றோருக்குப் பின் பாபசந்ததியிலிருந்து தேவன் நோவா என்பவரின் குடும்பத்தைத் தெரிந்து கொள்கிறார். இந்த நோவா தனக்குரிய உள்ளுணர்வினால் உந்தப்பட்டவனாக இறைவனுக்குப் பலிபீடம் கட்டி, சுத்தமான சகலமிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான் (ஆதியாகமம். 8:20)

பின்பு நோவாவின் வழித்தோன்றலான ஆபிரகாம் இறைவனுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி அவருடைய நாமத்தைத் தொழுது கொண்டார் (ஆதியாகமம் 12:8) என்றும் காணலாம். இறைவனின் நாமம் என்ற என்று அப்பொழுது அவருக்குத் தெரியாது. சர்வ வல்லமையுடைய இறைவன் என்பதாகவே தொழுதிருக்க வேண்டும். (யாத்திரையாகமம் 6:3 காண்க)

தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஆபிரகாம் தேவ கட்டளைப்படி தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி மலைமேல் ஏறிச் செல்கிறார். (ஆதியாகமம் 2:1,2) தேவன் தமது ஒரே பேறான

குமாரனை உலகின் பாபங்களுக்குக்காகப் பலியாக்கப் போவதை இது முன்குறிக்கும் நிழலாய் உள்ளது.

ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கும் யாக்கோபும் பலி செலுத்தினார்கள். யாக்கோபின் சந்ததியார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தபோது, இறைவன் அவர்களை மீட்டுக் கொண்டார். இந்த மோசே எகிப்து தேச அரசனாகிய பார்வோனிடம்:

> எபிரேயருடைய தேவன் எங்களைச் சந்தித்தார்
> நாங்கள் வனாந்திரத்தில் போய் எங்கள் தேவனாகிய
> கர்த்தருக்குப் பலியிடும்படிப் போகவிட வேண்டும்
> (யாத்திரையாகமம் 5:3)

என்று கேட்டார். பார்வோன் அவர்களைப் போகவிடாதபடித் தடுத்தபோது, இறைவன் மோசேயிடம், விட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பழுதற்ற ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொண்டு, அதைப்பலிசெலுத்தி அதன் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து வீட்டில் நிலைக் கால்களிலும் மேற்சட்டத்திலும் தெளிக்கும் படியாகவும், அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியின் இறைச்சியைப் புசிக்கும் படியாகவும் கட்டளை கொடுக்கிறார்.

இந்தப் பலியின் மூலமாக எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலராகிய யாக்கோபின் சந்ததியார் விடுதலை பெற்று வந்தது, உலகின் பாபத்திலிருந்து ஜனங்கள் விடுதலை பெறுவதின் முன் அடையாளமாயிருக்கிறது.

இந்த பலியின் அவசியத்தை இறைவன் நித்திய நியமமாக மாற்றி, வழிபடும் முறைமைகளை வகுத்துக்கொடுக்கிறார். பலி செலுத்துவதற்கு மாடு, ஆடு அல்லது பசு ஆகிய மிருகங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். (லேவியராகமம் 1:2,3 எண்ணாகமம்.19:2)

சர்வாங்க தகன பலி, போஜன பலி, பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி, பிரதிஷ்டைபலி, சமாதான பலி, அசைவாட்டும் பலி, என்ற ஏழுவிதமான பலிகளை இறைவன் ஏற்படுத்தினார். இதற்குரிய பிரமாணங்களும் கட்டளைகளும் லேவியராகமம்

முதலாம் அதிகாரம் தொடக்கம் எட்டாம் அதிகாரம் 28ம் வசனம் வரை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆலயத்தில் ஆசாரியர் (பூசாரிகள்) திருப்பணிவிடை செய்வது குறித்து யாத்திரையாகமம் 28,29 ஆகிய அதிகாரங்கள் சொல்லுகின்றன.

ஆசாரியனின் விநோதமான உடை, நெற்றிப் பட்டம், நிர்வாணம் காணப்படாதபடிக்கு அணிய வேண்டிய இடைக்கச்சை, சல்லடங்கள், அபிஷேக தைலம் போன்றவைகளைக் குறித்த பிரமாணங்களை இங்கே கண்டறியலாம். மற்றும் ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திலே (மூலஸ்தானத்தில்) ஆராதனை செய்யப் பிரவேசிக்கும் போதும், வெளியே வரும்போது, அவன் சாகாதபடிக்கு மணிசத்தம் கேட்கப்பட வேண்டும் (28:35) என்ற கட்டளையும் உண்டு.

நமது நாட்டிலுள்ள இந்துமதக் கோயில்களில் பூசாரி மூலஸ்தானத்திற்குள் ஆராதனை செய்யும்போதும் வெளியே வரும்போதும் மணியடித்துக் கொண்டே வருகிறார்கள். நெற்றிப் பட்டம் கட்டுகிறார்கள், நிர்வாணம் காணப்படாதபடிக்குச் சல்லடம் அணிந்து அதன்மேல் தார் பாய்ச்சிக் கட்டுகிறார்கள். அபிஷேகம் செய்யவேண்டிய நெய், பால், எண்ணெய், ஜலம் ஆகியவற்றை ஆயத்தம் செய்கிறார்கள். இவைகளையெல்லாம் இப்படித்தான் செய்யவேண்டும் என்று இந்தமத வேதங்களில் எதாவது ஒன்றாகிலும் குறிப்பிடுகிறதா? அப்படியில்லை எனில் இப்பழக்க வழக்கங்களை எங்கிருந்து பெற்றார்கள் என்பது ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியது.

ஒருசில காலம் பலிசெலுத்தும்படிச் சொன்ன தேவன் பின்பு தீர்க்கதரிசிகளின் காலத்தில் பலி வேண்டாம் என்றும் சொல்லுகிறார்.

உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்திற்கு என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆட்டுக்கடாக்களின் தகன பலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாய் இருக்கிறது. காளைகள் ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின் மேல் எனக்குப் பிரியமில்லை. நீங்கள் என் சந்நிதியில் வரும்போது என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று

உங்களிடத்தில் கேட்டது யார்? (ஏசாயா 1:11-12)உன் வீட்டிலிருந்து காளைகளையும் உன் தொழுவங்கலிருந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை. சகல காட்டு ஜீவன்களும் பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த்திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள், நான் பசியாய் இருந்தால் உனக்குச்சொல்லேன். நான் எருதுகளின் மாம்சம் புசித்து ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ? (சங்கீதம் 50:9-13)

பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பிவிலலை சர்வாங்க தகன பலியையும் பாப நிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை. (சங்கீதம் 40:6) மேற்கண்ட வசனாங்கள் யாவும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு சுமார் 850 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனமான வார்த்தைகளாகும்.

பலிசெலுத்தும் உணர்வைக் கொடுத்த தேவன். பலி செலுத்தச் சொன்ன தேவன், பலிசெலுத்தும் முறைமைகளை வகுத்துச் சொன்ன தேவன், பலி செலுத்துவதற்கான மிருகங்களைத் தெரிந்து கொண்ட தேவன், இப்போது அவைகளை வேண்டாம் என்று சொல்லக் காரணம் என்ன? பலி இல்லாமல் பாபம் போக வழி இல்லை என்பதைச் சூசகமாக ஆதிமுதல் காண்பித்து வந்த தேவன், முடிவில் தாமே பலியாகப் போவதால் இனி மிருக பலி தேவையற்றது என்பதை வெளிப்படுத்தவே இப்படிச் சொன்னார்.

தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். இதோ புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதப்படிருக்கிறதே! இதோ வருகிறேன் (சங்கீதம் 40:7,8) என்று இறைவன் சென்னார். ஆரம்ப காலத்தில் மிருக பலிகள் அனுமதிக்கப்பட்டாலும் இறைவன் அதை நிறுத்தித் தன்னையே பலியாக்கிப் பாப நிவாரணம் அளிப்பதைப் பைபிளிலும் ரிக் வேதத்தில் சூசகமாகவும் காணலாம்.

பலியாக்கப்பட வேண்டிய மிருகத்தைக் குறித்து பைபியின் பழைய ஏற்பாடு சொல்வது குறித்து.

1. பலி மிருகம் பழுதற்றதாக இருக்க வேண்டும் (யாத்திரையாகமம் 12:5, லேவியராகமம் 1:10, 3:1,6)

2. அதின் தலையில் ஜனங்களின் பாபங்கள் சுமத்தப்பட வேண்டும். (லேவியராகமம் 16:21)
3. அதைக் குடியில்லாத தேசங்களுக்கு அனுப்பவேண்டும். வனாந்திரத்திலே போக விடவேண்டும் (லேவியராகமம். 16:22)
4. அதைக் கொண்டுபோய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டவேண்டும். (சங்கீதம் 118:27)
5. அதின் இரத்தத்தைச் சிந்த விடவேண்டும். (லேவியராகமம் 1:11, 15, 3:8)
6. அது வாய் திறவாமல் மௌனமாகத் துன்பங்களைச் சகிக்கவேண்டும். (ஏசாயா 53:7)
7. ஒரு எலும்பும் முறிபடக்கூடாது (யாத்திரையாகமம். 12:46)
8. அது பலி செலுத்தப்பட வேண்டும். (யாத்திரையாகமம் 12:6, லேவியராகமம்.3:2)
9. மீண்டும் உயிருடன் எழும்ப வேண்டும் (சங்கீதம் 16:10)
10. அதன் மாமிசம் புசிக்கப்பட வேண்டும் (யாத்திரையாகமம் 12:9)

இப்படியாக ஆகமங்களிலும், பிரமாணங்களிலும், தாவீதின் சங்கீதங்களிலும் பலியைக் குறித்தான தீர்க்க தரிசனங்கள் காணப்படுகின்றன. இறைவன் பலியாகி ஏன் பாவத்தை நீக்கவேண்டும்? அவன் இறைவனானால் தன் வல்லமையினால் அருள் சக்தியினால் இதற்கு வேறுவகையில் நிவாரணம் அளித்திருக்கக் கூடாதா? என்றவொரு கேள்வியும் எழும்.

வேதம் சொல்லுகிறபடி :

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக பாப நிவர்த்தி செய்யும்படிக்கு கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாப நிவர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவியராகமம் 17:11)

மனிதனின் சகல பாபங்களுக்கும் அடிப்படைக் காரணம் இரத்தமேயாகும். கோபம், எரிச்சல், வைராக்கியம், காமம், பகை

போன்ற சகல குணங்களும் இரத்த சம்பந்தமுடையவைகளாகும்.

கோபம் ஏற்படும் போது உடலின் பதின்மூன்று நரம்பு மண்டலங்கள் உணர்ச்சி வசப்படுகின்றன. தசை நார்கள் முறுக்கெடுகின்றன. அதன் விளைவாகச் சண்டைகள், கொலைகள் ஆகியவை நிகழுகின்றன.

கொலைக்காரன் இருபத்து நான்கு மணி நேரமும் கொலை செய்துகொண்டேயிருப்பதில்லை. இரத்த உந்துதலினால் உணர்ச்சி வசப்பட்டே அவன் கொலைகாரனாகிறான். அதுபோலவே காமமும். இக்காமத்தை உண்டுபண்ணுவது இரத்தவேகம்.

ஆதிப்பெற்றோரின் மீறுதலால் மோகக்கொடி படர்ந்து தீமைக்கனி பழுத்து விட்டதால் எல்லோரும் பாபம் செய்து தேவமகிமையற்றுப் போனோம். ஆனால்

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத் தீ பழுத்தது அருள் என்னும் கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம் பழுக்கும்
ஏகக் கொடி எழும் காண் இன்று
(திருக்களிற்றுப் படியார் பாடல்)

என்று, முத்தியாகிய இறைவனுடைய முதல் கொடியாகிய முதல் மனிதனுக்கே மோகம் என்ற பாபக் கொடி சுற்றிப் படர்ந்து, அத் தீ மரக் கனிகள் மிகுதியான பாபங்களைச் செய்ய வைத்து விட்டது. தமது அருள் (கிருபை) என்னும் கத்தியினாலே, அந்த மோகம் என்னும் பாபக்கொடியை அறுத்து, மீண்டும் முக்தியாகிய இறைவனின் நற்கனிகளைத் தரத்தக்கதாக, இறைவனுடன் சேர்ந்த ஏகக் கொடியாக ஆன்மா நிற்கும் என்பது இதன் பொருள்.

அருள் (கிருபை) என்னும் கத்தியினால் மோகம் என்ற பாபக் கொடியை அறுக்க இறைவன் வரவேண்டும் என்பது எதிர்பார்ப்பு, கிருபை என்பது விலை மதிப்புடையது. அக்கிருபையை விளக்கிச் சொல்ல வேண்டுமானால், ஜன நெருக்கடி மிக்க சென்னை நகரிலே முன் கூட்டியே பேருந்துச் சாலைக்குச் சென்று, தான் போக வேண்டிய இடத்திற்கான பேருந்தைத் கண்டு பிடித்துக் கொண்ட ஒருவருடைய

பிரயாணத்தைச் சிந்தித்துப் பார்ப்போம். இவர் இப்போது நிம்மதியாகப் பிராயாணம் செய்கிறார். பேருந்து செல்லச் செல்லக் கூட்டம் அதிகமாகி நெருக்கமும் ஏற்படுகிறது. இவருக்கோ கவலை இல்லை. வசதியாக இடம் பிடித்துக் கொண்டார். அப்போது ஒரு தாய் இடுப்பில் குழந்தையுடன், மறுகையில் பெரிய கனத்த பையுடன் முண்டியடித்து உள்ளே வந்து விடுகிறாள் குழந்தையோ நெருக்கத்தில் ஏற்பட்ட விளைவாக அழுகிறது. பையைக் கீழே வைக்க இயலாது. உட்கார இடமில்லை. ஓடும் வண்டியில் விழாமலிக்க மேலுள்ள கம்பியையும் பிடித்துக் கொள்ள வேண்டும். மிகவும் ஆபத்துக்கு உள்ளான இந்தத் தாயைப் பார்க்கையில் நமது பிரயாணிக்கு உள்ளத்தில் அருள் சுரக்கிறது. அவளுடைய கஷ்டத்தைப் பார்க்க இவருக்குச் சகிக்க வில்லை. உடனே எழுந்து அந்தத் தாய்க்குத் தன் இருப்பிடத்தை தருகிறார். அந்த அம்மாளுக்கு இப்போது இவர் மூலாக அருள் (கிருபை) கிடைத்துவிட்டது. இனி அவளுக்குத் துன்பமில்லை. வசதியாக, ஆறுதலாகப் பிரயாணம் செய்யலாம். ஆனால், அவளுக்கு இடம் கொடுத்து அருள் (கிருபை) காட்டிய பிரயாணியோ, அந்த அம்மாள் பட வேண்டிய எல்லாத் துயர்களையும் தான் ஏற்றுக் கொண்டு அவளுடன் பிரயாணம் செய்ய வேண்டும் அல்லவா?

இப்படி சிந்திப்போம். இறைவன் நீதியுள்ளவர், அன்புள்ளவர். நீதிக் கொரு தெய்வம் அன்புக் கொரு தெய்வம் என்றல்ல. ஒரே தெய்வம் நீதியும் அன்புமுடையவர். பாபி ஒருவன் ஓடி வந்து இறைவனுக்கு முன் விழுந்து, தெய்வமே! நான் பாபி, என்னை மன்னியும் என்று கதறுகிறான். நீதி சொல்லுகிறது: இறைவா, இவன் தன்னைப் பாபி என்று ஒத்துக்கொள்கிறான். எனவே நமது நீதியின்படி அவனைத் தண்டியும் என்கிறது. மனிதனோ ஐயோ, ஆண்டவரே! நீர் அன்பு தெய்வம் என்றல்லவா உம்மிடம் ஓடி வந்தேன். நீரே என்னைத் தண்டித்தால் நான் யாரிடம் செல்வேன்? தயவாய் என்னை மன்னியும் என்று வேண்டுகிறான். அன்பு சொல்லுகிறது: தெய்வமே! நீர் அன்பாக இருக்கிறீர் என்று நம்பி, இவன் மன்னிப்பு வேண்டுகிறான் உமது அன்பின்படி இவனை மன்னியும் என்கிறது. நீதி தண்டிக்கச் சொல்லுகிறது. அன்பு மன்னிக்கச் சொல்லுகிறது. நீதியின்படி தண்டித்தால் அன்புக்

கடவுள் அல்ல. அன்பின்படி மன்னித்தால் நீதிக் கடவுள் அல்ல.

மனிதனோ, கடவுள் தன்னை மன்னிப்பாரோ தண்டிப்பாரோ என்று மயங்கி நிற்கிறான். இறைவன் இரண்டையும் நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார். எனவே கடவுள் மனிதனிடம் வந்து மனிதனே! உன்னைப்படைத்தது நானே! அதற்காக உனக்கு வரவேண்டிய தண்டனைகளை நான் ஏற்றுக் கொண்டு நீதியை நிறைவேற்றுகிறேன். உன்னை மன்னித்து அன்பை வெளிப்படுத்துகிறேன் என்றார்.

இன்னும் ஒரு கதை, இக்கதை தர்ம சாஸ்திரத்தில் உபமானமாகச் சொல்லப்பட்டுள்ளது. சரன் என்பதற்கு மூலப் பொருள் சொல்லும் இக்கதை மிகவும் விசேஷமானது.

சிபி என்ற மன்னனிடம் (சிபி என்றால் மாம்சம் என்பது பொருள்) ஒரு புறா சரண் அடைகிறது. ஒரு கழுகு தன்னைத் துரத்துவதாகவும் அது தன்னைக் கொன்று விடுமாகையால் தனக்குச் சரண் தரவேண்டும் என்றும் அது கேட்கிறது. உடனே மன்னன் அப்புறாவை ஒரு கூண்டிலே அடைத்து வைக்கிறான். இப்பொழுது கழுகு வந்து மன்னனிடம் புறாவைத் தருமாறு கேட்கிறது. அதற்குச் சிபி என்ற அந்த மன்னன் புறா தன்னிடம் சரண் அடைந்து விட்டபடியினால் தர இயலாது என்றும் வேறு எதையாகிலும் அதற்குப்பதிலாகக் கேட்கும் படியும் சொல்லுகிறான். கழுகு மன்னனிடம், சரண் என்பதின் பொருள் தெரியுமா என்று கேட்க, தன்னிடம் சரண் அடைந்ததைக் காக்கச் சரண் தருகிறவன் தன் உயிரையும் தருதல் வேண்டும் என்று மன்னன் பதில் அளிக்கிறான்.

கழுகு, புறாவின் எடைக்குச் சரியான அவனுடைய மாமிசத்தைக் கேட்க, மன்னன் புறாவை ஒரு தராசிலே வைத்துத் தன் தொடையின் ஒரு பகுதியை சீவி மறு தராசில் வைக்கிறான். அதுவும் காணவில்லை. மறு தொடையைச் சீவி வைக்கிறான். அது காணவில்லை. மீண்டும் தன் புஜங்களை அறுத்து வைக்கிறான். அதுவும் காணவில்லை. முடிவில் தானே அத்தராசில் ஏறி அமர, அப்போது எடை சமமாய் மாறுகிறது.

இது கதை நான் என்றாலும், தன்னிடம் சரண் அடைந்த

உயிரைக் காக்க சரணாகதியை ஏற்றுக் கொள்கிறவர் தன் உயிரையும் உடலையும் ஆன்மாவையும் பதிலாகத் தரவேண்டிய அவசியத்தைக் காண்கிறோம்.

மேற்கூறிய மூன்று சம்பவங்களிலும் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், மனிதனின் பாபங்களிலிருந்து அவனை விடுவிக்க இறைவன் தன்னை அவனுக்காகப் பலியாக்க வேண்டுமென்பதே.

இதினாலேயே:

ஏதும் தெரியா தெனை மறைத்த வல்லிருளை
நாதா நீக்க வொரு ஞானவிளக்கில்லையோ
அல்லும் பகலும் அகண்ட வடிவே - நான்
புல்லும்படி எனக் கொரு போதனைதான் இலையோ
பந்தமெலாம் தீர பரஞ்சோதி நீ குருவாய் -
வந்த வடிவை மறவேன் பராபரமே
அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே
தன்னைத் தந்து எனைத் தடுத்தாட்கொண்டநின் கருணைக்கு
என்னைத்தந்து என்ன பயன் எந்தாய் பராபரமே
(தாயுமானவர் பாடல்)

என்று கதறியழுது பாடினார்.

பரத்தில் இருக்கும் பரனாகிய பராபரன் பாப இருளைப் போக்கும் ஞான ஒளியாய் வந்து. ஆன்மா ஈடேறப் போதனைகள் செய்யும் குருவாக மாறி, பாபியின் மேல் வைத்த அன்பினால் தன்னையே கொடுத்துவிட வேண்டும் என்றும் அப்படிக் கொடுத்த அந்தப் பராபரனுக்கு என்னைத் தந்து என்ன பயன் என்று தன்னைத் தாழ்ந்துகிறார். மேலும்:

அகளமயமாய் நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகள மயம் போல் உலகில் தங்கி நிகளமாம்
ஆணவம் மூல மலம் அகல ஆண்டனன் காண்
மாணவக என்னுடனாய் வந்து

பொருள் : உலகமெங்கிலும் அசைவாடிக் கொண்டிருந்த இறைவன், மனிதனைப் போன்ற சரீரம் எடுத்து இப்பூமிக்கு வந்து, ஆணவமாகிய மும் மல பாபங்களையும் என்னை விட்டு நீங்கும் படிச்செய்து என்னைத் தனக்கு அடிமையாகக் கொண்டான். இது என்ன அதிசயம் என்றறிவாய் சீடனே! என்றார்.

இப்பாடலை யொத்துத் தீருவுந்தியார் தனது செய்யுளில் முதல் செய்யுளாக :

அகளமாய் யாரும் அறிவரி தப் பொருள்
சசகளமாய் வந்தது என்று உந்நீபற
தானாகத் தந்தது என்று உந்தீபற

என்கிறார். இதன் பொருள் யாதெனில் :

யாராலும் அறிந்து கொள்ள இயலாத (கேட்டாரும் அறியாதான் - மாணிக்க வாசகர்) பரம் பொருள், சகளமாய் - ஒரு வடிவாய் அல்லது ரூபமாய், தானாகவே தம்மைத் தந்தது என்பதே!

வள்ளுவரும், மனமாசாகிய பாபத்தை நீக்கும் படியாக மற்ற எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகி, அறத்தை உலகுக்குக் காட்டிய அறவோர் ஐந்தவித்தான் (25,6) என்ற நிலையில் கடவுளுடன் இணைந்தவர் என்று அக்கடவுள் அற வாழி அந்தணனாக (8) விளங்குகின்றான் எனவும், அவ்வறவாழி அந்தணனாகிய கடவுள் ஐம்புலனுடைய மனிதனாகிப் பொறி வாயில் ஐந்தவித்து ஒழுகிக் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியே (6) வள்ளுவர் கூறும் நெறி, என்பார் டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள்.

(வி.வி.சை.ஓ - பக்கம் 96)

ஒருமுறை பிறப்பதற்குத் தகப்பனின் இரத்தமும் தாயின் இரத்தமும் கருவழியாகக் கலந்து பிள்ளை பிறக்கிறது, அப்பெற்றோர் பிறப்புக்கு அவர்களுடைய பெற்றோர் காரணிகள், இப்படியே கணக்குப் போட்டால் யாருக்கும் பிறவாத பெற்றோர் இறைவனால் படைக்கப்பட்ட நிலையிலேயே பாபத்தில் வீழ்ந்து விட்டமையால் இரத்தமே சகல பாபங்களுக்கும் காரணம் என்றாகிறது.

இப்பிறவிப் பயனாகிய பாபத் தளையிலிருந்து விடுதலை பெற மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியமாகிறது. மறுபிறப்புக்கும் பாபமற்ற இரத்தம் தேவைப்படுகிறது. எனவே பாபமற்ற இறைவன் ஸ்தூல சரீரமெடுத்து அச்சரீரத்தைப் பலியாக்கிச் சிந்தின தூய இரத்தத்தினால் பாப மனுஷனைக் கழுவி தனக்குள் மறுபடியும் பிறக்கச் செய்கின்றான் என்பதை

துயர் இல் சுடரொளி தன்னுடைச்
சோதி நின்ற வண்ணம் நிற்கவே
துயரில் மலியும் மனிதப் பிறவியில் தோன்றிக் கண்
காண வந்து துயரங்கள் செய்தே தன் தெய்வ நிலை
உலகில் புக வைக்கும் அம்மான்
துயரம் இல் சீர்க் கண்ணன் மாயன்
புகழ் தூற்ற யானோர் துன்பம் இலேனே - என்ற

திருவாய் மொழிப் பாடலில் காணலாம்.
துயரமே இல்லாத சுடரொளி - இறைவன்
துயரம் இல்சீர்க் கண்ணன் மாயன் - இறைவன்

ஒருவரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணும் துயரமே இல்லாத இறைவன் சோதிப் பிழம்பாக நிற்கையில் மனிதனோ துயரம் மிகுந்தவனாய் பாபத்தில் வாழ்வதைப் பார்த்த அவன் மனிதப் பிறவியில் தோன்றி, மனிதன் கண்கள் காணும் படியாக அவனுடைய துயரங்களை ஏற்றுக்கொண்டு தன் தெய்வீக நிலையை உலகுக்குக் காட்ட, அவனை ஏற்றுக்கொண்டோர்க்கு இனித் துயரம் இல்லை. பாபமற்ற சீரான கண்களையுடைய இல்மாயனை (கண்களால் காணக் கூடாதவன்) நான் அறிக்கை செய்தால் எனக்கு இனித் துன்பமே இல்லை என்பது பொருளாகும்.

இறைவன் உலகிற்கு வந்து பலியாக வேண்டும் என்பதை இந்திய வேதமாகிய ரிக் வேதத்தின் புருஷசூக்தம் என்ற பகுதியும் அதைச் சார்ந்த ஆகமங்களும், பிராமணங்களும், ஆரண்யகங்களும், உப நிடதங்களும் தெளிவுப்படுத்துகின்றன.

அதிகாரம் - பதின்மூன்று

புருஷ சூக்தமும் இயேசுவின் பலியும்

ய்ஞேன யக்ஞமஜயந்த தேவா:
தானி தர்மானி ப்ரத மான்யாசன
தேஹ நாகம் மகிமான்: ஸசந்த
யத்ர பூர்வே ஸாத்யா:ஸந்தி தேவா!!

தேவர்கள் தேவனை பலி செலுத்தினர், யாக பலியே உலகின் பிரதான தர்மம், பரலோகத்திலேயே பலியாக்கப்பட்ட இத்தேவனை வழிபட்டு தங்களை ஒப்புக் கொடுக்கிறவர்கள் அப்பரலோகத்தில் பிரவேசித்து நித்ய நித்யமாய் வாழ்கிறவர்கள்.

புருஷ ப்ரஜா பதியைக் குறித்தும் அவரை வெளிப்படுத்துகின்ற ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலத்தில் வருகின்ற புருஷசூக்தத்தைக் குறித்தும் பலர் பல விதமான வியாக்கினாங்கள் கொடுத்தபோதிலும், உலகின் பாபங்களுக்காகத் தன்னையே பலியாக்கி ஆத்ம மீட்பை உண்டுபண்ணிண சரித்திர நாயகன் இயேசு கிறிஸ்துவுடன் அதை ஒப்பிட்டுப் பார்ப்பதில் நான் அகம் மகிழ்கிறேன்.

மொழிகள் பலவாயினும் அவைகளின் கருத்து ஒன்றேயாகும். பல ஆறுகள் பல திக்குகளிலிருந்து ஓடி ஓரே கடலில் சங்கமம் ஆவது போல, பல நிறப்பசுக்கள் ஒரே வெள்ளை நிறத்தில் பால் தருவது போல, பல வேதங்களிலுள்ள ஒரே தெய்வத்தைக் காண இந்நூல் வழி செய்யும் என நம்புகின்றேன்:

மதங்களுக்காக தெய்வம் ஏற்படுத்தப்படாமல் தெய்வத்தை அறிகின்ற அறிவைப் பெறுவதற்காகவே மதங்கள் உண்டாக்கப்பட்டன. தெய்வத்தை அறிய ஏற்படுத்தப்பட்ட மதங்கள் ஒன்றுக்கொன்று பகைத்து மாறுமானால் அம்மதங்கள் அவசியமில்லை.

மதசார்பற்ற இந்திய நாட்டில், இந்திய நிலையில் நின்று இந்திய வேதங்களையும் ஆசிய வேதமாகிய விவிலியத்தையும் ஒப்பிட்டு இந்திய வேதங்களில் காணப்படுகின்ற புருஷ பிரஜாபதியை பழைய ஏற்பாட்டின் மூலமாகப் புதிய ஏற்பாட்டின் இயேசுவை காண முயற்சிக்கிறேன்.

இவ்வாய்வு முயற்சி பலனளிக்குமானால் இறைமக்கள் பகைமையின்றி ஒரே சமுதாயமாக வாழ்வது நிச்சயம். வாழ்க, வேதங்கள், வாழ்க பாரதம்! வாழ்க இந்திய மக்கள்! வாழ்க யாவரும்.

இனி, புருஷசூக்தத்தின் பாடல்களை ஆராய்ந்து பார்ப்போம். இப்பாடல்கள் சமஸ்கிருதத்திலிருந்து அப்படியே தமிழில் எழுதப்பட்டுள்ளது. எனவே உச்சரிப்புப் பிழைகள் ஏற்படலாம். உதாரணமாக Ga என்பது க என்றும் Bu என்பது பு என்றும் எழுதப்பட்டிருப்பதினால் வாசகர்கள் அனுசரித்து படிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ
ஸஹஸ்ர அக்ஷா ஸஹஸ்ர பாத்
ஸ பூமிம் விஷ்வதோ வ்ருத்வா
அத்ய திஷ்ட தஸாங்குலம் (1)

புருஷ யேவதம் ஸர்வம்
யத் பூதம் யச்ச பவ்யம்
உதா அம்ருத த்வஸ்ய யேஷான
யத்தன்னேன திரோ ஹதி (2)

யேதாவான் அஸ்ய மஹிமா
அதோ ஜ்யாயம் ச்ஷ புருஷ:
பாதோ அஸ்ய விஸ்வ பூதானி
த்ரிபாதஸ்யா அம்ருதம் திதி (3)

த்ரிபாதூ ருத்வ உதைத்தி புருஷ
பாதோ அஸ்ய யேஹா அபவாத் புன:
ததோ விஷ்வங் வ்யக்ராமத்
ஸஅஸான்னா னஷனே அபி (4)

தஸ்மாத் விராத் அஜாயத
விராஜோ ஆதிபுருஷ
ஸ ஜாதோ அத்ய ரிச்யத
பஷ்ச்சாத் பூமிமதோ புர:! (5)

யத் புருஷேன ஹவிசா
தேவா யக்ஞ மதன்வத
வஸன்தோ அஸ்ப ஆஸீ தாஜ்யம்
கீரிஷ்ம இத்ம: சரத் ஹவி: (6)

ஸப்தா ஸ்யாஸன் பரிதய:
த்ரி: ஸப்த ஸமித க்ரிதா:
தேவா யத்யக்ஞம் தன்வானா:
அபத்னன் புருஷம் பஸீம் (7)

தம் யக்ஞம் பார் ஹிஷி ப்ரோக்ஷன்
புருஷம் ஜாதம்-அக்ரத:
தேன தேவா அயஜன் த
ஸா த்யா ரிஸ்ஸாய ஷச்யே (8)

தஸ்மாத் யக்ஞாத் ஸர்வ ஹூத:
ஸம்ப்ரி தம் ப்ரிஸ்ஸா தாஜ்யம்
பூஸூம் ஸ்தம் ச ஷக்ரே வாயவ்யான்
அரண்யான் க்ரம்யான்ஷயே!! (9)

தஸ்மாத் யக்ஞாத் ஸர் வ ஹூத:
ரிச்ச: சாமானி ஜக்னிரே
ச்சான் தாம்ஸி ஜக்னிரே தஸ்மாத்
யாஜூஸ் தஸ்மாத் அஜாயத (10)

தஸ்மாத்ஸ்வா அஜாயந்த
யே கே சோபயா தத:
காவோ ஹ யக்னிரே தஸ்மாத்
தஸ்மாத் ஜாதா அஜாவய: (11)

யத் புருஷம் வ்ய ததூ:
கதி தா வ்ய-கல் பயன்
முகம் கீம் அஸ்ய கௌ பாஹூ
காவூரு பா தாவுச்யேதே!! (12)

ப்ராஹ்மனோ அஸ்ய முகம் ஆஸீத்
பாஹூ ராஜன்ய: க்ருத:
ஊரு ததஸ்ய : யத் வைஸ்ய
பாத்பியாம் ஸூத்ரோ அஜாயத!! (13)

ச்சந்ரமா மனசோ ஜாத:
ச்சஷோ: சூர்யோ அஜாயத
முகாதீ ந்த்ர (இந்ர) ஷ அக்னி ஷ
ப்ரணாத் வாயூர ஜாயத!! (14)

நாப்யா ஆஸீத அந்தரேக்சம்
ஸீர்ஷ்ணோ தௌ: சமவர் த்ததூ
பத்பியாம் பூமிதஷ: ச்ரோத்ராத
தசதா லோகான் அ கல் பயன் (15)

வேதாஹ மேத்தம் புருஷம் மஹான்தம்
ஆதித்ய வர்ணம் தமசஸ்து பாரே
சர்வாணி ரூபானி விச்சி த்ய தீர
நாமானி க்ருத்வா அபிவதன் யதாஸ்தே (16)

தாதா புரஸ்தாத் முதா ஐ ஹார
சக்ர:ப்ரவித்வான் பிரதிஷா சதஸீர:
தமேவம் வித்வான மம்ருத இஹபவதி
நான்ய: பன் தா அயனாய வித்யதே!! (17)

யக்ஞேன யக்ஞ மஜயந் த தேவா:
தானி தர்மானி ப்ரதமான் யாசன
தேஹ நாகம் மஹிமான: ஸசன்த
யத்ர பூர்வே சாத்யா: ஸந்தி தேவா!! (18)

பூர்வ இந்தியா உலகிற்கு அளித்த பெருங்கொடை என்னவெனில் சமஸ்கிருத மொழீயில் எழுதப்பட்ட வேதங்களே! இவைகளின் சில சுமார் 400 ஆண்டுகளுக்கும் முற்பட்டவை வேதங்கள் என்று அழைக்கப்படுபவைகளின் காலம் சுமார் கி.மு 2000-1200 எனலாம். இதற்கடுத்தபடியாக ஆரண்யகங்கள். காலம் கி.மு.1000 இதற்கடுத்தபடியாக வருவது உப நிடதங்கள். காலம் கி.மு. 1000-700 எனலாம். பிராமணங்கள் போன்றவைகள் கி.மு.900களின் வழக்கத்திலிருந்தன.

மகா பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் ஒரே காலத்தில் ஒருவரால் எழுதப்பட்டவைகள் அல்ல. வியாசர் என்பவரின் காலத்தில் இவைகள் தொகுக்கப்பட்டன. பின்னர்

வியாசர் பெயரில் அனேகர் இக் கதைகளில் சேர்த்தும் நீக்கியும் விரிவாக்கியும் பல திருத்தங்கள் செய்து கி.பி. 200ம் ஆண்டுகளில் நிறைவு படுத்தப்பட்டன எனலாம். மகா பாரதம் உலகிலேயே மிக நீண்ட காவியமாகும். இராமாயணத்தை எழுதிய வால்மீகி இராமனை அவதாரமாகக் குறிப்பிடவில்லை. மற்றும் சீதைக்கும் இராமனுக்கும் பிறந்த லவ-குச என்ற இரு மக்கள் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. மகாபாரதம் இராமாயணம் ஆகியவை கி.முவில் ஆரம்பித்து அனேக பிற்சேர்க்கைகளுக்குப் பின்னர் கி.பியில் முடிவுற்றது என்பது ஆராயப்படத்தக்கது

இந்தியாவின் பூர்வகால ஞானிகள் சத்தியம் இல்லாததிலிருந்து சத்தியத்திற்கும் இருளிலிருந்து ஒளிக்கும் மரணத்திலிருந்து நித்ய ஜீவனுக்கும் இறைவன் தங்களை வழி நடத்த வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

அஸத்தோ மா ஸத் கமய
தமஸ்ஸோ மா ஜ்யோ திர் கமய
ம்ருத் யோமா அம்ருதம் கமய

என்பது பிரகத் ஆரண்யக உபநிடத்தில் வரும் சிறப்பான பிரார்த்தனையாகும். சுக்ல யசுர் வேதத்திலும் இப்பாடல் உண்டு.

பூர்வ கால ஞானிகளும் ரிஷிகளும் மனித ஆன்மா ஈடேற்றத்திற்குத் தடையாக இருப்பது பாபமே என்று கண்டனர். இவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் அல்லது ஸ்நானம் எடுக்கு முன்பும் (பிரார்தஸ்நான மந்திரம்)

பாபோஹம் பாபக் கன்மோஹம்
பாபாத்மா பாப ஸம்பவா த்ராஹிமாம்
புண்டரீ காக்ஷா யக்ஞேஸ்வரோ ஹரிஹரே அல்லது
ஸ்ர்வ பாப ஹரிஹரே என்றும் பூஜிப்பார்கள்.

நான் பாபத்தில் பிறந்தவன், பாபத்தைச் செய்கிறவன் பாபத்தில் நிலைத்திருக்கிறவன், நான். பாபி, என் இருதயத்தில் வாசமாயிருக்கிற தெய்வமே, எல்லாப் பலிகளுக்கும் பலியாக இருப்பவரே என்னை இரட்சியும் என்று வேண்டுதல் செய்தனர்.

பாபத்திலிருந்து மீட்பு அடைய மனிதன் செய்யும் சன்மார்க்க முயற்சிகள் வீண் என்பதும் இறைவன் இப்பாபத்திலிருந்து மனிதனை மீட்க ஒரு வழியை ஏற்படுத்தாவிடில் விமோசனம் இல்லையென்பதும் கண்கூடு.

பூர்வ கால பக்தர்கள் இறைவனுக்குப் பலி செத்துதல் மூலமாகத் தங்கள் பாபங்கள் நீக்கப்படும் என நம்பினர். தாண்டியமகா பிராமணம் 7-ம் அதிகாரம் 32 வசனம் 1-ல் தேவர்களுக்காக (தேவ வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் தேவர்கள் என்னப்படுவர்) சர்வலோகங்களுக்கும் அதிபதியாகிய இறைவன் தன்னையே பலியாக்கினான் என்று காணப்படுகிறது.

இறைவனுடைய பலி இல்லாமல் எவரும் இறைவனடி சேர இயலாது என்பது தெளிவு. ரிக் வேதம் பத்தாவது மண்டலம் 90-ம் அதிகாரத்தில் புருஷ சூக்தம் என்னும் பகுதியில் பதினெட்டு சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இப்பதினெட்டு சுலோகங்களின் முதற் பகுதியில் பிரஜாபதியாகிய படைப்பின் தெய்வம் மனிதனாக உலகிற்கு வருவதையும் இரண்டாவது பகுதியில் இப்புருஷ பிரஜாபதி உலகின் பாபங்களுக்காகத் தன்னைப் பலியாக்குவதையும் காணலாம்.

புருஷ பிரஜாபதி அல்லது புருஷ என்பவர் யார்? புருஷ என்பது சிருஷ்டி கர்த்தா, தெய்வம், சர்வேஸ்வரன் என்றும் அவர் மனித உருவில் அவதரிப்பார் என்பதைக் காட்டவே புருஷ் அல்லது புருஷன் என்றும் பொருள்படும்.

ரிக்வேதம் 10வது மண்டலம் 90-1ல் மனிதனாகிய இப்புருஷனுக்கு ஆயிரம் தலைகளும் ஆயிரம் கண்களும் ஆயிரம் கால்களும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆயிரம் தலைகளிருந்தால் இரண்டாயிரம் காண்களல்லவா இருக்க வேண்டும்? எனவே இதை உண்மையானக் கொள்ளாமல் உபமானமாகக் கொள்ளவேண்டும். (இது ஞானார்த்தமாகக் காணக்கூடியது) என்றாலும் இப்புருஷன் உலகில் மனிதனாக வந்தபொழுது உலகின் எல்லாத்திக்குகளையும் பரிபாலித்து ஆண்டு கொண்டான் என்றும் தன்னை பத்து விரற்கடையளவாய் சுருக்கிக் கொண்டான் என்றும் கூறப்படுகிறது.

ஹைஸ்ர சிர்ஸா புருஷ
ஸஹஸ்ரக்ஷா ஸஹஸ்ரபாத்
ஸபூமிம் விஷ்வதோ விருத்தவ
அத்யதிஷ்டதசாங்குலம்.

ஆயிரம் தலைகள் எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் ஆயிரம் கால்கள் எங்கும் நிறைந்தவனாகவும் ஆயிரம் கண்கள் எங்கும் ஊடுருவிச் செல்பவனாகவும் காட்டப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சர்வ வல்லமையுள்ள தேவனாகிய பிரஜாபதி மனிதனாக உலகில் வரும் பொழுது தன்னை ஒரு சாதாரண மனிதன் தோற்றத்தில் காண்பிப்பதையே பத்து விரற்கடையளவு (தசாங்குலம்) என்று குறிப்பிட்டுள்ளது (அத்ய திஷ்டதசாங்குலம்) மகாப் பெரிய பூமியைவிட ஆண்டவனின் மகிமை மிகப்பெரியது. ஆனால் ஆண்டவர் பத்து விரற்கடையளவே இப்போது காணப்பித்திருக்கிறார் என்றும்சிலர் வியாக்யானிப்பதுண்டு.

பழைய ஏற்பாட்டில் இறைவன் சக்கர ரூபமாகவும் உடல் அனைத்தும் கண்களினால் நிறைந்திருந்தவனாகவும் காட்டப்படுவது கவனிக்கத்தக்கது (எசேக்கியேல் 10:12) இப்படிப்பட்ட தெய்வம் மனிதனாக அவதரித்தபோது தேவதூதரைக் காட்டிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு என்று சொல்லப்பட்டுள்ளது. (எபிரேயர் 2:9) இவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தன்னை வெறுமையாக்கி அடிமை போலக் காண்பித்ததை பிலிப்பியர் 2ம் அதிகாரம் 6 முதல் 10 வரையுள்ள வசனங்களில் காணலாம்.

இந்த இயேசுவை, வேதம் அனேக இடங்களில் மனித குமாரன் என்றும் தெய்வ குமாரன் என்றும் சொல்லுகிறது. அவரை விசாரித்த பிலாத்து என்ற அதிகாரியும் ஜனங்களுக்கு முன்பாக அவரை அறிமுகப்படுத்தும் பொழுது “இதோ அந்த மனிதன்” என்றே கூறினார்.

ரிக் வேதம் 10:90-ல் இந்த மனிதன் இருந்தவரும் இருக்கிறவரும் இருப்பவரும் நித்ய ஜீவனுக்கு அதிகாரியுமானவர் என்று குறிப்பிடுகிறது.

புருஷ ஏவேதம் ஸர்வம்
யத்யூதம் யச்ச பவ்யம்
உதாம் ருதத் வஸ்யே ஷானே
யதன்னேன நாதிரோஹதி (ரிக்வேதம் 10:90:1,2)

வேதத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரம் 8ம் வசனத்தில் இயேசுவைப் பற்றிச் சொல்லும் பொழுது இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இயேசு ஜனங்களின் பாபங்களுக்காகப் பலியிடப்பட்டு மரணத்திலிருந்து உயிர் பெற்று எழுந்ததினால் நித்திய ஜீவனுக்கு அதிகாரியுமாகிறார். (கொலோசெயர் 1:14-22)

ரிக்வேதம் புருஷ சூக்கத்தில் சொல்லப்பட்ட இந்தப் பிரஜாபதியாகிய புருஷன் பாபங்களுக்காக பலியாக்கப்பட்டதை பதினாறாம் வசனம் சொல்லுகிறது. ரிக் வேதத்தின் மூலக்கரு புருஷசூக்தமே. பிரஜாபதி தன்னையே பலியாக்கினார் என்பதை சாமவேதத்தின் தாண்டிய மகா பிராமணமும் வலியுறுத்துகிறது.

பிரஜாபதிர் தேவப்யஹறம் ஆத்மானம்
யக்ஞம் க்ருத்வா ப்ராயச்சத்

(தன்னைப் பலி செலுத்தி, ப்ரஜாபதி தேவர்களுக்கு ஒப்புக் கொடுத்தார்) தாண்டிய மகா பிராமணம் 2-ம் காண்டம் 7வது அதிகாரம்)

ப்ரஜாபதி யக்ஞஹ: (ரிக் வேதம்)
(ப்ரஜாபதியே பலியாவார்)

புருஷ சூக்கத்தில் ப்ரஜாபதி என்ற வார்த்தை காணப்படாவிட்டாலும் பிராமணங்களில் புருஷ என்பவரே ப்ரஜாபதி என்பதற்கான குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

உதாரணமாக :

புருஷோ ஹி ப்பரஜாபதி (புருஷனே ப்ரஜாபதி)
(மாத்யான் த்தினிய சத்பதா பிராமணம் VII4:1,15)

இப்புருஷனை, அறிந்து கொள்ளுகிறவர்கள் விடுதலை பெற்று

நித்தியத்தை அடைவர்ககள் என்பது காதா உபநிடதம் கூறும் உண்மையாகும்.

"அவ்யக்தாது பரஹ் புருஷோ - யக்ஞுத்வா முச்யதே ஜன் தூ அம்ருத்தவம் ச்ச கச்சதி"
(கதா உபநிடதம் 6:8)

மேலும் இப்புருஷனை அறிந்து கொள்வதினால் மட்டுமே நித்ய ஜீவன் உண்டு, வேறு வழி இல்லை என்பதை

"நன்ய பந்த்தா வித்யதே - அயநாய (ஸ்வே தாஸ்வ தார உபநிஷத் 3:8)" என்பதின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

"புருஷம் ஜடமக்ரதா" என்று எட்டாம் சுலோகம் சொல்லுகிறபடி இப்புருஷன் எல்லாவற்றிற்கும் முந்தின பேரானவர் என்பது தெளிவு. சயனாச்சாரியர் என்ற வேத பண்டிதர் புருஷ சூக்கத்தின் உரையில் எழுதும் போது "பூர்வம் புருஷம் ஜடம்" என்பதை ஆதியிலேயே புருஷன் பிறந்தார் என்று குறிப்பிடுகிறார். யசுர் வேதத்தில் பூர்வோ ஜடா (பூர்வத்திலேயே ஜனித்தவர்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் இத்தெய்வத்தைக் குறித்து. பூமி உண்டாகும் முன்னும், ஆதி முதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். ஆழங்களும், ஜலம் புரண்டு வரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜெநிப்பிக்கப்பட்டேன் மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும் அவர் பூமியையும், அதின் வெளிகளையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கும் முன்னும் நான் ஜெநிப்பிக்கப்பட்டேன் (நீதிமொழிகள் 8:23-26) என்றும், புதிய ஏற்பாட்டில் கொலோசெயர் 1:15-ல் அவர் அதரிசனமான வேனுடைய சுற்சுரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்றும் காணப்படுகிறது. மேலும், தமது முதற்பேரானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது என்று எபிரேயர் 1:6-ல் காணப்படுகிறது.

முதற்பேரானவராகிய இயேசு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராக (வெளிப்படுத்துதல் 5:6,9) யாவருக்கும் மீட்பு உண்டாகும்படிப் பலியானவராகக் காட்டப்படுகிறது.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின்மித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது (ஏசாயா 53:5)

எனவே இப்பலியைக் குறித்து வேதங்கள் சொல்லுவதை விளங்கிக் கொண்டால் உலகத்தின் பாபங்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி மன்னித்து, இரட்சித்து தம்முடைய இடமாகிய பரலோகத்தை நமக்கு அருளுகின்ற இறைவன் யார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

ரிக்வேதம் பூருஷ சூக்கத்தில் காணப்படுகின்ற பிரஜாபதியாகிய மூல புருஷன் பலியாக்கப்படும் பொழுது அவரில் காணப்படுகின்ற பத்து முக்கிய அம்சங்களைச் சிந்திப்பது நல்லது.

ரிக்வேத புருஷ சூக்தத்திலுள்ள கருத்துகளுக்கு உபநிடதங்களில் நல்ல விரிவாக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. இக்காலத்து மகான்கள் அக்கருத்துக்களைப் பிற்காலத்தில் தேன்றிய ஆரியம் வைணவம், சைவம் போன்ற மதங்களுடன் இணைப்பதற்காகச் சற்று திருத்தியும் மாற்றியும் பயன்படுத்துகிறார்கள். நடுநிலைக் கண்ணோட்டத்துடன் இவைகளை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. ஏனெனில் ரிக்வேதகாலத்தில் எந்த மதமும் இல்லை. இக்காலச் சமய தெய்வங்களின் பெயர் முதலாய் அவ்வேதங்களில் இல்லை. அவைகளை வணங்கினதாகக் குறிப்பும் இல்லை. புராண, இதிகாச காலங்களுக்கு முற்பட்ட வேத காலத்தில் புருஷ பிரஜாபதியே தெய்வமாக ஆராதிக்கப்பட்டார்.

எனவே அப்புபுருஷ பிரஜாபதி பலியாவதைக் குறித்த காரியங்களை விளங்கிக் கொள்வது நல்லது.

புருஷ பிரஜாபதி

1. குற்றமற்றவராக இருக்க வேண்டும் "நிஷ்களங்க புருஷன்"

சாண்டோக்ய உபநிடதத்தில் அவர் எல்லாப் பாபங்களுக்கும் அப்பாற்பட்டவர் (1:6-6,7) என்று கூறப்பட்டுள்ளது.

என்னில் குற்றமுண்டு என்று உங்களில் யார் சொல்லக்கூடும் என்று கேட்டபோது ஒருவராகிலும் அவருக்கு எதிராக குற்றம் சாட்டத் துணியவில்லை. இயேசு பாபம் அறியாதவர், பாபம் செய்யாதவர், பாபம் இல்லாதவர் என்று வேதம் சொல்லுகிறது. (I பேதுரு 2:22, I கொரி 5:21)

2. முள்முடி சூட்டப்பட வேண்டும்

அஸ்வமேத்ய யாகத்தில் குதிரையின் தலையில் முள்முடி சூட்டி மற்றக் குதிரைகளிலிருந்து அது வேறுபடுத்தப்பட்டு, பலிக்காக அனுப்பப்படும். குதிரையின் தலை ப்ரஜாபதியாகவும் சரீரம் மக்களாகவும் கருதப்படும்.

போர்ச் சேவகர் முள்களினால் ஒரு கிரீடம் செய்து அவர் சிரசின் மீது வைத்தனர். இயேசு முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி இதோ இந்த மனுஷன் (புருஷன்) என்றார். (யோவான் 19:25)

3. பலிக்காக குறிப்பிடப்பட்டவர் தமது சொந்த ஜனங்களினாலே நிராகரிக்கப்பட வேண்டும்.

சத்பதா பிராமணம் 136.2,2, புருஷமேத்யா (புருஷபலி) என்ற பகுதியில் பலிக்கான புருஷன் ஜனங்களிலிருந்து நிராகரிக்கப்படவேண்டும் என்ற குறிப்பு காணப்படுகிறது.

இயேசுவைக்குறித்துச் சொல்லப்படும் பொழுது அவர் தமக்குச் சொந்தமானதில் வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. (யோவான் 1:11) என்ற குறிப்பு சிந்திக்கத்தக்கது.

4. பலிக்காக குறிக்கப்பட்டவர் மௌனமாகத் துன்பங்களை சகிக்கவேண்டும்.

ரிக்வேதம் 5-46:1ல் "ஒரு குதிரையைப் போல நான் நுகத்தை ஏற்றுக்கொண்டேன், எல்லா ஜனமும் இதை அறியும். இதிலிருந்து விடுதலையையோ அல்லது பின்னிட்டுப் போவதையோ நான் தேடவில்லை" என்பதாகக் காணப்படுகிறது.

யாரைத் தேடுகிறீர்கள் என்று இயேசு ரோமப்போர்ச் சேவகர்களைக் கேட்டபோது. அவர்கள் நசரேனாகிய இயேசுவை

என்றார்கள். அதற்கு அவர், தான் என்று வலிய தன்னை ஒப்புக்கொடுத்தார். மேலும் கெத்செமனேயில் இயேசு ஜெபித்தபோது, இந்தப் பாத்திரம் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும். ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உமது சித்தத்தின் படியே ஆகட்டும் என்று சொன்னார். (யோவான் 18:3-9, மத்தேயு 26:39,42)

சமஸ்கிருத வேதங்களில் யாகபலியைக் கொல்பவனுக்கு ஸமித்தாரா என்று பெயர். இதன் பொருள் அமைதிப்படுத்துகிறவன் என்பதாகும். பலிமிருகத்தைப் பார்த்து அதை அமைதியாக இருக்கச்செய்வது இவனுடைய வேலை. இதற்கான ஆதாரங்களை தைத்தீரிய ஸம்ஹிதா 1:3:7, 1:6,-லும் அபஸ்தம்ப ஸ்ரவுத சூத்ரம் VII 12, 6-லும் காணலாம். இப்படிப்பட்ட பலியானது இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகிறது. இயேசு பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகட்கு முன்பே, தீர்க்கதரிசியாகிய ஏசாயா என்பவர் "(இயேசு) அவர் தமது வாயை திறக்கவில்லை. அடிக்கப்படும்படிக் கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும் தன்னை மயில் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்". (ஏசாயா 53:7) என்று தீர்க்க தரிசனமாகச் சொன்னபடியே, தன்னைப் பலி செலுத்தினவர்களுக்கு எதிராகவோ அல்லது தனக்காகவோ அவர் வாய் திறவாமல் மௌனமாக இருந்தார். பரிசேய சங்கத்தார் அவரைக் குற்றப்படுத்தியபோதும் அவர் வாய் திறக்கவில்லை (மாற்கு 14:55-61) ரோம கவர்னராகிய பிலாத்துவின் சமூகத்திலும் அவர் வாய் திறக்கவில்லை. (யோவான் 19:10)

உலகத்தின் பாபங்களுக்காக முழுமையாகச் செய்யப்பட்ட முழுமையான பலியாக இயேசுவே காணப்படுகிறார்.

5. பலிக்கான பரிசுத்த மிருகம் பலிக்கான கம்பத்தில் கட்டப்படல் வேண்டும்.

"நவருதே யுபாத் பாஸம் அலாபந்தே கடாச்சனா". (பலிக்கான கம்பத்தில் அல்லாமல் பலிமிருகத்தைக் கொல்லாதே) என்பது ஸத்பதா பிராமணம் III 7,3,1-ல் காணப்படும் வேதவாக்காகும்.

அனேக பெரிய ஆலயங்களில் கோயிலுக்கு முன்பு ஒரு உயர்ந்த கல் தூண் இருப்பதுண்டு. இதை கொடிக்கம்பம் என்று அழைப்பார்கள். ஆனால் உண்மையில் இது யுபா ஸ்தம்பம் அல்லது பலிமிருகம் கட்டப்படும் தூண் ஆகும். இன்றைக்கும், கிராமங்களில் பண்டிகை கொண்டாடும்போது ஆட்டையோ, மாட்டையோ, கோழியையோ பலி செலுத்தக்கொண்டு வரும் பொழுது அவைகளை அக்கொடிக்கம்பத்தில் கட்டி, அதன் பின்பே பலியிடுகிறதை காணலாம். இன்று அரசாங்க ரீதியாகப் பலி செலுத்தவது தடை செய்யபட்டிருந்தாலும் கிராமங்களிலும், சிற்றூர்களிலும் கடாவெட்டல் என்பது நடைபெறவே செய்கின்றது.

பலியைக் கொண்டு போய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள் (சங்கீதம் 118:27) என்பது பழைய ஏற்பாடு வேதநூல் கூறும் கட்டளையாகும். புருஷ சூக்தம் 15வது வரியில், "தேவா யத்யக்ஞம் தன்வான அபத்னன் புருசம் பாஸூம்" (பலி செலுத்தின தேவர்கள் பலிமிருகமாகிய புருசனை கம்பத்தில் கட்டினார்கள்) என்று காணப்படுகிறது.

புருச சூக்கத்திற்கு உரை எழுதிய சயனாச்சாரியார் அவர்கள்
"யக்ஞம் யக்ஞஸ்ஸ தான பூதம் தம் புருஷயம்
பக த்வ பவானய யுபே பந்தம்" (ரிக்வேதம் 10,90, 1:15)

இங்கே புருஷனாகிய பலி மிருகம் ஒரு கம்பத்தில் கட்டப்படுவதைக் காணலாம் என்கிறார்.

எனவே, ரிக்வேதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் ஒரு குதிரை எப்படித் தானாகத் தன் கழுத்தில் நுகத்தை ஏற்றுக் கொள்கிறதோ அப்படியே புருஷனும் தானாகவே தன்னை நுகத்திற்குட்படுத்தி, அதிலிருந்து தப்பிக்கவோ பின்னிடவோ மாட்டார் என்பதே.

தேவ (மனிதனாகிய) புருஷனாகிய இயேசு கிறிஸ்துவும் சிலுவை மரத்தில் பலியாகும்படிக் கட்டப்பட்டார்.

அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து கொண்டு கபால ஸ்தலம் என்கிற இடத்துக்குப் போனார், அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் (யோவான் 19:18) என்று யோவான் எழுதியிருக்கிறார்.

அய்த்திரிய பிராணத்தில், இப்பலிக் கம்பம் என்பது பயங்கரமான, நிந்தை நிறைந்த கொடுமையான கம்பமாகும் என்றும், கௌஸிதகி பிராமணத்தில், இக்கம்பம் பயங்கரமானது. உபவாச நாளில் இது நிறுத்தப்படும். யுபா என்ற இக்கம்பம் சத்ருவுக்கு எதிராகக் கிரியை செய்து தீமையை அகற்றும் இக்கம்பத்தில் பலிமிருகமானது கொல்லப்படும் என்று காணப்படுகிறது.

(அய்த்தரிய பிராமணம் 11.1 கொளஸிதகி பிராமணம் X.1)

உங்கள் பாபங்களினாலேயும் உங்கள் மாம்சவிருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்பித்து அக்கிரமங்களெல்லா வற்றையும் உங்களுக்கு மன்னித்து நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோசெயர் 2:13-15) என்று பவுல் அப்போஸ்தலர் எழுதுவதும் இதையே குறிக்கிறது.

இயேசுவை விசுவாசிக்கிற எவரும் அவரோடு கூடத்தங்கள் பாபங்களைச் சிலுவையிலே (யுபா கம்பத்திலே) அறைந்து விட்டார்கள் என்பதே உண்மை (கலாத்தியர் 5:24)

6. பலியான வேதபுருஷனின் உடலிலிருந்து இரத்தம் வடியும்

ரிக்வேதம் புருஷ சூக்கத்தில் புருஷ பிரஜாபதியின் இரத்தம் சிந்தப்படும் என்று நேரடியாகக் காணப்படவில்லை. எனினும் இரத்தம் சிந்தப்படாமல் பலி நிறைவேற்றப்பட இயலாது.

பிரகதாரண்யக உபநிஷத்தில் சொல்லப்பட்டபடி வானத்தில் வேர் பற்றிப் பூமியை நோக்கிக் கிளை விடுகின்ற அஸ்வதா மரம், பிரஜாபதி உலகிற்கு புருஷனாக அவதாரம் எடுத்து வருவதைக் குறிப்பதினால், அந்த அஸ்வதா மரமே புருஷபிரஜாபதி என்று சொல்லலாம். வெட்டப்பட்ட மரத்திலிருந்து உயிர் வாழ அத்தியாவசியமான ஜீவ சத்து எப்படி வடிகிறதோ அப்படியே

பிரஜாபதி பலி செலுத்தப்பட்டு அவர் உடலிலிருந்து இரத்தம் வடியும் என்பதை அடியிற்கண்ட உபநிஷத்து விளக்குகிறது.

இரத்தம் சிந்துதலில்லாமல் பாபமன்னிப்பில்லை என்பது எபிரேயர் 9:22-ல் காணப்படும் வேதவாக்காகும்,

யதா வ்ருக்ஷோ வனஸ்பதி
ஸத தாய்வ பிருஷோ அம்ருஷ
த்வச்ச யவஸ்ய ருத்திரம்
ப்ரஸ்யாத்தி த்வச்ச உத்பதா
தஸ்த தா தத் ருன்னாத் ப்ரைதி
ரஸோ வ்ருக்ஷதி வாஹ தாத்
(பிருஹதாரண்யக உபநிடதம் 39.28, 12)

பொருள் : எல்லா மரங்களுக்கும் மேலான மரமாக வனஸ்பதி இருப்பது போல எல்லா மனிதர்களுக்கும் மேம்பட்டவராக புருஷன் இருப்பார் என்று வேதம் சொல்லுகிறது.

வனங்களிலுள்ள எல்லா மரங்களுக்கும் பதி வனஸ்பதி, அதுபோல உலகிலுள்ள எல்லாப் பிரஜைகளுக்கும் பதி பிரஜாபதி என்று அழைக்கப்படுகிறார். வெட்டப்பட்ட மரத்திலிருந்து நீர் ஒழுகுவது போல பலியாக்கப்பட்ட புருஷனின் உடலிலிருந்து இரத்தம் வடியும்.

பலி செலுத்தி இரத்தத்தைச் சிந்த விடுதலைக் குறித்து வேதங்கள் வற்புறுத்திச் சொன்ன போதிலும் அப்படிச் செய்வது மனித புத்திக்கு விகற்பமாய்த் தோன்றும் என்றும், இப்பலியைக் குறித்துச் சற்று ஆழ்ந்து நோக்கின். இதன் முக்கியத்துவத்தையும் கருப்பொருளையும் அறிந்து ஆச்சரியப்படுவோம். இரத்தம் என்பது உயிர்.

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாபநிவர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாபநிவர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவியராகமம். 17:11)

கிறிஸ்து இயேசுவின் கைகளும் கால்களும் பலி கொம்பில் (மரத்தில்) ஆணிகளால் அடிக்கப்பட்டு அவர் நமது

பாபநிவர்த்திக்காகப் பலியாகி இரத்தம் சிந்தினார். இதுவே முடிக்கப்பட்ட திட்டவட்டமான, பூர்த்தியான பலி, இனி இது போன்ற பலிசெலுத்தப்படவேண்டிய அவசிம் இல்லை, வேதம் சொல்லுகிறபடி, வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். (எபிரெயர் 9:12)

அவருடைய சரீரத்தின் கடைசிச் சொட்டு இரத்தமும் சிந்தப்பட்டது. போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. (யோவான் 19:34) மேலும் "காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும் சரீர சுத்தியுண்டாகும்படிப் பரிசுத்தப் படுத்துமானால் நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனசாட்சியை செத்தகிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளது நிச்சயம்" (எபிரெயர் 9:13, 14) என்றும் வேதம் சொல்லுகிறது.

இதே காலத்தில் வாழ்ந்த ஆரிய பக்தர்கள் ரிக், யஜுர் வேதங்களில் பசு அல்லது குதிரைகளை யாக பலியாகச் செலுத்துவது பற்றி ஏராளம் எழுதியிருக்கிறார்கள். (ஆயிரம் பொற்காசுகளுக்கு ஓர் பசுவை வாங்கித் தன் தந்தையின் யாக பலிக்கு அனுப்பி வைத்த ஞானசம்பந்தரைக் குறித்துத் தமிழ் இலக்கியம் கூறுகிறது. இவர் வாழ்ந்தது கிறிஸ்துவுக்குப் பின்பு) பூர்வ ஆரியர்கள் மிருகங்களை திறந்தவெளிகளில் பலியிட்டு அதில் புசித்து சோமபானம் அருந்தி, கடவுளை வழிபட்ட வரலாற்றினை மறுக்வோ மறைக்கவோ இயலாது. ஆரிய மார்க்கம் வேள்விக் கோட்பாடுடைய சமயம் என்பது அந்த வேதங்களே சொல்லும். எனினும், பிரஜாபதியே பலியாவார் என்று ரிக்வேதமும் சில உபநிஷத்துகளும் சொல்லுகிறபடியினால் உபநிடத காலங்களில் பலி செலுத்துவது நிறுத்தப்பட்டிருக்கலாம். அல்லது புத்த

மார்க்கத்தின் எழுச்சியும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். எப்படியும் பிரஜாபதி பலியாக வேண்டும் என்பது எதிர் பார்ப்பானால் அப்படிப்பலியான பிரஜாபதியாகிய புருஷன் யார்?

காலம் நிறைவேறினபொழுது, பிரஜாபதி (ஹிரண்யகர்பஹ) சகலமும் உருவாகக் காரணமானவர் : ரிக்வேதம் 10-121) அஹ்மஸிம் (இருக்கிறவராய் இருக்கிறவர், (ப்ருகத் ஆரண்யக உபநிடதம் 1, 41) தனக்கு ஒரு சரீரத்தையெடுத்து அதை யக்ஞபலியாக (பிருகத் ஆரண்யக உபநிடதம் 1,2,7) தேவர்களால் ஒப்புக் கொடுக்கவே வந்தார். (ரிக்வேதம் 10,121,10)

விஷ்வ கர்மாவாகிய பிதா, சகலமும் உண்டாவதற்குக் காரணராயிருந்த கர்த்தாதி கர்த்தர் தன்னையே சர்வாங்க தகன பலியாக்கினார். (ரிக் வேதம் 10:81,82)

சகலமும் உண்டாவதற்குக் காரணமாக இருந்தவரும் இருக்கிறவருமாகிய புருஷன் தனக்கென்று ஒரு சரீரத்தையெடுத்து அதை் யக்ஞ பலியாக ஒப்புக்கொடுத்தார். (ரிக் வேதம் 10,906 ஸ்வேதாஸ்வதார உபநிடதம் 3,8,9

மேற்கண்ட குறிப்புகள் யாவும் வேதங்களில் சொல்லப்பட்ட வைகளாகும். இப்படிப்பட்ட தொரு யக்ஞ பலியாக ஒப்புக்கொடுத்து, ஜனக்கூட்டத்திலிருந்தும், சீடர் கூட்டத்திலிருந்தும் வேறு பிரிக்கப்பட்டு, தலையில் முள்முடி சூட்டப்பட்டவராய், யாரையும் குற்றப்படுத்தாமல் வாய் திறவாதவராய், தலை முதல் கால் வரை உடல் முழுவதும் இரத்தம் வடிய உலகத்தின் பாபங்களுக்காக மரித்த மேஷ பாலபகவானாக (மேஷம் - ஆடு, பால் - குட்டி, பகவான் கடவுள்) சரித்திரப் பூர்வமாக இயேசுக் கிறிஸ்து காணப்படுகிறார்.

பிராமணங்கள் வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது. எனவே இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற பலிகள் அவைகளைச் செலுத்த வருகிறவர்களைப் பூரணப்படுத்தாது. பிரஜாபதி புருஷன் தன்னைப் பலியாக்கின பின்பு தன்னை விசுவாசிக்கிறவர்களைப் பூரணப்படுத்துகிறார். பிரஜாபதி பலியின் மூலமாய் பாபங்கள்

மன்னிக்கப்படுவது உண்மையானால் இனி பாபத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவது அவசியமில்லை, அப்பிரஜாபதி இயேசுவே!

7. பலியாக்கப்படும் புருஷனின் எலும்புகள் முறிக்கப்படக் கூடாது.

எலும்புகளையும் முறிக்காமல் பாதுகாத்து சேர்க்கக்கடவன். (அய்த்தரிய பிரமாணம் 2:6)

பலி மிருகத்தின் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது (யாத்திராகமம் 12:46)

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகபலியிடப்பட்டு இருக்கிறாரே (I கொரிந்தியர் 5:7)

ரிக்வேதத்தின் பிரஜாபதி பலியைக் குறித்து மற்ற சமஸ்கிருத வேதங்களில் எங்கெல்லாம் குறிப்பிட்டுள்ளதோ அங்கெல்லாம் பலிமிருகத்தின் எலும்புகள் முறிக்கப்படக்கூடாது என்ற கருத்தினைக் காணலாம். ஐத்தரிய பிரமாணம் 2:6 இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இயேசுக் கிறிஸ்துவாகிய பிரஜாபதி புருஷன் சிலுவைமரமாகிய யுபா ஸ்தம்பத்திலே ஆணிகளால் கடாவப்பட்டு பலியானபொழுது தன் உடலிலுள்ள கடைசிச் சொட்டு இரத்தம் வரை பாபங்களுக்குப் பிராயச் சித்தமாகச் சிந்தி மரித்தார். இதைக் குறித்து யோவான் என்ற அவருடைய சீடர்களில் ஒருவர் எழுதும்பொழுது "அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவையில் இராதபடிக்கு யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள். அந்தப்படி போர்ச் சேவகர் வந்து அவருடனோ கூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை" (யோவான் 19:31-33)

பிரஜாபதி புருஷனுடைய பலி இவ்வளவு திட்டவட்டமாக இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியது எவ்வளவு ஆச்சரியம்!

8. பிரஜாபதி பலி செலுத்தப்பட்ட பின்பு மீண்டும் உயிர் பெறுதல்.

புருஷ சூக்தத்தில் காட்டப்படும் புருஷன் பலியாக்கப்பட்ட பின்பும் உயிரோடு இருக்கிறார். இனி, இவர் உலகிலுள்ள சகல ஆன்மாக்களின் ஜீவனாகி அவர்களை இரட்சிக்கிறார். பலியினாலே இப்புருஷன் நிர்மூலமாக்கப்படவில்லை. இப்புருஷனின் கிரியைகள் பலியுடன் முடிந்து போகவில்லை.

யத் விருக்ஷோ விருக்ஷேனோ ரோஹதி
மூலனவ தார புனா
மார்த்ய ஸ்வின் ம்ருத்யுனா வ்ருக்ன
கஸ்மான் மூலத் ப்ரரோஹதி

ரிதஸ இதிமா வோசடா
ஜீவ தஸ்த்தத் ப்ரஜாயதே
தானாருஹா இவனவ வ்ருக்ஷோ
அன்ஜஸா ப்ரீ த்ய ஸம்பவா
(ப்ருஹத் ஆரண்யக உபநிடதம்
3.9.28.4,5)

மரம் வெட்டப்பட்டால், அது மறுபடியும் அதின் வேரிலிருந்து துளிர்க்கும். ஆனால் புருஷன் வெட்டப்பட்டபின்பு (பலியாக்கப்பட்ட பின்பு) எந்த வேரிலிருந்து மறுபடியும் முளைப்பான்? மரத்தைப் போல முளைத்து வர இப்புருஷன் வித்துவோ விந்துவோ அல்ல. வித்தும் விந்தும் என்றும் ஜீவிக்கிற ஒருவராலே வரும் (புருஷனோ பலியாக்கப்பட்டு விட்டார்) எனினும் இப்புருஷன் ஜீவிக்கிறார்.

சமஸ்கிருத வேதங்களில் பல பிறப்புகள் அல்லது கர்ம சக்ரா போன்ற கொள்கைகளைக் குறித்து எவ்விதக் குறிப்புகளும் உபதேசங்களும் கிடையாது. உபநிடதங்களில் உள்ள சில வாக்கியங்கள் பிழையாக உபதேசிக்கப்பட்டு இக்கொள்கை வேதத்திலுள்ளது போல நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். சமஸ்கிருத வேதங்களில், நித்திய ஜீவனைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள வாக்கியங்களைக் கவனமாகவும் உண்மையாகவும் ஆராய்ந்து

பார்த்தால் சரீர உயிர்த்தெழுதலை அவைகள் ஆதரிப்பதைக் காணலாம்.

பிருகதாரண்யக உபநிடதத்தில் 3,9,28,4-ம் வாக்கியத்தில் வருகின்ற **மார்த்ய** என்ற வார்த்தை ஒருமைத்தன்மையுடையது. இதின் பொருள் மனிதன் என்பது. ஸ்வாமி மிருதானந்தா அவர்கள் இந்த வார்த்தைக்குச் சாதாரண உலக மனிதன் என்னும் பொருள் பட விவரிக்கிறார். (பிருகதாரண்யன உபநிடதம் : மலையாள விளக்கம் மொழிபெயர்ப்பு Publishers ஸ்ரீ இராமகிருஷ்ணாமடம் கேரளா 1986. பக்கம் 348) மார்த்திய என்னும் வார்த்தை ஆதிமுனிவர்களால் பயன்படுத்தப்பட்டபொழுது சிருஷ்டி கர்த்தாவாகிய புருஷன் என்பவரைக் குறிக்கும் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டது. இதற்கு முன் உள்ள வாக்கியங்களைப் பார்த்தாலும் அதில் இவ்வார்த்தை உலகை உண்டாக்கிய புருஷன் என்பவரையே குறிப்பதாக உள்ளது. இரண்டாவது வாக்கியத்தில் இந்தப் புருஷன் என்பவர் இரத்தம் வடிய நிற்பவராகவும் 5-வது வாக்கியத்தில் மரித்தவராகவும் பின்பு உயிர்த்து எழுந்தவராகவும் காணப்படுகிறாரேயன்றி, சாதாரண மனிதாகக் காட்டப்படவில்லை. வேதத்தைத் திரித்துக் கூறும்போது அது தவறான கொள்கைகளை ஏற்படுத்திவிடுவது இயல்பு.

இப்படிப் பலியாக்கப்பட்ட புருஷன் மீண்டும் உயிர்பெற்று எழுவது சாத்யமாகாது என்று நினைத்த ஆதி முனிவர்களில் பலர் இதை ஒரு கட்டுக் கதையாகவே நினைத்தனர். உலகில் இப்படியொரு பலி நிறைவேற இயலாது என்று நினைத்தனர். இதினாலேயே இதிகாசங்களும் புராணங்களும் பிற்காலங்களில் எழுந்தன.

இயேசு கிறிஸ்துவில் இவைகள் நிறைவேறினபோதோ அவரை ஏற்றுக் கொள்வதற்குத் தடையாக மதங்களும், சாதிப் பிரிவுகளும் ஏற்பட்டு வேதங்கள் போதிக்கப்படாதபடியினால் ஜனங்கள் இதிகாசங்களையும் புராணங்களையும் நம்பி, சத்தியத்தை அறிய இயலாமற் போய்விட்டது என்பது உண்மை.

சிலுவையில் (யுபா ஸ்தம்பத்தில்) மரித்த இயேசுகிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்தது சரித்திர

உண்மையாகும். முதல் நூற்றாண்டு தொடக்கம், கிறிஸ்துவின் சீடர்களின் முக்கியச் செய்தியே உயிர்தெழுந்த இயேசுவைப் பற்றியதாகும். இயேசுவின் அப்போஸ்தலர்கள் இந்த உயிர்த்தெழுதலைக் குறித்துத் திடமாய் சாட்சி கொடுத்தனர். அக்காலத்தில் வாழ்ந்த எந்த கிறிஸ்தவரல்லாத சரித்திரப் பேராசிரியர்களும் இயேசுவின் உயிர்தெழுதல் அறிவிக்கப்பட்ட போது எதிர்த்தோ மறுத்தோ குறிப்பெழுதவில்லை.

யூதர்களின் பண்டைய பழக்கவழக்கங்கள் என்ற நூலை எழுதிய ஜோஸபஸ் என்ற கிறிஸ்தவரல்லாத சரித்திர ஆராய்ச்சியாளர், தீர்க்கர்கள் சொன்னபடியே இயேசு மரணமடைந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (Antiquities 18:3:3) (Quoted from the RUN AWAY WORLD by Michael Green) இந்த ஜோஸபஸ் என்பவர் கிறிஸ்தவர் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

விவிலிய வேதத்தில் மத்தேயு, மாற்கு, யோவான் போன்ற இயேசுவின் சீடர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்துத் தங்கள் நற்செய்தி நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வைத்தியராக இருந்த லூக்கா என்பவர் இந்த இயேசுவைக் குறித்து அறிந்துக்கொள்ள ஆசையுள்ளவராய் அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று விசாரித்து எழுதிய நூல் அப்போஸ்தலரின் நடபடிகள் என்று அழைக்கப்படும், அதில்,

“தியோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி தேவனுடைய இராஜ்ஜியத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அனேகத் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காண்பித்தார்” (அப்போஸ்தலர் 1:1-3) என்று குறிப்பிட்டுள்ளார்.

இயேசுவும் தாம் சிலுவையில் மரிப்பதற்கு முன்பே பலமுறை தாம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழப்போவதை அறிவித்திருக்கிறார். மேலும், கிறித்துவர்களை அழித்துக் கிறிஸ்துவின் மார்க்கத்தை நிர்மூலமாக்கத் துணிந்த தர்சு நாட்டானாகிய சவுல் என்பவன் இயேசு கிறிஸ்துவை உயிருடன் கண்டு அவருடைய சீடனாகவும் அப்போஸ்தலனாகவும் மாறிய பின்பு, கொரிந்து சபைக்கு நிரூபம் எழுதுகையில்,

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாபங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்தெழுந்து கேபாவுக்கும், பின்பு அவர் ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார். அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள். சிலர் மாத்திரம் நித்திரை அடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு அப்போஸ்தலருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு அக்காலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் (1 கொரிந்தியர் 15:3-8) என்றெழுதுகிறார்.

பிற்காலத்தில் இவர் அகிரிப்பாராஜாவுக்கு முன்பு விசாரிக்கப்படுகையில், ராஜ சபையில் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பேசுகையில், "இது ஒரு மூலையில் நடந்த காரியமல்ல" (அப் 26:26) என்று தைரியமாய் சாட்சி சொன்னது ரோம சரித்திரத்தில் இடம் பெற்ற காரியமாகும்.

பல தெய்வ வணக்கங்களையும் விக்கிரக ஆராதனைகளையும் பின்பற்றி வந்த ரோம நாடு கிறிஸ்தவ நாடாக மாறியதற்கு உயிர்த்தெழுந்த இயேசுவே காரணமாகும் எனில் அது மிகையாகாது.

"ம்ருத்யோமா அம்ருதம் கமய"

என்ற பிருகதாரண்யக உபநிடதத்தில் பக்தர்கள் செய்த ஜெபத்திற்கு மரணத்தை ஜெயித்து உயிர்தெழுந்த இயேசு பதிலாகிறார்.

“பிள்ளைகள் (தேவர்களாகிய மனிதர்கள்) மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரண பயணத்தினாலே அடிமைத்தத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.” (எபிரேயர் 2:14,15) என்பதைப் பவுல் அப்போஸ்தலர் தெளிவுப்படுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக.

“நான் உயிரோடிருப்பதினால் நீங்கள் உயிரோடிருப்பீர்கள்,” (யோவான் 19:19) என்ற இயேசு சொன்ன வார்த்தைகளின்படி இவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் மரண பயத்திற்கு நீங்கலாகி என்றென்றும் ஜீவிக்கிற மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். என்பதற்கு உலகெங்கிலும் சாட்சிகள் உண்டு.

9. புருஷனுடைய மாமிசம் புசிக்கப்படுதல் வேண்டும்.

பிரஜாபதி அவர்களுக்காகத் தன்னையே கொடுத்துவிட்டார். இப்படியாக இப்பலி அவர்களுக்குக் கிடைத்தது. இப்பலியே அவர்களுக்குப் போஜனமாகவும் ஆயிற்று. (சத்பதா பிராமணம் 5.1.1.1,2)

பலி மிருகத்தின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதை புசிக்கக் கடவர்கள் (யாத்திராகமம் 12:8)

நீங்கள் மனுஷ குமாரனுடைய (புருஷனுடைய) மாம்சத்தைப் புசிக்காமலும், இரத்தத்தை பானம் பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. (இயேசு சொன்னது : யோவான் 6:53)

இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். (மத்தேயு 26:26)

சமஸ்கிருத வேதமாகிய யஜுர்வேதம் அஸ்வமேத யாகத்தைப் பற்றி விரிவாக விவரிக்கிறது. சத்பதா பிராமணம் இத்துடன் சம்பந்தப்பட்டதாகும். சுமார் கி.மு.800ம் ஆண்டுகளில் எழுதப்பட்ட இவ்வேதக் கருத்துக்கள் யாவும் பலியை ஆதாரமாக கொண்டவையாகும்.

சங்கரரும் இராமனுஜரும் மிருக பலி செலுத்தும் பழக்கத்தை ஒப்புக் கொள்கிறார்கள். (Sacred books of the East XXXVII, 131 and XIVIII 598-599)

மகோபாத்யாய P.B. கானே அவர்களும் தனது தர்ம சாஸ்த்ரா கா இதிகாசா என்ற நூலில் மிருக பலிகளைக் குறித்த அனேக வேதக் குறிப்புகளை எடுத்துச் சொல்லுகிறார். (பக்கம்.420-23, 542, 543, 565)

மிருக பலி செலுத்தும் வழக்கம் வேத காலங்களில் இருந்தது என்பதையும் வேதியர் பலி மிருகத்தின் இறைச்சியைத் தின்று, சோமபானம் என்னும் மதுவைக் குடித்ததாகவும் வேதக் குறிப்புகளில் பல இடங்களில் காணலாம். இதை யாரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ இயலாது.

காலப்போக்கில் இதுவே பாரம்பரியமாகவும் சடங்காச்சாரமாகவும் மாறி, அனேகர் தங்கள் சொந்த வருமானங்களுக்காகவும் இதைப் பயன்படுத்தினபடியினால், சிலருக்கு இது அதிருப்தியைக் கொடுத்தது. இக்காலங்களில் அனேக ஆரண்யங்களும், உபநிடதங்களும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டன. மகாவீரர், கௌதம புத்தர் போன்றவர்கள் இதன் காரணமாகவே கடவுளற்ற மார்க்கங்களை ஏற்படுத்தினர். பௌத்த மார்க்கம் பெரும்பான்மை பெற்றபோது, ஆரியர்கள் மிருக பலிக் கொள்கையை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

விவிலியத்திலும், ஆதிமுற்பிதாக்களாகிய ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் பலி பீடங்களைக் கட்டி, இறைவனுக்கு மிருக பலிகளைச் செலுத்தின வரலாறும், மோசேயின் காலத்தில் இறைவனே தனக்கு சர்வாங்க தகனபலி, போஜன பலி, சமாதான பலி, பாப நிவாரண பலி, குற்ற நிவாரண பலி போன்ற பலிகளைச்

செலுத்தும்படிக் கட்டளை கொடுத்த வரலாறும், பிற் காலத்தில் தீர்க்கதரிசிகளைக் கொண்டு இப்பலிகள் தனக்கு வெறுப்பாக இருக்கிறதென்று அவைகளை நிறுத்தச் சொன்ன வரலாறும், (ஏசாயா 1:11) மீகா 6:6-8)) (சங்கீதம் 40:6,50-9,10) முடிவிலே உலகத்தின் பாபங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியான (மேஷபால பகவானாக) தேவனே மனிதனாகித் தன்னையே பலியாக்கி, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து தன்னை நினைவு கூறும்படியாக அப்பத்தையும் இரசத்தையும் தனது சரீரம், இரத்தம் இவைகளுக்கு அடையாளமாக வைத்துப்போன வரலாறும் காணப்படுகிறது.

தேவர்கள் என்று அழைக்கப்படும் இரட்சிக்கப்பட்டவர்கள் (மறுபிறப்பை இம்மையிலேயே அடைந்தவர்கள்) இறைவனுடைய பலி மாம்சத்தைப் புசிக்கவேண்டுமென்பது) வேத கட்டளையாகும்.

தாம் மரித்த பின்பு உயிரோடு எழுந்து தம்மை விசுவாசிக்கிறவர்களுக்குப் போஜனமாகத் தமது மாம்சத்தை அடையாளமாக வைத்து அதை கட்டளையாகக் கொடுத்தவருமாகிய இயேசுவே புருஷ பிரஜாபதியின் நிறைவேறுதலாயிருக்கிறார்.

10. புருஷ பிரஜாபதி தன்னை முழுமையாக பலியில் அர்ப்பணிப்பார்.

தஸ்மாத் யக்ஞா த் ஸர்வஹூதா
ஸம்ப்ருதம் ப்ரிஸ்ஸா தாஜ்யம்
பஸ்ஸூஸ் தம்ஷக்ரே வாயவ்யான்
ஆரண்யான் கிராம்யான் ஷக்யே (9)

தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்ட பலியினாலே இவையெல்லாம் உண்டானது. நாட்டிலும் காட்டிலும் வானத்திலுள்ள எல்லா மிருகங்களும், நெய்யும்:

தஸ்மத் யக்ஞாத் ஸர்வஹூதா
ருச்ச: ஸாமானி ஜக்னிரே
ச்சாண் தாம்ஸி ஜக்னிரே தஸ்மாத்
ஜூஸ்தஸ்மாத் அஜயதா.

தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்ட பலியினாலே ரிக், சாம, யஜுர் வேதங்களும் புனித வாசகங்களும் உண்டாயின. (புருஷஸூக்தம் 9,10)

பரலோகத்தில் ஏற்கனவே நடத்தப்பட்டு விட்ட புருஷபிரஜாபதி பலியின் நிழலாக, பூமியின் செய்யப்படும் பலியில் நெய்யும் வானத்துப் பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும் பலி செலுத்தப்படுகின்றன. உலகில் நடத்தப்படும் இப்பலிகள் இறைவன் பூவுலகின் கண் வந்து பலியாவதை நிரூபிக்கின்றன. தாண்டிய மகா பிராமணத்தில்:

யக்ஞோத அவதி தஸ்ய ச்சாய க்ரியதே

(இங்கே செய்யப்படும் பலிகள் நிழல் போன்றவை) என்று காணப்படுகிறது.

நித்திய பலியாக பரலோகத்தை விட்டுப் பூவுலகிற்கு வந்து பலியான வரலாறு இயேசுவில் பூர்த்தியடைகிறது.

புருஷ பிரஜாபதியின் பலி மூலமாக ரிக், யஜுர், சாம வேதங்களும் சண்டா என்ற வேத வாசகங்களும் உலகிற்கு அளிக்கப்பட்டன. (நான்காவது வேதம் என்று சொல்லப்படுகின்ற அதர்வ வேதம், ரிக்வேத புருஷ ஸூக்கத்தில் விடப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்) இவ்வேதங்கள் யாவும் உலகின் பாபங்களுக்காகப் பலியாகப் போகின்ற இறைவனைக் குறித்து அறிவிக்கும் நற்செய்தி நூல்களாகும்.

"மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கத்தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்த போது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே" (லூக்கா 24:24) என்று இயேசு பிரான் சொன்னது எவ்வளவு உண்மை!

யத் புருஷ வ்யததுஹ
கதிதா வ்ய கல்பயன்
முகம் கிமஸ்யா கௌபாஹ
காஊரு பாதா உத்யதே!

புருஷ பிரஜாபதி பலி செலுத்தப்பட்ட பின்பு அவருடைய அங்கங்களை எப்படித் தெரிந்து கொள்வது? அவருடைய முகம் யார்? அவருடைய கைகள் யார்? எந்த பெயரினால் அவருடைய கால்களும் பாதங்களும் அறியப்படும்?

ப்ராஹ்மனோஸ்ய முகம் ஆஸித்
பாஹூ ராஜன்யா: க்ருதஹ்
ஊருத தஸ்ய யத்வைஸ்ய ஹ்
பாத்பியாம் ஸூத்ரோ அஜாயத

முகமே பிராமணன்
கரங்களே ஷக்த்திரியர்
கால்களே வைசியர்
பாதங்களே சூத்திரர் (புருஷ ஸூக்தம் 12,13)

பலி செலுத்தப்பட்ட பின்பு அப்பலியின் மூலகாரணராகிய பிரஜாபதியை எப்படி உணர்வது, அறிவது, செயல்படுவது? என்பன போன்ற கேளிவிகளுக்கு ரிக் வேதத்தின் புருஷ பிரஜாபதியின் முகமே பிராமணன், கரங்களே ஷத்ரியன், கால்களே வைசியன், பாதங்களே சூத்ரன் என்பதே! அதாவது இந்நான்கு வகுப்பாரும் சேர்ந்து புருஷ பிரஜாபதியின் உடலாகிறார்கள் என்பதுவே உண்மை.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் புருஷ பிரஜாபதி பலியான பின்பு அவருடைய சரீரம் வெளிப்படும். அந்தச் சரீரம் நான்கு முக்கிய வகுப்பினரை கொண்டதாகும்.

இப்பாடலின் உட்பொருளை அறிய இயலாத பூர்வ கால ஆரியர்கள், தங்களை எல்லாரிலும் மேலாகவும், சிறந்தவர்களுமாக வைத்துக் கொள்வதற்காக நான்கு சாதிகளை ஏற்படுத்தி **சதுர் வர்ணம் மாயா ஸிருஷ்டி தம்** (நானே இறைவன் நான்கு சாதிகளை ஏற்படுத்தினேன்) என்ற கொள்கைகளை ஏற்படுத்தினர். பிராமணர்கள் ஏற்படுத்திய இச்சாதிகள் ஒருவருடன் ஒருவரை ஐக்கியப்படுத்துவதில்லை.

அப்படியானால் புருச பிரஜாபதியின் சரீர அவயங்கள் யார்? என்ற கேள்விக்கு விடை கண்டாக வேண்டும். இயேசு (புருச

பிரஜாபதி) பலியான பின்பு தன்னை ஏற்றுக்கொள்கிற ஒவ்வொருவருடைய சரீரத்திலும் தான் காணப்படும்படியாகத் தனது மாம்சத்தையும் இரத்தத்தையும் அவர்களுக்குப் புசிக்கவும் குடிக்கவும் கொடுத்து அதை நித்திய கட்டளையாக மாற்றினார். இப்படிச் செய்தவர்கள் இயேசுவுக்குச் சீடர்களானார்கள். இச்சீடர்களின் திருக்கூட்டமே சபை ஆயிற்று. இப்பொழுது பைபிள் சொல்லுவதைக் கவனியுங்கள்.

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:23)

நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள் (1கொரி 12:27)

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். (ரோமர் 12:5)

புருஷ பிரஜாபதியின் சரீரம் பலி செலுத்தப்பட்டு, அப்பலியினால் பாபமன்னிப்பையும் ஆத்ம விடுதலையும் பெறுகிறவர்கள் **சபை** ஆகிறார்கள். இச்சபையானது கிறிஸ்து இயேசுவின் மணவாட்டியாக இருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லும்பொழுது பவுல் அப்போஸ்தலர் இதைத் தேவ இரகசியம் என்கிறார். இத்தேவ இரகசியத்தை விளக்கப் புருஷன் மனைவி தாம்பத்ய உறவைச் சொல்லுகிறார். ஏனெனில் புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்பதை ஆதியாகமம் 2-24ல் காண்கிறோம். மேலும், கர்த்தரோடிசைந்திருக்கிறவன் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். (1 கொரிந்தியர் 6:17) என்றும் நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம் (எபேசியர் 5:30) என்றும் காண்கிறோம்.

தெய்வ பக்தியுள்ளவரெவரும் ஆண்டவனைப் பதியாகவும் தன்னைச் சதியாகவும் நினைத்துக் கணவன்-மனைவி உடலின்பம் பெறுவதுபோல் ஆன்மீக இன்பம் பெறுவது நடைமுறை உண்மையன்றோ?

பைபிள் சொல்லுகிறபடி:

சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. இந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாய் இருக்கிறது. அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே (1கொரிந்தியர்12:12-27)

பலியாகி, உயிர்த்தெழுந்த இயேசுவின் சரீரமாகிய சபையும் அச்சபையின் ஒவ்வொரு அங்கமுமாகிய தனி நபரும் கிறிஸ்து இயேசுவைப் பிரதிபலித்துக் காட்டுபவர்கள். இவர்களுக்குள் வித்தியாசமில்லை. இயேசுவின் சரீரமாகிய சபைக்கு சாதி வித்தியாசம் கிடையாது.

ஆரிய மார்க்கம் சாதியை ஏற்படுத்தி மக்களிடையே பிரிவினைகளை உண்டு பண்ணிவிட்டது. பலியாக்கப்பட்ட பிரஜாபதியின் சரீரம் நானாவித மக்களாலும் ஆக்கப்பட்டது எனில் இந்துக்கோவில்களில் சூத்திரர் பிரவேசிக்க முடியாமல் போனது ஏன்? சூத்திரரோ, மற்றும் வைசியர் போன்றவர்களோ கோயில் அர்ச்சகர்களாக ஆகமுடியாமல் போனது ஏன்? இப்படி செய்வதினால் பிரஜாபதியின் மூலக்கொள்கைகளையே அவமதிப்பதாகுமல்லவா? இப்படிப்பட்ட உயர்ந்த கருத்துக்கள் மக்களிடையே பரவி விட்டால் தாங்களும் தங்கள் வம்சங்களும் வாழமுடியாது என்று நினைத்தே இவ்வேதங்களை வெளிப்படுத்தாமல் விட்டு விட்டனரோ?

இயேசு கிறிஸ்வினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாக அறிவிக்கிறதற்குக் கிருபைபெற்ற அப்போஸ்தலர்களும், சீடர்களும் தங்குதடையின்றித் தாமதமில்லாமல் இயேசுவே பிராயச்சித்த பலி என்பதை அறிவித்த போது, யூதர், கிரேக்கர், பாபிலோனியர், இஸ்மவேலர்,

பாலஸ்தீனியர், தமிழர், ஆரியர் போன்ற அனேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டு அவருடைய சரீரமாயினர்.

சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரள் கூட்டமாகிய ஜனங்கள் இயேசுவின் சபையாகிய மணவாட்டியாக மாறுவதை பைபிளில் காணலாம். கிறிஸ்தவர்களிலேயும் சாதி வித்தியாசம் இருப்பதற்குக் காரணம், இவர்கள் இன்னும் சரியான கிறிஸ்தவர்களாய் மாறாதபடியினாலேயே! உலகிலுள்ள எல்லா மனுஷர்களும் ஒரேயொரு ஆதாம், ஏவாள் மூலமாக உண்டாயிருக்க, சாதி எங்கேயிருந்து வரும்?

புருஷ பிரஜாபதியின் சரீரம் இப்போது சபையில் பிரதிபலிப்பதினாலேயே: "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலம் மகிமையுண்டாவதாக" (எபேசியர்.3:21) என்று பைபிள் சொல்லுகிறது.

புருச பிரஜாபதியின் ஒவ்வொரு அங்கமும் முக்கியத்துவம் வாய்ந்தது. தலையாகிய பிராமணனும் பாதங்களாகிய சூத்ரனும், காலாகிய வைசியனும், கரங்களாகிய ஷத்ரியரும் ஒன்றே என்ற தத்துவம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே நிறைவு பெறுகிறது. கிறிஸ்தவத்தில் பிராமணனும் உண்டு, சூத்ரனும் உண்டு. கிறிஸ்தவப் பாதிரிகளாக பிராமணர்களும், சூத்ர, வைசிய ஷத்ரியரும் உண்டு. கிறிஸ்துவின் சபையில் யாவரும் ஒன்றே! பலியாகிய புருஷ பிரஜாபதியின் ஒரே அப்பத்திலும் ஒரே திராக்ஷை ரசத்திலும் பிராமணனும் சூத்ரனும் பங்குகொள்ளும் காட்சியைக் கிறிஸ்தவ திருச்சபையில் மட்டுமே காணலாம். இவர்கள் உலகத்தாரை ஏமாற்ற என்றைக்காவது ஒரேயொரு நாள் ஒரேயொரு வேளை சமபந்தி நடத்திக் காட்டுகிறவர்களல்ல. சமபந்தி நடத்துகிறவர்கள் சூத்திரனைத் தனக்குச் சம்பந்தியாகவோ அல்லது அர்ச்சனை செய்வதில் சமமாகவோ காட்டுவார்களா?

பிரஜாபதியின் பலியினால் பாவமன்னிப்பும் ஆன்மீக விடுதலையும் பெற்றவர்கள் பிரஜாபதியின் சரீரமாக ஒன்றேகுலம்

ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்தவத் திருச் சபையிலே நிறைவேற்றுகிறார்கள்.

ரிக் வேதத்தின் 10வது மண்டலத்திலுள்ள புருஷ சூக்தத்தின் 18 சுலோகங்களில் கூறுவது போலப் பலியாக வேண்டிய புருஷ பிரஜாபதி

1. பழுதற்றவராக இருக்க வேண்டும், (நிஷ்களங்க புருஷ)

2. முள்முடி சூட்டப்படுதல் வேண்டும். (பலுசு என்ற முள்கொடி சுற்றப்பட வேண்டும்.)

3. தன் சொந்த ஜனங்களால் நிராகரிக்கப்பட வேண்டும்.

4. மௌனமாகத் துன்பங்களைச் சகிக்கவேண்டும்.

5. ஒரு மரக் கம்பத்தில் கட்டப்படவேண்டும் (யுபா ஸ்தம்பத்தில் கட்டப்படல் வேண்டும்)

6. அவருடைய இரத்தம் உடம்பிலிருந்து வடிய வேண்டும்.

7. எலும்புகள் முறிக்கப்படக் கூடாது.

8. மரித்துப் பின் உயிர்பெற்று ஏழவேண்டும்.

9. பலியின் மாமிசம் பலி செலுத்திய பின்பு புசிக்கப்பட வேண்டும்.

10. புருச பிரஜபதி தன்னை முழுமையாக ஒப்புக்கொடுப்பதினால் அவருடைய சரீரம் அவரை ஏற்றுக்கொள்கிறவர்கள் மூலம் அறியப்படும்.

மேற்கண்ட வேதக்குறிப்பின்படி இயேசு ஒருவரே காணப்படுகிறார். சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம் ஆகிய சமயங்களும் இந்தியாவில் இப்பொழுது எல்லா சபையங்களின் கூட்டுக் கலவையாகக் காணப்படும் இந்து சமயமும் இதற்குள் அடங்கும்.

அதிகாரம் - பதினான்கு

பரகதியடைய

கட உபநிஷத்தில், முக்தி என்னும் வார்த்தையானது மரணத்தின் வாயிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல் என்னும் பொருளில் விவரிக்கப்பட்டுள்ளது. அதுவே மரணமில்லாப் பெருவாழ்வு அல்லது நித்திய ஜீவன் என்னும் நிலையுமாகும். மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்வைக் குறித்த காரியங்களைக் கட உபநிஷத்தில் உண்மையாய்த் தேடினால் கண்டு கொள்ளலாம். மனுகுலத்தின் மகாப்பெரிய எதிரி மரணமே! இம் மரணத்தின் வாயிலிருந்து எப்படி மனிதன் தப்பித்துக் கொள்ள இயலும்? இந்தக் கேள்விக்குரிய விடையைக் கடா உபநிஷத்து கொஞ்சம் கொஞ்சமாக நாடக பாணியில் விவரிக்கிறது. இவைகளை ஆழ்ந்து சிந்தித்து அறிவோமேயானால் அது ஆச்சரியமாகவும், ஆர்வமுண்டாக்கு வதாயுமிருக்கும்.

மரணத்தின் உண்மை நிலையையும் நித்திய ஜீவனின் அவசியத்தையும் கட உபநிஷத்து சிறுகதையின் மூலம் ஆரம்பிக்கிறது.

வாஜஸ்ரவஸ் என்று ஒரு மனிதன் தன் மகனைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அர்பணித்துவிட்டு, இறைவரின் ஆசீர்வாதத்தையும் மன சாந்தியையும் விரும்பி நிற்கிறான். இச் சமயத்தில் அவனுடைய மகனாகிய நசிகேதன் என்பவன் தன் தகப்பனை நோக்கி: என்னை யாருக்கு அர்ப்பணிப்பீர்கள் என்று கேட்கிறான். இப்படி இரண்டு மூன்று முறை இந்தக் கேள்வியை அவன் திரும்பத் திரும்ப கேட்கவே, தகப்பன் கோபமடைந்து: மரணத்தின் தேவனாகிய யமனுக்கு உன்னை அர்ப்பணிப்பேன்என்று பதில் சொல்லுகிறான். இதைக் கேட்ட மகன், தானே விரும்பி மரண உலகத்திற்குள் பிரவேசிக்கிறான். ஆனால், மரண தேவனாகிய யமன் மூன்று நாட்கள் இரவு பகலாக அங்கே காணப்படவில்லை. நசிகேதனோ புசியாமலும் குடியாமலும் அந்த மூன்று நாட்களும் காத்திருக்கிறான்.

மூன்று நாட்களுக்குப் பின்பு மரண தேவன் இவனைச் சந்தித்து : மூன்று நாட்கள் நான் இங்கு இல்லாமற் போனதற்காக வருந்துகிறேன், நீ மிகவும் பொறுமையுடன் இரவும் பகலும் காத்திருந்ததை ஈடு செய்யும் பொருட்டு உனக்கு மூன்று வரங்களைத் தர விரும்புகிறேன் என்கிறான்.

நசிகேதன், முதல் வரமாக, தன்னுடைய தகப்பன் தன்னைக் குறித்து கவலைப்படாமல் மன நிம்மதியாய் இருக்க வேண்டும் என்று கேட்கிறான். அதற்கு யமன், சரி, அப்படியே ஆகட்டும், உன் தகப்பன் உன்னை உயிருடன் கண்டு தொடர்ந்து உன்னை நேசித்து, தன் சமாதானத்துடன் நித்திரை அடைவான் என்கிறான்.

நிசிகேதன், இரண்டாவது வரமாக : மரணமே, பரலோகத்தில் பயம் இல்லை. நீயும் அங்கு இருக்கமாட்டாய் அங்கு பசியும் தாகயும் கிடையாது. கவலையும் அங்கு இருக்காது. பரலோகம் மகிழ்ச்சியினாலும் ஆனந்தத்தினாலும் நிரம்பியிருக்கும். மரணமே! அக்னிபலியே பரலோகத்திற்கு வழி என்பதை நீயும் அறிந்திருக்கிறாய். அந்தப் பலியைப் பற்றி எனக்கு விவரித்துச் சொல். இதுவே எனது இரண்டாவது வரம் என்று கேட்கிறான்.

உடனே யமன், இந்த இரண்டாவது வரத்தையும் அருளி அக்னி பலியின் இரகசியங்களை விவரித்துச் சொல்லி, நசிகேதனின் ஞாபகார்த்தமாக இப்பலிக்கு நசிகேத பலி என்று பெயரும் வைக்கிறான். நசிகேதனின் மூன்றாவது வரம் மனிதனின் மரணமில்லாப் பெருவாழ்வு பற்றியதாகும்.

ஓ : மரணமே! எனக்கு ஒரு சந்தேகம் உள்ளது. மனிதன் மரித்த பின்பு அவன் இன்னும் இருக்கிறான் என்று சிலரும், அவன் இல்லை என்று சிலரும் சொல்லுகிறார்கள், நான் இதைக் குறித்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து இதை எனக்கு விவரித்துச் சொல்லும் என்று கேட்கிறான்.

ஆனால் மரண தேவனோ இந்த வரத்தை நசிகேதனுக்குக் கொடுக்க விரும்பவில்லை. வேறு ஏதாகிலும் வரம் கேட்கும்படி சொல்லுகிறான். நசிகேதன் யமனை நோக்கி, வேறு எந்த வரமும் இந்த வரத்திற்கு நிகரானதல்ல, ஆகையால் மரணத்திற்குப் பின்பு

மனிதனுக்கு என்ன நடக்கும் என்பதை விவரித்துச் சொல்லும் என்கிறான்.

யமனோ, நூறு ஆண்டுகள் வாழக்கூடிய பேரப்பிள்ளைகளைக் கேள், யானைகள், குதிரைகள், பொன். ஆட்டு மந்தைகள். மாட்டு மந்தைகள், ஏராளமான நிலம் இப்படி எதாவது கேள் என்கிறான். அதற்கு நசிகேதன், நித்திய ஜீவனைக் குறித்து அறிவதைக் காட்டிலும் இவை மேலான வரம் அல்ல என்கிறான். மரண தேவன் நசிகேதனிடம், ரதங்கள், வாத்தியங்கள், நடனாங்கள் போன்றவற்றைக் கேட்கும்படிச் சொல்ல, நசிகேதனோ மிகவும் ஞானமாக, மரணமே இவையெல்லாம் சாஸ்வதமான தல்ல. இவ்வுலகில் மனித வாழ்வு மிகவும் குறுகியதாகும், ஆகவே ரதங்களையும், குதிரைகளையும், யானைகளையும், ஆடல் பாடல்களையும் நீ வைத்துக்கொள். நித்தியஜீவனைப் பற்றியே நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன் என்கிறான்.

ஆனால் மரண தேவனோ, நித்திய ஜீவனைக் குறித்த அறிவைத் தவிர மற்ற எல்லாவற்றையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். ஏனெனில் மரணம் நித்ய ஜீவனுக்கு எதிரி. பரலோகத்தில் மரணமும் இல்லை. மரண பயமும் இல்லை. (ஸ்வர்கேலோகே நபயம் கின்சினாஸ்தி) கடா உப.1:12) ஒருவன் நித்ய ஜீவனை அடையும் பொழுது அங்கே மரணத்திற்கு இடமில்லை. கடா உபநிஷத்தில் வரும் இந்தக் கதையில் இந்த அரிய உண்மை மிகவும் அற்புதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மரணம் என்பது மனிதனால் உண்டாக்கப்பட்ட கற்பனையோ அல்லது கட்டுக் கதையோ அல்ல. மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கை என்ன என்பது மனிதனுக்கு இன்னும் விளங்காத புதிராகவே உள்ளது. நசிகேதனைப் போல, நாமும் மரணத்திற்குப்பின்பு என்ன என்பதைக் குறித்து அறிந்து கொள்ள ஆவலாகவே இருக்கிறோம். இதை எண்ணிப்பார்க்கவே கஷ்டப்பட்டு, சிலர் இதைக் குறித்துக் கவலைப்படாமலேயே வாழ நினைக்கிறார்கள். விருப்போ, வெறுப்போ, எப்படியும் நாம் மரணத்தைச் சந்தித்தேயாக வேண்டும். இதிலிருந்து யாரும்

தப்பித்து எங்கும் ஓடிவிட இயலாது. எனினும் இந்த நூற்றாண்டுக் காலங்களில் சிலர், மரணத்திற்குப் பின்பு என்ன என்பதைக் கருத்துடன் ஆராய ஆரம்பித்திருக்கிறார்கள். கடந்த இருபது ஆண்டுகளில் இதைக் குறித்தான அனேக புத்தகங்கள், பல அறிஞர்களால் எழுதப்பட்டு இன்றும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மரணத்திற்குப் பின்பு என்ன என்று நினைத்துப் பார்க்கவும் பயங்கரமான இந்த மர்மத்தைக் குறித்து இப்போது சிலர் மனம் திறந்து புதிய உற்சாகத்துடன் ஆராய ஆரம்பித்திருக்கிறார்கள் என்று ஒரு அறிஞர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். (Is there Life after death? by John weldon and Zola Levitt, page 3) டாக்டர் மாரிஸ் ரோலிங்ஸ் அவர்கள் எழுதிய Beyond death's door என்ற புத்தகமும், ஜோஸப் கிஸ்டோப் ஹம்பே அவர்கள் எழுதிய To Die is gain என்ற புத்தகமும் மரணத்திற்குப் பின்பு என்ன என்பதை விவரிக்கும் சிறந்த நூல்களாகும். டாக்டர் ரேய்மாண்ட மோடி அவர்களின் புத்தகம் உலக அளவிலுள்ள அனைத்து மக்களாலும் படிக்கப்படும் புத்தகமாகும்.

Beyond Death's Door என்னும் புத்தகத்தில், மரிக்கும் தருவாயிலுள்ள ஒருவருக்கு என்று டாக்டர் ரோலிங்ஸ் தனிப்பட ஒரு அதிகாரம் எழுதியிருக்கிறார். அவர் "தப்பித்துக் கொள்ள ஏதாகிலும் வழியுண்டா? என்று என்னிடம் ஒரு நோயாளி கேட்கும்போது அந்த நோய் அவனைக் கொல்லக்கூடும் என்ற உண்மையை அவனுக்கு விபரமாகச் சொல்லி, அவன் மரணத்தைச் சந்திக்கு முன்பு தேவனைச் சந்திக்க ஆயத்தப்படும்படிக் கூறுவது எனக்கு நல்லதாய்த் தோன்றுகிறது. ஏனெனில் அவன் மதித்தாலும் பிழைத்தாலும் அது அவனுக்கு நல்லது. அவன் எதையும் இழந்து போகமாட்டான் என்கிறார். (page 129, Banlom book edition)

மரணம் என்பது நமக்கு நிச்சயமானதால் இவ்வுலகில் நாம் ஆரோக்கியமாக வாழும் பொழுதே நித்ய ஜீவனைக் குறித்தும், மரணத்தைச் சந்தித்து, நித்ய ஜீவனுக்குள் பிரவேசிப்பதைக் குறித்தும் அறிந்து கொள்ளவேண்டும். ஒரு கலா சாலைக்குச்

செல்லுமுன்பு அக்கலாசாலையைக் குறித்து நன்கு அறிந்து கொண்டபின்பே, அங்கு செல்கிறோம். பல ஆண்டுகள் கவனமாக மருத்துவத் தொழிலைப் பயின்ற பின்னரே ஒரு டாக்டர் நோயாளியைக் குணமாக்க முற்படுவார். எப்படியும் நாம் மரணத்தைச் சந்திக்கப் போகிறோம். ஆகையால் மரணம் நேர்வதற்கு முன்பாக மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்வைக் குறித்து இப்போதே அறிந்து கொள்வது நல்லது.

மரணம் என்பது அழைக்கப்படாத திடீர் விருந்தாளி, அது திடீரென்று நமக்கு ஏற்பட்டுவிடும். ஞானவான்கள் இதற்கு ஆயத்தப்பட விரும்புகிறார்கள். இன்றே ஆயத்தப்படுவதற்கு ஏற்ற நாள். மரித்தவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளும் பொழுதோ அல்லது மரணச்செய்தியைக் கேள்விப்படும் பொழுதோ மரணம் உண்மை என்று உணர்கிறோம், ஆனால் அதே சமயத்தில், "நான் மரிக்க இன்னும் நாட்கள் இருக்கின்றன. அவ்வளவு சீக்கிரம் நான் மரணமடைய மாட்டேன்" என்று நம்மை ஏமாற்றிக் கொள்கிறோம். மரணம் வரும்போது சில நேரங்களில் அதை நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டோம். ஒரு ஹார்ட் அட்டாக் அல்லது கார் விபத்து, விமான விபத்து போன்றவைகள் சடுதியாக மரணத்தைக் கொண்டு வந்துவிடும். சிலருக்கு உடல் வருத்தம் ஏற்பட்டு வேதனைப் பட்டாலும் மரணத்தைச் சந்திக்க அவர்களுக்கு நேரமும் உண்டு.

கொஞ்சம் முயற்சித்துப் பார்க்கலாம் என்று டாக்டர் சொன்னவுடனே நோயாளி, "இல்லை, நான் சாகக்கூடாது. இன்னும் எனக்கு முடிக்கவேண்டிய காரியங்களுண்டு. இப்போது நான் சாகமாட்டேன்" என்று நினைப்பார்.இதை **மறுப்பின் காலம்** என்று சொல்லலாம். இதையடுத்து வருவது **எரிச்சலின் காலம்** சாகப் போகிறோம் என்று தெரிந்தவுடன் எதிலும் எரிச்சலும் கோபமும் உண்டாகும். இது பிரயோசனப்படாது. மூன்றாவது **வியாபார காலம்**, நோயாளி கடவுளிடமும் மருத்துவரிடமும் பேரம் பேசுவார். நான் பிழைத்துக் கொண்டால் இப்படிச் செய்வேன். அப்படி செய்வேன் என்பார். நான்காவது **விரக்தியின் காலம்** எப்படியும் சாகப் போகிறோம் என்று

உணர்ந்ததும் எல்லாவற்றிலும் விரக்தியுண்டாகிவிடும். ஐந்தாவது **ஏற்றுக் கொள்ளும் காலம்,** வேறு வழியில்லாதபடியினால் விரும்பியோ, வெறுத்தோ மரணத்தை ஏற்றுக்கொள்வார், இந்நிலையில் ஒரு நிச்சயத்துடன் மரிப்பது இயலாது என்றாலும் அது இயலாத காரியம் அல்ல. இதற்கு வழியுண்டு.

உயிருடன் இருக்கிற நாம் அனைவரும் ஏதோ ஒரு நாள் மரணமடைய வேண்டும். ஆனால் அந்த மரணத்தை நிம்மதியுடன் சந்திப்பது எப்படி?

கடவுள் நம்பிக்கையற்ற ஒரு செல்வந்தரின் செல்வக்குமாரி, மரணப்படுக்கையில் கிடந்தபோது மரண அவஸ்தையுடன் பல வேதனையுள்ள தரிசனங்களைக் கண்டாள். அவள் தன் தகப்பனை நோக்கி, "அப்பா, நீங்கள் எனக்கு நன்றாகப் பணம் சம்பாதிக்கும் வழியையும், உல்லாசமாக வாழ்வது பற்றியும் கற்றுத் தந்தீர்கள். உயர்ந்த கலாசாலைக்கு என்னை அனுப்பி, அங்கே இலக்கியம் அறிவியல், அரசியல் போன்றவைகளைக் கற்கும்படிச் செய்தீர்கள் ஆனால் இங்கே நான் மரணத்தை நிம்மதியுடன் சந்திக்க இப்போதாவது எனக்குக் கற்றுத்தருவீர்களா?" என்று கேட்டாள். அந்தத் தகப்பனுக்கு மரிக்கும் தன் மகளுக்கு அக் கொடிய மரணத்தைக் குறித்தோ, அதில் தப்பிக்கும் வழியைக் குறித்தோ அறிவித்து உதவ இயலவில்லை.

உயிரைக் காட்டிலும் அதிமுக்கியமானது என்ன? தன்னுடைய சிருஷ்டிக்கும் வல்லமையினால், தேவன் எல்லா ஜீவ ராசிகளுக்கும் நமக்கும் உயிர் கொடுத்திருக்கிறார். அவரே உயிருக்கு அதிகாரி. சாது சுந்தர்சிங் என்ற பக்தன் சொல்கிறபடி: இந்த வாழ்க்கை மாறலாம். ஆனால் அது அழியாது, மரணமே வாழ்க்கையின் முடிவு என்று கொள்ள இயலாது என்கிறார். (ஆவி உலக தரிசனம் பக்கம் 1,2)

மரணத்திற்குப் பின்பே வாழ்வு ஆரம்பமாகிறது. என்றால் அது மிகையாகாது. ஒருவர் மரித்துப் போனால் செத்துப்போய்விட்டார் என்கிறோம். உயிர் போய்விட்டது என்கிறோம். எனவே மரித்தபின்பு போகுமிடம் ஒன்று உண்டு என்றும், உயிர், உடலை விட்டு வேறு எங்கேயோ போக வேண்டும் என்றும் அறியலாம்.

வேதங்களில் பரலோகம், நரகம்:

பூர்வ காலந்தொட்டு, மெய் பொருளைத் தேடினவர்கள் பரலோகத்தைக் குறித்தும் நரகத்தைக் குறித்தும் தரிசனம் கண்டிருக்கிறார்கள். வேதங்களில் பரலோகத்தைக் குறித்து அதிக விளக்கங்களுண்டு.

பரலோகத்தில் வெளிச்சம் உண்டு, மகிழ்ச்சி, இன்பம், ஆனந்தம் மற்றும் பசியின்மை ஆகிய அனைத்தும் நிறைந்த இடம் பரலோகமாகும் என்று ரிக்வேதம் 9:113,7-11ல் காணப்படுகிறது.

ஏற்கனவே கட உபநிஷத்தில் சொல்லியபடி பரலோகத்தில் பயம், மரணம் போன்றவை இல்லை. மரணமற்ற நிலையே மரணமில்லாப் பெருவாழ்வு ஆகும். பரலோகத்தின் தேவன் அருளும் ஒப்பற்ற ஈவு மரணமில்லாப் பெருவாழ்வு அல்லது நித்திய ஜீவனாகும்.

பரலோகத்தைக் குறித்துச் சொல்வது போன்றே ரிக்வேதம் நரகத்தைக் குறித்தும் சொல்லுகிறது. துன்மார்க்கர், விபசாரர், எஜமான்களுக்கு அடங்காதோர், ஊர் சுற்றிகள் போன்ற பாபிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட நரகஸ்தானம் அல்லது நரகம் என்ற இடம் (4:5:5)

நித்திய தண்டனை, நித்திய மரணம், இது ஆழமான இருள் நிறைந்த, எவ்விதத் துணையுமற்ற, கொடுமை நிறைந்த படுகுழி (7:104:3) துன்மார்க்கர் அனைவரும் இந்த நரகத்திற்குள்ளே தள்ளப்படுவார்கள். என்று ரிக் வேதம் சொல்லுகிறது.

இம்மரணத்தைக் குறித்தும் நரகத்தைக் குறித்தும் இயேசுக் கிறிஸ்து விவரித்துச் சொன்னதைப்போல இதுவரை மற்ற எவரும் சொல்லிவிடவில்லை. நகரத்திற்குச் செல்கிறவர்கள் யாவரும் நித்திய நித்தியமாய் மரண வேதனையையும் தண்டனைகளையும் அனுபவித்தே தீரவேண்டும்.

சபையின் முற்பிதாக்களும் பூர்வகால ரிஷிகளும் அறிவித்தபடி, மனித வாழ்க்கையின் பிரதான முடிவானது,

பரலோகத்தில் தேவனுடன் என்றென்றும் மரணமில்லாப் பெருவாழ்வு வாழும் முக்தி அல்லது நித்திய ஜீவனாகும். தேவனுடன் என்றென்றும் வாழும் இவ்வுறுதியான வாழ்வை இம்மையிலேயே பெருகிற மனுஷன் பாக்கியவான்.

"ம்ருத்யோமா அம்ருதம் கமய"
(மரணத்திலிருந்து ஜீவனுக்குட்படுத்தும்)

என்ற ஜெபத்தைச் செய்த முன்னோர்கள் இதற்கான விடையைப் பெறவே செய்தனர். இந்த விடை இவர்களுக்கு கொடுக்கப்பட்டதேயன்றி இது வேதகால ரிஷிகளின் ஆராய்ச்சியல்ல. நித்திய ஜீவனுக்கு அவசியமான இரட்சிப்பைக் குறித்து அறிந்து கொள்ளும் ஆவலுடைய மக்களுக்கு இவைகள் உபநிடதங்கள் வழியாக அருளப்பட்டன.

கடோபநிஷத்தில் காணப்படும் நித்ய ஜீவன்

கட உபநிஷத்தின் முதல் பகுதியில், மரணத்திற்கப்பாலுள்ள வாழ்க்கை என்ன என்பதை அறிந்த கொள்ளும் வாஞ்சையானது உணர்த்தப்படுகிறது. அதிலிருந்து படிப்படியாக நித்திய வாழ்விற்கான இரட்சிப்பின் வழிகளைக் குறித்ததான மெய்ஞானம் வெளிப்படுத்தப்படுகிறது. இரட்சிப்பின் இந்த நிச்சய வழிகளை அறிந்து கொள்ள வேண்டுமாயின் உப நிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை மிகவும் கவனத்துடன் ஆராய வேண்டும்.

உதிஷ்டத ஜாக்ர-த ப்ராப்ய
வரானிபோ தத
சூ ரஸ்ய தாரா நிஸிதா துரத்யயா
துர்கம் பதஸ்தத்கவயோ வதந்தி
(கடோபநிஷத்து 1:3:14)

எழும்பு விழி, தகுந்த குருவை அடைந்து இரட்சிப்பைப் பெறுங்கள். கூரான கத்தி முனைமீது நடப்பது போன்று இறைநெறி கடினமானது என்று சான்றோர் கூறுகிறார்கள்.

கத்தி முனையில் நடப்பது கடினமான காரியமே! இந்த

வழியில் நடப்பது மனிதனுக்கு இயலாத காரியமே! என்றாலும் இதை எழுதியவர் இது இயலவே இயலாத காரியம் என்று சொல்லி நம்மைச் சோர்ந்து போகச் செய்துவிடவில்லை, மாறாக சோம்பலான வாழ்க்கையை விட்டு, விழித்தெழும்பி ஆன்மீக வாழ்வைத் தேடும்படி அறிவுரை சொல்லுகிறார்கள். யுத்தகளத்தில் ஜாமக்காரன் விழிப்புடன் இருப்பதைப் போல. ஜாக்ரத என்ற சமஸ்கிருதச் சொல்லின் சரியான பொருள் அதுவே. ஆன்மீக வாழ்வில் நித்திரை கொள்பவன் முக்தியடைவதற்கு வழியாகிய புருஷனை அறிந்து கொள்வது இயலாத காரியம்.

ஆதலால் தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் (எபேசியர் 5:14) என்ற வேத வசனம் கவனிக்கத்தக்கது.

கிருபையைப் பெற்றுக் கொள்

மேற்கண்ட கட உப நிஷத்தின் வாக்கியத்தின்படி முக்தியடைவதற்கு ஆண்டவருடைய கிருபை அவசியம் என்பதை அறிய முடியும். யாரானாலும் உண்மையான மனதுடன் முக்தியடையும் வழியைத் தேடினால், அப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்தில் ஆண்டவர் தம்முடைய ஆச்சர்யமான கிருபையை ஊற்றுவார். மேற்கண்ட உபநிஷத்தில் வார்த்தையானது முக்தியடையும் வழியைத் தேடுகிற ஒவ்வொரு உண்மையான ஆத்துமாவையும் வழி நடத்துகிறதாயிருக்கிறது. (ப்ராப்ய வரான்போ ததா-கிருபையை பெற்றுக் கொண்டபின் கற்றுக்கொள்) வரன் (ம்) என்பது இங்கே இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கிருபையையே குறிப்பதாகும். இக்கருத்தை மற்றொரு கட உபநிஷத்தின் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

நாய மாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேத்யா ந பஹூனா ச்ருதேன்
யமேவைஷ வ்ருனுதே தேன லப்யஸ் தஸ்யய்ஷ
ஆத்மா விவ்ருனுதே தனூம் ஸ்வாம் (1:2:23)

(அனேக விரிவுரைகளினாலோ, புத்திக் கூர்மையினாலோ, அதிகப்படிப்பினாலோ இவ்வாத்மா சித்திப்பதில்லை, யார் மேல்

ஆண்டவர் மனதாயிருக்கிறாரோ, அவர்களுக்கு இக்கிருபையை அவர் அளிக்கிறார். அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார்)

பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களைக் கவனித்தால் இதே கருத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

"ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்தில் அநீதியுண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே! அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன் மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன். என்றார். ஆகையால், விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல. இரங்குகிற தேவனாலேயாம்." (ரோமர் 9:14-16)

இரட்சிப்பு அல்லது முக்தியென்பது முழுக்க முழுக்க ஆண்டவருடைய கிருபையினால் கிடைப்பதாகும். பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டப்படி:

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமைய பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலுண்டானதல்ல." (எபேசியர் 2:8,9)

எனவே மரணமில்லாப் பெருவாழ்வு அல்லது முக்தியடைதல் என்பது மனித முயற்சியினால் கிடைப்பது அல்லவென்றும், அது இறைவனுடைய அருள் என்றும் அறிய வேண்டும். இந்த அருளைப் பெறுவதற்கு முதலாவது தான் ஒன்றும் செய்ய இயலாத பாபியென்று ஒத்துக்கொண்டு, பாபங்களை அறிக்கை செய்ய வேண்டும். அப்பொழுது ஆண்டவர் பாபங்களை மன்னித்துத் தமது கிருபையை அவனுடைய உள்ளத்தில் ஊற்றுவார்.

பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்ளுக்கோ கிருபையளிக்கிறார். (1 பேதுரு 5:5) என்றும் வேதம் சொல்லுகிறது.

நிபோததா (இரட்சிப்பின் வழியை இறைவனிடம் கற்றுக்கொள்) எப்பொழுது ஒருவன் தன்னைத் தாழ்த்தி இறைவனிடம் மன்றாடுகிறானோ அப்பொழுது அவன்

இறைவனிடம் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறான். உண்மையாய்த் தேடுகிறவர்களுக்குத் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். நித்ய தேவனை அறியும் பொழுது அவன் மரணத்தை ருசிப்பதில்லை. அவன் மரணத்தின் வாயிலிருந்து தப்பித்துக்கொள்கிறான் என்னும் கருத்தை அடியிற்காணும் கட உபநிஷத்து 1:3:15 விளக்குகிறது.

அஸப்தம் அஸ்பர்ஸம் அரூபம் அவ்யயம்
ததா அரஸம் நித்யம் அகந்த வச்ய யத்
அநாதியானந்தம் மஹத பரம் த்ருவம்
நிசாய்ய தன்ம்ருத்யு முகாத் ப்ரமுச்யதே

இக்கருத்தின்படி, இறைவனை மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்புலன்களினால் அறிய இயலாது என்பதை உணரலாம். ஆனால் அவரை அறியாமல் நித்திய ஜீவனை அல்லது முக்தியை அடைய இயலாது என்பதையும் அறிய வேண்டும்.

பதினொரு வாசல்களுள்ள நகரம்

அதேச சமயத்தில் முக்தியடைய நமது சரீரத்தின் மெய்யுணர்வுகளினாலும் உள்ளுணர்வுகளினாலும் அறிய வேண்டும் என்றும் ஒரு குறிப்பு காணப்படுகிறது.

புரமேகா தஸத்துவாரம் அஜஸ்யா வக்ர சேதஸ:
அனுஷ்டாய ந ஷோச்சாதி விமுச்யதே!
ஏதத் வைதத்

பதவுரை :

ஏகா தஸத்துவாரம்	=	பதினொரு வாசல்களையுடைய
புரம்	=	உடம்றபு
அஜஸ்ய	=	பிறப்பற்ற
அவக்ரசேதஸ	=	மாறுபாடற்ற உணர்வின்
அனுஷ்ட்டாய	=	தியானித்து
நஷோச்சாதி	=	கவலைப்படமாட்டான்
விமுக்த	=	சுதந்தரனாகி
விமுச்யதே	=	விடுபடுகிறான்
ஏதத்வை	=	இதுவே
தத்	=	அது

பொருள் :

பதினொரு வாசல்களையுடையதான உடம்பு, பிறப்பற்ற, மாறுபாடற்ற உணர்வையுடைய ஆத்மாவின் கருவியாகும் இவ்வாறு தியானித்து ஒருவன் கவலைகளிலிருந்து விடுபடுகிறான். சுதந்திரனாகி பிறவிகளிலிருந்து விடுபடுகிறான். நீகேட்டது இந்த ஆத்மாவைப்பற்றியதே.

புரமேகாத ஸத்வாரம் என்ற பதம் சாதாரணமாக பதினொரு வாயில்களுடைய நகரத்தைக் குறிக்கும். ஆனால் இங்கே இது மனிதனுடைய சரீரமாகிய நகரத்தைக் குறிக்கிறது. இதைக் குறித்து Sacred Books of the Hindus என்ற புத்தகம் சொல்லுகிறது என்னவெனில் : கண்களின் இரு துவாரங்கள், வாயின் ஒரு துவாரமாக முகத்தில் எழுதுவராங்களும், தொப்புளும், உடலின் அடிபாகத்தின் இரண்டு துவாரங்களுமாக மொத்தம் பத்து துவாரங்கள் ஆகும். மண்டையோட்டிலுள்ள ப்ரஹமரந்திரா என்னும் துவாரத்துடன் பதினொன்றாகும் என்பதே!

மண்டையோட்டிலுள்ள ப்ரஹமரந்திரா என்னும் இந்தத் துவாரம் மனுஷனுடைய கற்பனையே! ஆனால் இது மனித ஆன்மாவின் உள்ளுணர்வைக் குறிப்பதாகும்.

மேற்கண்ட பாடலின் மூலமாக, தன் புலன்களினூடே இறைவனைக் கண்டவன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டாயிற்று, அவன் இரட்சிக்கப்படுவான் என்ற நிச்சயத்தை அறியலாம். அவனுடைய இரட்சிப்புப் பூர்த்தியடைந்து விடுகிறது. அவன் புருஷனாகிய தெய்வத்தை அறிந்து அவரைப் பின்பற்றி அவர்வழி நடக்கும் பொழுது, இக்காரியம் அவனுக்குச் சித்தியாகிறது.

ஆனால், நமது புலன்களினூடாக இறைவனை அறிவது எப்படி? ஐம்புலன்களினால் இறைவனையறிதல் கூடாத காரியம் என்று ஏற்கனவே பார்த்தோம். காதுகளின் வழியாக இறைவனை அறிய இயலாது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே காதுகள் கேட்க இயலும் மனித வார்த்தைகளும் அவரை வெளிப்படுத்த இயலாது. கண்களினால் அவரைக் காணவும் இயலாது ஏனெனில் இறைவன் அரூபமாயிருக்கிறார்.

இறைவனையறிய உடம்பு ஒரு தடையல்ல. உடம்பில் இறைவன் வசிக்கின்றபடியால் உடம்பு ஒரு கோயிலாகிறது. எனவே உடம்பைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள வேண்டும்.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவன் உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (பைபிள் I கொரித்தியர் 3:16,17)

கி.பி. 8-9 நூற்றாண்டுகளில் வாழ்ந்த திருமூலர் என்னும் சித்தர் சொல்லுவது என்னவெனில்:

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே கோயில் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருத்து ஓம்புகின்றேனே - (திருமந்திரம்)

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்" என்பதும் திருமந்திரப் பாடலே.

விண்டவர் கண்டதில்லை, கண்டவர் விண்டதில்லை என்பது சான்றோர் வாக்கு, இறைவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லையென்று பைபிள் சொல்லுகிறது (யோவான் 1:18) இதினாலேயே:

"கர்த்தர் ஒரேபிலே அக்னியின் நடுவிலிருந்து உள்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்து கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதோரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உறுவும், பூமியின் கீழ் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு எறெடுத்து உங்கள் தேவனாகிய கர்த்தர்

வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர, சூரிய, நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும் உங்கள் ஆத்துமாக்களை குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்" (உபாகமம் 4:15-19) என்று இறைவன் மோசேயைக் கொண்டு தமது ஜனங்களை எச்சரித்தார். அப்படியானால் இறைவனை எப்படிக் காண்பது என்ற கேள்வியும் எழுகின்றது. இதற்குப் பைபிள் சொல்லும் பதில் என்னவெனில்

பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். (யோவான் 1:18) என்பதே!

அகில உலகங்களையும் சிருஷ்டித்து முடித்தபின்பு ஆயிரம் தலைகளையும், ஆயிரம் கண்களையும், ஆயிரம் கால்களையும் உடைய இறைவன் தன்னை பத்து விரற்கடையளவு சிறியவராக்கினார் என்ற புருஷ சூக்தம் (ரிக் வேதம்) சொல்லுகிறது. எதற்காக இறைவன் தன்னைச் சிறியவராக்க வேண்டும்? மனிதன் இறைவனைக் காண இயலாத நிலையில், இறைவனே மனித ரூபத்தில் (புருஷன்) உலகில் வந்து என்னைக் கண்டவன் இறைவனைக் கண்டவனாவான் என்று தம்மை வெளிப்படுத்தவே செய்தார். இப்படி வெளிப்பட்ட தேவன் தமது கிருபையை மனித ஆன்ம உள்ளுணர்வில் அருளும்போது அவனுடைய ப்ரஹ்மரந்திர (மண்டையோட்டிலுள்ள கதவு என்று நினைக்கப்படுவது) திறக்கப்பட்டு ஆன்மா விழித்துக் கொள்கிறது.

இந்த நிலையில், மனிதன் தன் புலன்களினூடே இறைவனைக் கேட்க இயலும், பார்க்க இயலும், ருசிக்க இயலும், தொடவும் இயலும் என்ற உபநிஷத்தின் பொருள் உண்மையாகிறது. ம்ருத்யு முத்தாத் ப்ரமுச்யதே என்பதன் விளக்கம் இதுவே.

பைபிள் சொல்லுவது என்னவெனில் :

"ஆதி முதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து

உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது பிதாவினிடத்திலிருந்ததும் எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்து சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டுமிருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (I யோவான் 1:1-3) என்பதே.

எனவே நாம் மரணத்தின் வாயிலிற்குள் போகாமல் இருக்கவும், நித்திய ஜீவனை அடையவும் இறைவன் ஒருவரே அதிகாரம் பெற்றிருக்கிறார். இறைவன் ஒருவரே நமக்கு நித்திய ஜீவனை அளிப்பவர். இயேசு உலகில் அவதரித்ததை யோவான் என்பவர் எழுதும் போது அந்த ஜீவன் வெளிப்பட்டது என்று எழுதுகிறார். அன்மீக வாழ்விலும் பெற்றதாலேயே, நாங்கள் கண்டதும் நோக்கிப் பார்த்ததும், தொட்டுப் பார்த்ததும், கேட்டதுமான அந்த ஜீவ வார்த்தை வடிவான இயேசு கிறிஸ்துவை நமக்கு அறிவிக்கிறார்.

எனவே இறைவனை அறிவது என்பது இயேசு கிறிஸ்துவாகிய புருஷன் மூலமாகவே அருளப்படுகிறது. இவரே நித்திய ஜீவன். இதினாலேயே, இயேசு தமது பிதாவாகிய இறைவனிடம் ஜெபம் செய்தபோது:

"ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்ய ஜீவன் என்றார்" (யோவான்.17:3)

சரீர மரணம் எல்லோருக்கும் உண்டு. அக்கினியும் கந்தகமுமான எரி நரகத்தில் பங்கு பெற்று இரண்டாம் மரணமாகிய ஆத்ம மரணத்திலிருந்து தம்பி, நித்திய ஜீவனைப் பெற வேண்டுமானால் மரணத்தைத் தமதுமரணத்தினால் ஜெயித்த இயேசுகிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அவரே வழி, சத்தியம், ஜீவன், வேறு வழி இல்லை. "ந ன்யா பந்தா வித்யதே அயநாய." (தாண்டிய மகா பிராமணம்) இதைத் தவிர வேறு வழியில்லை.

அதிகாரம் - பதினைந்து

"பரா கதி"

அவரை அறிவதே நித்ய ஜீவன்

மரணமில்லாப் பெரு வாழ்வு அல்லது பரகதியடைய புருஷனே உயர்ந்த இலக்கு ஆவார். புருஷனை அறிவதின் மூலமே நித்திய ஜீவனை அடைய இயலும் என்பதை கடஉபநிஷத்து மூலம் அறியலாம். இதன் 3ம் அதிகாரம் 11ம் வசனத்தில் புருஷனை விட உயர்ந்தவர் எவருமில்லை என்றும் மனிதன் அடைய வேண்டிய முடிவும் இலக்கும் அவரே என்றும் காணப்படுகிறது. இதன் 1 : 3ம் அதிகாரம் 10,11 ஆகிய வசனங்களில் இப்பரகதியை அடையும் வழி படிப்படியாகச் சொல்லப்பட்டுள்ளது.

இந்திரியேப்ய பரா ஹயர்த்தா
அர்த்தேப்யஷ்ச்ச பரம் மன
மனஸ ஸ்து பரா புத்தி
புத்தேராத்மா மஹான் பர

மஹத பரமவ்யக்தம்
அவ்யக்தாத் புருஷ பர
புருஷான்ன பரம் கிஞ்சித்ஷா
காஷ்ட்டா ஸா பராகதி

பொருள் : புலன்களைக் காட்டிலும் புலன் உறுப்புகள் உயர்ந்தவை புலன் உறுப்புகளைக் காட்டிலும் மனம் உயர்ந்தது. மனதைக் காட்டிலும் புத்தி உயர்ந்தது. ஆன்மாவைக் காட்டிலும் வெளிப்படுத்தப்படாதது உயர்ந்தது. வெளிப்படுத்தப்படாததைக் காட்டிலும் புருஷன் உயர்ந்தவர். புருஷனுக்கு மேலானது யாருமில்லை. அவரே முடிவான, உயர்ந்த இலக்கு ஆனவர். இதைத் தொடர்ந்து 2:3ம் அதிகாரம் 7,8 ஆகிய வசனங்களையும் அறிந்து கொண்டால் பராகதியைக் குறித்த விளக்கங்களை அறிவது இலகுவாயிருக்கும்.

இந்த்ரியேப்ய:பரம் மனோ
மனஸ: ஸத்வ முத்தமம்
ஸத்வாததி மஹானாத்மா
மஹதோ வ்யக்தமுத்தமம் (7)

அவ்யத்தாத் துபர : புருஷோ
வ்யாபகோ லிங்க ஏவச
யம் ஜ்ஞாத்வா முச்சதே
ஜந்து: அம்ருத்வம்ச கச்சதி (8)

பொருள் : மனம் புலன்களை விட உயர்ந்தது. புத்தி மனதை விட உயர்ந்தது. ஆத்மா புத்தியை விட உயர்ந்தது. வெளிப்படாதது ஆன்மாவை விட உயர்ந்து. புருஷன் ஆன்மாவை விட உயர்ந்தவன் புருஷன் ஸர்வ வியாபகன். இவரை அறிந்து கொள்பவன் விடுதலை பெற்று நித்திய ஜீவனை அடைகிறான்.

எனவே, நித்திய ஜீவனைப் (பரகதி) பெற வேண்டுமானால் புருஷனை அறிய வேண்டும் என்று காண்கிறோம். அப்படியானால் நித்திய ஜீவனைத் தேடியலைகிற ஒருவன் இப் புருஷனை எப்படி அறிந்து கொள்ள இயலும்?

கட உப நிஷத்தை எழுதியவர் இதற்கான வழிகளைப் படிப்படியாக ப்ரா ஹயர் த்தா = புலன்களை காட்டிலும் கட்புலன்கள் உயர்ந்தவை. இந்திரியங்கள் அல்லது புலன்கள் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றைக் குறிக்கும். நித்திய ஜீவனைப் பெற இவ்வைந்து புலன்களால் புருஷனை அறிய வேண்டும். அறிந்து கொள்ள ஆறு வழிகள் என்ற தத்துவப் புத்திகத்தில் அதின் ஆசிரியரான டாக்டர் D.M. தத்தா என்பவர்: அறிவுப் பூர்வமான சகல வழிகளைப் பார்க்கிலும், அறிவு உணர்ச்சி வழியே மிகவும் முக்கியமானது. வெளிப்படையாகச் சொல்லப் போனால் அதுவே மூலாதாரமான அடிப்படையானது. (D.M. Datta, M.A.Ph.D, The Six ways of Knowing, University of Calcutta 1972, page31) என்கிறார். அறிவு உணர்ச்சி என்ற வார்த்தையானது சமஸ்கிருதத்தில் ப்ரத்தியக்ஷ என்று பொருள்படும். உணரக்கூடிய புலன்களுக்கு முன்பாக வெளிப்படும் என்று பொருள்படும்.

இவ்வைந்து புலன்களின் மூலமாக அடையக்கூடிய அனுபவங்கள் பலதிறப்பட்டவை. இவைகளை அறியச் செய்வது உடலுறுப்புக்கள் (இந்திரியர்தா) காதுகளினால் கேட்கிறோம். கேட்பதற்குப் பிரதிநிதியாக இருப்பது காது. கேட்கும் அனுபவத்தை

பெறுவது கேட்கும் பொருள் ஆகிறது. கேட்கும் பொருள் அல்லது கேட்கும் அனுபவம் காதைவிட உயர்ந்தது. அதே போல தொடும் அனுபவம் சரீரத்தை விட உயர்ந்தது. பார்ப்பது கண்களை விடடி உயர்ந்தது. முகர்வது மூக்கை விட உயர்ந்தது. சுவைப்பது வாயைவிட உயர்ந்தது என்பதை உபநிஷத்து கால முனிவர் எடுத்துரைக்கிறார். இவ்வனுபவங்களை வெளிப்படுத்தக் கூடாத அவயவங்கள் இருந்தும் அவை இறந்தவைகளே. எனவே புலன் உணர்வுகளை வெளிப்படுத்தும் அவயவங்கள் புலன்களைவிட உயர்ந்தவைகளாகின்றன. இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில், இவ்வைந்து புலன்களின் மூலமாக நாம் பெறும் அனுபவங்களே அறிவாகும். இவ்வனுபவங்களின் மூலமாகப் புருஷனை அறிதலே நித்திய ஜீவனாகும்.

உபநிஷத்தின் தத்துவப்படி, பார்க்கும் அனுபவம் கண்களை விட உயர்ந்தது. கண்கள் இல்லாமல் பார்வை இருக்குமானால், கண்கள் அவசியமில்லை. அதேபோல, புறக்கண்களின் உதவியின்றி புருஷனைப் பார்க்கவும், அறிந்து கொள்ளவும் கூடுமாயின், அந்தப் பார்வை கண்களைவிட முக்கியமானது. வாயின் உதவியின்றிப் புருஷனைச் சுவைக்கக் கூடுமாயின் அச்சுவை அனுபவம் வாயை விட உயர்ந்தது. காதின் உதவியின்றி புருஷனைக் கேட்கும் அனுபவம் காதைவிட உயர்ந்தது தொடுவதும், நுகர்வதுமான இவ்வனுபவங்களினால் புருஷனை அறியக்கூடும் என்பதை உபநிஷத்துக் கால முனிவர் சொல்லுகிறார். ஆத்மா, புத்தி, சித்தம் ஆகிய யாவும் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்குமானால் ஆன்மீக மனிதன் முழுமைபெற வழியுண்டு. இது போலவே, உபநிஷத்தின் மற்ற காரியங்களையும் சிந்திப்போம்.

இந்திரியேோப்யாஸ் பரம் மனோ (புலன்களை விட மனம் உயர்ந்தது) 2,3,7 என்றும் 1,3,10ல் அர்த்தேயச்ச பரம் மன (புலன் உறுப்புகளைக் காட்டிலும் மனம் உயர்ந்தது) என்று காணப்படுகிறது. இவ்விரண்டும், மனமானது புலன் உறுப்புகளைக் காட்டிலும், புலன்களைக் காட்டிலும் உயர்ந்தது என்பதையே விளக்குகின்றன. எனெனில் புலன்களாலும், புலன்

உறுப்புகளாலும் செய்யக் கூடாதவைகளை மனம் கிரகித்துக் கொள்ளும் தன்மையுடையதாகும். எனவே மனம் இவைகளைவிட உயர்ந்ததே! நமது இலக்காகிய நித்திய ஜீவனை அடைய, நமது மனதினால் புருஷனை அறிந்து கொள்ளவேண்டும்.

கட உபநிஷத்து 3:3ல் சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டும்.

ஆத்மானம் ரதினம் வித்தி
ஸரீரம் ரதமே வது
புத்திம்து ஸாரதிம் வித்தி மன:
ப்ரக்ர ஹமேவச்ச (1.3.3)

பொருள் :

ஆத்மானம் - ஆத்மாவை
ரதினம் - சுவாரி செய்பவனாக
வித்தி-அறிந்துகொள்
சரீரத்து-உடல்
ரதம் ஏவ-தேர்
புத்திம்து-புத்தி
ஸாரதிம்-தேரோட்டி
மன-மனம்
ப்ரக்ரஹம் ஏவ-கடிவாளம்
வித்தி-அறிந்துகொள்

ஆத்மா பயனம் செய்பவன், உடல் தேர். புத்திதேரோட்டி மனம் கடிவாளம் என்று அறிந்துகொள் என்பதைக் காணலாம். இதைத் தொடர்ந்து இந்த உபநிஷத்தை எழுதிய முனிவர் சொல்லுவது என்னவெனில்

இந்த்ரியாணி ஹயானா ஹு விஷயாம்ஸ்தேஷு கோசரான் ஆத்மேந்திரிய மனோ யுக்தம் போக்தேத் யாஹுர் மனிஷின: 1.3.4

தீவிர உணர்ச்சிகளுக்கும் ஆணவத்திற்கும் உட்பட்ட புலன் உறுப்புகள் என்ற சாலை வழியாக சரீரத்தின் புலன்களாகிய குதிரைகள் ஓடுகின்றன. குதிரையின் சுபாவமே ஓட்டம் தான்.

அதுபோலவே புலன்கள் எப்பொழுதும் உலக சிற்றின்ப உணர்ச்சிகளுக்கும் ஆணவத்திற்கும் நேராகத் தறிகெட்டு ஓடும் தன்மையுடையது. எனவே, புத்தியாகிய ஓட்டுநர் மனமாகிய கடிவாளத்தைக் கொண்டு ஐம்புலன்களாகிய குதிரைகளை அடக்க வேண்டும். இல்லாவிட்டால் சரீரமாகிய இரதம் சேதமாகி விடும். இரதம் சேதமானால் அந்த இரதத்தில் அமர்த்திருக்கும் ஆத்மா மடிந்து போகும்.

எனவே, நாம் மிகவும் ஜாக்கிரதையாக நமது மனதையடக்கிப் புருஷனாகிய இறைவனை நோக்க வேண்டும். எனெனில், புருஷனே நித்ய ஜீவனுக்கு அதிகாரி. வேதாகமம் சொல்லுகிறபடி இயேசு கிறிஸ்துவே மாம்சத்தில் வெளிப்பட்ட புருஷன். இவரை நமது புலன்களின் மூலமாக அறிய வேண்டும். அவரைக் குறித்துக் கேட்கிறோம். அவரை உணர்கிறோம். ருசிக்கின்றோம். இவ்வனுபவங்களை நமது மனதினாலேயே செய்கின்றோம். அவரைக் குறித்துத் தியானிக்கும்போது, நமது மனம் இவ்வகையான அனுபவங்களைக் காண்கிறது.

ஆனால், எவ்வளவுதான் தியானித்தாலும் மனமாகிய குரங்கு அடிக்கடி அங்கும் இங்கும் தாவுகிறதே! என்ற அங்கலாய்ப்பு உண்டு.

அன்யத்ர மனா அபுவாம் நர் தாஸம்
அன்யத்ர மனா அபுவாம் நாஷ்ரவ்ஸமிதி
மனஸா ஹியேவ மஸ்யதி மனஸா ஷ்ருனோதி
காம சங்க கல்போ விசிகித்ஸா
ஷ்ர தாஸ்ரத்தா திர் த்திர் ரதிர் திஹ்
ஹரி ரிதிர் பிரித்யேத்தத் ஸர்வம் மனயேவ
(பிருஹதாரண்யக உபநிஷத்து 1,5,3)

பொருள் : என் மனம் எங்கேயோ இருந்தது. ஆகையால் நான் காண இயலவில்லை. என் மனம் எங்கேயோ இருந்ததால் கேட்கவும் இயலவில்லை. மனதினாலே பார்க்கிறோம். மனதினாலே கேட்கிறோம். ஆகையால், விருப்பம், தீர்மானம், சந்தேகம், நம்பிக்கை, அவநம்பிக்கை, தைரியம், அதைரியம், வெட்கம், உணர்வு, பயம் ஆகிய எல்லாம் மனமே.

புருஷனாகிய தெய்வத்திடம் மனம் ஒன்றி வாழ நினைக்கும்பொழுது மனம் இங்குமங்கும் ஓடுகிறது. கிளைக்குக் கிளை தாவும் குரங்கு போல மனம் மிகவும் பொல்லாதது. இறைவனின் பிரஸன்னத்துக்குள் சரீரம் போய்ச் சேர்வதற்குள் மனம் அதிசீக்கிறமாய்ப் போய்விடுகிறது. சரீரத்தைக் காட்டிலும் மனமே அதிக பாபங்களைச் செய்கிறது.

எரேமியா 17:9ல் சொல்லியிருக்கிறபடி எல்லாவற்றைப் பாக்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது. இதை அறியத் தக்கவன் யார்? இப்படி இருக்கும் நிலையிலும் ஒருவன் தன் மனதினால் புருஷனை எப்படி அறிய இயலும் என்ற கேள்வியும் எழும்புகிறது.

கதோபநிஷத்திலுள்ள வசனம் இதற்கான விடையைத் தரவே செய்கின்றது.

புத்தி சரீரத்தையும் மனதையும் கட்டுப்படுத்துகிறது

"மனஸாஸ்து பரா புத்தி"

(மனதை விட புத்தி மேன்மையுள்ளது)

கட உபநிஷத்தில் சொல்லப்பட்ட இந்தப் பாடல் இப்படியாகத் தொடர்கிறது. கடந்த அதிகாரத்தில் புத்தியே சரீரமாகிய இரதத்தை ஓட்டுகின்ற ஓட்டுநர் என்று கண்டோம். இவ்வோட்டுநர் சரீரத்தின் ஐம்புலன்களாகிய குதிரைகளை அடக்கி ஓட்டுகிறார். மனம் என்னும் கடிவாளத்தின் மூலம் புத்தி ஐம்புலன்களை அடக்கியாளும்பொழுது அது தானாகவே மரணமில்லாப் பெரு வாழ்வின் அதிகாரியாகிய புருஷனை நோக்கி திரும்பி மிக உயர்ந்த இலக்கை அடைகிறது.

ஏன் புத்தி, இவைகளை அடக்க வேண்டும்? ஏனெனில் ஆண்டவர் புத்திக்கு எல்லாவற்றையும் அடக்கியாளக் கூடிய உயர்ந்த நிலையைத் தந்திருக்கிறார். புத்தியென்பது எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கிற புத்தியாகும். இது ஆண்டவரால் கொடுக்கப்பட்டதாகும். இந்த புத்தியைக் கொண்டே நல்லது கெட்டதுகளை சீர்தூக்கிப் பார்க்கவும் ஆராய்ந்து பார்க்கவும் செய்கிறோம். முன்பு பார்த்தபடி மனமானது நன்மை தீமைக்குள்

அங்குமிங்கும் அலைபாய்ந்து ஓடுகிறது. ஆனால் புத்தி உடனே கிரியை செய்ய மனதை விட புத்தியே உயர்ந்தது என்கிறார்கள். புத்தி வேலை செய்யும் பொழுது அவ்வேலையின் தகுதிப்படி புத்தியை மனசாட்சி என்றும் சொல்லலாம். ஏழாவது வாக்கியம் இப்பொருளையே வெளிப்படுத்துகிறது.

மனஸா ஸத்வமுத்தமம் (கட உப.2.3.7)

மனம் ஸத்வத்தை (புத்தியை) விடச் சிறந்தது. ஸத்வம் என்ற வார்த்தை புத்தியென்பதற்கும் பொருத்தமுடைய தானாலும் இது மிக ஆழ்ந்த பொருளுடையது ஆகும். ஒரு மனிதன் புருஷனை நோக்கிப் பார்க்கும்போது, அவன் தன் மனதினாலும், பக்தியினாலும், தோற்றத்தினாலும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆத்மா புத்தியையும் தோற்றத்தையும் விடச் சிறந்தது நம்முடைய இரட்சிப்புக்காக நாம் நமது ஆத்மாவைக் கொண்டு புருஷனை அறிய வேண்டும். ஏனெனில் இரதத்தில் உட்காருகிறவர் அவரே! ஓட்டுநர், கடிவாளம், குதிரைகள் ஆகிய யாவரும் இரதத்தில் உட்கார்ந்து இருப்பவருக்காகவும் அவருக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் இருப்பர். எனவே, ஆத்மாவானது புத்திக்கும் தோற்றத்திற்கும் மேலானது என்று உபநிஷத்துச் சொல்லுகின்றது.

புத்தேராத்மா மஹான்பரா 1:3,10
ஸத்வா ததி மஹானாத்மா 1:3,7

எல்லாம் சரியான நிலையில் இருக்கும்போது ஆத்மாவானது மகிழ்ச்சியாய் இருக்கும்.

மனிதன் என்ற கலாசாலைக்குள் எதிர்ப்பின் சக்தி

மனிதனுக்குள் அடிக்கடி எதிர்ப்புகள் கிரியை செய்வதைக் காணலாம். அப்படி எதிர்ப்புகள் நடக்கும் பொழுது எல்லாம் ஒழுங்கீனமாகி விடுன்றன. குதிரைகளாகிய ஐம்புலன்கள் கடிவாளமாகிய மனதிற்கு அடங்காது. மனமானது புத்திக்கு அல்லது மனசாட்சிக்கு அடங்காமல் அதை நிராகரிக்கிறது. இந்நிலையில் ஆத்மாவானது எவ்வித உதவியும் இன்றி ஆபத்துக்குள்ளாகிறது.

இப்படியாக மனித சக்தி முழுவதுமே எதிர்ப்பின் சக்தியினால் துன்பத்திற்குள்ளாகிறது. மனமானது ஐம்புலன்களுள் உயர்ந்ததாயிருந்த போதிலும் புத்தி ஏவுகிறபடி அது ஐம்புலன்களைக் கீழ்ப்படுத்தத் தவறி விடுகிறது. புத்தியானது மனதின் மேல் அதிகாரமுடையதாய் இருந்தாலும் இங்கே அந்த அதிகாரத்தை மனதின் மேல் பாவிக்கக் கூடாததாகி விடுகிறது. இப்படியாக புத்தி செத்த நிலைக்குத் தள்ளப்படுகிறது. அது உணர்வற்ற நிலைக்கு உள்ளாகிறது. இவ்விதமாக ஆத்மாவானது தானாவே மரித்த நிலைக்குத் தள்ளப்பட்டு செயலிழந்து போகிறது. மனமானது தன்னை ஆளுகின்ற அரசனை இழந்து போனாலும் அரசனின்றியே இயங்க ஆரம்பிக்கின்றது. சற்று கூர்ந்து கவனித்தால் தன்னை ஆளுகின்ற அரசனுக்குப் பதில் வேறொரு பொல்லாத அரசன் அந்த இடத்திலிருந்து ஆட்சி செய்கிறதைக் காணலாம். இப்பொல்லாத அரசன் மனிதனை மரணத்திற்குள் நேராக வழி நடத்தி நித்திய ஜீவனுக்கு எதிரான இடத்திற்கு இட்டுச் செல்கிறான். இந்நிலையிலிருந்து மனிதனை வழி நடத்த யார் இருக்கிறார்கள்? புத்தி தன்னிலும் உயர்ந்த ஆன்மாவை நோக்கி அபயமிடுகிறது.

ஆன்மாவின் இயலாமை

ஆனாலும், ஆன்மாவானது தனித்து நிற்க இயலாததாகையால் புத்தி, தோற்றம், மனம், ஐம்புலன்கள், சரீரம் ஆகியவைகளை நடத்திச் செல்ல இயலாததாகி விடுகிறது. சரீரமாகிய இரதத்தில் உட்கார்ந்து அதை நடத்திச் செல்வது ஆன்மாவேயாயினும் எதிர்ப்பின் சக்திக்கு முன்பு அது வல்லமையற்றதாகிவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவை எல்லாவற்றிற்கும் மேலான வல்லமை உள்ள ஒருவர் இடைபடாவிட்டால் ஆன்மாவானது நித்ய மரணத்திற்கு உள்ளாகிவிடும். எனவே, ஆன்மாவும் புத்தியும் ஒன்று சேர்ந்து தங்களிலும் உயர்ந்தவரை நோக்கிப் பார்க்கின்றன.

வெளிப்படாதது ஆன்மாவிலும் உயர்ந்தது

மஹத : பரம வ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர:
புருஷான்ன பரம் கிஞ்சித்ஸா காஷ்டா ஸா பராகதி. 1.3.11

கட உபநிஷத்திலுள்ள மேற்கண்ட இரண்டு வரிகளும் வெளிப்படாததே ஆத்மாவிலும் உயர்ந்தது என்கிறது. மனித சக்திகளுக்குள், உள்ளே வெளிப்படாத இத்தோற்றத்தை முனிவர்கள் ஞானக் கண்களால் கண்டனர். இது, மனித சக்திகளுக்குள் காணப்படுகின்ற ஒரு சிறு பகுதியே ஆனாலும், மிக உயர்ந்தவராகிய புருஷனை அறியும் வரை இக்காரியம் வெளிப்படுவதில்லை. புருஷனை அறிய வேண்டிய பிரகாரம் அறியும் வரை சரீரத்தில் இது வெளிப்படாது. எனவே, இதைச் சரியான வகையில் விளங்கிக் கொள்ள முதலாவது மிக உயர்ந்தவரான புருஷனுடைய ஸ்தானத்தை அறிந்து கொள்வது நல்லது.

புருஷனே மிக உயர்ந்த இலக்கு

அவ்யக்தாத் புருஷ: பர: புருஷான்ன பரம் கிஞ்சித் ஸா
காஸ்ட்டா ஸா பரா கதி: (1.3.11)
வெளிப்படாததிலும் உயர்ந்தவர் புருஷனே
புருஷனிலும் உயர்ந்தவர் ஒருவருமிலர்
அவரே பெரிய, மிக உயர்ந்த இலக்கு என்ற கட உபநிஷத்தின் வல்லமையுள்ள வசனம் இவ்வாறு முடிகிறது.

நித்திய ஜிவனைக் குறித்த, கட உபநிஷத்தின் எட்டாம் வசனம் இதே எண்ணத்தை அறிவிப்பதைக் காணலாம்.

(யக்ஞுத்வா முச்யதே ஜன்து : அம்ருதத்வம்ச கச்சதி)

பொருள் : மகாப் பெரியவரான புருஷனை அறிகின்றவன் விடுதலை பெற்று மரணமில்லாப் பெருவாழ்வை அடைகிறான்.

தன் இயலாமையை உணர்ந்து மனிதன் தன் சரீரபுலன்களைக் கொண்டும், மனதைக் கொண்டும், புத்தியைக் கொண்டும், ஆன்மாவைக் கொண்டும். தன்னிலும் மேலான புருஷனை நோக்கிக் கதறுகிறான். நித்ய மோட்சத்தில் இருப்பவனாகிய மிக உயர்ந்த அதிகாரியாகிய புருஷனை மனிதன் உணர வேண்டும். அவரைத் தனிப்பட அறிந்து. அவரைத் தேவனாகவும், குருவாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டவுடன் அம்மகா புருஷன்

தனது வல்லமையுள்ள வார்த்தைகளை மனித சரீரத்தில் உள்ள எதிர்ப்பின் சக்திகளுக்கு எதிராகக் கட்டளையாக அனுப்புகிறார். அவருடைய வார்த்தை சிறுஷ்டிக்கக் கூடியது. அந்த வார்த்தையே புருஷன்.

இந்தக் குருவை பின்பற்றும் போது, இரதத்தின் குதிரைகளாகிய புலன்கள் புத்திக்குக் கீழ்ப்படிகின்றன. இப்பொழுது புத்தி புலன்களைக் கட்டுப்படுத்துகிறது. இரதத்திற்குள் அமர்ந்திருக்கும் ஆன்மாவானது மகிழ்ச்சியுடன் பிரயாணம் பண்ணும்.

புருஷனை அறிவதே நித்ய ஜீவன்

உபநிஷத்துக்களுடைய முக்கிய குறிக்கோளைக் கட உபநிஷத்து தெளிவுபடுத்துகிறது.

"எவனொருவன் புருஷனை அறிகின்றானோ
அவன் விடுதலை பெற்று மரணமில்லாப்
பெருவாழ்வையடைகின்றான்" - (2.3.7,8)

மரணத்திற்குப் பின்பு என்ன என்பதைக் கேட்கும் அனேக மக்களின் கேள்விகளுக்கும் பதில் இதுவே. நித்ய ஜீவனைக் குறித்து இயேசுக் கிறிஸ்துவும் உபதேசித்திருக்கிறார்.

"பிதாவே! வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்ய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரம் கொடுத்தப்படியே உம்முடைய குமாரன் உம்மை மகிமைப் படுத்தும் படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றாக மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்ய ஜீவன்" (யோவான் 17:2,3)

புருஷனாகிய தேவனைச் சரியாக விளங்கிக் கொள்ளாவிடில் ஏற்படுவது மரணம், அது ஜீவிக்கிற ஆண்டவரை விட்டுப் பிரித்தும் விடும்.

இந்திய தத்துவங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து இப்புருஷனான தேவனைக் குறித்து அனேகக் கருத்தரங்குகள்

நடைபெற்றுள்ளன. இந்து மார்க்கத்தில் **சம்க்யா** என்ற தத்துவம் ஏற்பட்ட பின்பு புருஷன் என்ற வார்த்தைக்கு இரண்டுவிதமான பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இவர்கள் புருஷன் என்பதை அறிவு என்று போதிக்கிறார்கள். **சங்கிய <u>தத்வார்த்தகாமுதி</u>** என்ற நூலை எழுதிய டாக்டர் சின்ஹா என்பவர்.

> புருஷனைத் தவிர மற்ற எல்லாம் ஒவ்வொரு
> வேளையிலும் மாறிக் கொண்டே இருக்கும்.

என்கிறார். அதே நேரம் இவர்களே அனேகப் புருஷர்கள் உண்டு என்றும் போதிக்கிறார்கள்.

புருஷனைக் குறித்த தவறான விளக்கம்

புருஷன் என்பதை அனேகர் தான், தானே என்று தவறாக விளங்கிக் கொள்கிறார்கள். காரணம் சம்கியா தத்துவத்தில் ஒவ்வொருவரும் ஒரு புருஷன் (Self) என்ற பொருளில் நம்பினபடியினால் பிற்கால இந்து தத்துவ ஞானிகளும் அப்படியே எடுத்துக் கொண்டார்கள்.

வேதங்களும், உபநிடதங்களும் சொல்லும் புருஷன் பிரஜாபதியாகிய கடவுள், அக்கடவுளை அறிவதன் மூலம் அவருடன் ஐக்கியப்பட்டு இரண்டறக் கலந்து அவரைக் போல் வாழ்வது நித்ய ஜீவனுக்கு வழிகாட்டும் என்பதை கிரகித்துக் கொள்ள இயலாமல் தடுமாறினார்கள். பரகதியடைவதற்கு இப்புருஷனே வழி என்றும் இப்புருஷனுக்கு மேலாக எவரும் இல்லை என்றும் கடோப நிஷத்து திட்டவட்டமாகக் கூறுகிறது.

பரம புருஷன் என்பவன் புருஷ சூக்தத்தில் முதலாவது வருகிறவனாகிய ஆயிரம் தலை, ஆயிரம் கால்கள், ஆயிரம் கண்களை உடையவன். இப்புருஷன் இருக்கிறவரும் இருந்தவரும் வரப்போகிறவருமாகிய வல்லமையுள்ள தேவனும், அல்பாவும் ஒமேகாவுமான இயேசுகிறிஸ்து என்பதைப்பல திருஷ்டாந்தங்களில் கண்டோம்.

புருஷ சூக்தம் புருஷனை அழிவில்லாதவன் என்று மகிமைப் படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவும் அழிவில்லாதவர். மரணத்தை

வென்று உயிர்த்தெழுந்ததினால் இன்றும் என்றும் ஜீவனோடு இருக்கிறவராய் இருக்கிறார்.

ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு புருஷன் இருக்கிறான். என்றும் அதை (Self) என்றும் தவறாக விளங்கிக் கொண்டு புருஷனாகிய இயேசுவை அறியும் அறிவுக்குப் பதிலாகத் தங்களையே அறிந்து பெருமை பாராட்டி நித்யத்துக்குப் பதிலாக நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

எல்லோருக்குள்ளும் புருஷன் இருக்கிறார் எனில் புருஷனை அறிகிறவன் முக்தியடைவான் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லையே.

பிறக்கும் பொழுதே நான் பாபத்தில் பிறந்தேன் (பாப சம்பவா) என்று ஜெபிக்கும் பொழுது பாப உள்ளத்தில் புருஷன் வாழ்வது எப்படி? அவர் நிஷ்களங்க புருஷனல்லவா? எனவே புருஷனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பு நம்மைத் தாழ்த்திக் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டு (முக்தியடைந்து அல்லது பரகதியடைந்து) அவருடைய வசனம் கேட்டு, அதின்படி நடந்து அவரில் நிலைத்திருந்தால் நித்ய ஜீவனைப் பெறலாம்.

ரோமருக்கு எழுதிய நிருபத்தில்:

மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் என்றும் மாம்சத்திற்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிரந்தால் நீங்கள் மாம்சத்திற்குப்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.

கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல என்றும் காணப்படுகிறது. (ரோமர் 8:6,8,9)

எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (I கொரிந்தியர் 2:16)

குரு

மரணமில்லாப் பெரு வாழ்வையடைய புருஷனை நமது குருவாக அடைய வேண்டும். நித்ய ஜீவன் என்பது இறைவனின்

ஈவு. அழிவில்லாத தேவனாகிய புருஷனில்லாமல் அதை நாம் அடைய இயலாது. குரு இல்லாமல் அந்த நித்ய இராஜ்ஜியத்தையடைய இயலாது என்றே வேதங்களும் சொல்லுகின்றன. புருஷனும் குருவும் ஒன்றே.

இந்நாட்களில் போதிக்கிறவர்கள். ஆசிரியர்கள் யாவரையுமே குரு என்று அழைக்கிறார்கள். வேதத்தின்படி அண்டசராசரங் களுக்கும் ஒரே ஒரு குரு மட்டுமே உண்டு.

குஸப் தஸ்த்வத் தகாராஸ்யா த்ரு ஸ்ப்தஸ்த்
தன்னிரோத்காஹ் அந்தகார நிரோதித் வாத்
குருரி த்ய பிதியதே (அத்வயதாரக உபநிஷத்து 16)

(கு என்பது இருள் ரு என்பது ஒளி. சந்தேகமின்றி குருவே கடவுள். அருவே அஞ்ஞானமாகிய இருளை அழிப்பார்)

"குரு ரேவ ப்ரம்ஹ" குருவே கடவுள் என்பதைக் கவனிக்க வேண்டும். "ந ஸம்ஸய". சந்தேகமில்லாமல் குருவே கடவுள் ஏனெனில் குருவாகிய கடவுளால் மட்டுமே இவ்வலகத்தில் இருளையும், பாபங்களையும், அறியாமையையும் அழிக்க இயலும்.

உபநிஷத்துகளும் பிழையின்றிக் குருவே கடவுள் என்பதை நிச்சயப்படுத்தியிருக்கின்றன.

குருரேவ பரப்பிரம்மம்	குருவே உயர்ந்த கடவுள்
குருரேவ பராகதி	குருவே உயர்ந்த வழி
குருரேவ பரவித்யா	குருவே உயர்ந்த ஞானம்
குருரேவ பராயனம்	குருவே உயர்ந்த பிரயாணம்
குருரேவ பரா காஸ்தா	குருவே உயர்ந்த உச்சநிலை
குருரேவ பரம்தனம்	குருவே உயர்ந்த செல்வம்

(அத்வயதாரக உபநிஷத்து 17,18)

கு காரச் சாந்த தஹா ரோ ஹி
ரு காரஸ் தேஜ்ய உச்யதே
அஞ்ஞானக் கிராசகம் ப்ரம்ம
குருரேவ ந ஸம்ஸய (குரு கீதை 44)

('கு' என்பது இருள் 'ரு' என்பது அழிப்பது. அஞ்ஞானமாகிய இருளை ஒழிக்கும் ஒளியே கடவுள்)

குரு என்பவர் சந்தேகமின்றிச் சாதாரண மனிதன் அல்ல, அவர் தேவனே. மனிதன் இவ்வுலகை விட்டு அவ்வுலகத்திற்குப் பிரயாணமாய்ப் போக இந்தகுருவே வழி. சாதாரண வழியல்ல, உயர்ந்த வழி. பரம் என்ற வார்த்தை உயர்ந்த அதிகாரமுள்ள என்ற பொருள்படும். இந்த குரு மனிதனுக்கு உயர்ந்த வழிகாட்டி, ஞானத்தை அருளி, உயர்ந்த நிலையில் வைத்து, உயர்ந்த செல்வத்தையும் அருளுகிறார். ஏனெனில் அவர் உயர்ந்த அதிகாரமுள்ள தேவன்.

பாப மனிதன் பரலோக காரியங்களைக் கற்றுக் கொள்ள இயலாது. அவன் பாபியாய் இருக்கிற படியினால் பரலோகம் போகவும் இயலாது. வழியும் தெரியாது. பரலோக காரியங்களை அறியாமல் பரலோகம் செல்லவும் இயலாது. பாப மனிதன் எதையாகிலும் அறிந்து கொள்ள வேண்டுமாயின் அவன் அதைக் காணவேண்டும், தொட்டுப் பார்க்க வேண்டும், ருசித்துப் பார்க்க வேண்டும். முகர்ந்து பார்க்க வேண்டும். எனவே, கடவுள் குருவாக இவ்வுலகுக்கு வரா விட்டால் மனிதன் கடவுளை அறிய இயலாமலேயே போய்விடும். கடவுளே குருவாக இருக்கிறபடியினால் அக்குரு வழிகாட்ட இங்கு வரவேண்டும். உபநிஷத்தில் சொல்லப்பட்ட படி அஸ்வதா என்னும் மரம் வானத்தில் வேர் பற்றி பூமியை நோக்கிக் கிளைவிட்டது போலவும் புருஷசூக்கத்தில் கடவுள் மனிதனாக வந்து உலகில் பலியாக வேண்டும் என்ற காணப்படுவது போலவும் கடவுள் குருவாகவும் உலகில் வரவேண்டும். என்றே வேதநூல்கள் சொல்லுகின்றன.

இயேசு கிறிஸ்து நமது குரு

வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் சொல்லப்பட்டுள்ள குருவின் தன்மைகள் எவ்வாறு மனித (புருஷன்) குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் காணப்படுகின்றன என்று காண்போம்.

குரு இருளாகிய பாபத்தை அழிக்கிறவர்

உபநிஷத்துக்களின் படி குருவே இருளை அழிக்கிறவர். அவர் ஒளி, இருளானது பாபத்திற்கும் மரணத்திற்கும் அடையாளம். இருளிலிருந்து வெளிச்சத்திற்கு உட்படுத்தும் (தமஸோமா ஜ்யோதிர் கமய) என்று அவர்கள் ஜெபம் செய்தபோது பாபத்திலிருந்து விடுதலை செய்தருளும் என்பதே ஜெபத்தின் கருத்தாகும். அந்த ஜெபத்தின் அடிப்படை விண்ணப்பம் என்ன வெனில் ம்ருத்யோமா அம்ருதம் கமய, மரணத்திலிருந்து ஜீவனுக்குட்படுத்தும் என்பதே.

இருளை அழிப்பது என்றால் பாபத்தையும் மரணத்தையும் அழிப்பது என்பதே பொருள். இயேசு கிறிஸ்து உலகிற்கு மனிதனாக (புருஷனாக) வந்த நோக்கம் அதுவே. தன்னுடைய சிலுவை மரண பலியினால் பாபத்தின் வல்லமைகளையும் மரணத்தையும் அழித்தார். இயேசு சொன்னார்.

நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன், என்னைப்
பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை
அடைந்திருப்பான் என்றார். (யோவான் 8:12)

இயேசு ஜீவ ஒளி என்றார். அதிலிருந்தே இருள் என்றால் மரணம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

உபநிஷத்திலும் இப்படியே சொல்லப்பட்டுள்ளது.

“தமஸோமா ஜ்யோதிர் கமயேதி
ம்ருத்யுர் வய் தமஹ் ஜ்யோதிர் அம்ருதம்”
(ப்ருகதாரண்யக உபநிஷத்து 1:3:28)

இருளிலிருந்து ஒளிக்கும் வழிநடத்தும், இருள் என்பது மரணம். ஒளி என்பது ஜீவன்)

இயேசுவே உலகத்தின் ஒளி என்பதைக் குறித்து யோவான் எழுதுவது என்னவெனில்:

அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு
ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது,
இருளானது அதைப் பற்றிக் கொள்ள வில்லை.
(யோவான் 1:4,5)

சில வேதாகம மொழி பெயர்ப்பில் இருளானது அதை ஒத்துக்கொள்ளவில்லை என்றும் விளங்கிக் கொள்ளவில்லை என்றும் சொல்லுகின்றன. எப்படிப்பார்த்தாலும் சரியே! ஏனெனில் யோவான் மறுபடியும் இந்த ஒளியைக் குறித்து சொல்லும் பொழுது:

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவாக இருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாத படிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின் படிச் செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும் படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் (யோவான்.3:19-21) என்கிறார்.

சூரியனின் வெளிச்சம் இருளைக் கிழித்து அதை அகற்றுகிறது போல, மனுஷ குமாரனாகிய புருஷ பிரஜாபதி பாபிகளின் பாபத்தைக் கிழித்து, அப்பாபங்களை அகற்றுகிறார். அவர் ஒளியாக இருக்கிறார். அவரிடத்தில் எவ்வளவேனும் இருள்இல்லை. எந்த மனுஷனையும் பிரகாசிக்கச் செய்கிற ஒளியாக இயேசு இருக்கிற படியால்.

"மகனே திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு
மன்னிக்கப்பட்டன" (மத்தேயு 9:2)

என்று சொல்லுகிறார்.
ஏனெனில்

"பூமியிலே பாபங்களை மன்னிக்க மனுஷ
குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள்
அறிய வேண்டும்," (மத்தேயு 9:6)

என்றும் சொல்லியிருக்கிறார். பாபங்கள் மன்னிக்கப்படும் பொழுது அதினால் ஏற்பட்ட வியாதிகளும் மன்னிக்கப்படுகின்றன என்பதை அதை தொடர்ந்து வரும் வசனம் விவரிக்கிறது.

"நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு
உன் வீட்டுக்குப் போ"

என்றார்

இறைவன் சோதி மயமானவன் என்பதையும் குருவடிவானவன் என்பதையும் பலியாகிறவன் என்பதையும் அகஸ்தியர் ஞானம் 30ல் காணலாம்.

வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்புக்
குவலயத்தில் தான் உதித்துக் குருவாய் நின்று
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை அமைத்துப் போட்டு
அகன்ற தளம் சென்றவரை அண்டுவாயே!

2 குருவே சர்வ வல்லமையுள்ள கடவுள் (குருரேவ பரம்பிரம்ஹ)

அத்வயத் தாரக உபநிடதம் குருவே சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதை உறுதிப்படுத்திச் சொல்லுகிறது. இவ்வுலகின் கண்ணுள்ள மனித குருக்கள் கடவுளல்ல என்பது தெளிவு. எவ்வளவோ உபாத்தியாயர்களும் ஆசான்களும் உலகில் காணப்பட்டாலும் இவர்கள் சாதாரண குருக்களேயாவார்கள். இறைவன் ஒருவர் மட்டுமே ஸத் குருவாக இருக்க இயலும்.

இயேசுகிறிஸ்துவும் ஒரு முறை :

> "நீங்களோ ரபி (குரு) என்று அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராக (குருவாக) இருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.
> பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள், பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப்ப பிதாவாக இருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்." (மத்தேயு 23:8-10)

என்று திட்டவட்டமாய்ச் சொல்லியிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் வானத்திலிருந்து பூமிக்கு இயேசுக் கிறிஸ்துவாக வந்தார். தம்முடைய சீஷனாகிய பிலிப்பு என்பவன் பிதாவைத் தங்களுக்குக் காட்டவேண்டும் என்று தங்கள் குருவாகிய இயேசுவிடம் கேட்டபோது இயேசு சொன்னார்.

"பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறிய வில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்கப் பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா?" (யோவான் 10:9) என்றார்.

இயேசு கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். (கொலொசெயர் 1:15) ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. (கொலொசெயர் 2:9)

வாக்யோ பிரம்ஹ: வார்த்தையாயிருந்த தேவன் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்யும்படி உலகிற்கு வந்தபோது, அவரை ஏற்றுக் கொண்ட சீடர்களால் அவருடைய மகிமையை காண இயன்றது. (யோவான் 1:14)

குருகீதையிலும் இதே பொருளைக் காணலாம். குருராதிர் அனாதிஷ்ச்சா - குரு பரம தெய்வம். குருஆதி - குருவே ஆரம்பம், குரு அனாதி - குருவே ஆரம்பில்லாதவர். அவரே சர்வ வல்லமையுள்ள தேவன். (குரு கீதை 1:79)

3, குருவே மேலான வழி
(குரு ரேவ பராகதி)

கதி என்னும் வார்த்தை வழி என்று பொருள்படும். பரகதி என்னும் போது அதை மேலான இலக்கு என்றும் கொள்ளலாம். இலக்கையடைய வாழ வேண்டும். வழியினுடைய முடிவு இலக்காகும். இலக்கையடைய வழியில் பிரயாணம் செய்ய வேண்டும்.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிரக்கிறேன். என்னாலே யல்லாமல் பிதாவினிடத்தில் ஒருவனும் வரான்." (யோவான் 14:5) என்று இயேசு சொன்னார்.

இப்படிப்பட்ட வாக்கைக் கொடுக்கக் காரணம் அவர்தான் வழி. அவரே பிதாவினிடத்திலிருந்து இறங்கி வந்தவர்.

"பரலோகத்தினின்று இறங்கினவரும் பரலோகத்தில்
இருக்கிறவருமான மனுஷ குமாரனே யல்லாமல்
பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை."
(யோவான் 3:13)

என்று இயேசு சொன்னார்.

நித்திய இராஜ்ஜியம் சென்றடைய புருஷனாகிய தெய்வத்தை அறிவதே வழி என்பதை எற்கனவே உபநிஷத்துக்கள் மூலம் அறிவோம்.

இந்த வழியானது பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கிறது. இதனுடைய விளக்கம் என்னவெனில், பரலோகத்திலுள்ள சர்வ வல்லமையுள்ள தேவனையும் பூமியிலுள்ள மனிதனையும் இந்த வழி ஒன்றுபடுத்துகிறது.

எனவே, புருஷனாகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையில் இரண்டையும் இணைக்கும் சமாதானப் பாலம் ஆகிறார்.

இயேசு உலகத்தில் பிறக்கப் போகிற செய்தியை அறிவித்த தூதர்கள்.

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே
சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக
(லூக்கா 2:14)

என்று சொல்லித் துதித்தார்கள். அவர் பிரஜாபதி பலியை
நிறைவேற்றி மரித்து உயிர்த்தெழுந்த பின்பு தமது
சீடர்களைப் பார்த்து:

"உங்களுக்கு சமாதானம்" (யோவான் 20:20:21:26) என்றார்.

"காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்தில் இருக்கிறவைகளும் பூலோகத்தில் இருக்கிறவைகளும் ஆகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும்." (எபேசியர் 1:6) என்று பவுல் அப்போஸ்தலர் கூறினார். இயேசு கிறிஸ்து சமாதான பாலமாக பரலோகத்தையும், பூமியையும் இணைத்து அதன்வழியாக நாம் தேவனுடைய நித்திய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் படியாக மேலான வழியாய் இருக்கிறார்.

உபநிஷத்துக்கள் சொல்லுகிறபடி குருவே வழி, இயேசு கிறிஸ்து தானே குரு என்றும் வழி என்றும் திட்டவட்டமாகக் காண்பித்தார். முக்தியடைய வேறு குருவோ வழியோ இல்லை.

நன்ய பந்த்தா வித்யதே அயனாய
(ஸ்வே தாஸ்வராத உபநிஷத்து)

பொருள் : இதை தவிர வேறு வழி இல்லை.

4, குருவே மேலான ஞானம் (குரு ரேவ பரா வித்ய)

வித்ய என்பது ஞானத்தைக் குறிக்கும். வித்யா, வேதா ஆகிய சமஸ்கிருத வார்த்தைகள் வித் என்ற சொல்லிருந்து பிரிந்து வளர்ந்தவைகளாகும். வித் என்றால், அறிய, கற்றுக் கொள்ள, விளங்கிக் கொள்ள என்று பொருள்படும். வேதங்களில் வித்யா என்பது முக்கிய வார்த்தைக்கும். வித்ய என்ற வார்த்தைக்கு எதிர்மறையாகக் காணப்படுவதெல்லம் அவித்யா என்னப்படும். அவித்யாவைப் பின்பற்றுகிற யாவரும் காரிருளாகிய மரணத்தில் இருக்கிறார்கள். ஆனால் வித்யா நமக்கு நித்திய ஜீவனை அளிக்கும்.

அவித்யயா ம்ருத்யும் - தீர்த்வா
வித்யா அம்ருதாமஸ்னுதே
(ஈஸாவாஸ்யோ உபநிஷத்து -11)

மெய் ஞானம் என்பது நித்திய ஜீவனுக்கு வழியாகவுள்ள புருஷனாகிய தெய்வத்தை அறிவதே! இந்த ஞானத்தை உபநிஷத்துகள்

மேலான ஞானம் என்று சொல்லுகின்றன. இந்த மெய் ஞானத்தைக் குருவே அறிவிப்பார். குருரேவ பராவித்யா என்று சொல்லப்படுவதினால் குருவும் வித்யாவும் ஒரே ஆள்தான். குரு அளிக்கும் இந்த ஞாமானது குரு இன்றித் தானே நிற்கும் தத்துவமோ, கொள்கைகளோ அல்ல. குரு அளிக்கும் இந்த ஞானம் என்பது அவரையே நமக்கு அளிப்பது அல்லது வெளிப்படுத்துவது என்பதே.

புதிய ஏற்பாட்டில் இதைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் சொல்லியிருப்பதைக் கவினியுங்கள்.

இயேசுவே தேவனால் நமக்கு ஞானமானார். (1 கொரிந்தியர் 1:31)

இயேசுவுக்குள் ஞானம், அறிவு என்ற பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

கிறிஸ்துவைக் குறித்து அறியும் ஞானம் தேவனுடைய மர்மம். இது உலகின் எல்லா ஞானத்திற்கும் மேம்பட்டது. இந்த மர்மத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலர் எழுதுவது:

"என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்." (பிலிப்பியர் 3:8) என்றார். இப்படிச் சொன்னவர், மேலும்,

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்கு தந்தருள வேண்டுமென்று" (எபேசியர் 1:17) என்று நமக்காக வேண்டிக் கொள்கிறார்.

இயேசு கிறிஸ்துவே பரா வித்யா (மேலான ஞானம்) அவரைப் பின்பற்றுவது நித்ய ஜீவனாகும். உலத்திற்கு அறிவிக்கக் கூடிய நற்செய்தி இதுவே.

5, குருவே மேலான யாத்திரை

(குருரேவ பராயணம்)

அயணம் என்பது நட அல்லது செல் என்று பொருள்படும்.

பர+அயணம் என்பது பராயணம் என்றாயிற்று. புகழ்பெற்ற இதிகாசக் காவியமான இராமாயணம் என்பது இராம+அயணம் என்பதாகும். அதாவது இராமனுடைய பயணம் அல்லது யாத்திரையாகும்.

ஆனால் பராயணம் என்னும் வார்த்தையில் பர என்பது ஒரு மனுஷனைக் குறிக்காது. இங்கே அது மேலான அல்லது உயர்ந்த என்று பொருள்படும். எனவே, இதை மேலான பயணம் அல்லது யாத்திரை எனலாம்.

உபநிஷத்துக்களின் கருத்துப்படி மேலான யாத்திரை குருவே!

பரிசுத்தமான நிஷ்களங்க புருஷனை முனிவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் அவரை பின்பற்றி செல்லும்படியான உயர்ந்த முன்மாதிரியை அவரிடத்தில் எதிர்பார்த்தனர். ஜனங்கள் பின்பற்றி நடப்பதற்கு இயேசுவே நல்ல முன்மாதிரியாவார். கற்றுக் கொள்ளும்படிக்கு இயேசுவின் சீஷர்கள் அவருடன் நடந்தனர். மேலான குருவாகிய இயேசு, முதலாவது தான் நடந்து. தம்மைப் பின்பற்றுகிற சீடர்களைத் தமது அடிச்சுவட்டில் நடந்து வரும்படி அவர்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்.

இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்க உபசேத்திற்கு முன்பு உன் சத்துருவை நேசி, அவனுக்காக ஜெயம் செய் என்கின்ற உபதேசத்தை உலகம் கேட்டதில்லை. (மத்தேயு 5:43,44) தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையான சிலுவை மரண நேரத்திலும் அவர் சத்ருக்களை நேசித்தார். அவர்களுக்காக ஜெபம் செய்தார். தன்னைத் காட்டிக்கொடுப்பவன் இன்னான் என்று தெரிந்த பின்னரும் அவனுட்பட எல்லா சீடர்களின் கால்களையும் கழுவினார். கழுவினதுடனல்லாமல், நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். (யோவான் 13:15) என்றார்.

இயேசு தான் வாயால் உபதேசித்தவைகளை கொல்கோதாவின் சிலுவை மரணம் வரைக்கும் கடைப்பிடித்தார். அவரைப் பின்பற்றுகிற சீடர்கள் அவருக்குத் தங்களை

முழுமையாக ஒப்புக் கொடுத்தால் அவரைப் போன்ற கனிகளைப் பெறலாம். குரு இல்லாமல் சீடன் ஒன்றும் செய்ய இயலாது.

என்னை யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. (யோவான் 15:5) என்று இயேசு சொன்னது எவ்வளது உண்மை.

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாய் நிறுத்தும் (படிக்கே) தேவன் சித்தமுள்ளவராகி அவரையே அறிவித்து, புத்தி சொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறார்.

குரு எப்பொழுதும் குருவாகவே இருப்பார். சீஷன் எப்போதும் அவருடன் நடப்பானேயன்றி அவன் ஒருபோதும் குருவாக மாட்டான். அவருடன் சேர்ந்து நடக்கும் வரை அவன் குருவைப் போல இருப்பான். சற்று விலகி நடந்தாலும் மரத்திலிருந்து ஒடிந்து விழுந்த கிளையைப் போல் இருப்பான். உலகத்தில் சீடர்கள் நல்ல குருவைத் தேடியலைவார்கள். இயேசுகிறிஸ்துவோ சீடர்களைத் தமக்காகத் தெரிந்து கொண்டார்.

அவ்யக்தா (உள்ளான மனுஷன்) என்பது என்ன?

கதோபநிஷத்து 3:11 மற்றும் 2.3.7.8 ஆகிய வாக்கியங்களில் சொல்லப்பட்டபடி அவ்யக்தா என்ற அழைக்கப்படுகிற உள்ளான மனுஷன் என்பவன் ஆத்மாவில் உயர்ந்தவனாகவும் புருஷனாகிய தேவனுக்குக் கீழானவனாகவும் காணப்படுகிறான்.

இந்த மர்மமான மனுஷன் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலிக்குப் பின்பு அவருடைய இரத்தத்தினாலாகும் பாப மன்னிப்பைப் பெற்றவர்களுக்கு வெளிப்பட்டானேயன்றி முக்காலத்திலுள்ள ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் வெளிப்படவில்லை. எனவே அக்கால ரிஷிகள் அவ்யக்தா என்று எழுதிவிட்டார்கள். இயேசுவைக் குருவாக ஏற்றுக்கொண்டவனோ, உள்ளான மனுஷனைக் கண்டுவிட்டதினால் அவன் கிறிஸ்துவில் வளரவும், புறம்பான மனுஷன் நாளுக்கு நாள் அழியவும் தக்கதாக இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிறான்.

அப்படி நடக்க தன்னை ஒப்புக் கொடுக்கிற படியினால் அவன் தேவனுடைய பிள்ளை என்ற பெயரையும் பெறுகிறான்.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாத படியினாலே நம்மையும் அறியவில்லை. இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போ மென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (1 யோவான் 3:1,2)

மேற்கண்ட வசனங்களில், இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களின் இப்பொழுதுள்ள நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இனி எவ்விதம் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் இயேசுவை முகமுகமாய்க் சந்திக்கும்போது அவரைப் போலவே இருப்போம் என்று வசனம் சொல்லுகிறது. நாம் அவரைப் போல மருரூபமாவோம் என்பது இதன் பொருளாகும். அந்த நாளில் இது நடக்கும்.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்புள்ள முனிவர்களுக்கு இந்த காரியம் வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும், மனிதனுடைய பூரணப்படுதலைக் குறித்து தேவன் அவர்களுக்கு வெளிப்படத்தின போது, அது அவர்களுக்குச் சரியாக விளங்காததினால் அதை உள்ளான மனுஷன் (அவ்யக்தா) என்று அழைத்தனர்.

இதை குறித்துப் பேதுரு அப்போஸ்தலர் எழுதும்போது:

“அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும

இரட்சிப்பைப் பெறுகிறீர்கள். உங்களுக்குண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன **தீர்க்க தரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்,** தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தார் என்பதையும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைக் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப் பார்க்கத் தேவ தூதரும் ஆசையாய் இருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு 1:8-15)

அவ்யக்தா என்ற வார்த்தையை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் மேலே கண்ட வசனங்களைத் தியானித்தாலே போதும்.

அவ்யக்தா என்னும் வார்த்தைக்கு கட உபநிஷத்திற்கு உரை எழுதினவர்கள் சரியான பொருள் எழுதவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

அதிகாரம் - பதினாறு

ஒரே வழியா? பல வழிகளா?

இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்றே அனேக தத்துவங்கள் போதிக்கின்றன, ஆறுகள் எங்கெங்கேயோ ஓடி முடிவில் சமுத்திரத்தை அடைவது போல ஆன்மாக்கள் எந்த மதத்தில் எப்படி வழிபட்டாலும் முடிவில் அந்த ஒரே இறைவனிடம் போய்ச் சேர்வார்கள் என்றும், பசுக்கள் பல நிறமானாலும் பால் வெள்ளையாய் இருப்பதுபோல மதங்கள் வெவ்வேறு கொள்கைகளை உடையனவாயிருந்தாலும் இறைவன் ஒருவரே என்றும் பலவாறு பேசித் தங்களையும் மற்றவர்களையும் திருப்திப்படுத்திக் கொள்துண்டு.

இந்து மதம் சகிப்புத் தன்மையுடையது என்றும் அது பரந்த மனப்பான்மையுடன் பிற மதங்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையது என்றும் சொல்லுவார்கள்.

ஏனெனில் பல மதங்களின் கருத்துக்களை உள்ளடக்கியே அதற்கு இந்துமதம் என்று பெயர் வைத்தனர். பூர்வகாலங்களில் வட இந்தியாவில் இயற்கை வணக்கங்களும் பலி செலுத்தும் பூஜைகளும் இருந்தனவே தவிர, தனிக் கொள்கையுடைய மதம் எதுவும் இருந்ததில்லை.

பிற்காலத்தில், அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர், தென் நாடு போந்த வட இந்தியர்கள், இங்கு அமைக்கப்பட்டிருந்த சைவம், வைணவம், இவைகளின் உட்பிரிவுகளாகிய கௌமாரம், காணாபத்யம், சாக்தம், சௌரம் ஆகிய சைவ, வைணவ கோட்பாடுகளை கண்டு, அவைகளை தங்கள் மார்க்கக் கருத்துக்களுடன் சேர்த்து, தாங்களே அதற்குத் தலைவர்கள் போலும் அமைத்துக்கொண்டனர். இதன்பின்பே கி.பி. 15ம் நூற்றாண்டில் இவ்வித சமயங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரே பெயராக இந்து மதம் என்ற பெயர் உண்டாயிற்று.

இந்தியாவின் முதல் பிரதான மந்திரியாக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்துமதமானது ஒழுங்கற்றதும்,

நிச்சயமற்றதும், எப்பக்கத்திலும் சார்ந்ததும், யாருக்கும் எப்படி வேண்டுமானாலும் கொள்ளத்தக்க விசுவாசத்தையுடையது என்று கூறியிருக்கிறார். இயேசுவும் ஒரு கடவுள் என்று ஏற்றுக்கொள்ள இந்துக்கள் தயங்குவதில்லை. இயேசு ஒருவரே இரட்சிப்புக்கு வழி என்றால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்

நித்திய ஜீவனைக் குறித்தும் அதைப் பெறுவதற்கான் இரட்சிப்பின் வழியைக் குறித்தும் வேதங்களும் உபநிடதங்களும் சொல்லும் சில காரியங்களைப் பார்ப்போம்.

வேதாக மேதம் புருஷம் மஹாந் தம் ஆதித்ய
வர்ணம் தமஸ பரஸ்தாத் : தமேவ விதித் வாதி
ம்ருதயுமேதி நான்ய: பந்தா வித்யதே அயநாய!!
(ஸ்வேதாஸ்வ தார உபநிஷத்து 3:8
மற்றும் யஜூர் வேதம் 31:18)

பொருள் : "இருளுக்கும் அப்பாலுள்ள சூரியனைப் போன்ற ஒளியுள்ள வல்லமை நிறைந்த புருஷனை நான் அறிவேன். அவனை அறிவதின் மூலமே மரணத்தினின்று கடந்துபோக இயலும் அதைத் தவிர வேறு வழியே இல்லை" என்பதே

புருஷ சூக்தத்தின் கடைசி பாகத்திலும் இதே போன்ற வாக்கியத்தைக் காணலாம். இவ்விரண்டு இடங்களிலும் புருஷன் இருளைக் கடந்த நிலையில் சூரியனாக நிற்கிறான். சுருங்கச் சொல்லின் புருஷன் இருளை அகற்றும் ஒளியாய் இருக்கிறான்.

தமேவ வித்வான் அம்ருத இஹ பகதி
நன்ய:பந் த்தா அயநாய வித்யதே

என்ற புருஷசூக்தப் பாடலிலும் அப்படியே காண்கிறோம். இறைவனையடைய மேலான வழி அல்லது பரகதி என்னவெனில் புருஷனை அறிந்து கொள்ளுதலே. ஏனெனில் புருஷ சூக்தத்தின் மொத்த சாராம்சமும் மனித ஆத்மா பாபத்திலிருந்து விடுதலை பெறப் புருஷன் பலியாக்கப்படல் வேண்டும் என்பதுவே, இதைத் தவிர வேறு பரகதி அல்லது மேலான வழி மனுக்குலத்துக்கு எதுவும் இல்லை என்பது சகல வேதங்களிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால் வேதகாலங்களுக்கடுத்து கர்மா, ஞானா, யோகா, பக்தி ஆகிய நான்கு வழிகள் மூலம் முக்தி அல்லது இரட்சிப்பு அடையலாம் என்ற கொள்ளை எழலாயிற்று இவைகளையும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

1. கர்ம மார்க்கம்

கர்மம் என்றால் வேலை, செயல் அல்லது செய்கை என்று பொருள்படும். இரட்சிப்புக்குக் கர்ம மார்க்கமே சிறந்தது என்று நம்புகிறவர்கள் பலர். கர்ம மார்க்கத்திலேயே சிறந்தது பலி, எனவே கர்மமார்க்கம் என்பது பலி மார்க்கம் என்றும் கொள்ளலாம்.

மனிதன் பிறந்தவுடனே மரணத்துக்குக் கடனாளியாகப் பிறக்கிறான் என்றும் அவன் பலி செலுத்தும் பொழுது தன்னை மரணத்தினின்றும் விடுவித்துக் கொள்கிறான் என்றும் வேதகாலத்தில் பலியானது இரட்சிப்புக்கான உயர்ந்த அடையாளாமாய் இருந்தது என்றும் பலியினால் முதலாவது மரணத்தினின்றும் பின்பு பாவத்தினின்றும் விடுதலை கிடைக்கிறதென்றும் நம்பினார்கள்.

பலி மார்க்கத்திலிருந்து பிரிந்து வந்தது கர்ம மார்க்கமாகும். இரட்சிப்புக்காகப் பலி செலுத்தப்பட்டு வந்தது. வேதங்களிலும் பழைய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்ட பலிகள் யாவும் நிழல் போல் காட்டப்பட்டவை என்பதை முன்னரே அறிந்தோம். உலகம் தோன்றுமுன்னே புருஷ பிரஜாபதி பலியாக்கப்பட்டதை புருஷ சூக்தத்தில் கண்டோம். இப்படிப்பட்ட பலியானது இயேசு கிறிஸ்துவில் முழுமையடைந்து நிறைவேறியதையும் வேதங்களின் வழியாகக் கண்டோம். மனிதன் இதற்குமேல் பரிபூரணமான ஒரு பலியைச் செலுத்த இயலாது. இயேசு கிறிஸ்து தன்னையே பழுதற்ற பூரணபலியாக ஒப்புக் கொடுத்து பாவிகளாகிய நாம் நித்திய ஜீவனையடைய ஏதுவானார்.

இந்தப் புருஷனைத் தவிர வேறு வழி இல்லை. (வேதாகமே தம்.... நன்ய பந்த்தா அயநாய வித்யதே) என்றே உபநிடதங்களும் சொல்லுகின்றன. இந்தப் புருஷ பிரஜாபதியின் பூரணமான பலியை

அறியாமல் அனேகர் நற்காரியங்களைச் செய்ய முயலுகிறார்கள். பைபிள் சொல்லுவதுபோல நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தை (ஏசாயா 64:6) புருஷனுடைய ஆவியில்லாமல் ஒருவரும் நற்காரியங்களைச் செய்ய இயலாது. என்னாலன்றி உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது (யோவான் 15:5) என்று இயேசு கிறிஸ்து சொன்னார். வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்த அந்த மரத்துடன் நாம் இணைந்து நிற்போமானால் நல்ல கனிகளைத் தர இயலும். இதைக் குறித்து புருஷ சூக்த விளக்கத்தில் ஏற்கனவே கண்டிருக்கிறோம்.

கர்மா கொள்கையின் மற்ற விளைவுகள்

பலிமார்கத்திலிருந்து கர்மா என்ற கொள்ளை ஏற்பட்டபோதிலும் அனேக மற்ற கொள்கைகள் பிற்காலத்தில் தோன்றி சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கர்மாவா கிருபையா என்ற அதிகாரத்தில் இவைகளைக் குறித்து ஏற்கனவே அறிந்திருக்கிறோம். எது எப்படியாயினும் இயேசுகிறிஸ்து சிலுவையில் பலியாக்கப்பட்டபோது சொன்ன "முடிந்தது" என்ற ஒரே வார்த்தையில் எல்லாம் முடிந்தது. இதற்கு மேல் மனிதன் தன் சொந்த முயற்சியினால் இரட்சிப்புக்கு வழிதேட வேண்டிய அவசியமல்லை.

> நற்கிரியைகளைச் செய்வதற்காக நாம் கிறிஸ்து
> இயேசுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய
> செய்கையாயிருக்கிறோம். (எபேசியர் 2:10)

2. ஞான மார்க்கம்

"கர்மனா பந்த்யதே ஸன்துர் வித்யா து பிரமுச்யதே"
(சாந்திபர்வம் - மஹா பாரதம்)
கர்மா ஆத்மாக்களைக் கட்டி வைக்கிறது
ஞானம் அவைகளை விடுவிக்கிறது.

நமக்காக பலியான புருஷனை அறிந்து கொள்ளுதலே ஞானம் என்று வேதங்களும் உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன. புருஷனே பரவித்யா (மேலான ஞானம்) வாக இருக்கிறார். மேலான வழியில் நடந்து இலக்கையடைய மேலான ஞானமாகிய புருஷனை அறிவதே ஞானமார்க்கமாகும்.

3. யோக மார்க்கம்,

யோகா என்ற வார்த்தை யூஜ் என்ற சமஸ்கிருத மொழியிலிருந்து வந்ததாகும். இணைக்கப்படுதல், சேர்தல் என்பதே அதன் பொருள். வி.எஸ். ஆப்தே என்பவர் சமஸ்கிருதம்-ஆங்கில பொருளகராதியில் இவ்வார்த்தைக்கு இன்னும் பல பொருட்களைக் கூறுகிறார். ஆழ்நிலை தியானம், சிந்தையை ஒருநிலைப் படுத்துதல், மேலான உயர்நிலை, ஆவியுடன் ஒருமனப்படுதல் போன்ற பொருள்களையும் சொல்லுகிறார். வேதங்களிலும் உபநிடதங்களிலும் யாரிடம் இப்படிச் சிந்தையை ஒரு நிலைப்படுத்தித் தியானிப்பது என்று கேட்டால் கிடைக்கும் ஒரே ஒரு விடை புருஷனிடம் என்பதுவே. இவைகளைக் குறித்து ஏற்கனவே கதா உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கண்டோம். வேதங்கள் இந்த தியான நிலைகளைக் குறித்து மூன்று விதமான காரியங்களைச் சொல்லுகின்றன.

1. ஸ்ரவன-குருவிடமிருந்து கடவுளைப் பற்றி அறிதல்
2. மனன-கேட்டவைகளைக் குறித்துத் தியானிப்பதும் தக்க வைத்துக் கொள்ளுதலும்.

3. நிதித்யாசன - தொடர்ச்சியாகவும் கவனமாகவும் கடவுளின் வார்த்தைகளைத் தியானிப்பதும் அவரில் நிலைத்திருப்பதும்.

பைபிளிலும் இப்படிப்பட்ட கட்டளைகள் உண்டு. சங்கீத புத்தகத்தின் ஆரம்பத்திலேயே, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீத 1:2) என்று காணப்படுகிறது.

சங்கீதங்களை எழுதின அனைவருமே தியானம் செய்கிறவர்கள். ஆசாப் என்பவர்

உம்முடைய கிரியைகளையெல்லாம்
தியானித்து உம்முடைய செயல்களை யோசிப்பேன்
(77:12)

என்றார். தாவீது அரசன் வனாந்தரங்களில் அலையும்போது கர்த்தருடைய வேதத்தைத் தியானித்தான்.

நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்மா திருப்தியாகும். என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது இராச் சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன் (சங் 63:5,6)

அதிகாரம் - பதினேழு

தற்கால ஆழ்நிலை தியானங்களும் யோகிகளும்

இன்றைய ஆழ்நிலை தியானக்காரர்கள் தியானத்தின் மையப் பொருளாகிய புருஷனை இழந்து விடுவதால் இலக்கை நோக்கித் தொடருகிறார்கள் என்று சொல்ல இயலாது. தற்கால தியானங்கள் வேதத்திற்கு எதிர் திசையில் செல்லுகின்றன.

வேதங்கள் சொல்லுவது என்னவெனில் முழு சிந்தையோடும், அறிவோடும், ஆத்மாவோடும் புருஷனைத் தியானிக்க வேண்டும் என்பதே! ஆனால் தற்கால தியானக்காரர்கள் ஒன்றுமில்லாததைத் தியானிக்கிறார்கள். சுருங்கச் சொன்னால் இவர்கள் ஜனங்களின் சிந்தையை வெளியேற்றுகிறார்கள்.

அமெரிக்காவில் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் இந்த ஆழ்நிலை தியானங்களைச் செய்து வருகிறார்கள். ஜொஷ் மக்கோவல் என்பவர் “வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நான் பிரயாணம் செய்கையில் கிழக்கு நாடுகளிலுள்ள இந்த ஆழ் நிலை தியானம் எப்படி இங்கெல்லாம் வெடித்திருக்கிறது என்பதைக்காண முடிகிறது. எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும் அங்கே TM (ஆழ்நிலை தியானம்) குறித்ததான விளம்பரங்களைக் காணலாம்.” (Josh Me Dowell, From the forward of the Mystical maze-Ibid) என்கிறார்.

வட அமெரிக்காவுக்கு இவ்வாழ்நிலை தியானத்தை அறிமுகப்படுத்திய மகரிஷி மகேஷ் யோகி சொல்லுவது என்னவெனில்: “இரட்சிப்பு அடைவதற்கும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் ஆழ்நிலை தியானத்தை விட்டால் வேறு வழியே இல்லை” (The Mystical maze-Ibid rage 131) என்பதே! வட அமெரிக்காவின் அனேக பத்திரிகைகள் மகரிஷியைக் குறித்தும் அவருடைய ஆழ்நிலை தியானத்தைக் குறித்தும் அனேக செய்திகளை வெளியிட்டுள்ளன. சமீபத்தில் (மகரிஷி சிறையாக்கப்படுவதற்கு முன்) உலகின் எல்லா அரசாங்கத் தலைவர்களையும் மகரிஷி அழைத்து தன் ஆழ்நிலை தியானத்தின்

மூலமாக இவ்வுலகிலேயே பரலோகத்தைக் காட்டவிரும்பினார். (From Maclean's Canada's weekly News magazine, Toronto march 26 1990) This article appears various news medias of America. In this article the Goverments are invited to contact : Maharishi World Capital of the Age of Enlightenment. Maharishi, Nagar 201 304, U.P.India)

ஆழ்நிலை தியானத்தின் இரகசியம்

மகரிஷி அவர்கள் ஆழ்நிலை தியானத்தின் மூலமாக இரட்சிப்பையும் பரலோகத்தையும் இங்கேயே அருளுகிறார். இது மிகவும் வசீகரிக்கக் கூடிய செய்தி! ஆழ்நிலை தியானம் தற்காலிகமாக பாவத்தினால் ஏற்பட்ட குற்றவுணர்வையும் வேதனையையும் குறைக்கிறது.

ஆழ்நிலை தியானமானது ஒவ்வொருவருடைய வாழ்விலும் எழுவிதமான மனவுணர்வுகளை உண்டாக்கி அதன் மூலம் பூரண மனிதத் தன்மையையும் இயற்கைச் சட்டத்தின் மூலமாகத் தான் விரும்பிய யாவற்றையும் பெற்றுக் கொள்ள உதவி செய்கிறது இவ்வேழு நிலைகள் என்னவெனில்:

1.	ஜாக்ரத சேத்தனா	நடத்தல்
2.	ஸ்வப்பன சேத்தனா	கனவு காணுதல்
3.	சுசுப்தி சேத்தனா	துயில் கொள்ளுதல் (நித்திரை கொள்ளுதல்)
4.	தூர்யசேத்தனா	ஆழ்நிலை உணர்வு
5.	தூர்யதீத் சேத்தனா	உணர்வு
6.	பகவத்சேத்தனா	இறை உணர்வு
7.	பிரம்மி சேத்தனா	இணை உணர்வு

(Maharishi Magesh yogi. Maharishi's Master Plan to create Heaven on Earth (Reconstruction of the whole world) taken from the summary of the book from the Maclean's (March 26, 1990)

மேலே குறிப்பிடப்பட்ட ஏழு காரியங்களும் வேதங்களிலோ, உபநிஷத்துக்களிலோ காணப்படவில்லை. ஆனால் இவை

மகரிஷியின் **வேத விஞ்ஞான இயல்** என்றே விளம்பரப் படுத்தப்படுகின்றன.

இவ்வேழு தியான நிலைகளும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடைபெற்று, அவன் தன் மன பாரங்களிலிருந்து சிறிது நிவாரணம் பெறலாம். ஆனாலும் இம்மன பாரங்கள் எப்படி எதினால் ஏற்பட்டன என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

மனபாரம் அல்லது வேதனையென்பது பாவத்தினால் ஏற்படும் விளைவு என்பதை உணரவேண்டும். ஆழ்நிலை தியானம் ஒரு நோயாளி தன் வேதனையை உணராமலிருக்கக் கொடுக்கப்படும் மாத்திரையைப் போலக் (pain killer) கிரியை செய்கிறது. சில மன இயல் மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளை இவ்வாழ்நிலை தியானத்தைச் செய்யும்படியாக ஆலோசனை கொடுக்கிறார்கள்.

இந்த ஆழ்நிலை தியானம் எவ்வாறு வேலை செய்கிறதென்றால்:

ஜாக்ரத சேத்னா என்ற நடக்கின்ற உணர்விலே ஒருவன் ஆழ்நிலை தியானத்திற்குப் போகிறான். இவனுக்கு சமாதானம் கிடையாது. நல்ல இளைப்பாறுதல் இல்லை. மனவேதனையும் பாரமும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். நிவாரணம் கிடைக்கும் என்று இவன் T.M. க்குப் போகிறான். தன் சிந்தனையில் வேதனையை உணருகிறான். இந்த உணர்வு கற்பனையல்ல. உண்மையே, இந்த வேதனையும் உணர்வுகளும் உண்மையான வியாதியான பாவத்தின் அடையாங்கள். எனவே இவன் தனக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் இடந்தைத் தேடிப் போகிறான். எப்படியாவது இவ்வேதனையிலிருந்து விடுதலை கிடைத்தால் போதும் என்று போகிறான். ஆழ்நிலை தியானம் மகரிஷி அவர்ளின் கோட்பாட்டின்படி இவனை ஸ்வப்ன சேத்தனா என்ற கனவு நிலைக்குள் வழி நடத்துகிறது.

முதலாவது நிலையில் அவன் மனமானது விழிப்புள்ளதாய் இருக்கிறது. இரண்டாவது நிலையில் அவன் மனமானது மயக்க நிலையில் அரைத்தூக்கத்தில் இருக்கிறது. என்றாலும் அவன்

சிந்தையானது கனவிலும் வேலை செய்யும். இங்கே இவனுடைய மனமானது இனிய அல்லது கொடூரமுள்ள அனுபவத்தைக் கனவு காண்கிறது. ஆயினும் இரண்டும் உண்மையல்ல. (மெய்ப் பொருளைத் தேடுகின்ற உண்மையான மக்கள் பொய்மையிலிருந்து மெய்மைக்குள் வழி நடத்தும் படியாகவே பிரார்த்திக்கின்றனர்) இந்த இரண்டாவது நிலையிலும் இவன் மறைமுகமாக அவ்வேதனையை உணரவே செய்கிறான். எனவே ஆழ்நிலை தியானமானது இப்போது சுசுப்தி (ஆழ்துயில்) என்ற மூன்றாவது நிலைக்கு வழி நடத்துகிறது. இந்நிலையில் இவன் தன் பாவத்தினால் ஏற்பட்ட வேதனையை அதிகமாய் உணர்வதில்லை. நாம் ஆழ்ந்த நித்திரை செய்யும் போது நமது அனேகக் கவலைகளை மறந்து விடுகிறோம். ஆழ்ந்த நித்திரையில் நமது மனம், அறிவு அதைச் சேர்ந்த அவயவ உறுப்புகள் யாவும் நல்ல ஓய்வு எடுக்கின்றன. ஆழ்நிலை தியானம் இயற்கையான நித்திரை இல்லாவிட்டாலும் இம்மூன்றாவது நிலையாகிய ஆழ்துயில் நிலைக்கு வழி நடத்துகின்றன.

மனிதன் தன் குற்றணர்விலிருந்து அமைதி காணவே இயலாது. நித்திரையிலிருந்து அவன் எப்படியும் எழுந்திருக்கவே வேண்டும். ஆனால் ஆழ்நிலை தியானம் மூன்றாவது நிலையிலிருந்து மற்ற நான்கு நிலைகளுக்கும் தொடர்ச்சியாக வழி நடத்துகிறது. கடைசி நிலையாகிய இறை உணர்வு நிலைக்கு அவன் வரும்போது நூறு சதவிகிதம் தான் தெய்வீக நிலையடைந்து விட்டதாக நினைக்கச் செய்கிறது. இந்நிலையில் அவன் தன்னைக் கடவுள் என்றே நினைக்கிறான். இப்படியாக ஆழ்நிலை தியானமானது இந்து மார்க்கத்தின் ஒரு பிரிவாகிய சம்கியா, வேதாந்தம் என்ற தத்துவங்களுக்குள் வழி நடத்துகிறது.

ஆனால் மனிதன் உண்மையை உணர வேண்டும். தன் ஆன்மாவில் ஏற்படும் வேதனையை அவன் அடக்க இயலாது. அவன் தன் பழைய நிலைக்குத் திரும்பும் பொழுது மறுபடியும் அவ்வேதனைகளை உணரவே செய்வான் அன்றோ! ஆகவே ஆழ்நிலை தியானத்தை நாள் முழுவதும் அப்பியாசப் படுத்த வேண்டும். வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டும் என்று

சொல்லித் தருகிறார்கள். ஆழ்நிலை தியானம் மனிதனின் வேதனைகளை நீக்குகிறது உண்மையானால் அவன் அதை வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய அவசியம் என்ன? அவன் எப்பொழுதும் ஆழ்நிலை தியானத்திலேயே இருந்தால் மற்ற காரியங்களை செய்வது எப்படி? அவன் தன் சுயநிலைக்குத் திரும்பும் போது மறுபடியும் அப்பாப உணர்வு அவனை வேதனைப்படுத்துகிறது அல்லவா? சாதாரணமாக, பைத்தியக்காரர்கள்கூட மரணமடையும் வேளைக்குச் சற்று முன்னதாக சுய நினைவுக்கு வருவது இயற்கை. அப்படியிருக்கும்போது ஆழ்நிலைத் தியானக்காராகள். எவ்வளவு தான் தியான நிலையில் இருந்தாலும் மறுபடியும் சுய நினைவுக்குத் திரும்பும் போது அதே பாப வேதனை உணர்வு ஏற்படுமல்லவா? எனவே ஆழ்நிலை தியானம் என்பது மனுக்குலத்தின் வேதனையை போக்கக் கூடியதல்லவென்றும், அது குணமார்க்க இயலாத, புற்று நோயாளிக்கு வேதனையை மறக்கச் செய்யக் கொடுக்கப்படும் ஒரு மாத்திரையைப் போன்றது என்றும் சொல்லலாம்.

ஆழ்நிலை தியானத்தின் விளைவுகள்

ஆழ்நிலை தியானம் சிந்திக்க விடாமல் மன வலிமையைக் குறைக்கிறது. கிழக்கு நாடுகளில் அதிகமாக தியான நிலைகள் வழக்கத்தில் இருப்பதினால் தியானம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் இதன் விளைவைக் காணலாம். ஆவிக்குரிய வாழ்வில் இது சோர்வு ஏற்படுத்தும். இதனால் சத்தியத்தை அறிந்து கொள்ளக்கூடிய தன்மையை அது இழக்கச் செய்யும். ஆழ்நிலை தியான இயக்கம் செய்கின்ற பெரிய ஆபத்தான காரியம் இதுவே.

இந்த ஆபத்து எப்படி வருகிறதென்றால், மனதை தியானத்தில் வைத்து உதடுகளினால் இடைவிடாமல் ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை உச்சரிக்கச் செய்வதினால் இது முடிவில் பேய்த்தனத்திற்கடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும். மந்திரத்தை உச்சரிக்கிறவர் அதன் பொருள் என்னவென்று தெரியமாலேயே இடைவிடாமல் தன் உதடுகளினால் உச்சரிக்கிறார். அதே சமயத்தில் தன் மனதை சிந்திக்க விடாமல் கட்டுப்படுத்துகிறார். அது புத்தி

நரம்புகளை பலவீனப்படுத்த, முடிவில் பைத்திய நிலையே ஏற்படும்.

மகரிஷி சொல்லுவது என்னவெனில்:

மறு உலகத்தில் உள்ள தேவர்களிடம் அப்படி உச்சரிப்பது ஒரு விளைவை ஏற்படுத்தும் என்பதே (Ibid page 140) அவ்விளைவு என்ன என்பது அவரால் விளக்கப்படவில்லை.

கடைசி நிலையாகிய ஏழாவது நிலையில் தன்னையே கடவுளாக அவன் நினைக்கிறான். மகரிஷி தன்னுனடைய புத்தக்கத்தில், நாம் யாவரும் நூறு சதவிகிதம் தெய்வாம் சமுடையவர்களே! ஆனாலும் நாம் தெய்வாம் சமுடையவர்கள் என்று அறியாமல் இருக்கிறோம் என்று எழுதுகிறார். (Maharishi Mahesh Yogi - Meditations of Mahrishi pages 177.178)

ஆழ்நிலை தியானத்தின மூலமாகவே இந்த நிலையை அடைய இயலும் என்பது மகரிஷியின் கருத்து.

இது எதை நினைவு படுத்துகிறதென்றால், நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுக்கு ஒப்பாவேன் என்றும் தன் இருதயத்தில் மேன்மை கொண்டு நான் தேவன் என்றும் சொன்ன தள்ளப்பட்ட தூதனாகிய பிசாசானவனை ஞாபகப்படுத்துகிறது. (ஏசாயா 14:14, எசேக்கியல் 28:12) இதைக் குறித்து இப்புத்தகத்தின் 6வது அதிகாரத்தில் பிசாசு என்னும் தலைப்பில் விபரமாக எழுதப்பட்டுள்ளது.

அதிகாரம் - பதினெட்டு

உண்மையான யோகா தேவனுடன் இணைக்கப்படுவது

யோகா என்ற வார்த்தையானது இறைவனுடன் இணைதல் என்ற பொருளுடையதாயினும் ஆழ்நிலை தியானம் இறைவனை விட்டுப் பிரித்து விடுகிறது. இறைவனுடன் இணைக்கப்படுவதற்கு நான்கு நிலைகள் உண்டு. அவை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யம் எனப்படும்.

சாலோகம் என்பது சா+லோகம் ஆகும். இதில் ஆண்டவரை ஏற்றுக் கொள்கிறவன் தேவ வார்த்தையைக் கொண்டு தேவனுடைய வட்டத்திற்குள் தன்னை அனுமதிக்கிறான். புதிதாக இவ்வுலகில் பிறக்கிற ஒரு குழந்தையைப் போல விசுவாசியானவன் தேவனுடைய உலகில் பிறக்கிற அனுபவத்தை இது குறிக்கிறது. இப்பொழுது இவன் தேவனுமல்ல, பாபியும் அல்ல. தேவனுடைய ஆளுகையில் நிற்கிறான்.

இதைக் குறித்துத் திருமூலர் என்ற தமிழ் சித்தர் கூறுவது:

சாலோகமாதி சரியாதி யிற் பெருஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாருபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே

பாபத்தில் வசிப்பவன் பாப உலகை விட்டு பரனுடன் சேர்கின்றமையால் அவன் இவ்வுலகிலே பரனுடைய வேடத்தைத் தாங்கி நிற்கிறான். ஆனால் அவன் இன்னும் பரனுடன் ஐக்கியமாகிவிடவில்லை.

சாமீப்யம் என்பது தேவனுடன் அதிகமாய் நெருக்கி வாழும் அனுபவத்தைக் குறிக்கிறது. உலகத்தின் முடிவு பரியந்தம் சதா காலங்களிலும் நான் உன்னோடு இருக்கிறேன் என்று ஆண்டவர் சொன்ன அருள் வாக்கை அவருடன் நெருங்கிப் பழகும் அனுபவஸ்தர்கள் மட்டுமே உணர முடியும்.

இதைக் குறித்துத் திருமூலர் சொல்லுவது என்னவெனில்:

பாசம் பகவான தாகும் இச் சாலோகம்
பாசம் மருளான தாகும் சாமீபம்
பாசஞ் சிரமானதாகும் இச்சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே

பாசம் அருளானதாகும் இச்சாமீபம் என்பதால் இறைவனுடைய பிள்ளையாய் இறைவனுடன் சாலோக அனுபவத்தில் வந்துவிட்டபடியினால், சாமீபத்தில் இன்னும் அதிகமாய் இறைவனுடன் நெருங்கி வாழ்கிறோம். இந்நிலையில் பாசமாகிய பாபம் நம்மைப் பற்றாது. அதே நேரத்தில் இறைவனின் அருள் நமக்குக் கிடைக்கின்றது என்கிறார்.

சாரூப்ய என்பது சாரூப என்பதாகும். இந்திலையில் நாம் மாமிசத்தில் வாழ்ந்தாலும் இயேசு கிறிஸ்துவாகிய பலியில் மேல் உள்ள விசுவாசத்தினால் பாபத்திற்கு மரித்தவர்களாகவும் பாபத்திற்கு மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவிடன் இணைக்கப்பட்டு வாழ்கின்ற அனுபவத்தைப் பெறுகிறோம். பைபிள் சொல்லுவது என்னவெனில்:

நீங்களும் உங்களைப் பாபத்திற்கு மரித்தவர்களாகவும்
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்
தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும்
எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6;11)

இதைக் குறித்துத் தீருமூலர் சொல்வது என்னவெனில்:

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோக மாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல் சித்தி சாதர ராகுவர்
இங்கிவ ராக விழி வற்ற யோகமே

யோகத்தின் எட்டாவது நிலை சமாதி என்றழைக்கப்படும். அதாவது செத்த நிலை, அதே போல இறைவனுடன் சேர்ந்து வாழும்போது பாபசரீரம் ஒழிந்து (பாபத்திற்கு மரித்து) அதே சரீரத்துடன் பாபமற்ற சரீரமாக இறைவனின் உருவம் பெற்று வாழ்வார் என்கிறார். பைபிள் சொல்லுகிறபடி

“கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்.

ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே" (கலாத்தியர். 2:20) என்ற நிலையே சாரூப நிலை.

சாயூஜ்ய என்பது சாயூஜ் என்பதாகும். இந்த நான்காவது நிலையே யோக நிலை. இதில் விசுவாசியானவன் தேவனுடன் பூரண ஐக்கியம் கொள்ளுகிறான். இதைக் குறித்த ஓர் அனுபவத்தைப் பவுல் என்ற தேவ மனுஷன் சொல்லும்போது அவன் தேவனுக்குள்ளாய் மூழ்கி ஒன்றரக் கலந்து விட்ட அனுபவத்தைச் சொல்லுகிறது. 2 கொரிந்தியர் 12:2-4 வரையிலுள்ள வசனங்களினால் இதை அறியலாம்.

புருஷன் என்ற அந்த இயேசுவைச் சொந்த குருவாக ஏற்றுக் கொண்டு பின்பற்றி நடக்கும்போது இறைவன் உங்களுக்குள் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். தேவனாகிய கர்த்தர் உங்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக அபிஷேகித்து முத்திரை போடுகிறார். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அந்த நாளிலிருந்தே இக்கிரியை ஆரம்பமாகிறது. எனவே மனிதன் தன்னுடைய சொந்த சரீரத்திலுள்ள புலன்களுடன் கூட இயேசுவும் உடன் இருக்கிறதை உணருகிறான். தன்னுடன் இருக்கும் இந்த நிலையை உணரக் கூடாத அக்காலத்து முனிவர்கள் இந்நிலைக்கு அவ்யக்தா (வெளிப்படாத) என்று பெயர் வைத்தனர். இப்பொழுது கிறிஸ்து இயேசுவால் அது வெளிப்படுத்தப்பட்டு விட்டபடியினால் இந்நிலையை கிறிஸ்துவாகிய புருஷனின் சாயல் என்று அழைக்கலாம்.

இதைக் குறித்துத் திருமூலர் சொல்லுவது என்னவெனில்:

சாயுச் சியஞ்சாக் கிராதி தஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதம் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே.

கடவுளுடன் இரண்டறக் கலந்து விட்ட நிலையில், தான் மனிதன் என்ற நினைவு இருந்தாலும், தன்னை மறந்து இறைவனுடன் இருக்கிற நிலையை அனுபவிப்பதையே **சாக்கிராதீதம்** என்கிறார். இப்படிப்பட்ட நிலையில் அவன்

உபசாந்தனாகக் காணப்படுவான். உபசாந்தம் என்பது விருப்பு வெறுப்பற்ற நிலை. வாழ்ந்திருக்கவும், தாழ்ந்திருக்கவும் எல்லா நிலையிலும் மனோ ரம்மியமாகயிருக்கவும் கற்றுக்கொள்கிற நிலையை உபசாந்தம் என்ற சொல்லுவார்கள். இப்படிப்பட்ட இரண்டு நிலைகளையும் ஒருவன் அடையும் போது அது அவனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது. இதுவே சாயுச்சியம் ஆகும்.

கதோபநிஷத்தின் 1:3:10,11 ஆகிய வசனங்களிலும் 2:3:7,8 ஆகிய வசனங்களிலும் உள்ளவைகளை மீண்டும் ஒருமுறை நமது ஞாபகத்திற்குக் கொண்டு வருவது நல்லது.

பூமியில் வாழ்கின்ற மனிதாத்மா நித்ய ஜீவனை அடைவதற்காக தன்னுடைய புலன்களின் மூலமாய் அழிவில்லாத தேவனாகிய புருஷனை அறிதல் வேண்டும். புலன்களுக்கு ஓர் அளவு மட்டுமே அறியக்கூடிய தன்மைகள் இருக்கிற படியினால் தன்னிலும் அனுபவமுள்ள அல்லது உணர்வுகளைக் காண்பிக்கக் கூடிய (பார்ப்பது, கேட்பது) அவயவங்களின் உதவி தேவைப்படுகிறது. எனவே, இரட்சிப்பு அல்லது முக்தி என்ற அனுபவத்தினால் புருஷனை அறிய வேண்டும். புத்தி சித்தம் ஆகியவைகளின் மூலமாகவே பார்க்கவும் கேட்கவும் முடிகிறபடியினால் இவை அந்த அவயவங்களைக் காட்டிலும் மேலானவை. புத்தியும் பரலோகக் காரியங்களைக் கொள்ளும் அளவுக்கு மேலானது அல்ல. எனவே புத்தியானது ஞானத்தின் வழிநடத்துதலின்படி புருஷனுக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறபடியினால் ஞானம் புத்தியை விட மேலானது. ஆத்மாவானது ஞானத்திலும் மேலானதாகையால் ஞானம் ஆத்மாவாலன்றி பரம ஞானத்தை அறிய இயலாது. ஆனால் எஜமான் இல்லாமல் ஆத்மா கிரியை நடப்பிக்க இயலாது. அப்படியானால் ஆத்மாவின் எஜமான் யார்? அதுவே தேவ சாயலான மனுஷன் என்கிறோம். அவ்யக்த புருஷன் இக்காலத்தில் வெளிப்பட்டது போல இக்காரியம் அக்காலத்தில் வெளிப்படுத்தப் படவில்லை. தேவ சாயலான மனுஷனுக்கும் மேலானவர் கிறிஸ்து இயேசுவாகிய புருஷனே! இவருக்கு மேலானவர்

ஒருவருமில்லை. இவருக்குச் சமானமானவரும் ஒருவருமில்லை. இவரே மேலான வழி. இவரே உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய இலக்கு. நித்ய ஜீவனைப் பெற விரும்புகிறவர்கள் மனுஷ குமாரனும் புருஷனுமாகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இவரை ஏற்றுக் கொள்ளுகிறவனும் விசுவாசிக்கிறவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:25,26)

இரட்சிப்பின் முழு நிலைமையை அடைய இயேசுகிறிஸ்துவாகிய தேவ புருஷனை ஏற்றுக் கொள்ள வேண்டும். பைபிளும் உபநிடதங்களும் சொல்லுவது என்னவெனில் எழுந்திரு அல்லது உத்திஷ்டத ஜாக்ரத (எழுங்கள், விழியுங்கள்) என்பதே!

யாக்கோபு என்பவர் சொல்லுகிறபடி : "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமை உள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்." (யாக்கோபு 1:21) இதுவே, வேதங்களின்படி சொல்லப்பட்ட முதலாவது படியாகிய ஸ்ரவன (கேட்பது)

எபிரெயர் 2ம் அதிகாரம் முதல் வாசனம் சொல்லுகிறது: "நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும்." இது வேதங்களின்படிச் சொல்லப்பட்ட மனன (கேட்டவைகளை விட்டுவிடாதபடி நிலை நிறுத்திக் கொள்ளுதல்) எபிரெயர் 3ம் அதிகாரம் முதல் வசனம் சொல்லுகிறபடி: "பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே - இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்" இதுவே வேதங்கள் சொல்லுகின்ற மூன்றாவது நிலையாகிய நிதித்யாசன (வேத வசனங்களை இடைவிடாமல் தியானித்தலும்; இயேசுவில் நிலைத்திருத்தலும்) ஆகும்.

பைபிள் சொல்லுவது என்னவெனில் கடைசியாக சகோதரரே!

உண்மையுள்ளவைகள் எவைகளோ
ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ

நீதியுள்ளவைகள்	எவைகளோ
கற்புள்ளவைகள்	எவைகளோ
அன்புள்ளவைகள்	எவைகளோ
நற்கீர்த்தியுள்ளவைகள்	எவைகளோ
புண்ணியம்	எதுவோ
புகழ்	எதுவோ

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பார். (பிலிப்பியர். 4:8,9)

இதுவே உண்மையான யோகா. இதிலே நாம் தேவனுடைய சுபாவங்களைப் பெற்று என்றென்றும் தேவனுடன் கூட நிலைத்திருக்கவும் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் வழியுண்டு.

ஆழ்நிலை தியானம் நமது சிந்தனையை வெளியேற்றி கனவுலகில் கொண்டு போய் முடிவில் நானே கடவுள் என்று ஆணவத்தில் சொல்ல வைத்து நித்ய நரகத்தில் தள்ளும்.

உண்மை யோகாவோ நமது சிந்தையை கிறிஸ்து இயேசுவின் சிந்தையாக மாற்றி நித்ய பேரின்ப இராஜ்ஜியத்திற்குக் கொண்டு போய் சேர்க்கும்.

பதஞ்சலி முனிவரின் யோகசாஸ்திரத்தில்
ஆவிக்குரிய காரியங்கள் எதுவும் இல்லை.
அது உடற்பயிற்சிக்கு நன்கு உதவும்

எப்படிப்பட்ட யோகாவை நீங்கள் விரும்புவீர்கள்?

4. பக்தி மார்க்கம்

பக்தி என்பது விசுவாசம் அல்லது பூஜை என்று பொருள்படும். இந்து ஞானிகளில் சிலர் இவ்வார்த்தைக்கு அன்பு என்று தவறான விளக்கம் கொடுக்கிறார்கள். சில ஞானிகள் பக்தியை இரட்சிப்புக்கு நான்காவது வழி என்று சொல்லுகிறார்கள். ஆனால் இது நான்காவது வழியாக இல்லாமல் முதல் வழியில் ஒரு சிறு

பாகமாக மட்டும் இருக்கிறதைக் காணலாம்.

இரட்சகனாகிய இயேசு கிறஸ்துவாகிய புருஷன் மீது அன்பு வைத்து பக்தி செலுத்தும் போது நாம் அவரை அறிகிறோம். பின்பு அவரில் தொடர்ந்து அன்பு செலுத்தி அவருக்கு சேவையும் செய்கிறோம்.

நாம் சட்ட திட்டங்களினால் நற்கிரியை செய்யாமல் புருஷனாகிய இயேசு நமக்குக் காட்டிய அன்பை நினைத்து நம்மையறியாமலேயே அவருக்காக நற்கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறோம். மரணமில்லாப் பெருவாழ்வுக்கான வழி இதுவே!

இந்நான்கு வழிகளும் ஒரே வழியாம்

வேதங்களும் உபநிடதங்களும் இரட்சிப்புக்கான நான்கு வழிகளை சொல்லவில்லை. இரட்சிப்பின் வழியில் இவைகள் நான்கு விதமான தோற்றமளிக்கின்றன.

ஞானம் அவரை அறிந்து கொள்ள
கர்மம் விசுவாசத்தைக் காண்பிக்க
யோகம் அவரில் நிலைத்திருக்க
பக்தி அவரைப் பூஜித்து விசுவாசமாயிருக்க

இவை நான்கும் சேர்ந்து இரட்சிப்பைப் பூரணப்படுத்துகிறது.

பைபிள் சொல்லுவது என்னவெனில் :

இயேசு சொன்னது : "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3)

"நானே வழியும் சத்யமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திலே வரான்" (யோவான் 14:6)

பேதுரு அப்போஸ்தலர் சொன்னது :

இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு

நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப்போஸ்தலர் 4:12)

பவுல் அப்போஸ்தலர் சொன்னது :

தேவன் ஒருவரே! தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவே! எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே! இதற்குரிய சாட்சி எற்ற காலங்களில் விளங்கி வருகிறது. (I தீமோத்தேயு 2:5,6)

அதிகாரம் - பத்தொன்பது

பல பிறவிக் கொள்கைகள்

பாபம் மனித ஆன்மாவை எப்படிப் பற்றிப் பிடித்தது என்ற காரணம் அறியாததினால் இவ்வளவு தொல்லைகளுக்கும் காரணம் பாபமே என்று உணர்ந்த மனிதன், தன் சொந்த ஞானத்தினால் பூர்வ ஜென்மப் பாபங்களே தன்னைத் தொடர்ந்து பிடித்துக் கொள்கிறது என்று எண்ணி எல்லாம் விதிப்படி நடக்கும் என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு மற்றவர்களையும் சமாதானப்படுத்த முயன்றான்.

நான் ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறேன்? என்னைப் போன்ற மற்றவர்கள் நன்றாக இருக்கும் போது நான் மட்டும் என் இப்படித் தொல்லைப் படுகிறேன்? என்று யாராவது கேட்டால், அது உன் பூர்வ ஜென்ம வினை, தலைவிதி, ஆண்டவன் உனக்கு இப்படித்தான் எழுதி விட்டான் என்று சொல்லித் திருப்திப்படுவது எளிது.

இப்படிப் பல ஜென்மங்கள் எடுப்பதற்கு நாம் முற்பிறவியில் செய்த செயல்களே காரணம் என்று மனிதன் நினைத்தான். இச்செயலைக் கர்மவினை என்று அழைப்பர். இதுபல வகையாகப் பிரிக்கப்படும்.

I. இச் செயல்கள் மூன்று வகைப்படும்.

1. ஸத்விக் - நற் செயல்கள்
2. ராஜஸிக் - ஆணவச் செயல்கள்
3. தமஸிக் - துர்ச் செயல்கள்

இவை மூன்றையும் த்ரிகுணா என்று அழைப்பார்கள்

II. இது பிறவிச் சுழற்சிக்குக் காரணமாகக் கருதப்படுகிறது. இது **கர்ம ஸம்ஸாரா** அல்லது **கர்மச் சக்ரா** என்றும், கிடைக்கும் பலனை அறுவடை செய்வது **கர்ம போகா** என்றும் அழைக்கப்படும். இவ்வுலகமானது பலபிறவிக்குள் அகப்பட்டிருப்பதாக (**கர்ம பந்தனா**) கீதையில் (3:9) சொல்லப்பட்டுள்ளது.

III. இது **கர்ம யோகா** அல்லது **நிஷ்-கர்மா** என்றும் அழைக்கப்படும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யப்படும் கிரியைகள் என்பது இதன பொருளாகும்.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் தன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவனோ தன் ஆவியினாலே நித்ய ஜீவனை அறுப்பான் (கலாத்தியர் 6:6) என்று பைபிளில் சொல்லப்பட்டிருப்பது பூர்வ ஜென்ம வினைகளைக் குறிக்காமல் இந்தப் பிறவியில் செய்யும் செயல்களைக் குறிப்பனவாகும்.

ரிக், யஜுர் வேதங்களில் இக்கர்மாவைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையாயினும் பிற்காலங்களில் எழுதப்பட்ட சில உபநிஷத்துக்களிலும், சங்கர பாஷ்யம், கீதை, விவேகசூடாமணி போன்ற நூல்களில் இக்கர்மாவானது இறைவனால் படைக்கப்பட்டது போலவும், யாரும் இதன் பிடியிலிருந்து தப்பிக்க இயலாது என்பது போலவும் எழுதப்பட்டுள்ளன. இக்கொள்கைகளை வகுத்த ஸ்ரீ சங்கராச்சாரியாரை ஸ்ரீ இராமனுசாச்சாரியர் வன்மையாக எதிர்த்தார். பொதுவாகப் பிற்கால இந்துமத மக்கள் தங்கள் கஷ்டங்களுக்குக் காரணம் பூர்வ ஜென்ம பாபங்கள் என்றே நம்பினார்கள். இன்னும் நம்பிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இக்கர்மாவானது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்குள்ளும் மூன்று வகையில் கிரியை செய்வதாக அவர்கள் நம்புகிறார்கள் அவை :

1. சஞ்சித் கர்மா.
   பூர்வ ஜென்ம பாவங்களினால் ஏற்படும் பலன்கள்.
2. ப்ரராப்த கர்மா
   பூர்வ ஜென்ம பாப வினைகள் ஒவ்வொரு
   ஜன்மத்திலும் ஆத்மாவைப் பற்றிப் பிடித்தல்.
3. க்ரியாமன கர்மா
   இனி வரும் ஜென்மங்களில் ஏற்படும் பாபங்கள்
   தொடர்ந்து ஒவ்வொரு ஜென்மத்தையும் பற்றிப்
   பிடித்தல்.

இக்காரியங்கள் யாவும் வேதத்தில் காணப்படவில்லை. ஆனால் வேதாந்த சூத்ரங்கள் என்று பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் காணக்கிடைக்கின்றன. (வேதாந்த சூத்ரம்) 32,39,40:41-15

சரீரவான் மனோபிர் யத்கர்ம ப்ராரபதே நர: நியாயம் வா விபரீதம்வா பஞ்ச்சைதே தஸ்ய ஹேதவ : (கீதை 18:15)

முற்பிறவியில் செய்த கிரியைகளினிமித்தம் ஒருவன் முடமாகப் பிறந்தால் அவன் ரணசிகிச்சை மூலம் தன் முடத்தை மாற்றுவது ஏன்? குருடன் தன் கண்களை வேறொருவரின் கண்களைக் கொண்டு ரண சிகிச்சை மூலம் சரிசெய்வது ஏன்?

கிறிஸ்தவ மிஷனரிகளின் வருகையினால் இராசாராம் மோகன் ராய் போன்றவர்கள் சீர்திருத்தக் கருத்துக்களை மேற்கொண்டு அதற்காகப் பாடுபட்டது ஏன்? மகாத்மா காந்தி, தயானந்த் சரஸ்வதி, ஸ்வாமி விவேகானந்தர் போன்றவர்கள் கர்மாவை நம்பியிருந்தால் இந்தியாவில் இவ்வளவு சமுதாயா முன்னேற்றம் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே!

கர்மா பற்றிய கொள்கையானது ஒரு ஆத்மாவை நித்திரை கொள்ளச் செய்து விடுகிறது. விதியை நம்பி மதியைப் புறக்கணிக்கச் செய்கிறது. ஆத்ம இரட்சகரைத் தேடவிடாமல் செய்து விடுகிறது.

பல பிறப்புகள் பிறந்து, நற் காரியங்களைச் செய்து, முடிவில் ஆத்ம விடுதலை பெற்றுப் பிறவா வரம் பெறலாம் என்பது மனித நம்பிக்கையே தவிர இறைவனுடைய திட்டம் அல்ல. வேதங்களும் இதுபற்றிச் சொல்லவில்லை.

பல பிறவிக் கோட்பாடு

மனித ஆத்துமாக்கள் அவ்வவற்றின் கிரியைகளுக்குத் தக்கபடி மறுமையில் மோட்ச நரக பலன்களை அடைய வேண்டியவைகளாய் இருக்கின்றன என்பது பெரும்பாலும் எல்லாரும் ஒத்துக் கொள்ளத்தக்க தேவ வெளிப்பாடாய் இருக்கின்றது.

மறு ஜென்மம் உண்டு என்பதும் மனித புத்திக்கு எட்டாத காரியமாகையால் அதைப் பற்றிய இந்து சமய சாஸ்திரக் கோட்பாட்டை நடுநிலையில் நன்கு ஆராய்ந்து அது தெய்வீக வெளிப்பாடுதானா என்பதை ஆராய்ந்து அறிவது நமது கடமை. ஆத்துமாவின் உற்பத்தியை அறியாமல் அவைகளின் மறு ஜன்மத்தைப் பற்றி அறிய முடியாது.

I. ஆத்துமாவின் உற்பத்தியைக் குறித்து இந்து சமய சாஸ்திரக் கோட்பாடு என்னவெனில்

1. ஆத்துமா பிரம்மத்தில் ஒரு பகுதியாயிருந்து மும்மல பலத்தினால் தடையுண்டு நின்று, மலம் நீங்கிய பின் பிரம்மத்தில் நிலைத்துவிடும்.
2. பிரம்மமே எல்லா ஜீவன்களிலும் ஆத்மாவாக இருக்கின்றது.
3. ஆத்மா பிரம்பத்தினால் படைக்கப்பட்ட ஆதி நித்ய வஸ்துவாய் இருக்கிறது.

இம்மூன்று தத்துவங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருப்பதைக் கவனிக்க.

ஆத்மாவின் உற்பத்தியைக் குறித்து இந்து மத நம்பிக்கை என்னவெனில்:

I ஆத்துமா அனாதி நித்ய வஸ்து என்பது-

பதி பசு பாசமெனப் பகரிம் மூன்றிற்
பதியினைப் போற் பசு பாசமனாதி. (நந்தி விளக்கம்)

(கொற்றங் குடியார் குறள், சிவதன்மோத்தரம் பரம் தருமாதியில் 16 முதலியவைகளிலும் காண்க)

ஆத்மா அனாதி நித்ய வஸ்துவென்றால் இருவினையினால், பாவ (மல) சம்பந்தம் உடையது ஆவானேன்? இவ்வாத்துமாவை எப்பொழுது பாவ மலம் பற்றியது? அனாதிக்கும் முன்பு ஒரு காலம் இருந்ததா? அப்படி ஒரு காலம் உண்டு என்றால் அதை எப்படி அனாதி என்று சொல்லமுடியும்? ஆத்துமா அனாதி நித்ய சுயம்பு என்றால் அது

சர்வ பூரண நிர்விகற்ப வஸ்துவாக இருக்க வேண்டும். இத்தன்மை அதற்கு இல்லை என்பதினால் ஆத்துமா அனாதி நித்திய வஸ்து இல்லை என்று ஆகிறதல்லவா? எனவே ஆத்மா அனாதி நித்ய வஸ்து என்பது பொருந்தாது.

2. ஆத்மா பிரம்மத்தில் ஒரு பகுதி என்பது-

கங்கையே முதல வாய பற்பல நதியுங் காலால்
பொங்கு தெண்டிரைய வாரி புகுதியென்றாகுமாபோல்
தங்கிய ஞான பாதம் சார்ந்திடில் ஆன்மா யாவும்
சிங்கலில் பிரமந்தன்னில் பிரிதின்றி யொன்றாய்ச் சேரும்.
(கூர்ம புராணம்.)

(பிரம்ம சூத்திரம் 2,3,43, உத்திரபோதம் 32 உடல் பொய்யுறவு 16 முதலியவைகளிலும் காண்க)

ஆத்துமா பிரம்மத்தின் பகுதியென்றால் அவ் ஆத்துமாவும் பிரம்மம் தானே? அப்பிரம்மத்தை எவ்வாறு மலம் (பாவம்) பற்றி பிறப்பின் வட்டத்திற்குள் அகப்படுத்தக் கூடும்? பிரம்மத்தைப் பகுதி பகுதியாகப் பிரிக்கக் கூடுமா? பிரம்மத்தின் பகுதி, ஜன்மங்களாகின்றன என்று வைத்துக் கொண்டாலும் அச்சென்மங்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளும்போது பிரம்மம் தன்னைத் தானே பகைத்துக் கொள்கிறார் என்றாகுமல்லவா? மனிதர் பாவம் செய்யும் போது பிரம்மமும் பாவம் செய்கிறார் என்றாகுமல்லவா? ஜென்மங்கள் நரகத்திற்குப் போகும் போது பிரம்மமும் போகுமல்லவா? அப்படிப்பட்ட பிரம்மம் எப்படி தெய்வாம்சமாக இருக்க முடியும்? எனவே ஆத்துமா பிரம்மத்தின் பகுதி என்பதும் பொருந்தாது.

3. பிரம்மமே ஆத்துமாவென்பது-

இருஷிசேச : விடி நானே பாதிகதத் பேதாது ஆகாச: யதாத்தா பின்னவது தந்நாசே சதி கேவல (பவதி) (ஆத்துமா போதம்-10)

இதன் அர்த்தமாவது : அனாதி இந்திரியங்கள் அனைத்திற்கும் அதிபதியாய் சர்வ வியாபகனாகிய பரமாத்மாவானவன், நானாவிதமான ஸ்தூல சூட்சுமகாரண தேகமாகிய உபாதிகளிலே பிரதிபலித்தவனாகிய அந்த உபாதி பேதத்தினாலே, கடாதி

உபாதிகளினாலே வேறுபட்ட ஆகாயமானது எப்படியிருக்கின்றதோ, அப்படியே வேறுபட்டவனாகப் பிரகாசிக்கின்றான். அந்த உபாதிகளுக்கு நாசம் வந்தபோது ஏக வஸ்துவாகின்றான்.

நித்தியமாகுமான்மா வேகமாய் நிகழ்த்துமாயா
சத்தியில் அளப்பில் பேதமாமுயிர் பேதம் சாற்றில்
வைத்த நீர்க்கடங்க டோறு தோன்றிடும் மதியம்போல
உய்த்திடுமுபாதி தன்னாற் பற்பல வுருவந்தோன்றும்
(கூர்ம புராணம்)

கடநீரின் மேக நீரிற் கண்டவானிரண்டும் பொய்யே
பெரியவானுங் கூடியொன்றா மெய்ப்போதும்
இடமான பிரமங்சாஷியிரண்டு மெப்போதும்
திடமாகச் சுவானுபூபதி சிவோக மென்றிருந்திடாயே
(கைவல்ய நவநீதம்)

இக்கோட்பாடுகளும் தவறு என்பதற்குத் திருஷ்டாந்தம்: பிரம்மமே ஆத்துமாவாகச் சகல ஜீவன்களிலும் நிற்கிறது என்றால் சகல பிராணிகளும் பிரம்மத்தைப் போல சர்வ வல்லலை, சர்வ ஞானம், சர்வ வியாபகம் போன்ற எல்லாத தேவ லட்சணங்களும் உடையவைகளாக இருக்க வேண்டுமல்லாவா? அப்படி இல்லை என்பது வெளிப்படையாகக் காணப்படுவதால் பிரம்மமே ஆத்துமா என்பது ஒவ்வாது. பிரம்மமே ஆத்துமாவானால் இரண்டும் ஒன்று தானே? அப்படியிருக்க பிரம்மத்தைப் பிரம்மம் தேட வேண்டிய அவசியமென்ன? ஆத்துமா வேறு, தெய்வம் வேறு என்றே சிவாகமங்களும் கூறுகின்றன. சிவஞான சித்தியர் சுபக்கம் 253ம் பாடல்களிலும் காண்க. (பின் பகுதியில் விளக்கம் உண்டு)

4. ஆத்துமா அந்நிய வஸ்துவென்பது
திருவடி விளக்கம் 10-12

வன்னியு நீருங்கூடி மதித்திட உதித்த நீராய்க்
கன்னியர் நீரிற் றோய்ந்து கணத்திலே பாரிற்புக்கு
வன்னியமான வானில் வந்துற்றபோது தன்னில்
உன்னுடறோன்றிற் றன்றே உயிருடன் தோன்றிற்றன்

வானோடு கலந்துய்ய வன்னிய நீரும் மண்ணும்
தானுடன் கூடியொன்ற தாகியே நின்றபோது
ஊனுடன் பாரும் நீரும் உயிருடன் வாயு வானம்
தீ நடந்தேயிரண்டு செய்தியாய் வழுங்குமென்றார்.

காணலாய்க் கண்ட மன்னீர் கண்டித்த துடலின் கூறு
காணொனாதாகி நின்ற காற்றுவான் ஜீவன் கூறு
காணொனாதாகி நின்ற காரணவன்னி ஜீவன்
தானுவாய்மெய்க்கு மெய்யாய்த்தாண்டுவிசைந்ததென்றர்.

திருவருட் குடை

உடலினைப் படைத்தானெருவன் மற்றவனே
உயிரையும் படைத்தான் உலகையும் படைத்தான்

இக்கோட்பாடு ஒன்றே நமது அறிவிற்கும் நியாயத்திற்கும் ஒத்திருக்கின்றது.

முன்னைய மூன்று கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கின்றமையால் மெய்யென்று ஒப்பு கொள்ள முடியாதவைகள். நான்காவது கோட்பாடு அறிவிற்கும் நீதிக்கும் ஒத்திருக்கின்றது. எனவே ஆத்துமா என்பது அனாதி சுயம்பு அல்லவென்றும் அது இறைவனால் உண்டாக்கப்பட்டது என்றும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறபடி:

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம். 1:27,28) தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ

சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 2:7). இதினால் ஆத்துமா என்பது தேவனால் சிருஷ்டித்துக் கொடுக்கப்பட்ட ஒரு அரிய பொக்கிஷம் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

11. ஆத்துமாவின் மறு ஜென்மத்தைப் பற்றிய இந்து சமய சாஸ்திரக் கோட்பாட்டைக் கவனிப்போமாக:

ஆத்துமாவுக்குப் பல பிறப்புகள் உண்டென்ற கொள்ளை இந்து சமயத்தில் இடைச் சொருகலாக ஏற்படுத்தப்பட்ட தேயன்றி ஆதிமுதல் உள்ளதென்பதற்கு எவ்வித சாட்சியமும் இல்லை. அப்படியிருக்குமானால் ஆதி நூல் என்று அழைக்கப்படுகின்ற சதுர் வேதத்தில் இதைக் குறித்து ஒரு வசனமாவது குறிப்பாவது இருந்திருக்கும் அல்லவா? அப்படி ஒன்றும் காணப்படவில்லையே ஏன்? இவ்வேதத்தின் முதற்பாகத்தில் ஒரே மெய்க் கடவுள் உண்டென்றாவது, கோவில், விக்கிரகம், பிராமணர், மறுபிறப்பு என்றக் காரியங்களைக் குறித்து ஒரு வசனமாவது இல்லை. இவைகள் பிற்காலத்தில் நூதனக் கொள்கைகளாகப் புகுத்தப்பட்டதேயாகும்.

ரிக்வேத காலத்திற்குப் பின் சமய வாதம் செய்து தேர்ச்சி பெற்ற தர்க்க சாஸ்திரிகளால் உபநிஷதங்கள் எழுதப்பட்டன. புராண காவியங்கள் புத்த மதத்தினர் இந்தியாவில் இருந்து துரத்தப்பட்ட காலங்களில் எழுதப்பட்டன. வேதாகம புராண காவியங்கள் கடவுள் சொன்னார் என்று சொல்லப்படுகிறதேயெனில் இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்று சொல்லப்படுகிற நான்கு வேதங்களே இன்னார் சொன்னாரென்பது நிச்சயிக்க இடமில்லாமலிருக்கின்றதே! தேற்படி வேதங்கள் பிரம்மாவின் வாயினின்று பிறந்தனவென்றும், லிங்கத்தில் ஓம் என்னும் எழுத்துத் தோன்றி அதினின்று பிறந்தனவென்றும் விஷ்ணு அன்னரூபமாயிருந்து எழுதினாரென்றும் சிவனே செய்தார் என்றும், வியாசர் எழுதினார் என்றும் மாறுபடக் கூறியிருப்பதுமின்றி சதுர் வேதத்தின் அட்டவணையில் வசிஷ்டர் விசுவாமித்திரர் முதலிய ரிஷிகள் வேத சங்கீதங்களை எழுதினார்கள் என்றும், அவைகள் சூரியனால் வெளிப்படுத்தப்பட்டன என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும்

ரிக்வேதம் யகூதர்கள் என்ற ஆரிய தேசத்தார் இந்து தேசத்தை ஜெயங்கொண்ட பிற்பாடு உண்டானதென்றும் இவ்வேதங்களை வேதவியாசர் கோவைப்படுத்தி தமது கோட்பாடாகிய இதிகாசங்களையும் சில மாணாக்கர்களுக்கு உபதேசித்ததினாலே அம்மாணாக்கர்கள் புராணங்களை எழுதினார்கள் என்றும் குறித்திருக்கிறது.

கந்த புராணத்தில், "வாதராயன முனி வகுப்பவோதந்துணர் சூதரோதியது மூவாறு தொல் கதை" என்று காணப்படுகிறது. ஆயினும் அந்நூல்கள் ஒன்றுக்கொன்று தப்பும் மாறுபாடுள்ளதாயும் இருக்கிறபடியால் அவைகள் தோன்றின விதத்தை எடுத்துக்காட்ட யாராலும் முடியாது. எனவே இவைகள் தெய்வத்தால் அருளப்பட்டவைகள் அல்ல என்று காண்கின்றோம். யூகோள சாஸ்திரங்களைப் பார்த்தாலும் இது தவறு என்பதைக் கல்வியறிவு செறிந்திருக்கும் இந்நாட்களில் சுலபமாக அறிந்து கொள்ளலாம். இவ்வுலகில் நாம் இன்று காண்கின்றபடி கடல்களில் வேறுபாடில்லாமல் உப்புக் கடல் மட்டுமே காணப்படுகின்றது. புவன கோசத்தைப் பற்றி பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன் கடல், நல்ல தண்ணீர்க்கடல் என்கிற ஏழு தீ கடல்களும் சப்த தீவுகள் என்றும், சூரிய சந்திர நட்சத்திரங்கள் மத்தியில் இருக்கிற இப்பூமியைச் சுற்றிப் போகின்றன என்றும் சொல்லுகிற புராணக் கதையை இக்காலத்தில் யாராகிலும் நம்புவார்களா?

வான ஜோதிகளைப் பார்க்குமிடத்து பிரம புராணத்தில் புமிக்கு 89 லட்சம் யோசனை தூரத்திற்கு அப்பால் சூரியன் இருக்கிறதென்றும் அதற்கு மேலே 89 லட்சம் யோசனை தூரத்திற்க அப்பால் சந்திரன் இருக்கிறதென்றும் சொல்லுகிறது. இந்த புராணத்தில் பூமிக்க மேலே லட்சம் யோசனை தூரத்தில் சூரிய உலகம் இருக்கிறதென்றும், அதற்குமேல் லட்சம் யோசனை தூரத்தில் சந்திரனுலகம் இருக்கிறதென்றும் சொல்லுகிறது. இவை ஒன்றுக்கொன்று முரணாயிருப்பதைக் காணும் போது இவை வெறும் புரட்டு என்று ஆதிறதல்லவா?

சூரியனைச் சந்திரன் மறைக்கிறதினாலேயே சூரிய கிரகணம் உண்டாகிறதென்றும் சந்திரனைப் பூமியின் நிழல் மறைக்கிறதினாலேயே சந்திர கிரகணம் உண்டாகிறதென்றும் விஞ்ஞான உலகத்தில் இருக்கிற நாம் கணிக்கும் போது, இராகு கேதுகளாகிய கரும்பாம்பு, செம்பாம்பு, சந்திரனைத் தீண்டுகிறது என்பது எவ்வளவு ஆதாரமற்ற கட்டுக் கதையாக இருக்கின்றது. இவைகளைக் கடவுள் சொன்னார் என்று சொல்லிப் புராணங்களை எழுதி வைத்து அவைகளில் மறு பிறப்பும் உண்டு என்று ஆரியர்கள் தங்கள் மனம் போல போக்கில் எழுதி வைத்தது எப்படி நம்பத் தகுந்தாகும்? ஆகையால் பல ஜென்மங்கள் உண்டென்பதும் ஒரு கட்டுக் கதையேயாகும்.

ஒரு ஆத்துமா மறுஜென்மம் எடுக்கிறது உண்மையே என்றால் அவ்வாத்துமாவின் சரீரம் செத்த பின்பு அதற்கு அந்தியேஷ்டி முதலிய பிதிர் கருமங்களை (ஆன்மீக சாந்திக்காக கருமாதி செய்தல்) நடத்துவானேன்? கொலை செய்யப்பட்டு மரித்த காத்தவராயன், மதுரை வீரன் முதலியோரைத் தெய்வமாகவும் வாலிபத்தில் செத்தவர்களைக் கன்னி, சேலைக்காரி என்ற தெய்வங்களாகவும் வைத்து வணங்குகிறவர்களும் மறுஜென்மம் இல்லையென்று உறுதிப்படுத்துகிறார்கள் அல்லவா? தேகம் மரித்தவுடனே ஆத்மாவுக்கு மறுஜென்மம் இல்லையென்று உறுதிப்படுத்துகிறார்கள் அல்லவா? தேகம் மரித்தவுடனே ஆத்மா மறுஜென்மம் எடுக்கிறதினால் பாசவினை நாசமாகிறதென்றால் ஆத்துமாக்களின் புண்ணிய பாபங்களுக்குத் தக்கதாக சொர்க்கம் நரகம் என்பவைகளை எதற்காக ஏற்படுத்திருக்க வேண்டும்? சொர்க்கம், நரகம் உண்டு என்று ஏற்றுக் கொள்வதால் ஆத்மா சரீரத்தை விட்டுக் கடந்தவுடனேயே இவ்விரண்டு இடங்களில் ஒன்றில் நிச்சயமாகத் தங்கத்தானே வேண்டும்! இப்படியிருக்க மறுஜென்மம் உண்டென்பது அபத்தமல்லவா? அப்படியே ஒரு ஆத்மா ஏழு பிறவியெடுத்து முடிவில் சொர்க்கம் அடைகிறது என்று வைத்துக் கொண்டாலும் நரகம் எதற்கு? ஆத்துமா புண்ணிய பாப பலாபலன்களை அனுபவிக்கிறதற்காக சூட்சும தேக மெடுத்துக்

கொள்ளுகிறதென்றல் அத்தேகம் என்ன பாப, புண்ணியம் செய்தது? நிரபராதியான அத்தேகத்தையும் சுக துக்கங்களுக்கு உட்படுத்துவது அநீதியாகுமே!

ஆத்மாவைப் பற்றிய பாச வினையை நாசமாக்குகிறதற்கு மறுஜென்மம் வேண்டியதெனில் அப்பாபவினை ஆத்மாவை ஆதியில் எப்படிப் பற்றியது? அநாதி நித்ய வஸ்து என்பதினால் அநாதிக்கு முன்பும் ஆத்ம சம்பந்தமான ஊழ்வினையுண்டா? ஆத்மா எந்தக் காரணமுமின்றி பாசவினை நீங்காமல்தான் இருக்க முடியும். நெல்லைக் குத்தி அரிசியாக்கினால் உமி அதைப்பற்றாது. நெல்லைக் குத்தும்போது தோலின் தன்மை நீங்குகிறது. புதிய அரிசியின் தோற்றம் காணப்படுகிறது. அது போல இந்த சரீரம் குத்தி எடுக்கப்பட்டுவிட்டால் ஆத்மா மீண்டும் சரீரத்தைக் கொள்ளக் கூடாதபடி புதிய நிலையடைகிறதே தவிர மறுபடியும் (உமியை) சரீரத்தையுடையதாகாது.

பாசவினை அநாதி காலமுதல் ஆத்ம சம்பந்தமாகவே இருக்கிறதென்னில் மேற்கூறியபடி ஆத்மா பாபவினைச் சம்பந்தமாக இருப்பது அதின் சுபாவமென்று சொல்லவேண்டும். சுபாவமான பாசவினை சிதைக்கப்படுமானால் அதை எப்படி நித்ய வஸ்து என்று கூறமுடியும்? ஆத்துமா யானை முதல் எறும்பு கடையாக எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிலும் அதனதன் உருவங்களை எடுத்துப் பிறந்து உழல்வதற்குக் காரணம் பூர்வ ஜென்ம வினைதான் என்றால் முதல் ஜனனத்திற்குக் காரணம் யாது? ஒரு சரீரம் அழியும் போது ஆத்மா வேறு சரீரம் எடுக்கிறதெனில் புதிய சரீரம் எடுப்பதற்கு சரீரமழிந்த ஆத்மாக்களே யல்லாமல் வேறு ஆத்துமாக்கள் இருக்கமாட்டாதே. ஆத்மாக்கள் நித்ய வஸ்து என்று சொல்லப்படும் பொழுது சிருஷ்டி ஆரம்பம்முதல் ஒரு குறிப்பிட்ட வரையறையான தொகையுள்ளதாக அல்லவா இருக்க வேண்டும்? ஆனால் இன்று நாம் காண்கிற படி காலத்துக்குக் காலம் சகல ஜீவராசிகளும், மனுவர்க்கங்களும் பலுகிப் பெருகி வருகிறார்களே! இப்படி அதிகமாக ஜெனனம் எடுத்த தேகங்களுக்கு ஆத்துமாக்கள் எப்படிக் கிடைத்தன? ஆகையால் ஆத்மா அநாதி நித்ய வஸ்துவல்ல என்றாகிறது.

ஆத்மா மறுஜென்மம் எடுப்பதினால் மனித பாபங்கள் அழிக்கப்பட்டு முக்தியடைகின்றன என்பதால் இன்று மனுக்குலம் முற்றிலுமாக முக்தியடைந்திருக்க வேண்டுமே. அதற்கு பதிலாக இது விருத்தியாவது ஏன்? பிராரத்துவம் (பிராப்தம்) சஞ்சிதம் ஆகாமியம் என மூவினைத் தொடர்புகளினாலேயே ஆத்துமா அநேக ஜென்மங்கள் உடையதாகப் பல பிராணிகளின் சரீரமாகத் தோன்றுகிறதென்றால் அவ்வாத்துமாக்களுடைய ஜீவ பிராணிகள் சாகும் போது அதற்குக் கருமாதி செய்ய வேண்டாமோ? மனிதனுக்கு மட்டும் ஏன் செய்கிறார்கள்? மிருக ஜிவராசிகளுக்கு ஆத்மா உண்டோ? பூர்வ ஜென்ம வினைத் தொடர்பால் விலங்கு முதலிய ஜீவ பிராணிகளாக மனிதர் பிறக்கின்றனர் என்றால் அது எப்படிப் பொருந்தும்? மனிதர் ஜீவாத்துமத்தேகிகள், மற்றவைகளாக ஜீவ தேகிகள், ஆத்தும தேகிகளில் சரீரம் மாத்திரமே அழிந்து போகும்.

ஆத்மா விசேஷித்த வஸ்துவாக இருப்பதினால் அதின் தொழில் விருத்திக்கும் வசன கமன முதலியவைகளுக்கும் உற்றபடி மானிட சரீரம் அதற்குக் கிடைத்தது. விலங்கு முதலிய பிராணிகளுக்கும் அதனதன் முயற்சிக்குரிய தேகங்கள் கிடைத்தன, பறவைகளின் செயல்களை மீன்கள் செய்ய முடியாது. மீன்களைப் போல மிருகங்கள் செய்ய முடியாது. அதுபோலவே மனித சரீரங்கள் மற்ற மிருக பறவைகளின் செய்கைகளையோ மச்சங்களின் செய்கைகளையோ செய்ய முடியாது. அப்படியிருக்க மனித ஆத்மா மற்ற ஜென்மங்கள் எடுக்கிறதென்பது எப்படிப் பொருந்தும்?

மனித ஆத்துமாவுக்கு பகுத்தறிவும் பாப உணர்வுகளும் உண்டு. மனிதன் மறுஜனனத்தில் புல், மரம், விலங்கு, பறவை முதலியவைகளாய் பிறக்கிறான் என்றால் அவைகள் இன்று எவ்வித பாப உணர்ச்சியும் இல்லாதவைகளாய் இருக்கின்றனவே. தவிர அவைகளில் எவ்வித ஆத்தும தத்துவங்களும் காணப்படவில்லையே!

எறும்பு கடை, யானை தலை எண்பத்து நான்கு நாலாயிரம்

யோனி பேதங்களாக ஜெத்துக்களாக மனிதாத்துமாவே ஜனனம் எடுக்கின்றனவென்றால் தாவரங்கள் முதலிய யாவும் ஆத்துமாவுடையவைகள் தாம் அன்றோ! அப்படியாயின் ஆத்துமாக்களை உடைய தானியங்கள் காய்கறிகள் கீரைகள் மிருகங்கள் பறவைகள் யாவையும் அறுத்துப் புசிக்கிறோமல்லவா? வீடுகட்ட மரங்களை வெட்டிப் பயன்படுத்துவது கூட ஆத்மக் கொலையாகும் அல்லவா? அப்படியிருக்க மனிதக் கொலை மாத்திரம் தான் கொலை என்றும் மற்றதெல்லாம் கொலையல்ல என்றும் தர்ம சாஸ்திரம் சொல்வது எப்படி? மற்றவைகளும் கொலை கொலை தன் என்று ஒத்துக் கொண்டால் இக்கொலைகள் செய்து மறுஜென்மம் எடுக்கும் காரியம் புகுத்தப்பட்டதே அன்றி தெய்வ வெளிப்பாடு அல்லவென்று காண்கிறோம்.

ஆத்துமா செய்த பாபங்களுக்காக கடவுள் அதன் தத்துவங்களைக் குறைத்து அதற்கு மிருக தேகத்தைக் கொடுக்கிறார் என்றால் இன்ன பாபத்திற்காக இன்ன தேகமெடுக்கும்படி செய்திருக்கிறாரென்று அறியாத மிருகம் எப்படி அந்தப் பாபத்தை நிவர்த்திக்கக் கூடும். இன்ன பாபத்திற்காக இன்ன தண்டனை செய்கிறோம் என்று உயர்த்தாமல் தண்டிப்பது தேவ நீதியாகுமா? ஆத்துமா தான் இந்த முன் ஜனன தேகத்தை நீக்கி நூதன சடலம் எடுப்பதே மறு ஜென்மமாகையால் உடல் பேதமே தவிர ஆத்தும பேதம். அறிவு முதலிய குணாதிசயங்கள் மாறாது. அப்படி மாறினால் வேறு பொருளாகிவிடும். ஞாபக சக்தி ஆத்தும தத்துவங்களுக்குள் ஒன்றியிருக்கிறது. கனவிலும் நனவிலும் நடந்தவைகளை நினைவு கூறத்தக்க சக்தி வேறு தேகத்தில் புகுந்தால் இஞ்ஞாபகம் இல்லாமல் போகாது. பூர்வ காலத்தில் மறு ஜென்மத்திலே மானாகப் பிறந்து 5-8-18ல் ஓர் அரசன் மறு ஜென்மத்திலே மானாகப் பிறந்தது பூர்வ ஜனன ஞாபகம் பெற்றிருந்தான் என்று சொல்லியிருக்கிறது. இது உண்மை யென்றால் இன்று யாவருக்குமே இப்படிப்பட்ட ஞாபகம் இருக்க வேண்டுமே. இக்கதைகளை முன் பின்னாக ஆராய்ந்தால் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் நம்புவதற்குத் தகுதி அற்றவைகளாகவும் இருக்கும். முற்காலத்தில் இருந்தார்கள்

என்றால் இக்காலத்தில் இல்லாமற் போனது ஏன்? பூர்வ ஜென்மம் என்பது இல்லாததினால் அல்லவா? இதை நம்பச் செய்வதற்காக தென் நாட்டில் உள்ளவர்கள் வடநாட்டில் பூர்வ ஜென்ம வாசனையுடைய அதிசயப் பெண் என்பதும் வடக்கே உள்ளவர்கள் தெற்கே என்பதும் வெளி நாடுகளில் அப்படிப்பட்டவர்கள் உண்டு என்றும் வெளியிடுகிறார்கள். பூர்வ ஜென்மம் ஒன்று உண்டு என்றால் எல்லோருக்குமே அது தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரிந்திருந்தால் பாப வினைகளைப்போக்கிக் கொள்ள முடியும்! ஒரு சிலருக்கு என்றால் மற்றவர்கள் கதி என்ன? எனவே பூர்வ ஜென்மம் என்பது நம்பத்தகுந்தது இல்லை. அது கற்பனையே!

விதி:-?

சகலரும் விதியினால் நடத்தப்படுகிறார்கள் என்ற கொள்கை இந்து சமத்தில் ஒரு விசேஷித்த கொள்கையாய் இருப்பதினால் மறு ஜென்மம் உண்டு என்பது ஒவ்வாது, மறு ஜென்மமும் விதியில் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கிறது. ஒருவன் விதியினால் ஏவப்பட்டுப் பாபம் செய்கிறான் என்றால் அவன் சுயமாய்ச் செய்யாமல் பாபங்களை விதிவலியாற் செய்வதினால் அப்பாபங்களுக்கு அவன் காரணமல்லவே! இதற்காக அவன் தண்டனை அடைவது நியாயமல்லவே! ஆகையால் அவனவன் கிரியைகளுக்குத் தக்கதாக மறு ஜென்மம் எடுக்க வேண்டியது இல்லை.

கடவுளால் விதிக்கப்படுவது விதியென்றால் அது தவறின்றி நடக்க வேண்டும். ஒருவராலும் அதற்கு எதிர்த்து நிற்க முடியாது. **வரும் விதி இராத்தூங்காது** என்பது பழமொழி (வில்லி பாரதம் 13ம் போர்) அப்படி விதியால் எல்லாம் நடக்கும் என்றால் சைவைக் கிரியாதிகளும் பிரம்மச்சரியமும் முப்பத்திரண்டு அறங்களும், புராண வைராக்கியங்களும் பல வகைப் புண்ணியங்களும் வேண்டுவதில்லையே! மனிதர் தங்கள் சுயாதீனத்திலேயே தங்கள் கிரியைகளுக்குத் தக்க உத்தரவாதம் செய்ய வேண்டியிருக்க இப்படி மனிதரைக் கெடுக்கத்தக்க வீணான கோட்பாடுகளை எப்படி ஒத்துக் கொள்ளலாம்?

ஆத்துமா இவ்வுலகத்தில் ஜனனமெடுப்பது பாச வினைகளை நீக்கி சுத்தம் அடைவதற்கென்றால் பூலோக ஜனனத்தினால் சுத்தமாவது எப்படி? ஒருவன் அசுத்தம் நிறைந்த மலத்திலும் சேற்றிலும் விழுந்து புரண்டால் அவனது தேகத்தில் மேலும் மேலும் அசுத்தமே நிறைவது போல சகல பாபங்களும் கேடுகளும் நிறைந்த பூவுலகில் மறுபடியும் ஜனனம் செய்தால் இன்னும் அதிகக் கேடு அடைவான் அல்லவா? ஆகவே பிறவி வினைகளாகிய ஜென்ம வினையும் கரும வினையும் தீருவதற்கு மனிதர் பல ஜென்மங்கள் எடுத்தாக வேண்டும் என்பது பொருந்தாது.

இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு - வள்ளுவர்

(இருளாகிய பாவம் சேர்கின்ற இரண்டு வினைகளாகிய ஜென்ம வினை கர்ம வினை நம்மில் சேராமல் இருக்க வேண்டுமானால் இறைவிடத்தில் இருந்து வருகின்ற செய்தியை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.)

மறு ஜென்மமே இல்லையென்று இந்துக்களில் உயர்ந்த ஞானிகளுள் அநேகர் மறுத்திருக்கிறார்கள்.

கறந்த பால் முலைபுகா கடைந்த வெண்ணெய்மோர் புகா
உடைந்த சங்கினோசையுமுயிர்களு ழுட் புகா
வடிந்த வேரடியினின்று திர்ந்த பூ மரம் புகா
இறந்து போன மானிடரினிப் பிறப்பதில்லையே
(சிவ வாக்கியர்)

இந்துடன் ஞான வெட்டியான் 486, 487, 491-ம் பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்க்க.

இவ்விதமாக மறுஜென்மம் உண்டு என்று சொல்லும் இந்து மார்க்கக் கொள்கை முழுவதும் தவறு என்பதை அறிந்து கொண்டோம்.

ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்தில் மறுபிறப்பென்பது இரண்டு வகையாக வழங்கப்படுகிறது. ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது ஒன்று. பின்பு நியாயத்தீர்ப்பு நாளில் மரித்த யாவரும் உயிரோடு எழுவது இரண்டாவது.

1. பாபத்தில் வாழ்கின்ற மனிதன் தன் பாபத்துக்கேற்ற தண்டனையடைந்து ஆத்மீக அழிவு பெறுவதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவைத் தன் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு அவரே தன்னில் வாழத் தக்கதாக பாப மாம்ச வாழ்வுக்கு மரணமடைந்து தன் சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்கு அடையாளமாக அதைத் தண்ணீருக்குள் புதைத்து ஞான முழுக்குப் பெற்றுப் பின் தண்ணீருக்குள் இருந்து வெளிவரும் போது, இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து வெளியேறியது போல ஆவிக்குரிய புது ஜீவியம் செய்யத் தன்னை, சாந்தம், தயவு, நற்குணம், பொறுமை, இச்சையடக்கம், அன்பு, தாழ்மை முதலிய பண்புகளால் ஆவி ஆத்மா, சரீரம் (மனம், வாக்கு, காயம்) ஆகியவைகளில் புதுப்பிக்கப்பட்டவனாய் வாழ்தல். இது தான் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல்.

2. உலகை நியாயந்தீர்க்கும் பொருட்டு இயேசு பெருமான் (கல்கி அவதாரமாக) வெள்ளை (குதிரை) சிங்காசனத்தின்மேல் மறுபடியும் வரும் போது எல்லா மானிடரும் தங்கள் தங்கள் சரீர கிரியைகளுக்குத் தக்க பலனையடையும் படிக்கு அவருக்கு முன்பு சரீர உயிர்த்தெழுதலுடன் நிற்க வேண்டும். இந்த உயிர்தெழுதல் மறு ஜனனம் என்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டு பிறப்புக்களும் புத்திக்கு ஒத்த சத்தியமாகவும் தேவ வெளிப்படுத்தலுமாகவும் இருக்கிறது.

இவ்வுலகிலேயே பாபத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து மறுவாழ்வு பெறுகிறவன் இறைவனைப் போல வாழ்ந்தாலும் இறைவன் அல்லாதல் போல அவன் துவைதனாகிறான். சரீர மரணத்திற்குப் பின்பு உயிர்த்தெழுதலின் பங்கு பெற்று இறைவனுடன் இணைந்த பின்பு அத்துவைதனாகிறான்.

மற்றபடி

எழுந்த உடல் விழுந்து ஆவிபோன பின்பு
மறுஜனனம் புகுந்து உடல் எடுத்துப் பாரில்
வரும் என்று வேதத்தால் வகுத்துச் சொல்லி
அமட்டி வெகு பொருள் பறிப்பார் ஆண்டைமார்

சத்தியமாய்ச் சொல்லுகிறேன் ஆண்டேகேளீர்
சாஸ்திரத்தை மெய்யென்று நம்பவேண்டாம்
செத்த பின்பு உயிரோடு இங்கு நின்றதெங்கே
சிறு பிள்ளையாய்ப் புவியில் தவழ்ந்ததெங்கே
இத்தை இனி அறியாமல் உலகத்தாசர்
இறப்பென்றும் பிறப்பென்றும் இயம்புவானேன்

என்று பாடியிருக்கிறபடியால் மறுஜென்ம பிறப்பு இல்லை என்று அறிந்து கொள்ளலாம். எனவே மனிதப் பிறவிக்குப் பின் ஒரு பிறவி உண்டு என்பதை நினைத்து வீணாக எமாந்து போக வேண்டாம். மனிதன் ஒரே முறை மரணமடைவதும் பின் தன் கிரியைகளுக்கேற்ற நியாயத்தீர்ப்பு அடைவதும் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் பைபிள் சொல்லுகிறது. எனவே ஆண்டவர் ஒவ்வொரு மனிதனும் தன் ஆன்மீக வாழ்வில் முக்தி நிலையை அடைய வேண்டும் என்று விரும்பி மனித ஆத்துமாவுக்காக சில திட்டங்களை உலகில் ஏற்படுத்தினார் என்று பைபிள் சொல்லுகிறது.

ஒரு சீடன் தன் குருவினிடம், குருவே, போன ஜென்மத்தில் என்னவாயிருந்து, என்ன பாபங்களை நான் செய்தேன்? அடுத்த ஜென்மத்தில் என்னவாய் நான் பிறப்பேன்? இது தெரிந்தால் அல்லவோ நான் என் பாபங்களுக்குத் தக்க பரிகாரம் செய்து பிறவாவரம் பெறலாம் - எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு அந்தக் குரு தம்முடைய சீடனுக்கு ஒரு கதை சொன்னார். அது என்னவெனில்: ஒரு சிறு பையன் ஒரு விட்டில் பூச்சியைப் பிடித்து அதன் கால்களை ஒடித்து, அதன் இறக்கைகளைப் பிய்த்து அதைத் தன் சட்டையில் விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானாம். அதைக் கண்ட ஒரு வைதீகர் “அடேய் பொடியா, இப்படி செய்யாதீர்? நீ இப்படிச் செய்தபடியால் உம்முஜடய அடுத்த ஜென்மத்தில் நீர் விட்டில் பூச்சியாய்ப் பிறப்பீர், இந்த விட்டில் பூச்சி பையனாகப் பிறந்து உமது கால்களையும் இறகுகளையும் பிய்த்துப் போடுவான்” என்றாராம்.

அதற்கு அந்தப் பையன், "ஐயா, போன ஜென்மத்தில் நான்தான் விட்டில் பூச்சியாக இருத்திருப்பேன். இந்த விட்டில் பூச்சி பையனாக இருந்து என்னுடைய கால்களையும் இறகுகளையும் பிய்த்திருப்பான். அதினாலே நான் இந்த ஜென்மத்தில் பையனாகப் பிறந்து பழி வாங்குகிறேன். ஏன் இப்படி வைத்துக் கொள்ளக் கூடாது?" என்று திருப்பிக் கேட்டானாம் இந்தக் கதையைச் சொல்லி முடித்து விட்டு, குரு தமது சீடரைப் பார்த்து, இக் கதையிலிருந்து நீ என்ன அறிந்து கொண்டாய்? என்று கேட்டாராம். அதற்குச் "சீடன், குருவே நான் என்னவாயிருந்தேன், என்னவாயிருக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்போது என்னவாக இருக்கிறேன் எனறு தெரியும். இந்த ஜென்மத்தில் நான் பாபத்தளையிலிருந்து விடுதலை பெறும் மார்க்கத்தை அறியாதிருந்தால் இனி எத்தனை ஜென்மம் எடுத்துப் பிரயோசனம் என்ன? என்றானாம்.

அதிகாரம் - இருபது

கர்மாவா? கிருபையா?

நற்காரியங்களைச் செய்வதினாலே கர்ம பந்தத்திலிருந்து விடுதலை பெறலாம் எனில் பாபத்தில் பிறந்தவன் நற் காரியங்களைச் செய்வது இயலுமா?

கீதையில் அர்ச்சுனன் கிருஷ்ணனிடம், நான் தீமை செய்யக் கூடாது என்று எண்ணினாலும் எனக்குள் ஏதோ ஒரு சக்தி இருந்து கொண்டு என்னை பாபம் செய்யும்படித் தூண்டுகிறதே! அது ஏன் என்று கேட்க, கிருஷ்ணன் சொல்லுவான்: "**ரஜோகுண** என்ற பாபக்கட்டுக்குள் பிறந்துவிட்டபடியினால், காமம், குரோதம் என்ற இரண்டு தீய சக்திகள் உனக்குள் இருந்து கொண்டு நீ விரும்பாத பாபத்தைச் செய்யத் தூண்டுகிறது. இதுவே நீ என்னை நெருங்கவிடாமல் தடுத்து நிறுத்துகிறது" என்று பதில் சொல்லுகிறான்.

வேத உண்மைகளை வெளிப்படுத்த எழுதப்பட்ட பிரஸ்தானத் திரயம் என்பதிலுள்ள பகவத் கீதையில் இது காணப்படுகிறது.

இப்படியிருக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வேத பண்டிதனாகிய பவுல் என்பவர்

"நான் செய்கிறது எனக்கே சம்மதமில்லை. நான் விரும்புகிறதை செய்யாமல் வெறுக்கிறதையே செய்கிறேன். ஆகையால், நான் அல்ல எனக்குள் வாசமயிருக்கிற பாபமே அப்படிச் செய்கிறது. நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால் நான் அல்ல எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாபமே அப்படிச் செய்கிறது. நிர்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:14) என்று கதறுகிறதைக் காணலாம். எது என்னை விடுதலையாக்கும் என்று சொல்லாமல் யார் என்னை விடுதலையாக்குவார் என்றே கேட்கிறார்.

சாதாரணமாகத் தியானம், ஸ்நானம், தர்மம் ஆகிய இவைகளையும் கடமையையும் ஒழுங்காகச் செய்தால் அதுவே பிறவித் தலையிலிருந்து விடுதலை தரும் என்று எண்ணுபவர்கள் உண்டு.

நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தை என்று பைபிள் சொல்லுகிறது. (ஏசாயா 64:6) பாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்குக் கிரியைகள் பயனற்றவை என்பவைகளை கீதை 2:50; 5:15, ஆகியவைகளிலும் காணலாம்.

சீக்கியரின் ஆதி கிரந்த் சாஹிப் இல் பாபத்திலிருந்து விடுதலை பெற நற்காரியங்கள் பயன்படாது என்று சொல்லப்பட்டுள்ளது "அணிக் ஜதன் நஹி ஹோத் ச்சுடாரா" (பன்னா 178) கட உபநிஷத்து 1:2:23 இதே கருத்தைப் பிரதிபலிக்கிறது.

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
நமேதயா ந பஹூனா ஷ்ருதேன
யமே வைஷ்ஷ வ்மணுதே தேன லப்லஸ்
தங்யைஷ ஆத்மா விவ்ருனுதே தனூம் ஸ்வாம்

இதன் பொருள் என்னவெனில் மனித ஆன்மாவானது போதனைகளினாலேயோ புத்தி கூர்மையினாலேயோ கேட்பதினாலேயோ தன்னை உணர இயலாது. தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் இறைவன் தம்மை வெளிப்படுத்தும் போது அவரை ஏற்றுக் கொள்கிறவனே ஆத்ம விடுதலை அடைவான் - என்பதே

விவேக சூடாமணி 6ல்

வதந்து ஷாஷ்த்ரானி யதந்து தேவான
குர்வந்து கர்மானி பஜன்து தேவ தா
ஆத்மைக்ய போதேன வினாஷிமுக்த
ந சித்யதி ப்ரஷ்தாந்த் ரேஷ்பி

பொருள் : வேதங்களைச் சொல்லி பலிகளைச் செலுத்தினாலும், புனித நீராடி தேவர்களைத் தொழுதாலும், ஆன்ம விடுதலை கிடையாது. ப்ரஹ்மாவின் நூறுகால ஆண்டுகள்

ஆனாலும் (ஒரு நாள் பிரம்மாவுக்க 432 இலட்ச வருடங்கள் என்பர்) பரமனின் அறிவு மனித ஆத்மாவை இரட்சிக்காவிட்டால் மோஷகதி ஏற்படாது.

விவேக சூடாமனி 13ல்

அர்த்தங்ய நிஷ்யோ தூஷ்சோ விசாரேன ஹிதோவிக்த்த

ந ஸ்னானேன ந தானேன் ப்ரணாயாம ஸதோவா

பொருள் : ஞானிகளின் ஆலோசனைகள் மெய்ப் பொருளை அறிந்து கொள்ளும் அறிவைத்தரும். ஸ்நானங்களும், தர்மங்களும், நூறு முறை பிரணாமாமம்? செய்வதிலும் கிடைப்பதில்லை.

விவேக சூடாமணி 56ல்

ந யோகேன ந ஸங்க்யேன னோ நவித்யா
பரஹ்மாத் மைகத்வ போதேன மோக்ஷ ஸித்யதே நன்யத

பொருள் : யோகத்தினாலோ, ஸம்க்யாவினாலோ கிரியைகளினாலோ கேட்பதினாலோ ஆத்ம விடுதலை கிடையாது. இறைவனை அறிவதின் மூலமாகவே ஆத்ம விடுதலை உண்டு. வேறு வழி இல்லை.

புனர பி ஜனன புனரபி மரண
புரைபி ஜனனி ஜடரே ஸயன
இஹ் சம்ஸாரே வாஹ் துன்ஸாரே
க்ருப்யா பாரே பாஹி முராரே

பொருள் : எத்தனை முறை பிறப்னே
எத்தனை முறை இறப்பேன்
எத்தனை முறை கருவில் இருப்பேன்
இப்படி பலமுறை பிறக்கும் துன்பம் போதும்.
இறைவா, இனி நான் பிறவாமல்
காத்து கிருபை செய்,

மற்றும் கேன உபநிஷத்து 25லும் முண்டக உபநிஷத்து 127லும் மைத்ரேபி உப நிஷத்து 221லும் தேஜபிந்து உபநிஷத்து 2லும் சான்டோக்ய உபநிஷத்து 7.1.2லும் கீதையின் பல

இடங்களிலும் கிரியைகளினால் ஒருவனும் ஆன்மீக விடுதலை அடைகிறதில்லை என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தமேவச் சரணம் கச்ச
ஸர்வ பாவேன பரதா
தத்ப்ரஸாதத் பரம் சாந்திம்
ஸ்தானம் ப்ராப்யஸி ஷாஷ்வதம் (கீதை 18:62)

பொருள் : நீ இருக்கிற நிலையிலே இறைவனிடம்
அடைக்கலம் புகுந்து கொள். அவருடைய
கிருபையினாலே சமாதானத்தையும்
நிரந்தரமான இடத்தையும் பெற்றுக்கொள்வாய்

எனவே, பாபத்தில் பிறந்த எவரும் தங்கள் சொந்த ஞானத்தினாலேயோ, யோகங்களினாலேயோ, தான தர்மங்களினாலேயோ, கல்வி அறிவினாலேயோ, ஆசாரங்களினாலேயோ, பக்தி வழிபாடுகளினாலேயோ, மோக்ஷம் ('இரட்சிப்பு') அடைய இயலாது என்பது தெளிவு. இறைவனுடைய பெரிதான கிருபை அருளப்பட்டாலொழிய மனித ஆத்மாவுக்கு விடுதலை இல்லை என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

மேலும், மெய் கண்ட சாத்திரம் என்னும் சைவ சித்தாந்த நூலில், சிவஞான சித்தியார்-சுபக்கம், சாதனவியல் 25ம் செய்யுளில்

தானமியா கந்தீர்த்தம் ஆச்சிரமந் தவங்கள்
சாந்தி விர தங்கள்கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கம் பெற்றிமைப்பளவில் மீள்வர்
ஈசனி யோகக் கிரியா சரியையினின்றோர்.
ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லாம்
ஒடுங்கும் போது அரன் முனிலா தொழியின் உற்பவித்து
ஞான நெறியடைந்தடைவர் சிவனையாங்கு
நாதனே முன்னிற்கின் றணுகுவர் நற்றாளே

என்று காணப்படுகிறது.
இதை சற்றுப் பிரித்துப் பார்த்தால்,

தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள்
சாந்தி விரதம் கன்ம யோகங்கள் சரித்தோர்
ஈசனின் யோகக் கிரியா சரியையில் நின்றோர்
ஊனம் இல்லா முத்தி பதம் பெற்று உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது அரன் முன் நில்லாது ஒழியின்-உற்பவித்து
ஞான நெறியடைந்து அடைவர் சிவனை அங்கு
நாதனே முன் நிற்கின் அணுகுவர் நற் தாளே

என்று படித்தால் ஓரளவு விளங்கும். இச் செய்யுளை இன்னும் சற்று விவரித்துப் படித்தால்:

"உலகம் எல்லாம் ஒடுங்கும் போது, தானம், யாகம், தீர்த்தம், ஆச்சிரமம், தவங்கள், சாந்தி, விரதம், கன்ம யோகங்கள் போன்றவைகளில் நிற்பவர்கள் அரனாகிய இறைவன் முன் நிற்க இயலாது ஒழிவர். ஈசனின் சரீர யோகக் கிரியைகளின் வழி நிற்பவர்கள் உற்பவித்து (மறுபடியும் பிறந்து) ஞான நெறியடைந்து ஊனம் இல்லாத முத்திபதம் (இரட்சிப்பு) பெற்று, இமை பொழுதில் மீட்கப்பட்டு, ஈனமில்லாத சுவர்க்கம் பெறுவர். அங்கு நாதனாகிய மணவாளனே முன் நிற்கின் சிவனையடைந்து (அன்பு நெய்வத்தை அடைந்து) அவரின் நற்பாதங்களைச் சேர்வர்" எனக் காணலாம். இதிலிருந்து, மனிதனுடைய சரீரக் கிரியைகள் (கர்மா) அவனை இரட்சிப்பதில்லை என்றும், இறைவனுடைய சரீரம் யாகமாகச் (பலியாக) கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு அவருடைய கிருபையின் வழி நிற்போர் உலக முடிவில், நியாயத் தீர்ப்பின் நாளில், இமைப்பொழுதில் மீட்படைந்து, மணவாளனே எதிர் கொண்டு வர அவருடைய பாதங்களைப் பற்றிப் பிடித்து எக்குறைவும் இல்லாத சுவர்க (பரலோக) பதவியை அடைவார்கள் என்பது விளங்கும்.

உங்கள் கர்மாவினால் முத்தி பெற முயற்சிக்கிறீர்களா அல்லது இறைவனின் கிருபையினால் பரம பதவி பெற விரும்புகிறீர்களா? என்பதைத் தீர்மானியுங்கள்.

அதிகாரம் - இருபத்து ஒன்று

சங்க காலத்தில் சாதி

தமிழினம் சாதி வேற்றுமையறியாதது. சங்க காலத் தமிழகத்தில் தொழில் வழி இருந்தன. ஆனால், அவற்றிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட வில்லை. அந்தணக் கபிலரும் அந்தணரல்லாத பரணரும் இரட்டையராக வாழ்ந்தனர். வணிக வருணத்தில் பிறந்த கண்ணகிக்கு அந்தண வருணத்து தேவந்தி தோழியாய் இருந்தாள். சகல கலா வல்லவரான வள்ளலார் வருணாசிரம - சாதி ஆசாரங்களை வெறுத்தாரென்றால் அச்செயல் தமிழ் மரபுக்கு ஏற்றதாவதன்றி எதிரானதாகாது.

சைவ சமயாச்சாரியர்களுள் ஒருவரான அப்பர் சுவாமிகள்,

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும்
குலமும் கொண்டு என் செய்வீர்" என்று கேட்கிறார்.

இக்காரியத்தை நினைத்தே வள்ளலார் சுவாமிகள்

"உயர் குலமென்றும் தாழ்ந்த குலம் என்றும்
வகுக்கின்றீர், இரு குலமும் மாண்டிடக் காண்கின்றீர்"

என்று பாடுகின்றார். மேலும்

"சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்"

என்றும் பாடினார். மேலும்

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே, அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைகளிலே நிறுத்த
நிறுத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம் இது கூவுகின்றேன் உமையே"

என்றும் பாடினார்.

பைபிள் சொல்லுகிறபடி: "கிறிஸ்து இயேசுவுக்குள்

யூதனென்றும் இல்லை, கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும் இல்லை, சுயாதீனன் என்றும் இல்லை, சுயதேசத்தான் என்றும் இல்லை, புற தேசத்தான் என்றும் இல்லை, கிறிஸ்துவுக்குள் யாவரும் சமமாக இருக்கிறார்கள்" என்பதே! உலகம் எங்கிலும் கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் பல பாஷைகளைப் பேசினாலும், பல நிறத்தவரானாலும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகக் காணப்படுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள கிறிஸ்தவன் இந்தியாவைத் தன் தாய் நாடாகக் கருதுவானேயன்றி இஸ்ரவேல் தேசத்தைத் தன் தாய் நாடாக கருதமாட்டான். இந்தியா இந்துக்களுக்கே என்று கூச்சலிடும் இந்து மத வைராக்கியம் பிடித்து அலையும் கூட்டத்தாரைப் போல அவன் வாழ மாட்டான். இந்தியாவில் இருந்து கொண்டே மேற்கே நோக்கிப் பார்க்கும் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவனுக்கும் வெகு தூரம்.

வள்ளலார் கூறுவது போல, "சன்மார்க்க நெறி தனிலே நிறுத்த நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருவர்" ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே என்றால் அது மிகையில்லை.

மனு சாஸ்திரம் தருகின்ற சாதிப் பிரிவுகளுக்கும் ரிக்வேத புருஷ சூக்தம் தருகின்ற வருணப் பிரிவுகளுக்கும் வித்தியாசம் உண்டு. வேதந்தருகின்ற பிரிவுகள், பிரம்மத்தை அறிந்து இறைத் தொண்டு செய்வோர் பிரம்மன் அவன் என்று சொல்லத் தக்க பிராமணன் ஆகிறான். எந்த வருணத்தைச் சேர்ந்தாலும் ஒருவன் இறையறிவு பெற்று இறைத் தொண்டு செய்தால் அவன் பிராமணனே.

ஷத்ரியர் என்னும் பெயர் பாரசீகச் சொல்லான ஷத்ரா என்னும் வார்த்தையிலிருந்து வந்ததாகும். பாரசீகத்திலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவின் மேற்குக் கரையோரங்களில் குடியேறிய அனேகர், வீரம் மிகுந்த செயல் வீரர்களாயினர். இவர்கள் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தீவிரம் உள்ளவர்கள். எனவே இவர்களில் சிலர் அரசர்களாக, போர் வீரர்களாக

இருந்தனர். நாட்டைப் பாதுகாக்கும் பணியை இவர்கள் செய்து வந்தபடியினால் ஷத்ரியன் இல்லை என்று ஒருவர் தயவை ஒருவர் எதிர்பார்த்தும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும் வாழ்ந்தனர். சமுதாயத்தைப் பாதுகாக்கின்ற போர் வீரர் காவலர், அரசியல் தலைவர்கள் யாவருமே ஷத்ரியர் தாம்.

புத்தரும், மகாவீரரும் ஷத்ரியர்பிரிவைச் சார்ந்தவர்கள் இவர்கள் காலத்தில் பிராமணர்கள் ஷத்ரியர்களுக்குக் கீழாக வாழ்ந்ததுடன் மிலேச்சர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பலியில் மிகுந்த இறைச்சியைப் புசித்துச் சோமபானம் அருந்தியதால் அப்பெயர் வந்தது. ஆனால் ஆரியம் மீண்டும் தலையெடுத்தபோது பௌத்தர்களும், ஜைனர்களும், சமணர்களும் ஒடுக்கப்பட்டு பிராமணர்களுக்குக் கிழானார்கள்.

வைசியர் என்போர் வணிகர் பெருமக்கள். வணிகத்தில் இவர்கள் வஞ்சனை செய்து இலாபம் சம்பாதித்தபடியினால் பிராமணருக்கும் ஷத்ரியருக்கும் அடுத்த நிலையில் வைக்கப்பட்டனர். ஆனால் இவர்கள் இல்லாமல் சமூக வாழ்வு இல்லை.

சூத்திரர் என்போர் எல்லோரிலும் கீழானவர்கள். வேதங்களைப் படிப்பதற்கோ மற்ற மூன்று பிரிவினருடன் கலந்து வாழ்வதற்கோ இவர்களுக்கு அருகதையில்லை.

ஆனால் ஒரு காலத்தில் இவர்களும் சமூக அந்தஸ்துடன் வாழ்ந்தவர்களே! இவர்களில் அனேகர் பிராமணர்களுக்குச் சமையல் வேலை செய்தோர், சோமபானம் விற்றோர். முடிசூட்டு விழாவில் அங்கம் வகித்தோர், அரசாங்க அதிகாரிகளாக இருந்தோர் போன்ற குறிப்புகள் வேத காலத்திற்குச் சற்றுப் பின்னுள்ள இலக்கியங்களில் காணப்படுகின்றன. சூத்திரப் பெண்கள் சமய விழாக்களில் நடனம் ஆடினர். மௌரிய அரசர்களில் பலர் சூத்திரரே! சத்பதாபிராமணம் சூத்திரரைப் **பொய்யர்** என்று கூறுவதால் பிற்காலத்தில் இப்பிரிவினர் கடை நிலைக்கு தள்ளப்பட்டனர். மற்றவர்களுக்கு பணி புரியும் வேலை மட்டுமே இவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

கலப்புத் திருமணங்கள் ஏற்பட்ட போது இந்த நான்கு சாதிகளுக்குள்ளும் உட்பிரிவுகள் ஏற்பட்டன. பிராமணரல்லாத

மற்றப் பிரிவினர் கலப்புத் திருமணம் செய்தால் பிறக்கும் குழந்தையைத் தந்தையின் பிரிவில் சேர்த்துக் கொள்ளலாம். பிராமணத் தந்தைக்கும் வைசியத் தாய்க்கும் குழந்தை பிறந்தால் அது அப்பஸ்தா என்ற கலப்புப் பிரிவாகிறது. தாய் சூத்திர வருணமானால் குழந்தை நிசாத அல்லது பார்சவ பிரிவாகிறது. இப்படிப் பல பிரிவுகள் சாதிகளில் ஏற்பட்டுச் சாதிச் சண்டைகளும் கலவரங்களும் ஏற்படுவதற்கு மூல காரணமாய் மனுவின் சாஸ்திரம் இருக்கிறபடினால் சாதி ஒழிப்பு இயக்கங்கள் நடத்தும் ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் மனு சாஸ்திரம் எரிக்கப்படுவது வழக்கம். காலப்போக்கில் கடைநிலைச் சாதியாக பஞ்சமர் என்னும் தீண்டத் தகாத சாதியினரையும் இந்த சாஸ்திரம் இந்தியாவுக்கு அளித்தது.

உலகெங்கிலும் நிறவேறுபாடுகள், ஏழை, பணக்காரன் வேறுபாடுகள் உண்டு, ஆனால் இந்தியாவிலேயோ வடநாட்டான், தென் நாட்டான், கருப்பன், சிவப்பன், ஏழை, பணக்காரன் இத்துடன் மொழி வேறுபாடு, மத வேறுபாடு, அம்மதங்களுக்குள் சாதிவேறுபாடு ஒரு சாதிக்குள் அதன் உட் பிரிவுகளால் ஏற்படும் வேறுபாடு என்று தலை மயக்கங்கொள்ளும் பிரிவுகள் உண்டு.

சாதிகள் இல்லையடி பாப்பா
குலத் தாட்சி சொல்லுவது பாபம்

என்ற பாரதியாரின் பாடலை வாய் கிழியச் பாடுவோரும் சாதி வித்தியாசம் பாராட்டுபவர்களே!

எங்கே எல்லோரும் இஸ்லாமியராகி விடுவார்களோ என்று பயந்து இலட்சுமி புரத்தை நோக்கி ஓடிய இந்து மதத் தலைவர்கள் ஒரேயொரு நாள் சமபந்தி இருந்து பின்பு எங்கே, போனார்கள் என்றே தெரிய வில்லை.

கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட உண்மையான விசுவாசிகளுக்குள் சாதி வித்தியாசங்களோ ஏற்றத் தாழ்வுகளோ இல்லை. இருக்கக் கூடாது. அப்படியிருக்குமாயின் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.

அதிகாரம் - இருபத்து இரண்டு

இந்து சமயத் தத்துவங்களும் கிறிஸ்து சமயத் தத்துவங்களும்

இந்து மதம் என்பது பல் சமயக் கூட்டாகக் காணப்படுவதினாலும், வேதங்களைவிட இதிகாசங்களும் புராணங்களுமே பெரும் அளவில் கைக்கொள்ளப்படுவதாலும், வரலாறு இச்சமயங்களில் தெளிவாக இல்லாதபடியினாலும், அரசாட்சி பற்றிய வரலாற்றில் வரலாறு பற்றிய உண்மைகள் இருப்பினும் புராணங்கள் அவ்வுண்மையை அடைத்து வெளிவராமல் செய்து விட்டபடியினாலும் இச்சமய ஆராய்ச்சியில் பலர் நாட்டம் காட்டாமல் ஒதுங்கி விடுகிறார்கள்.

ஒன்றையே பல இடங்களில் பெரிது படுத்தியும் சிறிது படுத்தியும் திரும்ப திரும்ப உரைத்தும் இப்படிக் குழப்பி விட்டபடியினாலும் உண்மை இன்னதென்று விளங்க இயலாமல் எல்லாம் ஒன்று தான் என்று தங்களையே சமாதானம் செய்து கொண்டு வாளாவிருக்கச் செய்து விடுகிறது.

வேதங்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளுதலைக் காட்டிலும் புராண இதிகாசத் தொடர்பே இச்சமயங்களில் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதினால் வேத தத்துவங்களை விளக்கிச் சொல்வதற்காக எழுதப்பட்ட வீர காவியங்களில் வரும் கதா நாயகர்களே தெய்வங்களாகக் கருதப்படுகிறார்கள்.

சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோர் இணைத்து இதிகாசங்களிலும் புராணங்களிலும் சொல்லப்படும் திருமூர்த்திக் கொள்கை இந்து மதத்தில் நிலையான ஒரு இடத்தைப் பெறவே இல்லை என்றே சொல்லலாம்.

சைவர்கள் பரம் பொருளைச் சிவனாகவும் வைணவர்கள் விஷ்ணுவாகவும் ஏற்றுள்ளனர். அதே நேரத்தில் பரம் பொருளை விஷ்ணுவாக நினைக்கச் சைவர்களுக்கும், சிவனாக நினைக்க வைணவர்களுக்கும் மனம் வரவில்லை.

இந்நிலையில் பிரம்மாவைக் கடவுளென நினைத்து வணங்கவும் மறந்து விட்டனர். வேதாந்தத்தில் சொல்லப்படும் பரமனும் பிரம்மனாகிய கடவுளும் ஒன்று அல்ல. இதிகாச புராணங்களில் வரும் அனேகக் கதைகள் மெய்பொருளை விளங்க வைக்கும் உருவகக் கதைகளே! உதாரணமாக:

பாண்டவர்-கௌரவர்-அறத்துக்கும் மறத்துக்கும் உதாரணம் இராமன்-சீதை-புருஷன், பிரகிருதிக்கு உதாரணம் அர்ச்சுனன்-கிருஷ்ணன்-மனிதாத்மா கடவுளுடன் கூடி நின்று வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உதாரணம். அதே நேரத்தில் சாதி அமைப்புகளை ஒத்துக் கொண்டே சாதி அமைப்பைக் கடிந்து கொள்கின்றனர்.

ஒருமை வாதத்திற்குச் செல்லும் அத்துவைதம் என்ற தத்துவத்தில் அதிகமான சிக்கல்கள் இல்லை. பன்மை வாதத்திற்குச் செல்லும் துவைதம் புராண இதிகாசங்களையே சார்ந்து நிற்பதால் வேதத் தெளிவு பெறவில்லை. இதற்கிடையில் விஷிஷ்டாத்வைதம் என்னும் இயலை உண்டாக்கிய இராமானுஜர் வைணவ பக்தி இலக்கியங்களையே சார்ந்து நின்றாரேயன்றி சைவ இலக்கியங்களைத் தொடவே இல்லை.

பெண்ணுரிமை பற்றிப் பேசும் இந்நாட்களில் பெண்களின் நிலையை மட்டந்தட்டி வைத்திருக்கும் மனுசாஸ்திரத்தை எதிர்க்க மாட்டார்கள். அதே போல ஒற்றுமை, மனித நேய ஒருமைப்பாடு, சமபந்தி, எல்லோரும் ஓரினம் என்று வாய்கிழியப் பேசுவோரும் சாதியை வற்புறுத்தும் மனுசாஸ்திரத்தை எதிர்க்க மாட்டார்கள். அப்படி யாராவது எதிர்த்தால் அவரை நாத்திகர் என்பார்கள்.

அனேகமாக, இதிகாச புராணங்கள் சொல்லும் கடவுள்களையே இக்கால இந்து மக்கள் மனதில் நம்பியிருப்பதாலும், மனு சாஸ்திரம் சொல்லும் சாதி, பெண்களின் நிலையை எதிர்க்கத் திராணியில்லாததினாலும், வேதங்களைக் குறித்த அளவு அல்லது ஆர்வம் இல்லாததினாலும் மெய்ப்பொருளை அறிந்து கொள்ளக்கூடிய நிலைமைக்கு ஒரு பெரிய மாற்றம் வரும் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

பல தெய்வ நம்பிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கும் இந்து மதத்தில் பல உட்பிரிவுகள் இருந்தாலும் எப்படியோ எல்லாவற்றையும் அனுசரித்துப் போகிறது ஒரு ஆற்றல் என்றே சொல்லலாம்.

எகம் ஸத் விப்ர பஹூதா வதந்த்தி
(மெய்ப் பொருள் ஒன்றே, ஞானிகள்
அதை வெவ்வேறு கோணங்களில் காண்கிறார்கள்)

என்ற ரிக் வேதப் பாடலையும் சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் ஒருவரே என்று வரும் புராணப் பகுதிகளையும் சுட்டிக் காட்டி, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு விட்டதாக நினைத்து எல்லாம் ஒன்றே என்று மேல் மட்டத்தாரும் கீழ் மட்டத்தாரும் ஏகமாய், எளிதாய் கூறிவிடுகிறார்கள், ஆனாலும் இது வேதங்களுக்கு ஏற்காது என்பதனை அறியார்கள்.

அதுபோலவே, ஒரு கடவுட்கொள்கையுடைய கிறிஸ்தவர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒருவரே என்ற கருத்துடையவர்களானாலும் அவர்களுக்குள் கத்தோலிக்கர் என்றும், புரட்டஸ்டண்ட் என்றும் சுத்த தமிழ் சுவிசேஷ லுத்தரன் என்றும், ஆற்காடு லூத்தரன் என்றும் வெஸ்லி என்றும் மெதடிஸ்ட்ஸ் என்றும் எஸ்பி.ஜி. என்றும் சி.எம்.ஐ. என்றும் சர்ச் ஆப் காட் என்றும், டிரினிட்டி சர்ச் ஆப் காட் என்றும் இன்னும் A முதல் Z வரையில் நூற்றுக் கணக்கான பிரிவுகளுடனும் பிரிந்து நிற்பது வியப்பாக உள்ளது.

கிறிஸ்தவ வேதமாகிய பைபிளில் இப்படிப்பட்ட சபைகள் கிடையாது. பைபிளில் இல்லாத சில நம்பிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு அவைகளைத் தேவனே அருளியதாக விடாப்பிடி வைராக்கியங் கொண்டு மெய்ப்பொருளை அறியாமல் என் மதம் உன் மதம் என்பது போன்ற பிரிவினைகளை ஏற்படுத்தி வாழ்வது வருந்தத்தக்கது.

இவைகளில் சாதிப் பிரிவுகளும் அடங்கும். சவரிமுத்துப் பிள்ளை யென்றும், ஜோசப் நாடார் என்றும், சந்தோஷ முதலியார் என்றும் பெயர் வைத்துக் கொள்வதும், குறிப்பிட்ட

சாதியினருக்காகக் கிறிஸ்தவ ஆலயங்கள் அமைத்தலுமான காரியங்கள் வெட்கக் கேடாகும்.

ஒரே பாத்திரத்தில் அப்பம் புசிப்பார்கள். ஒரே பாத்திரத்தில் பானம் பண்ணுவார்கள். ஆனால் திருமணம் என்றால் சாதி பார்ப்பார்கள், மற்ற சமயங்களிலுள்ளது போல நேரம் காலம் பார்ப்பது, இராசி பார்ப்பது, ஜோதிடம், ஜாதகம் பார்ப்பது, சடங்குகள் செய்வது, மாவிலை கட்டி மஞ்சள் பூசுவது, சந்தனம் பூசுவது போன்ற சகலவற்றையும் செய்து இயேசுவின் நாமத்தினால் ஜெபமும் செய்து ஆசீர்வாதமும் பெறுவார்கள்.

இவைகளுக்குக் காரணம் வேதத்தின் ஆழ்ந்த சத்தியங்களுக்குச் செவி கொடாமல் ஏதோ ஒரு மதத்தைச் சார்ந்திரந்தால் போதும் என்று நினைப்பதினாலேயே, "காரியம் இப்படியிருக்கிறதோ என்று அவர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தப்படியினால்....." என்ற வேத வசனம் இவர்களுக்குக் கண்ணில் படாது.

அதுபோலவே இஸ்லாமும், ஷியா இஸ்மாமியர், சுனி இஸ்லாமியரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அகமதியா இயக்கக் காரரர்கள் இந்த இரண்டு பேர்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் வேதத்தைப் பெற்றிருந்து அதன் மெய்ப் பொருளை அறிய மனமற்று இருப்பதினாலேயே, மதம், வைராக்கியம், சாதி, ஆணவம், விளங்கிக் கொள்ளும் மனப்பான்மை இன்மை ஆகியவைகளும் காரணங்களாகும்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் கொள்கை சிறந்ததாயினும் அந்த ஒரே தேவனை விளங்கிக் கொள்ள இத்தனை வேத நூல்கள் எழுதப்பட்டிருந்தும் இவைகளை ஆராய்ந்து பார்க்க மனமின்றி சாதி சண்டைகளும் மத கலவரங்களுமாக வாழ்வது வேதனைக்குரியது.

எல்லாம் ஒன்று தான் என்பது சொல்வதற்கு எளிது. அந்த ஒன்றாகிய இறைவன் யார்?

“ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்” (யோவான் 17:3)

“தேவன் ஒருவரே! தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே! எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே! இதற்குரிய சாட்சி என்ற காலங்களில் விளங்கி வருகிறது.

இதற்காகவே நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப் பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன். நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்.” (1 தீமோத்தேயு 2:5,6,7) என்பது சத்திய வேத வசனங்களாகும்.

அதிகாரம் - இருபத்து மூன்று

மெய்ப் பொருள் நாயகன்

இயேசு கிறிஸ்து என்பவர் கட்டுக் கதையில் வருகிற கதா நாயகன் அல்ல. அவர் சரித்திர நாயகன். இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லுகின்ற பைபிள் என்பது ஒரே மனிதனால் தொகுக்கப்பட்ட புத்தகம் அல்ல. பல காலங்களில் பலரைக் கொண்டு பல மொழிகளில் பல நிலையில் எழுதப்பட்ட 66 புத்தகங்கள். ஆனால் இவைகளின் மொத்தக் கருத்தும் இயேசுவின் பலியைக் குறித்தே சொல்லுகின்றன. இப்புத்தகங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ளவையல்ல. வேற்றுமையான கொள்கையைச் சொல்கிறதும் அல்ல.

பைபிளில் வருகிற நபர்கள், இடங்கள், சம்பவங்கள் யாவும் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்தவை. எனவே பைபிளும் அதில் குறிப்பிப்பட்ட இரட்சகராகிய இயேசுவும் மேற்கத்தைய நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பியாவைச் சேர்ந்தவர் அல்ல. கிழக்கு ஆசியக் கலாச்சாரங்களுடன் கூடிய பழைய, புதிய ஏற்பாடுகள், கடவுள் மனிதனான வரலாறு, அவர் பாபங்களை மன்னிக்கப் பலியாகி உயிர்தெழுந்தவர் என்பதையும், அவருடைய சரீரத்தில் பங்கு கொள்கிறவர்கள் சபை என்பதையும், அவருடன் சேர்ந்து வாழ்ந்து அவரைக் குருவாகவும் வழியாகவும் ஏற்றுக் கொண்டவர்கள் மோட்சம் அடைவதையும் வெளிப்படுத்தும் சத்ய வேதமாகும்.

பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படும் பைபிள் உலகத்தின் 1700 மொழிகளுக்கும் மேலாக மொழி பெயர்த்து அச்சிடப்பட்டு விநியோகத்திலுள்ளது. பைபிளில் காட்டப்படும் தேவனாகிய கர்த்தர் லீலா விநோதங்கள் செய்ததாகவோ, மனுஷர்களைப் போலக் குடித்தனம் நடத்தினதாகவோ சொல்லப்படவில்லை.

பைபிள் கடவுள் பிதாவாகவும், குமாரனாகவும், ஆவியானவராகவும் காட்டப்படுகிறார். ஆனால் இவர்கள் மூன்று

வெவ்வேறு தனித் தெய்வங்களாயிராமல் ஒருவராகவே காணப்படுகிறார்.

முச்சுடரும் ஒன்றாகும் மும்மூர்த்தியல்ல
மூவருமே ஆள் உருவம் ஒன்றேயாகும்
அச்சுதா இவர்கள் ஆண் பெண் அல்ல
அரனுமல்ல இலிங்கமுமல்ல - அனாதியான
சச்சிதா னந்தனை வணக்கம் செய்து
சற்குருவின் பாதம் போற்றி
எச்சரிக்கை கொண்டு நட அப்பா அப்பா
எண்ணிலா முக்தி வழி எய்தலாமே

என்ற அகஸ்தியர் ஞானம் 30ல் காணப்படும் பாடல் இதை மெய்ப்பிக்கிறது.

மூவொரு கடவுளாகிய தேவன் தந்தையாய், குமாரனாய் தாயாய் (சக்தி - ஆவி - வல்லமை) உலகுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர் எல்லாவற்றிலும் எல்லாமுமாய் இருக்கிறபடியினால்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சத் துறைந்திருப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீயே

என்று அப்பர் அடிகள் பாடினார்.

இத்தத்துங்களை விளங்கிக் கொள்ள இயலாதவர்கள் கடவுளை கூறுபோட்டு புராணக் கதைகளை எழுதி முப்பத்து முக்கோடி தெய்வங்களாக்கிவிட்டனர்.

ஒரே தேவன் தம்மை எப்படியெல்லாம் வெளிப்படுத்தினார் என்பதை தேவங்களின் வாயிலாக அறியலாம். பூர்வ கால ஞானிகள் தேடிய தத்துவக் கடவுளும் அக்கடவுள் வெளிப்பட்ட தன்மையையும் இப்படிக் காணலாம்.

தேடியது	வெளிப்பட்டது
1. ஆரியர்கள், யாரிடம் தங்கள் நிவேதனத்தைச் செலுத்துவது என்று தேடினார்கள்	என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார் (யோவான்.14:9)
2. அவர்கள் தத்துவ ஞானத்தைத் தேடினார்கள்	நானே சத்தியம் என்றார் இயேசு (யோவான்.14:9)
3. அமிர்தத்தைத் தேடினார்கள்.	நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகம் உண்டாகாது. (யோவான் 4)
4. சாஸ்வதமான வாக்குறுதியைத் தேடினார்கள்.	நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6, 11:25) நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோவான் 14:19)
5. சமாதானத்தைத் தேடினார்கள்	என்னுடைய சமாதனத்தையே உங்களுக்குத் தருகிறேன் என்றார். (யோவான் 14:27)
6. பூரண சந்தோஷத்தைத் தேடினார்கள்.	உங்கள் சந்தோஷம் நிறைவாயிக்கும் (யோவான் 16:24) என்றார் இயேசு.
7. ஒளியைத் தேடினார்கள்	நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் என்றார். (யோவான் 8:12)
8. தேவனுடன் இணைவதைத் தேடினார்கள்.	என்னிலே நிலைத்திருங்கள் என்றார் யோவான். 15:4) நான் உம்மிலேயும் நீர் என்னிலேயும் இருக்கிறது போல அவர்கள் நம்மிலே இருக்கிறார்கள் (யோவான் 17:21) என்று சொன்னார்.

9. அவர்கள் தேவ அநுக் கிரகத்தையும் பிரசாதத்தையும் எதிர்பார்த்தார்கள்	கிருபையும் (பிரசாதம்) சத்தியமும் (தேவானுக்ரகம்) இயேசுக் கிறிஸ்து மூலமாய் உண்டாயின (யோவான் 1:17)
10. மேஷபால பகவான் என்பவரைத் தேடினார்கள்.	இதோ உலகத்தின் பாபத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றார் யோவான்.
11. புருஷ் பிரஜாபதியாகிய தேவனை எதிர்பார்த்தார்கள்	தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். (I தீமோத்தேயு 3:15)
12. அவர்கள் ஒரு இரட்சகரை (த்ராத்தா) எதிர்பார்த்தார்கள்.	தாவீதின் ஊரிலே இரட்சகர் பிறந்திருக்கிறார் (லூக்கா 2:11)
13. அவர்கள், கடவுள் அவ தாரமாக வருவார் என்று காத்திருந்தார்கள்	வானத்திலிருந்து இறங்கி உலகத் தின் ஜீவனுக்காகத் தன்னையே பலியாக்கின ஜீவ அப்பமாக இயேசு காணப்பட்டார். (யோவான். 6:33. 35)
14. கடவுள் சச்சிதானந்தனாக (சத்து சித்து ஆனந்தம்) காணப்பட வேண்டும் என்று எதிர் பார்த்தார்கள்.	தேவத்துவத்தின் சகல பரிபூரணமும் கிறிஸ்து இயேசுவுக்குள் காணப்படுகிறது. (கொலொசெயர்.2:3)
15. அவரைக் குரு என்றழைத்தனர்.	நானே உங்கள் குரு என்றார் இயேசு (யோவான் 13:14)
16. அவரை மேத்ய புருஷன் யக்ஞ புருஷன் (பலி புருஷன்) என்று ஞானிகள் சொன்னார்கள்.	அவர் தமது சரீரத்தைப் பாடுகளுக்கு உட்படத்தினார். (ஏசாயா 53:10)

அப்படியானால் அவர்கள் யாரைத் தேடினார்கள்.? பைபிள் சொல்லுகிறபடி "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்துவதற்கு இரகசியமாகிய தேவ

வசனத்தைப் பூரணமாய் வெளிப்படுத்துவதற்கு உங்கள் பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின் படியே அந்த சபைக்கு நான் ஊழியக்காரனானேன்.

புற ஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தெவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்மிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனு புத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" (எபேசியர் 3:6)

"பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்." (எபிரேயர் 1:1,2)

ரிக் வேதங்களில் காணப்படும் பாடல்களெல்லாம் யாரிடம் காணப்படுகின்றன?. ரிக்வேதம் 10வது மண்டலத்தில் கடவுளின் பலிமூலமாய் பாபம் மன்னிக்கப்படும் என்ற கருத்துக் காணப்படுகிறது. வேத காலங்களின் அதே காலத்தில் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் பழைய ஏற்பாட்டுக் காலமும் நடைபெற்றது. இருசாரரும் கடவுளைத் தேடினார்கள். அவர்கள் மேசியா (கிறிஸ்து) வந்து பாபத்தைத் தொலைப்பார் என்று நம்பினார்கள். இவர்கள் பிரஜாபதி புருஷன் பாபத்தைத் தொலைப்பார் என்று நம்பினார்கள். இருவரும் எதிர்பார்த்த மேசியா, கிறிஸ்து, பிரஜாபதி, புருஷன் ஆகிய யாவற்றையும் நிறைவேற்றினவர் கர்த்தராகிய இயேசுவே! இயேசுவாலன்றி இரட்சிப்பு இல்லை.

"இயேசுவாலன்றி யேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே இயேசு என்ற நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை!" (அப்போஸ்தலர் 4:12) என்பது இறைவாக்கு

அதிகாரம் - இருபத்து நான்கு

(1) பைபிள் என்பது என்ன?

- சில துளிகள்

கி.பி. 16ம் நூற்றாண்டுக் கலிலியோ உலகம் உருண்டை என்று சொன்னதற்காக மதத் தலைவர்களால் கொலை செய்யப்பட்டார். ஆனால் கி.மு. 850ம் ஆண்டில் வார்ந்த ஏசாயா என்னும் தீர்க்கதரிசி பூமியை உருண்டை என்று சொல்லி இருக்கிறார் (ஏசாயா 40:22) அக்காலத்து மக்கள் (இக்காலத்திலும் சிலர்) பூமி இரண்டு பெரிய யானைகளின் மீது நிற்பதாகவும் ஹெர்குலிஸ் என்ற மாவீரன் தன் ஒரு கையினால் அதைத் தாங்கிக் கொண்டு நிற்பதாகவும் பூமாதேவி அதைத் தாங்கி நிற்பதாகவும் சொல்லி வந்தனர்.

ஆனால் பூமி யாராலும் தாங்கப் படவில்லை என்றும் அது தேவனால் அந்தரத்தில் தொங்குகிறது என்பதையும் கி.மு.3000 ஆண்டுகளில் வாழ்ந்த யோபு அறிந்திருந்தார் (யோபு 25:7) இந்த பூமியைத் தவிர வேறு கிரகங்களுக்கும் மனுஷன் சென்று வாழ நினைப்பான் என்பதையும் ஆனால் பூமி ஒன்று மட்டுமே குடியிருப்புக்காகப் படைக்கப்பட்டது என்பதையும் முறையே ஒபதியா 4ம் வசனத்திலும் ஏசாயா 45:18ம் வசனத்திலும் காணலாம்.

ஏன் மழை பெய்கிறது? மின்னல் வெட்டுகிறது? எப்படி மழை பெய்கிறது? என்ற கேள்விக்கு என் பாட்டி அக்காலத்தில் சொன்ன பதில்: தேவர்கள் எல்லாம் இரதத்திலே சண்டைக்கு போறா. இந்த இரதத்து சக்கரம் கடகட வென்று உருளுதோல்லியோ அதான் இடியாய் இடிக்கிறது. அவா கத்தி சண்டை போடறா, அது ஒண்ணோடு ஒண்ணு மோதறதாலே பளிச் பளிச் சென்று மின்னல் வெட்றது. அவாளெல்லாம் ஒன்னுக்கு பெய்றது தாண்டா நமக்கு மழையா கொட்டறது என்பாள்.

கி.மு. 300 ஆண்டுகளில் வாழ்ந்த யோபு: "ஆண்டவர் தண்ணீர்களைத் தம்முடைய கார்மேகங்களில் கட்டி வைக்கிறார். அதன் பாரத்தினால் மேகம் கிழிக்கிறதில்லை" யென்றும், யோபின்

நண்பரான எலிகூ: ஆண்டவர் நீர்த் துளிகளை அனுவைப் போல ஏறப்பண்ணுகிறார். அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது. அதை மேகங்கள் பெய்து மனுஷர் மேல் மிகுதியாய்ப் பொழிகிறது. மேகங்கள் பரவுதலையும் அவருடைய கூடாரத்தில் இருந்து எழும்பும் குமுறல்களையும் (இடியை) அறிய முடியுமோ? இதோ, அதன் மேல் தம்முடைய மின்னலின் ஒளியை விரிக்கிறார். சமுத்திரத்தின் ஆழங்களையும் மூடுகிறார். அவைகளால் ஜனங்களைத் தண்டிக்கிறவரும், ஆகாரங்கொடுத்து இரட்சிக்கிறவருமாயிருக்கிறார். (யோபு 36:8 36:27-31) என்றார்.

விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அணுவைக் கண்டு பிடித்தார். அவரைத் தொடர்ந்து அந்த அணுவை ப்ளோட்ரான், நியுட்ரான், எலக்ட்ரான் என்று மற்ற விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர் என்று பெருமைப்படுகிறோம். இவர்கள் யாவரும் கி.பி.யில் பிறந்தவர்கள் ஆனால் கி.மு. 3000 அண்டுகளிலேயே எலிகூ என்பவர் அணு என்ற வார்த்தையை அறிந்திருந்தார் (யோபு 36:37)

இன்னும் யோபு 38ம் அதிகாரத்தில் 25 முதல் 38 வரை வாசித்துப் பாருங்கள். இன்றைய விஞ்ஞான உலகம் அதைப் படித்தால் வியக்கும்! மனிதன் மண்ணைக் காய்சி இரும்பை உண்டாக்குகிறான். பூமிக்கடியில் சுரங்கம் உண்டாக்கி அங்கேயும் பட்டப் பகல் போல வெளிச்சம் உண்டு பண்ணி அங்கிருந்து பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற இரத்தினாங்கள், நிலக்கரி போன்றவைகளைக் கண்டு பிடிக்கிறான். அதற்காகக் கற்பாறைகளை வேரோடே புரட்டுகிறான். கன்மலைகளைக் குடைந்து நீர்க் கால்களை வெட்டுகிறான். ஒரு துளியும் கசியாத படி ஆறுகளை அடைக்கிறான். அடேயப்பா! மனுஷனுடைய திறமை என்னவென்று வியக்கிறோம். இவைகள் யாவும் அறியப்படாததற்கு முன்பே கி.மு.3000 ஆண்டில் வாழ்ந்த யோபு என்பவரின் புத்தகத்தில் மனிதன் இப்படியெல்லாம் செய்வான் என்று எழுதப்பட்டுள்ளது. (யோபு 28:2-11)

ii) பைபிள் ஒரு வரலாறு, புவியியல்

சில புராணங்களில் சொல்லப்பட்டிருப்பது போல பைபிளில் பாற்கடல், கரும்புச் சாறுக் கடல், நல்ல தண்ணீர் கடல்,

நாகலோகம், இராட்சத லோகம் என்பன போன்ற அம்புலிமாமாக் கதைகள் கிடையாது.

இன்றைக்கும் நமது கண்களுக்கு முன் உள்ள செங்கடல், கருங்கடல், போர்தான் நதி, எகிப்து, பாபிலோன் (ஈரான், ஈராக்) போன்ற உண்மைப் பெயர்களையே கொண்டுள்ளது.

இன்னகாலத்தில் இந்த நாட்டை இன்ன பெயருடைய அரசன் இந்த விதத்தில் ஆண்டான் என்ற குறிப்புகளும் எராளம். சரித்திரமே இல்லாதவர்களுக்கு ஜென்ம பூமியும் இராஜ்ஜியமும் உண்டாக்க நினைப்பவர்கள் சிந்திப்பார்களா?

iii) பைபிள் ஒரு சட்ட நூல்

மனிதர்கள் பலவிதமான சட்டதிட்டங்களை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் மனிதனுடைய நல்வாழ்விற்காக தனி நபர் சட்டம், குடும்ப சட்டம், ஊர் சட்டம் என்று பலவிதமான சட்டங்களை ஆண்டவரே மனிதனுக்கு வழங்கியதை பைபிளில் யாத்திரை ஆகமம், லேவியர் ஆகமம் போன்ற நூல்களில் காணலாம். இவைகளின் அடிப்படையிலேயே உலக சமுதாய சட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

iv) பைபிள் ஒரு தீர்க்க தரிசன நூல்

கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் ஆகிய முக்காலங்களையும் குறித்த குறிப்புகள் பைபிளில் உண்டு.

ஜலப்பிரளயத்தினால் இவ்வுலகம் ஒருமுறை அழிக்கப்பட்டது, இஸ்ரேல் நாட்டைக் குறித்தும் ஜனங்களாகிய யூதர்களைக் குறித்தும் சொல்லப்பட்ட அழிவும் அப்படியே நடந்தது. மறுபடியும் இஸ்ரேல் நாடு உருவாகும் என்று சொல்லப்பட்டதும் நடந்தது. இஸ்ரேலுக்கு எதிராக எகிப்தும் மற்ற அரபு நாடுகளும் யத்தம் தொடரும் என்று எழுதப்பட்டதும் நடந்து முடிந்தது.

அதே போல 3ம் உலக மகாயுத்தம் நடைபெறுவதைக் குறித்தும் இவ்வுலகம் எப்படி அழியும் என்பதைக் குறித்தும் அனேக காரியங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றை விவரித்தால் அதுவே ஒரு தனி நூலாக அமையும். கோவை பாஸ்டர் யோபு ஞானப் பிரகாசம் அவர்கள் எழுதிய மூன்றாவது உலக மகா

யுத்தம் என்ற புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். இன்னும் அனேகர் இவைகளைக் குறித்து எழுதியிக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பைபிள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து மிகவும் திட்டவட்டமாக சொல்லுகிறது.

இயேசு மத்திய வானத்தில் தோன்றித் தமது சபையாகிய மணவாட்டியை அழைத்துக் கொள்வது முதல், கைவிடப்பட்ட பரிசுத்தவான்களுக்கான உபத்திரவ காலம், அதிலே இவர்களை உற்சாகப்படுத்தி தேவனுடைய இராஜ்ஜியம் சேர்ப்பதற்காக எழுப்பப்படும் மோசே, எலியாவைப் போன்ற இரண்டு அற்புத சாட்சிகள், அதற்குப் பின்னர் ஏற்படும் மகா உபத்திரவ காலம், அர்மகெதோன் என்னுமிடத்தில் நடக்கவிருக்கும் யுத்தம், கிறிஸ்து இயேசுவின் ஆயிரவருட அரசாட்சி, கோகு மாகோகு யுத்தம், நித்திய நியாயத் தீர்ப்பு ஆகியவைகளைக் குறித்தும் அதன் பின்பு, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் ஆகியவைகளைக் குறித்தும் அதாரபூர்வமாக அறிவிக்கின்றன.

பைபிளில் சொல்லப்பட்டவைகள் நடத்திருக்கிறன்றன. சொல்லப்பட்டவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே சொல்லப்பட்டவைகள் நடக்கும்.

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும்,
அருவருப்பானவர்களும், கொலை பாதகரும்,
விபாசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரக
ஆராதனைக் காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம்
மரணமாகிய அக்னியும் கந்தகமும் எரிகிற கடலிலே
பங்கடைவார்கள் (வெளிப்படுத்தல் 21:8) என்பது பைபிள்
சொல்லும் எச்சரிப்பு

அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

“இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.

நான் அல்பாவுல் ஒமெகாவும் ஆதியும் அந்தமும் முந்தினவரும் பிந்தினவருமாக இருக்கிறேன். ஜீவ விருக்ஷத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய் நாகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்”.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுக்கூட இருப்பதாக ஆமென்.

அதிகாரம் - இருபத்து ஐந்து

யார் அவர்?

இந்திய வேதகங்களில் சொல்லப்பட்டிருப்பது போல உலகத் தோற்றத்திலேயே பலியாக்கப்பட்ட மனிதனாகிய தெய்வம் யார்?

சரீரத்தில் வந்து மரத்திலே கட்டப்பட்டு உடலெல்லாம்
இரத்தம் சிந்தி மரித்துப் பலியான தெய்வம் யார்?
ஒளியாகத் தன்னைக் காண்பித்த தெய்வம் யார்?
குருவாகத் தன்னைக் காட்டிய தெய்வம் யார்?
வார்த்தையாயிருந்து வடிவம் பெற்ற தெய்வம் யார்?

ரிக்வேத புருஷ சூக்தத்தில் சொல்லப்பட்டபடி தன்னைப் பலியாக்கின பிரஜாபதி புருஷன் யார்? உபநிஷத்துக்கள் சொல்லுகிற குருவாகிய பர பிரம்பம், பராகதி, பராவித்யா, பராயணம், பராகஸ்தா, பரம்தனம் யார்?

எல்லாம் ஒன்று என்று தத்துவம் பேசுகிறவர்கள் அந்த ஒன்றான மெய்தேவனாகிய இயேசுவை ஏற்றுக் கொள்ளாலாம், மழுப்புவது ஏன்?

புருஷன் என்ற மாம்சத்தில் வந்த தேவனே இரட்சகர். அவரை அறிவதே நித்திய ஜீவன்: இதை தவிர வேறு வழி இல்லை என்று உப நிஷத்துக்களும் வேதங்களும் திட்டவட்டமாகச் சொல்லுகின்றனவே! அவர் யார்?

அவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இயேசுவாலன்றி இரட்சிப்பு இல்லை, வானத்தின் கீழே, பூமியின் மேலே, நாம் இரட்சிக்கப்படும் படி அவருடைய நாமமே அல்லாமல் வேறு எந்த நாமமும் கட்டளையிடப்படவில்லை (அப்போஸ்தலர் 14:12) ஆமென்.

நான் கண்டு கொண்டேன்

என் ஆத்ம நேசரைக் கண்டேன் (உன்னதப்பாட்டு 3:4) நியாயப் பிரமாணத்திலே மோசேயும் தீர்க்க தரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் (யோவான் 1:45)

மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படி காணப்படுகிறதோ. அப்படியே சுற்றிலுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது. இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது. அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன் (எசேக்கியேல் 1:28)

இருளுக்கும் அப்பால் சூரியனைப் போல் பிரகாசிக்கிற சர்வ வல்லமையுள்ள புருஷனை நான் அறிவேன். அவரை அறிவதன் மூலமாகவே ஒருவன் மரணத்தைத் கடக்க இயலும். நீத்ய ஜீவனுக்குள் போக வேறு எந்த வழியும் இல்லை. (ஸ்வேதாஸ்வதார உபநிஷத்து 3:18, யஜுர் வேதம் 31:18)

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே யல்லாமல் பிதாவினுடைய இராஜ்ஜியத்திற்குள் ஒருவனும் வர இயலாது" "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள் அப்பொழுது நீங்களும் உங்கள் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவீர்கள்"

ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம் என்றார்கள் (யோவான் 12:21)

நீங்கள் காண விரும்புகிறீர்களா?

ஆமென், இயேசுவே வாரும் என்று உங்கள் உள்ளத்தை திறந்து இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள ஆவிக்குரிய சபைகளுக்குச் சென்று அங்குள்ள ஊழியர்களைச் சந்தியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்
இறைவன் இயேசு கிறிஸ்துவின்
திருப்பணியில்
சாது செல்லப்பா

அதிகாரம் - இருபத்து ஆறு

கிறிஸ்தவம் தேவையா?

கிறிஸ்து இயேசுவும் அவருடைய கொள்கைகளும் உங்களுக்குத் தேவையா அல்லது தேவை இல்லையா என்று தீர்மானிக்கும் வாய்ப்பை உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

இப்புத்தகத்தை வாசித்ததினால் உண்டான உங்கள் கருத்து எதுவானாலும் மனம் திறந்து எழுது படிக் கேட்டுக் கொள்கிறேன், அடுத்த பதிப்பில் உங்கள் கருத்துக்கள் இடம் பெறும். மேலும் உங்கள் கருத்துக்களில் நல்லவை இருப்பின் அவைகளும் சேர்த்துக் கொள்ளப்படும் நன்றி.

மேற்கோள்களுக்குதவிய புத்தகங்கள்

கிறிஸ்தவம் தேவையா என்று இந்நூல் எழுதுவதற்கு என்னால் பயன்படுத்தப்பட்ட மற்ற நூல்கள்:

1. கிறிஸ்தவம் தேவையா முதற்பதிப்பு, 2ம் பதிப்பு-சாது செல்லப்பா.
2. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - மா.பொ.சி.
3. கடவுள் நிலைக்கு மாறான கொள்கை சைவம் ஆகா மறைமலை அடிகள்.
4. அகத்தியர் அறைகூவல் - தருமன் பால்ராஜ்
5. இந்தியப் பெருஞ்சமயம் (தொகுதி 2) செல்வ நாயகம் ஸ்ரவேல்.
6. தடைகல் - சுவாமி தர்ம தீர்த்த மகராஜ் - தமிழாக்கம் வி,டி, சகாயம்.
7. நாம மாலை - மகாரிஷி வினோபா.
8. மெய் கண்ட சாத்திரம் - கழக வெளியீடு
9. சித்தர் பாடல்கள் - அரு. இராம நாதன்
10. விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு - டாக்டர் மு. தெய்வ நாயகம்

11. The Universal person - Swami Chinmayananda.
12. Fulfilment of the vedic quest in the Lord Jesus Christ - Acharya Daya Prakash
13. The confusion called conversion - Sunder raj
14. Christ in Vedhas - padinjarakara
15. இந்து மதம் இந்திய மதமா - துறையூர் வளவன் - அருள் செய்தி வெளியீடு.
16. அகத்தியர் யார் - வித்துவான் ஆ. சிவலிங்கனார்.
17. The Holy Bible - Holy Spirit

(பிற்சேர்க்கை)

பழந்தமிழரின் பழக்க வழக்கங்களும் சமயமும்

முதல் இரண்டு தமிழ்ச் சங்கங்களின் தலை நகர்களைக் கடல் மூடிக் கொண்டபடியினால் அவைகளைப் பற்றிய நூல்கள் எதுவும் இல்லை. கி.மு. 300 முதல் கி.பி. நூற்றாண்டுகள் வரை உள்ள காலத்தில் இருந்த கடைச் சங்க காலத்து நூல்கள் கிடைத்திருக்கின்றன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை இவையே சங்க நூல்கள்".

இச்சங்க நூல்கள் தமிழின் இனிமையையும், பழங்காலத்தில் தமிழ் நாட்டின் நிலைமையையும் வரலாற்றையும் காட்டுகின்றன.

வைதீக சமயம், பௌத்த சமயம், சமண சமயம், சைவ சமயம், வைஷ்ணவ சமயம் ஆகிய ஜகிய ஐவகைச் சமயங்களும் தமிழ் நாட்டில் பின்பற்றி ஒழிகப்படுவதற்கு முன் இருந்த மக்களின் உயரிய நிலையையும் பண்புகளையும் சங்க கால நூல்களில் அறியலாம் என்கிறார். திரு. மீனாட்சி சுந்தரனார் அவர்கள்

சங்க காலத்து வாழ்க்கையே நூலாக உருவாயிற்று. மேன்மேலும் உண்மை காணும் வாழ்க்கையாக அக்காலத்தில் வளர்ச்சி நெறியில் ஓங்கிச் சென்றது என்பார். திரு. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள்

குறிஞ்சிக் கலியில் வித்வான் இராசமாணிக்கம் கூறுவது: கி.பி.3ம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழகம் களப்பிரர் படையெடுப்புக்கு உட்பட்டது. சோழரும், பாண்டியரும் முடியிறந்து சிற்றூர்களில் புகுந்தனர். பல்லவர் நுழைந்தனர். தமிழகம் கி.பி. 4ம் நூற்றாண்டு முதல் 6ம் நூற்றாண்டு வரை அல்லல் பட்டது. அக்காலத்தில் ஆரியர் கொள்கைளும் மொழியும் நாட்டில் புகுந்தன. களப்பிரரும் பல்லவரும் வடமொழியையும் சமணத்தையும் நாடெங்கும் பரப்பினர். கி.பி. 8ம் நூற்றாண்டு இறுதி முதல் அப்பர், சம்பந்தர், முதலிய சைவ சமய ஆச்சாரியரும் ஆழ்வார்களும் தோன்றி, சைவ, வைணவ மதங்களைப் பரப்ப முனைந்து விட்டனர். புராணக் கதைகளும்,மதக் கோப்பாடுகளும் புகுந்தன. அக்காலங்களில் மத சம்பந்தமான நூல்கள் தோன்றி ஆதரிக்கப்பட்டன.

பழம் பாடல்களில், மனு, மனுநீதி, மனு நூலைப் பற்றிய செய்தி இல்லை. கி.பி. 12ம் நூற்றாண்டில் எழுதிய கலிங்கத்துப் பரணி, பெரிய புராணம் முதலிய நூல்களில் மனு நீதியை வாசிக்கலாம்.

ஆரியர் இந்தியா வந்தது. கி.மு. 1400. ஆரியர் தென் நாடு வந்த போது, மன்னன் காரி அவர்களை விரட்டியடித்தான். தமிழ் நாட்டுக்குள் ஆரியர் வந்தது கி.பி.800க்குப் பின் இருக்கலாம்.

திரு. இராகவ ஐயங்கார் அவர்கள் : "பெரியாழ்வார் காலம் கி.பி. 7ம் நூற்றாண்டு, வைதீக சமயத்தவர்களும் சைவ, பௌத்தர்களும் போரிட்ட காலம் கி.பி. 7ம் நூற்றாண்டு கி.பி. 8ம் நூற்றாண்டில் அப்போர் இல்லை" என்கிறார்.

திரு. சீனி வெங்கடசாமியவர்கள் : "பௌத்தர்களும் சமனர்களும் வைதீக சமத்தினரும் ஓயாச் சமயப் போரிட்டனர்.

கி.பி. 6ம் நூற்றாண்டுக்குப்பின் பௌத்தத்தின் சிறப்புக் குன்றவும், சைனம் செல்வாக்கு அடையலாயிற்று. வைதீக மதம் வளர முடியவில்லை. பௌத்தர்களைத் தாக்கி, விரட்டி, ஜைனர்கள் அவர்கள் ஸ்தலங்களைப் பிடித்துக் கொண்டனர் " என்கிறார்.

வைதீக மதம் மெல்லத் தலைதூக்க ஆரம்பித்தது கி.பி 7ம் நூற்றாண்டுக்குப் பின்னரே, அது புத்துயிர் அடைந்தது சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருமங்கையாழ்வார் போன்ற சைவ, வைணவத் தொண்டர்கள் சைன பௌத்த மதங்களை அழித்து வைதீகத்தை வளர்த்த காலத்திலேயாம்.

பழங்காலத்தில் ஊர் மன்றமே கோயில், குயவர் பூசாரிகளாய் இருந்தனர். மலை நாட்டுத் தலைவன் நாடன் என்று அழைக்கப்பட்டான் கி.பி. 2000 ஆண்டுகளுக்கு முன் ஜாதிப் பிரிவினைகள் இல்லை.

கி.பி 10ம் நூற்றாண்டுக்கு முன் உள்ள பாடல்களில் பார்வதி தேவி, ஸ்ரீகணேசர், முருகப் பெருமான் ஆகிய மூவரைப் பற்றிய செய்திகள் யாதும் காணோம்.

(அணங்குடை முருகன் கோட்டத்து என்று புறநானூற்றில் வருவது ஆறுதலைகளை உடைய சிவ பெருமானின் மகனைக் குறிப்பது அல்ல. சிவ புராணம் கி.பி. 8ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. பிற்காலத்தில் புராணங்களை எழுதியவர்கள் முற்காலத்து இலக்கிய வார்த்தைகளையே பாவித்த படியினால் இது தான் அது என்று சாதிக்கக் கூடாது)

நாலடியாரைப் பாடியவர்கள் சமண முனிவர்கள். இவர்கள் மதுரையில் பாண்டிய நாட்டு மன்னன் உக்கிரப் பெரு வழுதியின் காலத்தில் அவனால் ஆதிரிக்கப்பட்டு வாழ்ந்தவர்கள்.

சீவக சிந்தாமணி ஒரு பெருங்காப்பியம். இதன் ஆசிரியர் திருத்தக்கத் தேவர். இவர் சமணர். இவர் காலம் கி.பி.10ம் நூற்றாண்டு. 10ம் நூற்றாண்டிலும் தமிழகத்தில் பெரும் பான்மையோர் சமணர்களாயிருந்தார்கள்.

கி.பி. 14ம் நூற்றாண்டு வரை இந்தியாவில் பௌத்தர்கள் இருந்தனர். அதற்குப்பின் ஆரிய ஆதிக்கம் ஏற்பட்டு பௌத்தர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். ஜைனர்கள் ஆரியர்களுடன் சமரசம் செய்து கொண்டனர். அனேக பௌத்த மடாலயங்கள் ஆரியர் வசமாகி இந்துக் கோவில்களாயின.

கம்பர் வாழ்ந்த காலம் கி.பி.10 அல்லது 12 ம் நூற்றாண்டுகளுக்கிடையில், இவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் ஒட்டக்கூத்தர், இரண்டாம் ஔவையார் ஆவர். கம்பர் காலத்தில் பிராமணர்கள் செல்வாக்காக இருந்தனர்.

முத்துமுக்கனியினாமுதிரையின் முழுத்த நெய்யில்
செந்தயிர் கண்டங் கண்ட மிடையிடை நெறிந்த சோற்றில்
தந்தமிலிருந்து தாமும் விருந்தொடுழ் தமரினோடும்
அந்தரைமுடிவுண்டியயில் வுறம மலையெங்கும்.

(நாட்டுப்படலம் 19)

என்ற பாடல் சான்றாகும்.

காள மேகப் புலவர் பிராமணர். பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெய்கையாழ்வார் என்ற முதல் ஆழ்வார்கள் கி.பி.8ம் நூற்றாண்டில் வாழ்ந்த திராவிடர்கள்.

திருவாசகர்

(அச்சோப் பதிகம்-9)

யாருக்குக் கிடைக்கும் இப்பாக்கியது?

செம்மை நலம் அறியாத
சிதட ரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து
முதல் ஆய முதல்வன் தான்
நம்மையும் ஒரு பொருள் ஆக்கி
நாய் சிவிகை ஏற்று வித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச் சோவே.

செம்மை நலம் அறியாத	- பண்பு, நன்மை அறியாத
சிதடரொடும் திரிவேனை	- அறிவற்றவர்களுடன் திரிகின்ற என்னை
மும்மை மலம் அறுவித்து	- பாபங்களை எல்லாம் நீக்கி
முதல் ஆய முதல்வன் தான்	- எல்லாவற்றிற்கும் முதலான இறைவன்
நம்மையும் ஒரு பொருளாக்கி	- என்னையும் ஒரு பொருளாக்கி
நாய் சிவிகை ஏற்று வித்த	- நாய் பல்லக்கு ஏறினால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட உயர்வை அளித்து
அம்மை எனக்கு அருளிய	- பரலோகத்தின் நித்திய வாழ்வை எனக்கு அளித்தான்
ஆறு ஆர் பெறுவார் அச்சோவே	- யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்

பைபிள் வசனங்கள்

"பாபிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது"

“நமக்குப் பாபமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது”

“நம்முடைய பாபங்களை நாம் அறிக்கையிட்டால் பாபங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

“இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாபங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்”

“இயேசுவாலன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.”

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்

“இப்பொழுதே அநுக்கிரகக் காலம் இப்பொழுதே இரட்சண்ய நாள்.”

(I தீமோத்தேயு 1:15, I யோவான் 1:8,9,7 அப்போஸ்தலர் 4:12,16, 31:2 கொரிந்தியர் 6:2)

சாது செல்லப்பா அவர்கள் 42 ஆண்டுகளாக கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை இந்தியப் பண்பாட்டின் வழியில் இலக்கியம், இதிகாசம், வேதம் போன்றவைகளின் கருத்துக்களுடன் அறிவித்து வருகிறார்.

பலமுறை உலக நாடுகளைச் சுற்றி அங்குள்ள மக்களுக்கு இந்திய வழி நற்செய்தியின் பெருமையைப் பறை சாற்றி வருகிறார்.

சகோதரர் ஜோசுவா தானியேல் அவர்களின் நற்செய்தியினால் இரட்சிக்கப்பட்டவர். பாஸ்டர் பாஸ்கர்தாசன் அவர்களால் உருவாக்கப்பட்டவர். அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்.

இவருக்கு ஒரு மனைவி 5 பெண்கள் 2 ஆண்கள் உண்டு எல்லோரும் கர்த்தருக்குப் பலநிலையில் ஊழியம் செய்து வருகிறார்கள். 15 பேர பிள்ளைகள் உண்டு. இவருக்கென்று சொந்த வீடோ நிலமோ கிடையாது. பல சபைகளை கட்டி எழுப்பியுள்ளார். பல ஏழைப் பிள்ளைகள் இவரது உதவியால் படித்து முன்னேறியிருக்கின்றார்கள்.

25க்கும் மேலான புத்தகங்கள் எழுதியுள்ளார், இவருடைய CD, VCD, DVD கள் உலகத்தின் பல பாகங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவரது மாதாந்திரப் பத்திரிக்கை "சுத்திகரிக்கும் அக்னி" (தமிழ்)

தொலைபேசி எண் : 044-2449 5225
மொபைல் எண் : 09381028140

முகவரி : 5/14, 6வது தெரு, மரைக்காயர் நகர், நீலாங்கரை, சென்னை-600115.
E-mail : agnisadhu@yahoo.co.in
Web : www.agniministries.org